Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



பொய்யிலி மாலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொய்யிலி மாலை

வித்யாவாசஸ்பதி, சிலைமீட்ட செம்மல்
பெரும்பாண நம்பி, தர்மபந்து, கலைமேதை
தமிழகத் தொல்லியல் தந்தை,
தொல்லியற் புலவன், கலைமாமணி

டாக்டர் இரா. நாகசாமி
காஞ்சி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

பிருகதீஷ் பதிப்பகம்
சென்னை

1996

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொய்யிலி மாலை

முதல் பதிப்பு - 1996

உரிமை ஆசிரியருக்கே

ஆசிரியர்: டாக்டர் இரா. நாகசாமி

விலை: ரூ.50.00

பிருகதீஷ் பதிப்பகம்
22, 22வது குறுக்குத் தெரு
பெசன்ட் நகர், சென்னை 600 090
☎ 4916005

Typeset by : Adyar Students Xerox, Madras-20, ☎ 4911358
Printed by : Multivista Global Ltd., Velacherry, Madras, ☎ 2350620

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னுரை

தமிழ் மக்களின் உள்ளங்களை கடந்த ஓராயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பண்படுத்தி வளம்படுத்தி தெய்வவாழ்வு வாழ வகைசெய்த பெரியார்கள் தேவாரப் பதிகங்கள் பாடிய சைவப் பெரியார் நால்வரும், திருமால் அடியார்களாக திவ்வியப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்களும் ஆவர். அவர்கள் விட்டுச் சென்றுள்ள பாடல்கள் நம்மை உயர் நிலைக்கு எடுத்துச் செல்லும் நிலை வகிப்பவை. தெய்வ வடிவங்களை நம் கண்முன் நிறுத்தும் ஆற்றல் மிக்கவை.

அப்பாடல்கள் வாடாமாலைகளாக, என்றென்றும் பொய்க்காத மாலைகளாகத் திகழ்பவை. ஆதலின் ''பொய் யிலி மாலைகள்'' என்று தமது தேவாரப் பதிகங்களை ஞானசம்பந்தப்பெருமான் குறிக்கிறார். நம்மாழ்வாரும் தமது பாசுரங்களை பொய்யில் பாடல்கள் என்கிறார். அவற்றில் மணங்கமழ் மலர்கள் தொகுத்து நிறைந்து விளங்குகின்றன. தேவாரப் பதிகங்களில் உள்ள பல மலரிதழ்களின் ஏழிலை நறுமணத்தை தெய்வசக்தியை உணரும் முயற்சி ஈதாகலின் பொய்யிலி மாலை என்றே இந்நூலுக்குப் பெயர் சூட்டியுள் ளேன். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆயபெரியோர்களது பாடல்களில் சிலவற்றையும், அதன் பொருள்களையும் இதில் ஆய்ந்துள்ளேன். சேக்கிழார் பெருமானின் தெய்வத் திருவாக் கையும் இதில் உயிர்த்துள்ளேன். கி.பி. 16ம் நூற்றாண்டில் சம்ஸ்கிருத மொழியில் பெரிய புராணத்தை மொழிபெயர்த் துள்ளனர். உபமன்யு பக்த விலாசம் என்று பெயர் பெற்ற அந்நூலின் பின்னணியில் தேவாரப் பாடல்களை ஆய்ந்துள் ளேன். இது ஒரு புது முயற்சி. அதேபோன்று வேதங்களின் பின்னணியில் பல தேவாரப் பாட்ல்களுக்குப் பொருள் கண்டுள்ளேன். தேவாரப் பெரியார்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் வைதிக சைவத்தைப் பின்பற்றியவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆதலின் வேதக் கருத்துக்களையும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராணக் கருத்துக்களையும் பின்பற்றி தேவாரப் பாடல்களுக் குப் பொருள் கொள்வது இன்றியமையாததாகிறது. அவ்வாறு முற்படும்போது பொருள் தெளிவு பெறுகிறது. அம்முயற்சி யின் ஒரு பகுதியே இது. சில வரலாற்றுச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

இக்கட்டுரைகளில் பல உருவாக, திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவபிரகாச பண்டார சந்நிதி சுவாமிகள், அவர்கள் திருவுளம் பற்றி என்னை எழுத ஊக்குவித்தார்கள். இக்கட்டுரைகளில் பெரும்பாலானவற்றை ''மெய்கண்டார்'' திங்களிதழில் தொடர்ந்து வெளியிட்டும் சிறப்புச் செய்துள் ளார்கள். அப்பெரும் ஆதீனகர்த்தர் சுவாமிகள் பொன்னார் திருவடிகளில் வணங்கி இத்தொகுப்பை வெளியிடுகிறேன். இக்கட்டுரைகள் வெளிவந்தபோது தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முகதேசிக பரமாசார்ய மகாசந்நிதானம் அவர் கள் இவற்றைப் படித்ததோடன்றி, அவர்களைத் தரிசிக்கும் பேறு பெற்றபோதெல்லாம் ''தொடர்ந்து விடாது எழுதுங்கள் '' என்று என்னை ஊக்குவித்து அருள்பாலித்தார்கள். ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பேரன்பை போற்றி அவர்களது பொன்னார் திருவடிகளுக்கு என் வணக்கத்தை மலராக்குகி றேன். இந்நூலில் உள்ள கருத்துகள் சைவ உலகின் ஆய்வுக் குப் பயன்படும் என்று உவகையுடன் இந்நூலை வெளிக் கொணர்கிறேன். 1996ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள், 17ம் நாள். தில்லை ஆடவல்ல பெருமான் திருமுன்றில் நாட்டி யாஞ்சலி விழாவில் இதை வெளியிடுவதில் பெருமகிழ்வுறுகி றேன்.

இந்நூலை விரைவில் வெளிக்கொணர உதவிய Adyar Students Xerox நிறுவனத்தாருக்கும், சென்னை Multi Vista அச்சகத் தாருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

— இரா. நாகசாமி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

வைதிக சைவம்	1
சங்க கால சமயம்	6
சங்க இலக்கியத்தில் சைவ ஆகமம்	11
சங்க இலக்கிய காலம்	18
பண்டைத் தமிழ் எழுத்துகள்	26
ஆகமங்கள்	29
சம்ஸ்கிருதத்தில் பெரியபுராணம்	35
பெரியபுராணத்தில் வெள்ளிப்பாட்டு	42
எமை ஆளுடையான்	47
பொய்யிலி மாலை	50
வெறி	54
ஜினர் சிவன் ஆனார்	58
அண்ணாமலை மறைந்ததோ	62
மறைந்த நண்ணற்கரிய கழல்	66
வேயறு தோளி பங்கன்	71
எட்டொரு கட்டளை	76
திருத்தாளச்சதி	82
பிள்ளையார் நாட்டிய ஜெயக்கொடி	85
குமாரகானம்	92
சிவதன்மம்	95
திருக்காப்பு நீக்கிய கடைக்காப்பு	99
கடைதூங்கு மணி	107
பாலனாய்க் கழிந்த நாளும்	109
ஏரிவளாவிக் கிடந்தது	112
தீக்கூர்ந்த திருமேனி	114
அறிவரிய நிறத்தர்	121
பலாசஞ் சுள்ளல்	126
ஆதிரை நாளால் அதுவண்ணம்	135

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏது சொல்லுவீராகிலும் ஏழைகாள்	140
மாயன் மாயத்துப்பட்ட மனத்தரே	144
அருக்கன் பாதம் வணங்குவர்	149
முளை ஞாயிறு	153
காலபாசம்	157
க்ஷேத்திரக் கோவையும் அடைவுத் திருத்தாண்டகமும்	161
பொன்னார்ந்த திருவடிக்கு ஓர் விண்ணப்பம்	165
ருத்ரத்தில் பசுபதி	169
கல்வெட்டும் அப்பர் பெருமான் காலமும்	174
திருத்தொண்டத்தொகை தோன்றிய சூழல்	181
பொய்யடிமை இல்லாத புலவர்	189
நட்டப்பாடை பண் திருத்தம்	193
அறுபத்துமூன்று அடியாரில் திலகவதி	195
ஏழாம் திருமுறையில் வெள்ளிப்பாட்டு	199
கம்பன் பாடிய கண்ணுதல் வானவன்	207
இராஜராஜன் வழிபட்ட பிள்ளையார்	217
சண்டேச்வர பிரசாதம்	221
சோழர்காலத் தில்லையில் ஆனித்திருமஞ்சனம்	225
திருஞானம் ஓதல்	228
சைவமும் ஸூபியும்	232
பாசுபத மூர்த்தி	236
மறைந்த திருநேரிசை	240
உள்ளுமாய் புறமுமாகி	243
எட்டொடு ஐந்தாறு நடம்	246

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைதிக சைவம்

தமிழ் நாட்டைத் தமது தெய்வீகப் பாடல்களால் உய்விக்க வந்த சைவப் பெரியார்களை நால்வர் என்கிறோம். அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற அந்நால்வரால் தென்னாட்டில் சைவம் மலர்ந்தது. அக்காலத்தில் தமிழ் நாட்டில் விளங்கிய சமயம், சமுதாயம், தத்துவம், இசை முதலியவை எவ்வாறு திகழ்ந்தன என அவர்களது பாடல்கள் தெள்ளென எடுத்துக் காட்டுகின்றன. அவர்களது பாடலை ஆராய்ச்சிக் கண்ணோடு நோக்கும்போது பல உண்மைகள் வெளிப்படுகின்றன. ஆயினும், அவை ஆராய்ச்சிக்காக எழுதப்பட்டவை அல்ல. பக்தியோடு பரமனைப் பாட எழுந்தவை. உள்ளம் நெகிழ்ந்து உருகி உண்மை நிலையை அடைய உதவுபவை. வரலாற்றை அறிய உதவும் என்பதால் ஆராய்தல் தவறல்ல. நால்வர்களில் திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய மூவரும் பிராம்மண குலத்து உதித்தவர்கள். சிறு வயதில் வேதம் கற்று வேதக் கருத்துகளை அறிந்தவர்கள். ஆதலால் முதிர்ந்து சைவப் பெரியார்களாக, பாடியபோது சிறிய வயதில் கற்ற கருத்துக்களின் சாயல்கள் அவர்களது பாடல்களில் பிரதிபலிக்கும் எனக் கருதுவார் இருக்கலாம். ஆனால் அப்பர் பெருமான் வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். வேதம், வேதாந்தம் கற்கும் மரபு அவருக்கு இல்லை. சில காலம் சமணராயிருந்த பின்னர் மீண்டும் சைவ சமயத்திற்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாறியவர். அவரது பாடல்கள் சாதாரண மக்களின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பவை. அனைத்து மக்களும் கடைபிடித்த பழக்க வழக்கங்களையும் அறிந்து, உணர்ந்து போற்றிய கருத்துக்களையும் எடுத்தியம்புபவை என்ற கருத்துப் பின்னணியில் காணலாம்.

அப்பர் பெருமான் தமிழ் மண்ணில் பிறந்தவர். தமிழிலேயே பாடியவர். தமிழ் நாட்டில் இருந்த தலங்களுக்கு சென்று பண்பட்ட உள்ளத்தோடு பாடல் இசைத்தவர். தாண்டகம் என்ற செய்யுள் அமைப்பில் ஒப்பற்ற பாடல்களை இயற்றி 'தாண்டக வேந்து' என்று அன்போடு அழைக்கப்பட்டவர். அவரது சொல்லின் செழுமையால், வாக்கின் தூய்மையால் 'வாகீசர்' எனவும், 'நாவுக்கரசு' என்றும் பெயர் பெற்றவர். அவரது வரலாறு நாம் அறிந்ததே. தமிழையே சிவபெருமானாக உருவகித்துப் பாடியவர் அவர். அகாரம் முதல் னகாரம் வரை உள்ள எழுத்துக்களாய் நின்றவன் பரமனே என ''ஆனத்து முன் எழுத்தாய் நின்றாய் போற்றி'' என்று பாடுவார். ஒவ்வொர் பாடலும் அ, ஆ, இ, ஈ என ஒரு எழுத்தில் தொடங்குவதாக அகர வரிசையில் முப்பது பாடல்களை முதன் முதலில் தமிழில் பாடியவர் அவரே. அவரது பழம்வினை தீர்த்து ஆட்கொண்ட பரமன் தமிழில் அவரை பாட வைத்தார் என

முன்னைப் பந்தம் அறுத்து ஆளாக்கி பணி
கொண்டாங்கே
பண்ணிய நூல் தமிழ் மாலை பாடுவித்து
என்சிந்தை மயக்கறுத்த திருவினான்

என்று பாடுகிறார். ''தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்'' என்றும் பாடுவார். முத்தமிழும் அவனே என்பார். தமிழ் எண்ணும் சிவனே; எழுத்தும் அவனே; தமிழ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலக்கியங்களும் அவனே; தமிழ் நாட்டியமும் அவனே என்பார் அப்பர்.

> எண்ணவன்காண் எழுத்தவன்காண் இன்பக் கேள்வி
> இசையவன்காண் இயலவன்காண் எல்லாம் காணும்
> கண்ணவன் காண்

இயல்கூறினார் இசை கூறினார் எல்லாம் காணும் கண் என்பதால் நாடகம் கூறினார். முத்தமிழும் முழுமுதற் கடவுளே என்பது அவனே. தமிழ்ப் பாடலாலேயே கடவுளின் உருவம் அமைத்து வழிபடுகிறேன் என்பார். ''தமிழ் மாலைகளால் நாம் படிமக்கலம் தொழுது'' என்பார். இந்த உருவமானது பொன்னால் செய்து தொழப் படும் உருவத்தைக் காட்டிலும் சிறந்ததென்பார்.

உள்ள உணர்வோடு சிவபெருமானைப் பாடும் அப்பர் பெருமான் ஓரிடத்தில் ''வடமொழியும், தென் தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்'' என்று துதிக்கிறார். வடமொழி என்பது இங்கு சம்ஸ்கிருத மொழியை. நான்மறை என்பது வேதத்தை. ஆக, தமிழ், சம்ஸ்கிருதம், வேதம் ஆகிய மூன்றும் சிவபெருமானின் தோற்றமே என்கிறார். மூன்றுக்கும் சமநிலை கொடுக்கிறார். அப்பரின் சைவ நெறி தமிழ் நெறி, வேத நெறி. ஆம். சிவபெருமான் வேத உருவானவன் என்பது அப்பரின் ஆழ்ந்த முடிவு. அதனால்தான் தாம் பாடியுள்ள ஒவ்வொரு பதிகத்துள்ளும் சிவபெருமானின் வேத உருவைப் பாடத் தவறவில்லை. நான்கு வேதங்களும் சிவனின் உருவம் ''நால்வேதத்து உருவானை'' என்பார் ருக் வேதம் அவரே என்பார். ருக்வேதம் சொல்லி சிவபெருமானை மறையவர் வழிபடுகின்றனர் என்பதை ''ருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்'' என்பார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''தொண்டனேன் பட்டதென்னே தூய காவிரியின் நன்னீர் கொண்டு ருக்கோதி ஆட்டி குங்கும குழம்பு சாத்தி ஈசனை எம்பிரானை கண்டிராதே காலத்தைக் கழித்தவாறே'' என்று கூறும்போதும் சிவனுக்கு அபிஷேகம் புரியும்போதும் ருக்கோதி நீராட்டினர் என்பர். ''சங்கரா சாம வேதி'' என்று கூறும்போதும் ''சந்தோக சாமம் ஓதும் வாயான்'' என்னும்போதும் ''சாமத்தின் இசை வீணை தடவிக் கொண்டார்'' என்னும்போதும் சாம வேதம் சிவபெருமானுக்குகந்தது என்பதைக் காட்டுவார். ''வேதியர்'' என்றும், ''வேதநாயகா'' என்றும் ''வேதவித்'' என்றும், ''வேதத்தின் துண்டம்'' என்றும், ''வேதகீதா'' என்றும், அப்பர் மீண்டும் மீண்டும் சிவபெருமானின் வேத உருவை அவர் கூறுவது ''வைதிகச் சைவ நெறி''யைப் போற்றினார் என்று காட்டும். அதைத்தான் ''ஒலிசிறந்த வேதியர் வேதமும் வேள்வியுமானவன்'' என்றார். சிவ பெருமானே வேத வேள்வியை தோற்றிவைத்து அதை வேட்க வைத்தார் என்கிறார் அப்பர். ''வேள்வியை வேட்க வைத்தார்'' என்பது அவர் வாக்கு. வேதமும் அவரே; வேதப் பயனும் அவரே என்று கூறும் நாவுக்கரசர் சிவனை வேதங்கள் தொழுகின்றன என ''வேதங்கள் தொழநின்ற பாதம் காண்'' என்றும் கூறுவார். பரம்பொருளை எந்த மொழியாலும் பரவலாம். எந்த சொல்லாலும் பரவலாம். அவற்றுள் அதுநிறைந்து நிற்கும். அதற்குள் மட்டும் அது நின்றுவிடாது. அதைக் கடந்தும் நிற்கும். அதன் முழுமையை சொற்களால் அறிந்துகொள்ள இயலாது என்று உபநிடதங்கள் கூறுகின்றன. அதையே அப்பர் பெருமான் ''ஆறங்க நால்வேதத்து அப்பால் நின்ற பொருளானை'', ''சொல்லும் பொருளும் கடந்த அடி'' என்றும் பாடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பர் தனது பாடல்களில் மேலும் சில கருத்துக்களைக் கூறுகிறார். ஓரிரு எடுத்துக்காட்டுகளைக் காண்போம். சிவபெருமானை ''பாலனாய் வளர்ந்திலாத பாண்மையானே'' என்கிறார். இதற்கு என்ன பொருள்? ஏன் இவ்வாறு சொல்ல வேண்டும்? ''சுலாவாகி சுலாவுக்கோர் சூழலாகி'' என்கிறார். நீர் சுழன்று வருகிறதே அதற்கு ''சுலா'' என்று பெயர். அது சுழலும் வேகம் இருக்கிறதே அது ''சுலாவின் சூழல்'' சிவபெருமானை இவ்வாறு அழைக்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்க காலச் சமயம் - புதிய ஒளி

தமிழ் மக்களின் பண்டைய பண்பாட்டை எடுத்துக் கூறுபவை சங்ககால இலக்கியங்களாம். ஆதலின் சங்கத் தமிழ் இலக்கியங்கள் எப்பொழுது எழுந்தன என்பதை பல அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். பெரும்பாலானவர்கள் சங்க இலக்கியங்களில் உள்ள அகச் சான்றுகளைக் கொண்டே காலத்தைக் கணித்துள்ளனர். அதில் உள்ள சொல் வழக்குகள் குறிக்கப்பட்டுள்ள செய்திகள், யாப்ப மைதி என இலக்கியச் சான்றுகளையே ஆதாரமாகக் கொண்டு ஆய்ந்தோரே பலர். ஒருசில வரலாற்று ஆசிரியர் கள் மட்டும், மவுரியர் பற்றி குறிப்பு, வெளிநாட்டோர் குறிப்பு எனப் புறச் சான்றுகளைக் கொண்டு காலம் கணித்துள்ளனர். எஸ்.வையாபுரி பிள்ளை, மா.இராசமா ணிக்கனார் போன்ற தமிழ்ச் சான்றோர்களும் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி, மேலை நாட்டு அறிஞர் பலரும் இவ்வாறு ஆய்ந்தோர் எனலாம்.

அண்மையில் சங்க இலக்கியங்களின் காலத்தைக் கணிக்க ஆதாரபூர்வமான சான்றுகள் கிடைத்துள்ளன. திருச்சி மாவட்டம் கரூரில் கிடைத்த இருவகைக் காசு களே இவ்வகைச் சான்றுகளாம். முதன்முதலில் 1987ம் ஆண்டு சேர மன்னர்கள் பெயர் பொறிக்கப்பட்ட செப்புக் காசு என்னால் வெளிப்படுத்தப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'கொல்லிப்புறை' என்று பெயர் பொறிக்கப்பட்ட அக்காசு சங்க இலக்கியங்களில் வரும் 'தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற சேரமன்னன் வெளியிட்ட காசு என நான் விளக்கியிருக்கிறேன். பின்னர் 1990ல் மாக்கோதை என்று பெயர் பொறிக்கப்பட்ட மற்றொரு சேர மன்னனின் காசை, தினமலர் ஆசிரியர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கண்டுபிடித்தார்.

இம்மன்னன் சங்க இலக்கியத்தில் வரும் 'கோட்டம் பலத்து துஞ்சிய மாக்கோதை' என்றும் திரு.கிருஷ்ண மூர்த்தி அவர்கள் நிறுவியுள்ளார். மேலும் இதுபோன்ற காசுகள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்காசுக ளில் உள்ள அரசனின் உருவம் ரோமானிய அரசர்களின் உருவங்களைப் போல் வடிக்கப்பட்டுள்ளன. ரோமானிய கலைஞர்களாலேயே, ரோமானிய உலோகங்களைக் கொண்டே இவை வடிக்கப்பட்டிருக்கக்கூடும். தமிழ்நாட் டுக்கு ரோமானியப் பேரரசர்களின் காசுகள் கிறிஸ்துவுக்கு பின் முதல் நூற்றாண்டில் தான் வந்துள்ளன. ஆதலின் இந்த இரு சேர அரசர்களின் காசுகளும் கிறிஸ்துவுக்குப் பின் முதல் நூற்றாண்டில்தான் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். இன்று நமக்கு எஞ்சியுள்ள சங்க இலக்கியங் கள், சுமார் ஒரு 150 ஆண்டுகளுக்குட்பட்டவை என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. இக்காசுகளை வெளியிட்ட சேர மன்னர்களான பெருஞ்சேரல் இரும்பொறையையும் மாக் கோதையையும், பெரும் புலவர்களான பரணர், கபிலர், ஔவையார் போன்றோரின் சம காலத்தவர்கள். ஆதலின் இன்றுள்ள சங்க இலக்கியங்கள் கிறிஸ்துவுக்குப் பின் முதல் இரண்டு நூற்றாண்டைச் சார்ந்தவை தான் என்பது எனது கருத்து. கிறிஸ்துவுக்கு முற்பட்டவை அல்ல என இக்காசுகள் காட்டுகின்றன.

ஆயினும் சங்க இலக்கியங்களில் சில கி.பி. 5வது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதல் 7வது நூற்றாண்டுக்குள் எழுதப்பட்டவை எனச் சிலர் குறிக்கிறார்கள். எடுத்துக்காட்டாக காமில் ஸ்வேலேபில், ஹார்டி போன்ற மேலைநாட்டு அறிஞர்கள் இவ்வாறு எழுதியுள்ளனர். குறிப்பாக 'கலித்தொகை', 'பரிபாடல்' ஆகியவை, பிற்காலத்தவை எனக் கூறுகின்றனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் பின்வருமாறு: சங்க இலக்கியங்கள் முற்றிலும் இவ்வுலக வாழ்வையே முக்கியமாக கொண்டவை. அவற்றில் சமயங்கள் பற்றிய செய்திகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. சங்ககாலத் தமிழ் சமுதாயம் சமய வாழ்வைப் பற்றி கவலைப்படவில்லை என்று முடிவு செய்துவிட்டு, எந்த சங்கச் செய்யுட்களில் சமயச் செய்திகள் உள்ளனவோ அதை காலத்தால் பிற்பட்டவை என வாதிடுகின்றனர்.

இதை வழுவுள்ள அணுகுமுறை என்றுதான் சொல்ல வேண்டும். இதே அறிஞர்கள் புறநானூறு, அகநானூறு முதலிய பாடல்களை கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்பர். இவ்விரு தொகுப்பிலுமே ஆழ்ந்த சமயச் செய்திகள் உள்ளன என்பதை நுண்ணிதிற் கற்றோர் அறிவர். சமயச் சொல் வழக்குகளையும், சமயக் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களின் காலத்தை கணித்துள்ளது தவறு என இப்பொழுது கிடைத்துள்ள சான்றுகள் தெளிவாக்குகின்றன.

அண்மையில் கரூரில் சேர மன்னர்கள் வெளியிட்ட செப்புக் காசுகள் கிடைத்துள்ளன. அக்காசுகளில் முன்புறம் யானையும், பின்புறம் வில்லும் அம்பும், ஒரு அங்குசமும் காணப்படுகின்றன. இவற்றில் பல வகைகள் உள்ளன. இவை பெரும்பாலும், 'கொல்லிப்புறை', 'மாக்கோதை' காசுகள் வெளியிடப்பட்ட அதே காலத்தைச் சேர்ந்தவை. பின்புறம் வில்லும் அம்பும் உள்ளதால் இவை சேர மன்னர்களின் காசுகள் என்பதில் ஐயமில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இக்காசுகளின் முன்புறத்தைக் காண்போம். சதுர வடிவுள்ள இக்காசுகளில் பெரும்பாலும் மிக அழகிய பெரிய யானை ஒன்று காணப்படுகிறது. இந்த யானை இந்திரனுடைய ஐராவதத்தைக் குறிக்கிறது எனலாம். இந்திரன் தேவர்களுக்கு எல்லாம் அரசன். அதுபோல் இச்சின்னத்தை வெளியிட்ட அரசர்களும் தேவேந்திரன் என இவ்வுலகில் திகழ்வர் என்பது பொருள். பண்டை அரசர்கள் தங்களை 'மகேந்திர பராக்ரமன்' என்று கூறிக் கொள்ளும் மரபு உண்டு. ஐராவதம் என்னும் யானை பாற்கடல் கடைந்தபோது வெளிப்பட்டது. அதை இந்திரன் கொண்டான் என்பது புராண வரலாறு. பல காசுகளில் யானையின் கீழ் வளைவான கோடு ஒன்று காணப்படுகிறது. இந்த யானைச் சின்னம் சேர மன்னர்கள் வெளியிட்ட காசுகளில் மட்டுமல்லாமல் அதே காலத்தில் பாண்டியர்களும், சோழர்களும் வெளியிட்ட காசுகளிலும் காணப்படுகிறது. சர்.டி.தேசிகாச்சாரி அவர்கள் வெளியிட்டுள்ள 'தென்னிந்திய காசுகள்' என்ற நூலில் இதுபோன்ற பல காசுகளின் படத்தை அச்சிட்டுள்ளார். அதில் ஒரு காசில் கடல் அலைகளின் மத்தியிலிருந்து யானை வெளிப்படுவது தெளிவாக காட்டப்பட்டுள்ளது. கடல் அலைகளில் மீன்கள் நீந்துவதும் காணப்படுகிறது. இது ஐராவதம் என்னும் இந்திரனின் யானையைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.

மேலும் யானை பொறிக்கப்பட்டுள்ள சில பாண்டியர் காசுகளில், யானையின் மேல் சுவஸ்திகம், பூர்ண கலசம், ஸ்ரீவத்ஸம், மீன், சந்திரன், சங்கம் முதலிய அஷ்டமங்கலம் என்னும் சின்னங்கள் காணப்படுகின்றன. இவை முற்றிலும் சமயச் சின்னங்களாம். இவை தவிர இன்னும் ஒரு சின்னமும் காணப்படுகிறது. நிற்கின்ற யானையின் முன்னர் ஒரு திரிசூலம் காணப்படுகிறது. அதன் தண்டத்தில் ஒரு பெரிய மழுவாளும் உள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இடையில் ஒரு கொடியும் உள்ளது. திரிசூலமும், மழுவாளும், சிவபெருமானின் படைக்கலன்கள் என்பது யாவரும் அறிவோம். புறநானூறு சிவபெருமானை - 'ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை மாற்றருங்கணிச்சி மணிமிடற்றோன்' என்றும், சீற்றம் நிறைந்த கூற்றம் என்றும், ஒரே கணை கொண்டு முப்புரத்தை எரித்து அமரர்க்கு வெற்றி தந்த கறைமிடற்று அண்ணல், என்றும் கூறுகிறது (புறம் 54-55). சங்க இலக்கியங்களிலேயே மிகவும் தொன்மையானவை என ஏற்றுக் கொள்ளப்பட்டவை புறநானூற்றுப் பாடல்கள். அவற்றில் சிவபெருமான் புகழப்பட்டுள்ளது அறியத்தக்கது. இதுபோன்ற திரிசூலம் பாண்டியர் காசுகளிலும் காணப்படுகிறது. மேலும் சில யானைக் காசுகளில் ஒரு உயர்ந்த தண்டத்தின்மீது சக்கரம் ஒன்று காணப்படுகிறது. சக்கரம் திருமாலின் படைக்கலன். நேமியோன் எனத் திருமால் அழைக்கப்பட்டார். திரிசூலமும், மழுவும் கொண்ட காசுகள் சங்ககாலத் தமிழர் சிவபெருமானைப் பெரிதும் போற்றினர் என்றும், சக்கரம் போட்ட காசுகள் அதுபோல் திருமாலைப் போற்றினர் என்றும் காட்டுகின்றன. மக்கள் வாழ்வில் பயன்பட்ட காசுகளில் இச்சின்னங்கள் திகழ்வதால் சைவ சமயமும், திருமால் சமயமும் சமுதாயத்தில் பெரும் பங்கு வகித்தன என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போல் இவை காட்டுகின்றன. ஆதலின் சங்ககாலத் தமிழ் மக்கள் சமயத்தைப் பற்றி கவலைப்படவில்லை என்பதோ, சமயக் குறிப்புகள் பாடல்களில் வருமாயின் அவை காலத்தால் பிற்பட்டவை என்பதோ ஏற்புடைய கருத்துக்கள் அல்ல. சங்ககாலச் சமயம் பற்றி இக்காசுகள் புது ஒளியைத் தந்துள்ளன என்பதில் ஐயமில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்க இலக்கியத்தில் சைவ ஆகமம்

பல்வேறு சாத்திரங்களை அறிந்து கொள்வதற்கு அடிப்படையாக அமைவது தர்க்க சாஸ்திரம். இதை 'அளவையியல்' என்றும் கொள்ளலாம். இது காண்டல், கருதல், கேள்வி என மூவகைப்படும். இதை வடநூலார் பிரத்யக்ஷம், அனுமானம், சப்தம் என்று அழைப்பர். குறிப்பாகச் சமய தத்துவங்களை அறிந்து கொள்ள 'அனுமானம்' என்னும் அளவையியல் மிக மிக இன்றிய மையாதது.

தமிழ் நாட்டை பொறுத்த வரையில் ''தருக்கம்'' சங்க காலத்திலேயே மிகச் சிறப்பாக ஆராயப்பட்டிருந்தது என அறிகிறோம். சோணாட்டு பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பவனைக் குறிக்கும் புறநானூற்றுப்பாடல் இதைக் கூறுகிறது. விண்ணந்தாய னின் முன்னோர்கள் பல்வேறு வேள்விகளைச் செய்தவர் கள் என்றும், சிறந்த அறிவாளிகள் என்றும் இப்பாடல் கூறுகிறது.

நன்று ஆய்ந்த நீள் நிமிர் சடை
முது முதல்வன் வாய்போகாது
ஒன்று புரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த ஒரு முதுநூல்
இகல்கண்டோர் மிகல் சாய்மார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய் ஓராது மெய் கொளீஇ
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரை சால் சிறப்பின் உரவோர் மருக

(உரை) ''பெரிதும் ஆராயப்பட்ட மிக்க நீண்ட சடையினை உடைய முதிய இறைவனது (சிவபெருமானது) வாக்கை விட்டு நீங்காது அறமொன்றையே மேவிய நான்கு கூற்றையுடைத்தாய், ஆறு அங்கத்தாலும் உணரப் பட்ட, ஒரு பழைய நூலாகிய வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலாயின புறச்சமயத் தோரது மிகுதியைச் சாய்க்க வேண்டிய அவரது மெய் போன்ற பொய்யை உளப்பட்டறிந்து அப்பொய்மையை மெய்யென்று கருதாமல் உண்மைப் பொருளை அவர்களுக்கு ஏற்பச் சொல்லி, இருபத்தொரு வேள்வித் துறையையும், குறையின்றாகச் செய்து முடிக்க புகழமைந்த தலைமையையுடைய அறிவுடையோர் மரபில் உள்ளானே''.

இப்பழையவுவுரையில் 21 வேள்வித் துறைகளையும் குறையில்லாமல் செய்து முடித்தவர்கள் என்று விண்ணந் தாயனது முன்னோர்கள் கூறப்பட்டுள்ளனர். 'மூவேழ்து றையும் முட்டின்று போகிய' என்பதற்கு மேற்கண்டவாறு ஆசிரியர் உரை கூறுகிறார். ''வேள்விகளில் 21 துறைகளைக் குறை ஏதும் இன்றி செய்து முடித்தனர்'' என்பது இதன் பொருளாகக் கொள்கிறார். ஆயினும் இதையே ''மூவேழ்துறையும் என்பதற்கு 21 கூறுபட்ட தருக்கநூல் எனினும் அமையும்'' என்றும் உரையாசிரியர் கூறுகிறார். இவர் இரண்டாவதாகக் கூறிய தருக்கநூல் என்ற பொருளே சிறப்பாக நமக்குத் தோன்றுகிறது.

மேலும் உரையாசிரியர் 'ஒரு முதுநூல்' என்பதற்கு அறம் ஒன்றையே மேவிய நான்கு கூற்றை உடைய ஆறு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அங்கத்தாலும் உணரப்பட்ட ஒரு பழைய ''நூலாகிய வேதம்'' என்று பொருள் கூறுகிறார். பாடலில், ''ஒன்று புரிந்த ஈர் இரண்டின் ஆறு உணர்ந்த ஒரு முதுநூல்'' என்று உள்ளது. இது நீண்ட சடையை உடைய சிவபெருமானால் கூறப்பட்டது என்பது பாடல். ஆதலின் நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும், அடிப்படையாகக் கொண்டு, சிவபெருமானால் கூறப்பட்ட நூல் என்பது பொருள். இந்நூல் சைவ ஆகமமாகவே இருத்தல் வேண்டும். நான்கு வேதங்களில் இருந்தும், ஆறு அங்கங்களில் இருந்தும் பிறிதொன்று ஆன ஆகமம் என இதனால் அறியலாம்.

இப்பாடலுக்கு 200 ஆண்டுகளுக்குள் எழுந்த பெரும் காப்பியமான மணிமேகலையில் 'சைவ வாதி' குறிக்கப்படுவதிலிருந்தும் இதை சிவபரமான நூல் என்று கொள்வதே பொருந்தும். ஆதலின் கிறித்துவாப்தத்தின் தொடக்கத்திலேயே சைவ சாஸ்திரங்களை அறிந்து கொள்ளத் தர்க்க சாஸ்திரத்தைப் பயன்படுத்தினர் எனக் கொள்ளலாம்.

இக்கருத்து வேறுபல சங்கப் பாடல்களிலிருந்தும் அறியப்படுகிறது. மலைபடுகடாத்தில் (அடி 112ல்) வாதி கைஅன்ன சுவைக்கதிர் இறைஞ்சி' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொருள் இயற்றிய நச்சினார்க்கினியர் ''பெரிய புனத்தில் வரகுகள் எருமை கிடந்தாற் போன்ற கற்பெருத்த வழியிடத்திலே தருக்கம் கூறுகின்றவன் கையிடத்து இணைந்த விரல்களை ஒத்த, இரட்டித்த கதிர்கள் முற்றி வளைந்து அரிவாளாலே அரிதல் உற்றன'' என்று கூறுகிறார். ஆதலின் தருக்கும் கூறுகின்றவன் தனது கை விரல்களை அடிக்கடி பயன்படுத்திக் கணக்கிடுவான் என்பதை மலைபடுகடாம் ''வாதி கையன்ன'' என்ற தொடர் தெளிவாக உரைக்கிறது. மதுரைக் காஞ்சியும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருக்கம் அறிந்தோரைக் கூறுகிறது. அரசனுடைய நாளோலக்க இருக்கையில் எல்லாக் கலைகளையும் உணர்ந்தவர்கள் குழுமியிருப்பர். அரசன் கேட்கத் தருக்கங்களைக் கூறி அளவளாவுவர். அதுபெரும் ஆரவாரத்தை தோற்றுவிக்கும் என்பதை ''விழுமியோர்குழீஇ விழைவு கொள் கம்பலைகடுப்ப'' என்று கூறுகிறது. (அடிகள் 525, 526) இதற்கு உரைகூறுமிடத்தில் நச்சினார்க்கினியர் ''எல்லாக் கலைகளையும் உணர்ந்த சீரியோர் திரண்டு அவன் கேட்பத் தருக்கங்களைக் கூறி விரும்புதல் கொண்ட ஆரவாரம்'' ''பல சமயத்தோரும் தம்மில் தாம் மாறுபட்டுக் கூறும் தருக்கத்தைச் சேரக்கூறக் கேட்டிருக்கின்ற கம்பலை போல'' என்று கூறுகின்றார். ஆதலின் அரசன் அவையிலே தருக்க சாத்திரத்தை அறிந்த பல பேர்கள்' விவாதங்கள் புரிந்தனர் என்பது தெளிவு.

சிலப்பதிகாரத்தில் சேரனுடை அவைக்குப் பராசரன் என்ற அந்தணன் ஒருவன் வருகிறான். அவனைக்கூறுமிடத்து இளங்கோவடிகள் ''நாவலம் கொண்டு நண்ணார் ஒட்டி பார்ப்பன வாகை சூடி'' என்று கூறுகிறார். அதற்கு உரை எழுதிய அரும்பத உரையாசிரியர் ''நா வலங் கொண்டு எனில் தருக்கஞ்சொல்லி நாவெற்றியை உடையோனாய்'' என்று கூறுகிறார். ''நா வலம் எனில் நா வெற்றி'' என்கிறார். அவன் பெற்ற நா வெற்றியை ''பார்ப்பன வாகை'' என்றும் கூறுகிறார். புறநானூற்றில் விண்ணந்தாயனைக் குறிக்கும், முன்னர் கூறிய பாடல் 'பார்ப்பன வாகை' என்னும் துறையைச் சாரும்;

புறப்பொருள் வெண்பாமாலை பார்ப்பன வாகை என்பதை ''கேள்வியால் சிறப்பு எய்தியானை, வேள்வியால் விறல் மிகுத்தன்று'' என்று கூறுகிறது. அறிவினால் சிறந்த ஒருவனை அவனது வேள்வி வெற்றியால் பாடுவது ''பார்ப்பன வாகை'' என்பது பொருள். இதே நூலில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார்ப்பன வாகைக்கு எடுத்துக்காட்டு கூறும் இடத்து,

ஓதங் கரைதவழ் நீர் வேலி யுலகினுள்
வேதங் கரைகண்டான் வீற்றிருக்கும் - ஏதஞ்
சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த
விடுசுடர் வேள்வி யகத்து

''வேதம் கரைகண்ட ஒருவர் குற்றமற்ற தர்க்கச் சொல்லால் வெற்றி பெறுதல்'' என்று பொருள் படும். ஆதலின் அறிஞர் பெறும் வெற்றி, குற்றமறத் தாம் எடுத்துச் சொல்லும் தத்துவ விளக்கங்களாலே பெறும் வெற்றியையே வேள்வி குறிக்கும். ஆதலின் 'வேள்வி எடுத்து' என்பது ஞான வேள்வி என்று பொருள் படும். 'களவேள்வி' போல. ஆதலின் 'பார்ப்பன வகை' என்னும் இலக்கிய மரபு தருக்கத்தில் பெறும் வெற்றியையே குறிக்கும். சிலப்பதிகார அரும்பதஉரை ஆசிரியர் 'பார்ப்பன வாகை என்பதை தருக்கஞ் சொல்லி பெறும் நாவெற்றியையே பார்ப்பன வாகை' என்று குறிப்பிடுவதும் இதையே வலியுறுத்தும்.

புறநானூற்றில் உள்ள மற்றொரு பாடலான 305-ம் பாடலும் 'பார்ப்பன வாகை' என்னும் துறையைச் சார்ந்தது. அதுவும் அந்தணன் ஒருவன் தன் நாவன்மையால் வெற்றி கொண்டு பெற்ற பரிசைக் கூறுகிறது.

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்த்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
ஏணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யாணையு மணிகளைத் தனவே

பாட்டின் அடிக்குறிப்பில் 'திணை - வாகை' என்றும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''துறை - பார்ப்பன வாகை'' என்றும் குறிக்கப்பட்டுள் ளது.

மேலும் மணிமேகலையில் சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை பல்வேறு தத்துவங்களை எடுத்துரைப்ப தைக் குறிக்கிறது. இதில் வைதிக மார்க்கத்து அளவை வாதி, சைவ வாதி, பிரும்ம வாதி, வைணவ வாதி, வேதவாதி, ஆஜீவக வாதி எனப்பல சமயவாதிகள் குறிக்கப்படுகிறார்கள். இவர்கள் தத்தம் சமயங்களைத் தர்க்கசாத்திரத்தின் அடிப்படையில் எடுத்துரைப்பர்; வாதம் செய்வர். ஆதலின் வாதிகள் என அழைக்கப்பட்ட னர். இவர்களைச் சமயக்கணக்கர் என்றும் கூறுவர். இதையே கம்பரும் தம் இராமகாதையில் 'திகழ் கணக்கா யர் கம்பலை' என்று கூறுகிறார். இவற்றில் இருந்து சங்ககாலத்தில் இருந்தே சமயங்களை அறிந்து கொள்ளத் தருக்க சாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்த னர் என்பது தெளிவாகிறது. தருக்கத்தை அடிப்படையா கக் கொண்டு சமய விவாதங்களை எடுத்து அலசி ஆராயப்படுமேயாயின் அச்சமயக் கருத்துக்கள் எந்த அளவுக்குச் சிறப்பெய்தியிருக்க வேண்டும் என்பதையும், எவ்வளவு காலம் அக்கருத்துக்கள் நிலைத்து அவ்வுன்னத நிலையை அடைய முடியும் என்பதையும் ஆய்ந்தோமா னால் தமிழகத்தில் சைவ சமயம், கிறித்துவுக்குச் சில நூற்றாண்டுகளுக்கும் முன்னரே மிகச் சிறந்த சமயமாகத் திகழ்ந்திருக்கிறது என்பது புலப்படும். ஆதலின் புறப்பா டலில் குறிக்கப்பட்டுள்ள ''ஒன்று புரிந்த ஈரிரண்டின் ஆறுணர்ந்த ஒரு முதுநூல்'' என்பது ''வேதங்களின் அடிப்படையில் அமைந்த சைவ ஆகமம்'' என்பதே பொருந்தும், சைவ ஆகமங்களைச் சிவபெருமானே எடுத் துரைத்தார் என்று நமது, ஆகமங்களும் தேவாரத் திருப்ப திகங்களும் எடுத்துரைக்கின்றன. நிமிர்சடை, முதுமுதல் வன் என்பது சிவபெருமானே ஆகமங்களை எடுத்துரைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தார் என்னும் கருத்து சங்க காலத்திலேயே நிலைத்திருந்தது என்பதைக் காட்டுகிறது. விண்ணந்தாயனின் முன்னோர்கள் சைவத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலானவர்கள், மெய்போல் கூறிய பொய்யை எல்லாம் மாற்றிச் சைவம் தழைக்கச் செய்தவர்கள் என்பது தெளிவாகிறது. தமிழகத்தில் சைவ சமய வரலாற்றுக்கு இப்புறநானூற்றுப்பாடல் அரும் செய்தியை அளிக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்க இலக்கியங்களின் காலம்

தமிழ் நாட்டிற்கும் பண்டைய ரோமானிய நாட்டிற்கும் இருந்த வர்த்தகத் தொடர்பை எடுத்துக்காட்டும் பல சான்றுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக கல்வெட்டுகளும், காசுகளும், அகழ்வாய்வில் வெளிப்பட்ட பொருள்களும் அடிப்படைச் சான்றுகளாக வெளிப் போர்ந்துள்ளன. இவற்றை ஒருங்கே வைத்து ஆயும்போது சங்கத் தமிழ் இலக்கியங்களின் காலத்தை மீண்டும் கணிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இக்கட்டுரையில் சங்கத் தமிழ் இலக்கியங்களின் காலம் என்ன என ஆராயப்படுகிறது.

இதுகாறும் சங்க காலத்தை ஆய்ந்தவர்கள் இலக்கியச் சான்றுகளையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்திருக்கிறார்கள். இவ்வாறு காலம் கணித்தவர்கள் மூன்று பிரிவினராகக் கொள்ளலாம். ஒரு பிரிவினர் சங்க இலக்கியங்கள் கிறிஸ்துவுக்கு ஐந்து - ஆறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவை என்பர். மிகவும் தொன்மையானது என்று கூறினால்தான் பெருமை எனக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டு ஆவல் உந்த கி.மு. ஐந்து - ஆறு நூற்றாண்டு என்பர். சான்றுகள் இன்மையால் இக்கூற்றை ஏற்றுக்கொள்ள இயலாது. இரண்டாவது பிரிவினர் சங்க இலக்கியங்களில் காணப்படும் சொல் வழக்குகளையும் கருத்துகளையும் கொண்டு ஊகித்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டு தொடங்கி கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரை உள்ள கால கட்டங்கள் என்றும் வெவ்வேறு பாடல்கள் வெவ்வேறு காலங்களில் பாடப்பட்டவை எனவும் வாதிடுகிறார்கள். சான்றுகளின் அடிப்படையில் இன்றி, தங்களின் மனதுக்குப்பட்ட தங்கள் ஊகத்தின் முடிவாக கூறுவோர் இவர். இவர்களது காலக் கணிப்பையும் அவரவருக்கே விட்டுவிடலாம்.

மூன்றாவது பிரிவினர், சங்க இலக்கியத்தில் குறிக்கப் படும் யவனர்களை மனத்தில் கொண்டு கி.மு. இரண் டாம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. இரண்டாம் நூற் றாண்டு வரை சங்க இலக்கியங்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என கருதுகின்றனர். மேலை நாட்டு நூல்களை யும், தமிழகத்தில் கிடைத்துள்ள ரோமானியப் பொருள்க ளையும் காட்டி இக் காலத்தைக் கூறுவர். இவர்கள் நடுவாதக் கொள்கையினர் எனலாம். பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் இவர்கள் கூறும் காலத்தையே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கடந்த முப்பது ஆண்டுக் காலத்தில் கிடைத்துள்ள சான்றுகள் இக் கால ஆராய்ச்சியின் மேலும் தெளிவு கொடுக்கின்றன. கரூருக்கு அருகில் புகளூர் ஆறு நாட் டார் மலைக் கல்வெட்டைத் தெளிவாகப் படித்து இவை சேர மன்னிர்களின் கல்வெட்டு என்று தெளிவாக்கியது முதற்படியே என்று சொல்லலாம். அக் கல்வெட்டில் ''கோ ஆதன் செல் இரும்பொறை மகன் பெருங்கடுங் கோன் மகன் இளங்கடுங்கோ இளங்கோ ஆகி அறுபித கல்'' என்று உள்ளது. இதில் சேர மன்னர்களின் மூன்று தலைமுறைகள் குறிக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியத் தில் கூறப்பட்டுள்ள சேர மன்னர்களே இவர்கள். இதன் பின்னர் பல தமிழ்ப் பிராம்மி கல்வெட்டுகளும் படிக்கப் பட்டுள்ளன. இவற்றின் காலத்தையும் எழுத்தமைதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டு நிறுவியுள்ளனர். இதுவும் ஒருவகை ஊகத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்ட காலமே ஆயினும் இது காறும் கூறப்பட்டதைக் காட்டிலும் சிறப்புடைய முறை என்பதில் ஐயமில்லை.

இம்முறையைக் காட்டிலும் வலுவான இரண்டு சான்றுகள் அண்மையில் கிடைத்துள்ளன. சங்ககாலச் சேரமன்னர்களின் பெயர் பொறித்த இருகாசுகளே அவை. இவற்றில் முதலிடம் பெறுவது சேரன் ''கொல்லிப்பொறை'' பெயர் பொறித்த காசு. இக்காசைக் கண்டு இதன் வரலாற்றுச் சிறப்பை வெளிப்படுத்தும் வாய்ப்பு முதல் முதலின் எனக்குக் கிட்டியது. 1987-ஆம் ஆண்டு நவம்பர் 15-ம் தேதி 'தினமணி'யில் இதை வெளியிடப்பட்டுள்ளேன். இக்காசின் முன்புறம் சேரமன்னன் ஒரு ரோமானிய வீரன் போல் நிற்கும் காட்சியும் அதன்மேல் ''கொல்ஈப்புறை'' என்ற பண்டைய தமிழ் எழுத்துகளும் காணப்படுகின்றன. பின்புறம் சேரர்களின் இலச்சினை - வில்லும் அம்பும் காணப்படுகின்றன. சேரமன்னன் ஒருவன் கொல்லிமலையைக் கைப்பற்றி கொல்லிப் பொறையன்' என்ற பட்டம் பூண்டபோது வெளியிட்ட காசு, இது கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் மன்னனும் அவனுக்கு உதவியாக மலையமான் திருமுடிக் காரியும் அதியமானோடு போரிட்டனர். அப்போது கொல்லிமலையின் தலைவன் வல்வில் ஓரியைக் காரி கொன்று கொல்லிமலையை சேர மன்னனுக்கு ஈந்தான். இது ஒரு பெரும் வெற்றியாக சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வெற்றிபூண்ட சேரமன்னன் கோப் பெருஞ்சேரல் இரும்பொறை என்பான். ஆதலால் இவன் கொல்லிப் பொறையன் என அழைக்கப்பட்டான் என்றும் அறிகிறோம். கோப்பெருஞ்சேரல் கரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். இக்காசு கரூரில்தான் கிடைத்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டாவதாகக் கிடைத்தது சேரமான் மாக்கோதை யின் காசு. இக்காசும் கரூரில் கிடைத்ததுதான். இக்காசின் முன்புறம் அரசனின் தலை பொறிக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்தால் ஒரு ரோமானிய அரசனின் தலைபோ லவே காணப்படுகிறது. அதன்மேல் ''மாக்கோதை'' என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. அதன் பின்புறம் ஏதுமில்லை. வெள்ளியினாலான இக்காசு ரோமானியக் கலைஞர்களாலேயே உருவாக்கப்பட்டதுபோல் தோற்றம ளிக்கிறது. இதில் குறிக்கப்பட்டுள்ள அரசன் சங்க இலக்கி யத்தில் குறிக்கப்பட்டுள்ள கோட்டம்பலத்து துஞ்சியமாக் கோதை'' எனக் கருதுவர். மூன்றாவதாக "குட்டுவன் கோதை" எனப் பெயர் பொறிக்கப்பட்ட காசும் கிடைத் துள்ளது. ஆயினும் இது காலத்தால் பிந்தியது.

ஆக சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ள இரு சேர அரசர்களின் காசுகள் கிடைத்துள்ளன. இரு காசுக ளும் கரூரில் கிடைத்துள்ளன. இது காசுகளிலும் அரசு உருவம் ரோமானிய பாணியில் வெளியிடப்பட்டுள்ளது குறிக்கத்தகுந்தது. தமிழ் நாட்டுடன் ரோமானியத் தொடர்பு மிகவும் நெருக்கமாக ஏற்பட்டபோது வெளியி டப்பட்டவை என்பதில் ஐயமில்லை.

சேர மன்னன் மாக்கோதை வெள்ளிக்காசில், அரச னின் தலை ரோமானிய அரசன் தலை போலவே உள்ளதைக் காணலாம்.

நூறு ஆண்டுகளுக்கும் முன்னதாகவே கரூரில் ரோமா னியக் காசுகள் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ளன. கரூரில் மட்டும் 1874, 1883, 1884, 1888, 1904ம ஆண்டுகளில் ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன.

கரூரில் நான் நடத்திய அகழ்வாய்விலும் ஒரு வெள்ளி ரோமானியக் காசு கிடைத்துள்ளது. ஆனால் அது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மிகவும் தேய்ந்துள்ளது. கோயம்புத்தூருக்கு அருகில் வெள்ளலூர், பொள்ளாச்சி, கலையம்புத்தூர், 'மாம்பலம், தஞ்சாவூர் முதலிய பல ஊர்களில் ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. இவற்றில் கரூர், பொள்ளாச்சி, வெள்ள லூர், மாம்பலம், கலையம்புத்தூர் ஆகிய இடங்களில் கிடைத்த காசுகள் வரலாற்று சிறப்பு வாய்ந்தவை. தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ள ரோமானியக் காசுகளை நோக்கும்போது கிறிஸ்துவுக்கு முன் வெளியி டப்பட்ட எந்த ஒரு காசும் கிடைக்கவில்லை என்பது மிக மிக முக்கியமான செய்தியாகும். கிடைத்தவற்றில் மிகவும் பழைமையானது பேரரசன் அகஸ்டஸ் என்ப னால் கி.பி.14-ல் வெளியிடப்பட்டதுதான். இந்தக் காசு தமிழ்நாட்டுக்கு கி.பி.15க்குப் பிறகுதான் வந்திருக்கக் கூடும். கி.பி.37-ல் டைபீரியஸ் என்ற அரசன் வெளியிட்ட காசுகள் இங்கு அதிகம் கிடைத்துள்ளன. அவன் காலத்தி லிருந்ததான் ரோமானியத் தொடர்பு தமிழகத்தோடு மிக வும் நெருக்கமாக இருந்தது என்பர். தமிழ் நாட்டில் கிடைத்த பிற ரோமானிய அரசர்களின் காசுகளும் வெளி யிட்ட ஆண்டுகளும் பின்வருமாறு. டைபீரியஸ் கி.பி. 37: கிளாடியஸ் கி.பி 54: நீரோ கி.பி. 68. நெர்வா கி.பி.98; ஹேட்ரியன் 118; ஆண்டோனியஸ் பயஸ் கி.பி.161; மார்க்கஸ் ஆரேலியஸ் கி.பி.180; எனவே கி.பி.15 ஆகஸ் டஸ் காலம் தொடங்கி கி.பி 180க்குள் வெளியிடப்பட்ட காசுகளே தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன. கி.பி.300க்குப் பிறகு வெளியிடப்பட்ட பிற்கால ரோமானியக் காசுகளும் கிடைத்துள்ளன. அவற்றைப் பற்றி இங்கு ஆய்வு வேண்டி யதில்லை. தமிழகத்துக்கு ரோமானியக் காசுகள் வந்த முதல் காலகட்டம் கிறிஸ்துவுக்குப்பின் முதல் இரண்டு நூற்றாண்டுகள் என்பதில் ஐயமில்லை (ரோமானியக் காசுகளின் காலம், எங்கு வெளியிடப்பட்டன என்ற செய்திகள் துல்லியமாகத் தெரியும்).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''கொல்லிப் பொறை'' ''மாக்கோதை'' காசுகள் ரோமானியக் காசுகளைப் பின்பற்றித்தான் வெளியிடப் பட்டுள்ளன எனக் கண்டோம். ஆதலின் அவை கி.பி. முதல் நூற்றாண்டிலோ அல்லது அதற்குப் பின்னரோதான் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்பது திண்ணம். இருக்கட்டுமே? நமக்கென்ன என்று கேட்கலாமல்லவா? கொல்லிப் பொறை காசை கோப்பெருஞ்சேரல் இரும் பொறை வெளியிட்டான் எனப் பார்த்தோம். அதாவது அக்காசு வெளியிட்டபோது அவன் உயிரோடிருந்திருக்கி றான். அவனைப் பாடிய புலவர்கள் யார் என நமக்குத் தெரியும். கபிலர், பரணர், அரிசில் கிழார், ஔவையார், நல்லூர் நத்தத்தனார், பெருஞ்சித்திரனார், குறுங்கோழியூர் கிழார், பெருங்குன்றூர்கிழார், தாயங் கண்ணனார் எனப் பல புலவர்களாகும். இவ்வளவு புலவர் பெருமக்களும் கி.பி. முதல் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்திருக்கிறார் கள் என்பது இக்காசினால் புலனாகிறது. அதுபோல் மாக்கோதை தானே பாடியதாக ஒரு பாடல் சங்க இலக்கியத்தில் உண்டு. மேலே குறிப்பிட்ட சங்கப் புலவர்கள் எல்லாம் கி.பி. முதல் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்தவர்கள் என்பது தெளிவாகும். அதுமட்டுமல்ல. இப்புலவர்களால் பாடப்பட்ட பிற அரசர்களும் தலைவர் களும், ஏறக்குறைய இக்காலத்தில் வாழ்ந்தவர்தாம் என்ப தும் திண்ணம்.

சங்க இலக்கியங்களை நுணுக்கமாகப்படித்தவர்கட்கு ஒருண்மை புலப்படும். சங்கப் புலவர்களையும், அவர்க ளால் பாடப் பெற்ற அரசர் - புரவலர்களையும் பட்டியல் போட்டு ஆராய்ந்தால் யார் யார், யாரைப் பாடியிருக்கி றார்கள் என்று ஆராய்ந்தால் ஐந்து அல்லது ஆறு தலைமுறைகளுக்குள் வாழ்ந்த மன்னர்களையும், புலவர்க ளையுமே இவ்விலக்கியங்களில் காணமுடிகிறது. அதா வது ஒரு நூற்றைம்பது ஆண்டுக்குள் வாழ்ந்தவர்களைப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பற்றிய இலக்கியமாகவே சங்கப் பாடல்கள் உள்ளன என்ற கருத்தைப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் தெளிவாக்கியிருக்கிறார். சங்க இலக்கியம் அதிகபட்சம் இருநூறு ஆண்டுகளுக்குள் இயற்றப்பட்டவை என்பது தெளிவு.

சங்கப் புலவர்களில் கபிலர், பரணர் ஔவை போன்ற பெரும் புலவர்கள் எல்லாம் கி.பி. முதல் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்தார்கள் என்பதைக் கொல் லிப் பொறையன் காசும் மாக்கோதை காசும் தெளிவாக்கு கின்றன. ஆதலின் சங்க இலக்கியம் முழுவதும் கிறிஸ்து வுக்குப் பின் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் இயற்றப் பட்டவை எனப் பெறப்படுகிறது. இப்பொழுது எஞ்சியி ருக்கும் சங்க இலக்கியம் எதுவும் கிறிஸ்துவுக்கு முற்பட் டது அல்ல. கி.பி. 6-7ம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்ற கூற்றும் சரியல்ல.

இங்கு மற்றும் ஒன்றைக் கூறவேண்டும். அப்படி என்றால் கிறிஸ்துவுக்கு முன் தமிழ் மன்னர்கள் ஆளவில் லையா? தமிழ்ச் சமுதாயம் இல்லையா? தமிழ் இல் லையா? என்ற கேள்விகள் எழுத்தான் செய்யும்! இங்கு நான் குறித்துள்ள காலக்கணிப்பு, இன்று நமக்கு எஞ்சி யுள்ள சங்க இலக்கியங்கள் கிறிஸ்துவுக்குப்பின் முதல் இரு நூற்றாண்டுகளைச் சார்ந்தவை என்பதுதான். கிறிஸ்து வுக்கும் முன்னர் தமிழ் மன்னர்கள் நிச்சயமாக ஆண்டிருக் கிறார்கள். சீரும் சிறப்புமாக ஆண்டிருக்கிறார்கள் என்ப தற்கு அசைக்க முடியாத ஆதாரங்கள் உள்ளன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட மௌரியப் பேரரசன் அசோகன் தனது கல்வெட்டில் சேரர், சோழர், பாண்டியர் , சத்யபுத்ரர் ஆகிய அரசர்களை தனது கல்வெட்டில் குறித்துள்ளதே அதற்குச் சான்றாகும். அது வேறு விஷ யம். அண்மையில் கிடைத்துள்ள காசுகள் ரோமானியத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொடர்பை தெளிவாகக் காட்டுவதாலும், அரசர்களின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதாலும் அவர்களைப் பாடிய புலவர்களும் அப்புலவர்களால் பாடப் பெற்ற பிறரும் வாழ்ந்த சங்க காலம் கி.பி. முதல் இரு நூற்றாண்டுகள் என இப்போது தெளிவாகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பண்டை தமிழ் எழுத்துக்கள்

பண்டைய தமிழ் எழுத்துக்களை தமிழ் பிராமி என்று அழைப்பது இப்பொழுது வழக்கமாகிவிட்டது. தமிழில் எழுத்துக்களை எப்பொழுது பயன்படுத்த தொடங்கினார்கள் என்று ஆயத் தொடங்கிய போது பலர் உணர்ச்சி அலைகளில் மூழ்கி, அக்கருத்துக்களை வன்மையாக கண்டித்தனர். ஆனால் கடந்த முப்பது ஆண்டுகளாக இவ்வுணர்ச்சி அலைகள் படிப்படியாக அடங்கி பகுத்தறிவின்பால் பட்டு ஆயத் தொடங்கியுள்ளோம். தமிழ் பிராமி கல்வெட்டுகளை ஆராய்ந்து அவற்றின் வளர்ச்சி குறித்து மூன்று காலக்கட்டங்களை வரையறுத்து கூறினார் ஐராவதம் மகாதேவன், ஆனால் இப்பொழுது அவரே தமது கருத்துக்களை மாற்றிக் கொண்டு வேறு கருத்துக்களை கூறுகிறார். தமிழ் எழுத்துக்கள் அசோகன் காலத்திலேயே தமிழ் நாட்டில் இருந்திருக்க வேண்டும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்து எழுத்துக்கள் உண்டு என்று கூறுகிறார். மேலும் ஆந்திர தேசத்தில் பட்டிபுரோலு என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டு கி.மு. மூன்றாம் நூற்றாண்டை சார்ந்தது. அதுவே மிகவும் தொன்மையானது என்று கூறிய அவர் இப்பொழு அது பிற்காலத்தது என்று கூறுகிறார். ஆதலின் பண்டைய தமிழ் எழுத்துக்களை பற்றி இன்னும் தெளிவு ஏற்படவில்லை என்பது தெரிகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வாராய்ச்சிக்கு அகழ்வாராய்ச்சி பெரிதும் உதவுகிறது. அகழ்வாராய்ச்சி என்பது காலத்தை கணிக்க பெரிதும் துணைபுரியும் நுண்ணிய முறை.

தமிழ்நாட்டில் வரலாற்று சிறப்பு மிக்க இரண்டு நகரங்கள் அகழ்வாய்வு செய்யப்பட்டுள்ளன. சேரர் தலை நகராம் கரூர் ஒன்று, சோழர் தலைநகராம் உறையூர் மற்றது அகழ்வாராய்ச்சியில் மிகவும் ஆழமான பகுதியில் கிடைக்கும் பொருள்கள் மேலே கிடைக்கும் பொருள்களைவிட காலத்தால் முந்தியவை.

அகழ்வாராய்ச்சியின் அடிப்படையில் தமிழ் எழுத்துக்களைப் பற்றி என்ன அறிகிறோம்?

உறையூரை பேராசிரியர் டி.வி.மகாலிங்கம் அகழ்வாய்வு செய்தார். அதன் முடிவுகளை டாக்டர் கே.வி.ராமன் உறையூர் அகழ்வாராய்ச்சி என்ற நூலில் வெளியிட்டுள்ளார். இந்நூலை சென்னை பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. இந்நூலின் பல அத்யாயங்களை பல ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். ஆதலின் தொடர்பு இன்றி, முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

உறையூர் அகழ்வாராய்ச்சியில் கிறிஸ்துவக்கு முன் முதல் நூற்றாண்டில் இருந்துதான் தமிழ் எழத்துக்கள் பொறித்த பானை ஓடுகள் கிடைக்கின்றன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலோ இரண்டாம் நூற்றாண்டிலோ தமிழ் எழுத்துக்கள் பொறித்ததாக சான்றுகள் கிடைக்கவில்லை.

கரூரில் எனது மேற்பார்வையில் நடைபெற்ற அகழ்வாரய்ச்சியிலும் தமிழ் எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவை கரூருடன் ரோமானிய தொடர்பு ஏற்பட்ட பின்னர் பொறிக்கப்பட்டவையாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காணப்படுகின்றன. அதாவது கிறிஸ்துவக்குப் பின் முதல் நூற்றாண்டைச் சார்ந்தவையாக காணப்படுகின்றன. அருகில் உள்ள புகளூரில் சேர மன்னர்களைக் குறிக்கும் கல்வெட்டுகளும், இதே அமைப்பில் வரி வடிவில் உள்ளதால், புகளூர் சேர மன்னர் கல்வெட்டு கி.பி. முதல் நூற்றாண்டை சார்ந்தது என இதன் வாயிலாக உறுதி செய்யலாம்.

உறையூர் அகழ்வாய்வில் மேலும் ஒரு உண்மை வெளியாகி உள்ளது. ஐ.மகாதேவன், தமிழ் பிராமி எழுத்துக்கள் மூன்று காலத்தைச் சார்ந்தவை என்றும் பிற்காலத்தைச் சார்ந்தவை என்றும் காலவரையறை செய்தார். இவர் குறித்துள்ள காலவரையறை தவறு என உறையூர் அகழ்வாராய்ச்சி உறுதி செய்துள்ளது. மகாதேவன் தொன்மையான எழுத்து என்றது பிற்காலத்ததாகவும் பிற்காலத்தது என்றது முந்தியதாகவும், அகழ்வாய்வில் வெளிப்பட்டுள்ளன. அவர் கூறும் பிற்கால எழுத்துக்கள் குழியில் ஆழமான பகுதியிலும் முற்காலம் என்பவை அதன் மேல் பகுதியிலும் கிடைத்துள்ளன. ஆதலின் அவர் குறித்துள்ள தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி ஏற்புடையதாக இல்லை.

இந்த இரண்டு நகரங்களிலும அகழ்வாய்வில் இருந்து தமிழ் எழுத்துக்கள் கி.மு. முதல் நூற்றாண்டில் இருந்து தான் பெரிதும் வழக்கில் வந்துள்ளன என தெரிகிறது. இதற்கும் முன்னர் எப்பொழுது வழக்கில் வந்தது என்பதற்கு தெளிவான சான்றுகள் இன்னமும் கிடைக்கவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகமங்கள்

நமது கோயில்கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும். அவற்றில் தெய்வத்தின் எந்த உருவை பிரதிஷ்டை செய்தல் வேண்டும்? எவ்வாறு பிரதிஷ்டிக்க வேண்டும். அந்தத் தெய்வ உருவம், சிலை எவ்வாறு இருக்க வேண்டும். அதன் தத்துவம் என்ன? அதற்கு நாள்தோறும் வழிபாடுகள், பூஜை எவ்வாறு செய்ய வேண்டும். கோயில்கள் விசேஷ நாட்கள் என்றால் என்ன? அந்நாட்களில் பூஜைகள் எவ்வாறு அமைய வேண்டும். ஒவ்வொரு கோயிலும், ஒவ்வொரு ஆண்டும் எவ்வாறு திருவிழாக்கள் நடத்த வேண்டும். எவ்வளவு நாட்கள் நடத்த வேண்டும். அந்தந்த திருவிழாக்களில், பூஜைகளில் என்ன என்ன மந்திரங்களைச் சொல்ல வேண்டும் என்று எந்த நூல்களில் இருந்து அறிகிறோமோ அந்த நூல்களையே ஆகமம் என்று அழைக்கிறோம். ஆதலின் கோயில்களை அறிய வேண்டுமானால், அதன் தத்துவங்களை அறிய வேண்டுமானால், வழிபாடு முறைகள் அறிய வேண்டுமானால் ஆகமங்கள் யாவை? அவற்றில் என்ன கூறியிருக்கின்றன என்று அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது ஆகும்.

ஆகமங்களை தந்திரங்கள் என்றும் சம்ஹிதைகள் என்றும் அழைப்பர். எல்லாம் ஆன இறைவனை ''ஆகமம் ஆகி நின்று அன்னிப்பான் தாள் வாழ்க'' என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''மந்திரமும் தந்திரமும் ஆனான் கண்டாய்'' என்றும் ஆன்றோர் அழைத்துள்ளனர். வேத மந்திரங்களானாலும், திருப்பதிகங்களானாலும் இறைவனைத் துதிக்கும்போது அவர் மந்திரமூர்த்தியாகத் தோற்றமளிக்கிறார். அதே தெய்வம் கோயிலில் பிம்பங்களில் முறைப்படி பூசிக்கப்படும்போது உபாசனாமூர்த்தியாக திகழ்கிறார்.

ஆகமங்கள் சைவ ஆகமங்கள் என்றும் வைஷ்ணவ ஆகமங்கள் என்றும் இரண்டு பெரும் பிரிவுகளாக உள்ளன. சக்தியின் வழிபாட்டை கூறும் ஆகமங்கள் சாக்த தந்திரங்கள் என்றும் அழைக்கப்படும். சைவ வழிபாட்டைக் கூறுபவற்றுள் காமிகம், காரணம், சிந்தியம், ரௌரவம், மகுடம் முதலிய 28 பெரும் ஆகமங்கள் உள்ளன. 100-க்கும் மேற்பட்ட உப ஆகமங்கள் உள்ளன. வைஷ்ணவ ஆகமங்களில் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. 'விகனஸ்' என்ற முனிவரின் அடியைப் பின்பற்றி தோன்றிய மரபு ஒன்று. இதை வைகானச மரபு என்று கூறுவர். ஐந்து இரவுகளில் போதிக்கப்பட்ட தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை இரண்டாம் வகை. இதை பஞ்சராத்திர மரபு என்பர். வைணவப் பெரியார் பின்பற்றியது ''பாஞ்சராத்திரம்'' என்பர். மரீசி, பிருகு போன்ற மகரிஷிகள் எழுதிய வைகானஸ ஸம்ஹிதைகளும், பாத்ம சம்ஹிதை போன்ற பாஞ்சராத்திர சம்ஹிதைகளும் வைஷ்ணவ கோயில்களில் பின்பற்றப்படுகின்றன. ஆகமங்கள் பெரும்பாலும் நான்கு பாதங்கள் உடையவையாக காணப்படுகின்றன. இவை கிரியை, சரியை, யோகம், ஞானம் எனப் பெயர் பெறுகின்றன. இவை ஒவ்வொன்றும் வழிபாட்டுக்கு இன்றியமையாத அங்கங்கள். கிரியை என்றால் பூஜை முறைகள் ஆகும்.

இப்பகுதியை எடுத்துக் கொள்வோம். சிவபெரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மானை உமையொருபாகனாக அர்த்தநாரீஸ்வரராக வழிப டுவது எப்படி என இதில் கூறப்படும். அவர் உருவம் எப்படி அமைய வேண்டும். அவரது அங்கங்களின் அளவுகள் என்ன. அவரது ஆலயம், அல்லது சிற்றாலயம் எங்கு இருத்தல் வேண்டும். பீஜமந்திரங்கள் யாவை? ஒவ்வொரு தெய்வ உருவத்துக்கும் ஒரு காயத்ரி மந்திரம் உண்டு. அது என்ன? நித்திய பூஜை எப்படி செய்ய வேண்டும். திருவிழா எப்படி என்று எல்லா முறைகளும் தெளிவாகக் குறிக்கப்படும். இதுபோல சிவபெருமான் எத்தனை திருவுருவங்களில் தோன்றுகிறாரோ அத்தனை உருவங்களுக்கும் ஒவ்வொரு உருவத்துக்கும் தனித்தனி யாக முறைகளை 'கிரியா பாதம்' என்ற பகுதி கூறுகிறது.

தெய்வ வழிபாட்டை தனிப்பட்ட வழிபாடு என் றும், பிறர் பொருட்டு வழிபாடு என்றும் இரு வகைகளா கக் கூறுவர். தனிப்பட்ட வழிபாடு தமது ஆன்மிக வளர்ச்சிக்காக, தாமே தமது வீடுகளில் செய்யும் பூஜையா கும். இதை ஆர்மார்த்த பூஜை என்பர். எல்லா மக்களு டைய மேம்பாட்டுக்காகவும் பூஜை செய்யத்தான் கோயில் கள் எடுக்கப்பட்டன. எனது நாட்டில் உள்ள எல்லாக் குடிமக்களின் விருப்பங்களும் நிறைவு பெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டு இக்கோயிலைத் தோற்றுவிக்கி றேன் என்று மாமல்லபுரத்துக் கோயிலில் பல்லவ மன்னன் ஒருவன் கூறுகிறான். கோயில்கள் என்றாலே பொதுவழிபாட்டுக்கு உரியவை என்று பொருள். அவ் வாறு அனைத்து மக்களுடைய வழிபாட்டுக்காகவும், கோயில்களில் பூசை செய்வோர், தம்மை, உடலாலும், உள்ளத்தாலும் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். தமது வாழ்க்கையில் சில நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் கோயிலில் பூஜை செய்யும்போது அவர்களது ஒவ்வொரு அங்க அசைவுகளும், தெய்வத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் வகையில் இருக்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேண்டும். நல்லது அல்லாதவற்றை நமக்கு, நம் நினைவுக்கு வராத வகையில் அமைய வேண்டும். அவர்களைப் பார்க்கும்போதே நமக்குத் தெய்வ நினைவு, தூய நினைவு தோன்ற வேண்டும். அந்த நிலையைத் தான் ''முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கும் அடியேன்'' எனப் பெரியோர்களே போற்றி பரவும் வகையில் அமைந்தது. ஆதலின் கோயில் வழிபாடு செய்பவர்கள் தங்கள் வாழ்க்கையில் அனுசரிக்க வேண்டிய விதிமுறைகளைக் கூறும் பகுதி ''சரியா பாதம்'' என்ற இரண்டாவது ஆகமப் பாகம் ஆகும்.

மந்திரங்களினாலும், கிரியைகளினாலும், தெய்வங்களை வழிபடுவதால் மனம் சாதாரண மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்கிறது. இதை ஒரு நிலையில் நிறுத்தி மேலும் உன்னத நிலையைப் பெற இயலும் என ஆன்றோர் அனுபவத்தால் கண்டறிந்துள்ளனர். அந்த நெறி யோக நெறி என்றும் 'யோக பாதம்' என்றும் அழைக்கப்படுகிறது.

இந்திய வழிபாட்டு முறையில் சமய நெறியில் இறுதியில் அனைத்தும் ஞானமாக, அறிவாக, மலர்வது அனைவரும் அறிந்ததாகும். பூஜையின் நோக்கம் ஞானம் பெறுதல் ஆதலின் ஆகமங்களின் நான்காவது பாதம் ஞானம் பெறும் பாதையைக் கூறும் ஞான பாதமாகும்.

இந்த ஆகமங்களின் அடிப்படையில் தான் நம் நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் கோயில்கள் எடுக்கப் பட்டன. இந்தக் கோயில்களில் உள்ள அனைத்துச் சிற்பங்களும், இந்த ஆகமங்களின் அடிப்படையில் தான் வடித்து உரிய கோஷ்டங்களில் வைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படுகின்றன. காஞ்சீபுரத்தில் கி.பி.700-ல் ஆட்சி செய்த பல்லவ அரசன் இராஜசிம்மன் தோற்றுவித்தது 'இராஜ சிம்மேஸ்வரம்' என்று அழைக்கப்படும் கைலாய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாதர் கோயிலாகும். அக்கோயில் இன்றும் காஞ்சீபுரத்தில் உரு மாறாது விளங்குகிறது. ஏராளமான எழில் ஆர்ந்த சிற்பங்களைத் தாங்கி நிற்கும் இந்தக் கோயில் தமிழ்நாட்டில் எஞ்சியுள்ள பண்டைய கோயில்களில் உரு மாறாத கோயிலாகும். இதைத் தோற்றுவித்த பெரும் மன்னனுக்குப் பல பட்டப் பெயர்கள் இருக்கின்றன. கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் அவற்றில் ஒன்று அவனை ஆகம பிரமாணன் (ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்) என்று குறிப்பிடுகிறது. ஆதலின் அவன் தோற்றுவித்துள்ள அந்தக் கோயில் ஆகமத்தின் அடிப்படையில் தோன்றியது என்பதில் ஐயம் இல்லை. அக்கோயிலின் அமைப்பு பரம சாயிபதம் என்று அழைக்கப்படும் ஒரு வகை வாஸ்து மண்டல அமைப்பில் எடுக்கப்பட்டது. பெரும் சக்கர வர்த்திகளால் எடுக்கப்படும் அமைப்பு இது. இதில் பரிவார தெய்வங்களக்கும், வாஸ்துபத தெய்வங்களுக்கும் சிற்பங்கள் இங்கே ஆகம ரீதியில் அமைக்கப்பட்டு விளங்குகின்றன. உத்திரமேரூர் என்ற கிராமத்தில் சற்றேறக்குறைய 750-ல் ஒரு அழகிய திருமால் கோயில் எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டு அதை ஒரு சுந்தர வரதப் பெருமாள் கோயில் என்றும், இப்போது அழைக்கிறார்கள். பல்லவ காலத்திய சிறப்பான இந்தக் கோயிலை எடுத்த ஸ்தபதியின் பெயர் ஸ்ரீபாடகத்தைச் சேர்ந்த (காஞ்சீபுரத்தின் ஒரு பகுதி) பரமேஸ்வர பெருந்தச்சன் என்பது ஆகும். அவன் இந்தக் கோயிலை ஆகம விதிப்படி எடுத்தவன் என்று கல்வெட்டு கூறுகிறது. தஞ்சை பெரும் கோயிலைத் தோற்றுவித்த இராஜராஜனும், அவனது கோயில்களும் அதில் காணப்படும் சிற்பங்களும் வாஸ்து நூல்களிலே குறிக்கப்பட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள சிற்பங்களுக்கு, தெய்வ உருவங்களுக்கு வழிபாடு தத்துவ ரீதியில் உயர்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளதை ஆகமங்களிலிருந்து அறியலாம். கர்ப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பக்கிருஹம், அதன் முன்மண்டபம், அதைச் சுற்றி வரும் திருச்சுற்று மாளிகை, அம்மாளிகையிலே உள்ள சிறு ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள திசைக் காவலர்களின் உருவங்கள் இவை அனைத்துமே பண் டைய நூல் மரபுப்படி அமைந்துள்ளவையாகும். இதற் கேற்ப இங்கு வழிபாடு அமைந்துள்ளது. பண்டைய உரு மாறாமல் இன்றும் வழிபாட்டில் இருக்கின்ற சிற்பங்கள், தெய்வ உருவங்கள் ஒவ்வொன்றும் அந்தப் பகுதியிலே பின்பற்றப்பட வேண்டிய விதியின் அடிப்படையில் அமைக்கப்பட்டவை. ஆதலின் அவற்றிற்கு திருப்பணி செய்ய முற்படும்போது அதன் நூல் எது என்பதை முதலில் கண்டறிந்து அந்தச் சிற்பங்களுக்குத் தத்துவங்கள் என்ன என்பதை அறிந்து பண்டைய மரபு மாறாமல் வழிபாடு செய்தலே பெருமையும், வழிபாட்டு மரபும் ஆகும். நூல்களில் கூறும் பண்டைய மரபை ஆராயாது மாற்றிவிட்டால், யார் இதை அன்று எடுத்தார்களோ, எந்த நோக்கோடு நாள்மங்கலம் செய்தார்களோ, திருவிழாக்க ளுக்கு உருக் கொடுத்தார்களோ அவர்களது கருத்தையும் பக்தியையும் மாற்றியதாகும். ஆதலின் கோயில்களைத் திருப்பணி செய்யும் பெரியோர்கள் அக்கோயிலின் பண் டைய நூல் மரபுகளை ஆய்ந்து சான்றோர் வழிச் சிறப்பினை ஆராய்ந்து மாறாமல் மரபைக் காத்தல் தகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சம்ஸ்கிருதத்தில் பெரியபுராணம்

"பரமாச்சாரியாள் உங்களை உடனே காஞ்சீபுரம் வர உத்தரவாகியிருக்கிறது. கல்வெட்டு விஷயம். உடனே வரவும்'' என்று காஞ்சி சங்கராச்சார்ய சுவாமிகள் மடத்தி லிருந்து ஒரு கடிதம் வந்தது. காஞ்சி மகா பெரியவருக்கு கல்வெட்டின் மீது அளவிலாத ஈடுபாடு. ஆதாரமான செய்திகளை அவை எடுத்துக் கூறுவதால், நமக்கு புரியாத எவ்வளவோ கல்வெட்டுச் சொற்றொடர்களுக்குப் புரியும் வகையில் எனக்கு எவ்வளவோ எடுத்துக் கூறியிருக்கிறார் கள். கல்வெட்டைப் பற்றி பெரியவர் கருதுகிறார் என் றால் புதிய செய்திகள் நிச்சயம் கிடைக்கும் என்று எனக்குத் தெரியும். காஞ்சிபுரத்துக்கு உடனே சென்றேன். ''ஏகாம்பர நாதர் கோயிலில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. 50 வருடங்களுக்கு முன் நான் படித்த ஞாபகம். நீ போய் அதை படி எடுத்துக் கொண்டு வா'' என்றார்கள். அதைப் படி எடுக்கச் சென்றேன். அதைப் படி எடுத்துக் கொண்டி ருக்கும்போது அதன் மேல் சுவற்றில் ஒரு சமஸ்கிருத கல்வெட்டு பெரிய பெரிய எழுத்துக்களில் இருந்தது. அந்தக் கல்வெட்டின் நடுவில் அப்பர் பெருமானின் சிற்பம் சுவற்றில் அழகாக செதுக்கப் பட்டிருந்தது. அதை ஒட்டி 'தமிழிலும் கிரந்தத்திலும்' பின் வருமாறு எழுதப் பட்டிருந்தது.

''திருவேகம்பமுடைய நாயனார், அறுபத்து மூவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராணம் சம்ஸ்கிருத பாஷையில் செய்த 'சிவபக்த விலாசத்தை' உகந்து செவிசாய்த்து அருளுகையில் இக் கோயில் தானத்தாரும் மாஹேஸ்வரரும் சந்தோஷித்தது ஸ்தலத்துக்கு கர்த்தரான போகய்ய தேவமகாராசா'' என்று எழுதியுள்ளது. எனக்கு ஒரே மகிழ்ச்சி. பெரியவரிடம் ஓடிவந்து அந்த கல்வெட்டை பற்றிக் கூறினேன். சிரித்துக் கொண்டே ஆசாரிய சுவாமிகள் ''சிவபக்தவிலாசம்'' என்று சமஸ்கிருதத்தில் இரண்டு நூல்கள் இருக்கு. ஒன்று 'உபமன்யு பக்தவிலாசம்: மற்றது 'அகஸ்திய பக்தவிலா ஸம்' இரண்டையும் படி புரியும்'' என்றார்கள். இரண்டு நூல்களும் அச்சாகியுள்ளன. உபமன்யு பக்தவிலாசம் உ.வெ.சாமிநாதய்யர் நூல் நிலையத்தில் இருந்தது. அகஸ் தியர் பக்தவிலாஸம் என்ற நூலை பாண்டிச்சேரி பிரஞ்சிந் தியக்கழகம் அனுப்பி உதவினார்கள். இரண்டையும் படித்தபோது நான் வியந்தேன்.

முதலில் அந்தக் கல்வெட்டைப் பற்றி சொல்லிவிடு கிறேன். கல்வெட்டு காஞ்சி ஏகாம்பர நாதர் கோயிலில் நடராஜர் ஆலயத்தில் கிழக்குச் சுவரில் உள்ளது. கல்வெட் டின் காலம் திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ளது. விஜய நகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயனுக்கு அடுத்து ஆண்ட அச்சுத ராயன் காலத்தது. கி.பி.1532ம் ஆண்டு ஸ்ரீனிவாச கவி என்பவர் இந்த 'சிவபக்தவிலாசம்' என்ற நூலை இயற்றியிருக்கிறார். அதற்காக அரசன் அவரைப்பாராட்டி மனையும், நிலமும், ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்கு அருகில் கொடுத்து சிறப்பித்திருக்கிறான். கல்வெட்டு சமஸ்கிருதத்தில் உள்ளது. அந்த சீனிவாச கவியே இந்தக் கல்வெட்டைக் கவனம் செய்திருக்கலாம். இதன் அடியில் தமிழில் சிவபக்த விலாசம் என்ற நூல் தமிழ் 63வர் புராணத்தின் சமஸ்கிருத மொழி பெயர்ப்பு என்ற செய்தி அடிக்கோடிட்டு அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமை யாததாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகஸ்தியரின் பெயரால் சமஸ்கிருதத்தில் 63வர் புராணம் உள்ளது. அது ஸ்கந்த உபபுராணத்தைச் சேர்ந்தது என்று குறிப்பு உள்ளது. 'பக்தமாகாத்மியம்' என்றும் 'பக்தவிலாஸம்' என்றும் நூலில் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. மூலநூலில் சிவபக்தவிலாஸம் என்ற பெயரில்லை. மேலும் இதை இயற்றியவர் 'ஹரசர்மன்' என்ற பெயர் காணப்படுவதாலும். இது 63 வர் புராணத்தை ஸம்ஸ்கிருத மொழியில் கூறுகிறதே ஒழிய மொழியெர்ப்பும் இல்லை, ஆதலாலும் கல் வெட்டுக்கூறும் சிவபக்த விலாஸம் இதுவல்ல என்று முதலிலேயே கூறிவிடலாம்.

அறுபத்துமூவர் வரலாற்றை தொகுத்து முதன் முதலில் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் திருத்தொண்டத் தொகை என்று பாடியுள்ளார். பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி என்று இதைச் சற்று விரித்துள்ளார். 12ம் நூற்றாண்டின் மத்தியில், அநபாயன் என்னும் பெயர் பெற்ற குலோத்துங்கசோழனின் அமைச்சர் சேக்கிழார் பெருமான் இதை ஒரு வியத்தகும் காப்பியமாக தமிழில் படைத்துள்ளார் என்பது தமிழறிந்த உண்மை.

உபமன்யு முனிவரின் பெயரால் உள்ள 'சிவபக்தவிலாஸம்' என்ற நூல் வரலாற்றுச் சிறப்புடையது என்றே சொல்லலாம். சேக்கிழார் இயற்றியுள்ள 63வர் புராணத்தையும், உபமன்யுவின் சமஸ்கிருத நூலையும், அருகருகே வைத்துக் கொண்டு செய்யுள் செய்யுளாக ஒப்பிட்டு பார்த்தேன். வியக்கதக்க வகையில் உபமன்யு நூல், சேக்கிழார் பெரியபுராணத்தின் செய்யுளுக்குச் செய்யுள் மொழிபெயர்ப்பாக உள்ளது.

சுமார் 50 ஆண்டுகளுக்கும் முன்னர் இது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் சுவையாக நடந்துள்ளன. அக்கா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லத்திலேயே இவ்விரண்டு நூல்களுக்கும் உள்ள ஒற்று மையை அறிஞர்கள், உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் அதில் தெளிவின்றி இருந்திருக்கிறார்கள். சேக்கிழார், தமது பெரியபுராணத் தொடக்கத்தில், ''உன்னரும் சீர் உபமன்னிய முனி'' இந்த வரலாற்றை ஏனைய முனிவர்க ளுக்கு கூறுவதாக தொடங்குவதால், சமஸ்கிருதம் படித்த வர்கள் சேக்கிழாரின் நூல் உபமன்யு நூலின் மொழிபெ யர்ப்பு என்றனர்.

தமிழ் படித்த அறிஞர்கள் இதை வன்மையாக எதிர்த்தனர். காலப்போக்கில் உபமன்யு நூலை படிப்ப தையே விட்டு விட்டனர். நன்கு நோக்கும்போது இருதி றத்தாருமே உபமன்யு நூலை ஆழ்ந்து படிக்கவில்லை என்று கருதுகிறேன். உபமன்யு பக்தவிலாஸம், அநபாய னையும் குலோத்துங்கச் சோழனையும் கூறுகிறது. எடுத் துக்காட்டாக மனுநீதி சோழன் வரலாற்றைக் குறிக்கும் போது சேக்கிழார்.

மன்னுசீர் அநபாயன் வழிமுதல்
மின்னுமா மணிப்பூண் மனுவேந்தனே

என்று பாடுகிறார். அதை அப்படியே உபமன்யு பக்த விலாஸம்

அநபாயாஹ்ருதாபாயோ மனுர்நாம மஹீபதி

என்று கூறுகிறது. அதுபோல் சண்டேஸ் வரநாயனார் புராணத்தில்

சென்னி அபயன் குலோத்துங்கசோழன்
தில்லை திருவெல்லை
பொன்னின் மயமாக்கிய வளவர்
போரேறென்றும் புவிகாக்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மன்னர் பெருமான் அநபாயன் வரும்
தொல்மரபின் முடிசூட்டும்
தன்மை நிலவு பதிஐந்தின் ஒன்றாய்
நீடும் தகைத்தவ்வூர்

என்று சேய்ஞலூரை சேக்கிழார் பாடுகிறார். இதை அப்படியே உபமன்யு பக்த விலாசம் கூறுவதைக் காணுங்கள்?

புண்டரீக புரேசஸ்ய தாம ஹைமம் சகார ய:
சோளேந்தரஸ்ய குலோத்துங்க நாம்ந:
தஸ்ய மஹீபதே:
வம்சாபிஷேக ஸத்கார: யை: ஏவ பிரதிபத்யதே
கிராமேஷு பஞ்சஸு ஏதேஷு ஸ்கந்தக்ராமஹ சகாஸ்தி
ஸஹ

புண்டரீகம் புரம் = தில்லை, தாம = கோயில், ஹைமம் சகார - பொன்மயமாக்கினான் அந்த குலோதுங்க சோழேந்திரனின் குலம் முடிசூட்டும் தன்மை உடைய ஐந்து கிராமங்களில் சேய்நலூர் ஒன்றாக விளங்குகிறது.

சேக்கிழாரின் செய்யுள் அப்படியே இங்கு மொழிபெயர்க்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம். குலோத்துங்க சோழன் பெயர் குறிக்கப்பட்டுள்ளதையும் காண்கிறோம். சேக்கிழார் குலோத்துங்கனை எந்த சண்டேசுவர நாயனார் கதையில் கூறுகிறாரோ அதே இடத்தில் உபமன்யு நூலிலும் காண்கிறோம். ஆதலின் உபமன்யு சிவபக்த விலாஸம் என்பது காலத்தால் குலோத்துங்கச் சோழனுக்கு பிற்பட்டது. சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தின் நேர் மொழிபெயர்ப்பு என்பதில் ஐயத்துக்கு இனி இடமே இருக்க முடியாது.

12ம் நூற்றாண்டுக்குப் பிறகு இந்நூல் எப்பொழுது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கப்பட்டது என்பது கேள்வி? அக்கேள்விக்கு காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் கல்வெட்டு கி.பி. 1532ம் ஆண்டு சீனிவாச கவி என்பவரால் விஜயநகரப் பேரரசன் அச்சுத தேவராயன் காலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது என்று தெளிவாக்குகிறது. கல்வெட்டுக்குக் கூறும் சிவபக்தவிலாசம்தான் உபமன்யு பக்தவிலாசம் என்னும் நூல். இதிலிருந்து மேலும் பல உண்மைகள் புலனாகின்றன.

1310ல் மாலிக்காபூர் படையெடுப்பின் காரணமாக தமிழ்ப் பண்பாட்டின் இருப்பிடமாகத் திகழ்ந்த கோயில்கள் சீர்கேடடைந்தன. தமிழ்நாட்டின் செல்வங்கள் சூறையாடப்பட்டன. இந்த நிலையில்தான் விஜயநகரப் பேரரசர்கள் அந்நியப் படையெடுப்பிலிருந்து தமிழ் நாட்டை காப்பாற்றினார்கள். நம் கோயில்களைக் காப்பாற்றினார்கள். தமிழ்நாட்டுக்கு வந்ததும் தாம் வென்ற ஊர்களில் எல்லாம் கோயில்களுக்குச் சென்று அங்கிருந்த மரபுகளைக் கண்டறிந்து அவை வளரச் செய்தார்கள். இதைப் பலகல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன. விஜயநகரப் பேரரசர்கள் தெலுங்கு - கன்னடப் பகுதியிலிருந்து வந்தவர்கள். அவர்களுக்கு முதலில் அதிகம் தமிழ் தெரியாது. ஆதலால் தமிழ் மரபுகளையும் பாடல்களையும் சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் மொழி பெயர்த்துப் படிக்கத் தொடங்கினார்கள். இதன் பலனாக தமிழ் மரபுகள் பிறபகுதிகளில் எல்லாம் பரவின. உதாரணமாக கிருஷ்ண தேவராயன் ஆண்டாளின் திருப்பாவையை தெலுங்கில் 'ஆமுக்த மால்யதா'வில் மொழி பெயர்த்தான். ஹம்பி முதலிய பகுதிகளில் ஆண்டாளுக்கும் ஆழ்வார்களுக்கும் கோயில்கள் எழுந்தன. அவ்வாறுதான் பெரிய புராணமும் மொழிபெயர்க்கப்பட்டது. இதை அரசனே பாராட்டி மான்யம் கொடுத்துள்ளான் என்று இந்தக் கல்வெட்டிலிருந்து அறிகிறோம். நம் தமிழ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல்களை பிறமொழிகளில் மொழி பெயர்த்துப் பிறர் படிக்க வகை செய்ய வேண்டும் என்று இப்போது கூறுகிறோம். அக்காலத்திலே அதைச் செய்திருக்கிறார்கள் என்பது அறியத்தக்கது.

இதில் மற்றொரு சிறப்பும் உண்டு. சேக்கிழாரின் பெரியபுராணத்தில் சில பாடல்கள் அவர் எழுதியவை அல்ல என்றும் 'வெள்ளிப்பாட்டு' என்றும் தள்ளி இருக்கி றார்கள். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் என்ற பெரிய சிவஞானி ஒருவர் பிற்காலத்தில் இருந்தார். அவர் இவற்றை எழுதி சேர்த்துவிட்டார் என்று அந்தப் பெரியவ ரின் மீது குறை கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பைக் காணும் போது இந்தப் பாடல்களை சேக்கிழாரே இயற்றியிருக்கிறார் என்று திட்டவட்டமாகக் கூறமுடிகிறது. சேக்கிழாரின் பெரியபு ராணத்திற்கு ஒரு திருத்தமான பதிப்பு (Critical edition) கொண்டுவர வேண்டுமென்றால் இந்த சம்ஸ்கிருத உப மன்யு பக்த விலாஸம் மிகமிக இன்றியமையாதது. இதுபோல பல தமிழ் நூல்களின் திருத்தமான பதிப்புக ளுக்கு சம்ஸ்கிருத நூல்கள் இன்றியமையாதவை என்றே தோன்றுகிறது. சம்ஸ்கிருதத்தில் சிவரஹஸ்யம் என்று மற்றொரு நூலும் உள்ளது. அதில் ஒரு அத்யாயத்தில் 63வர் சரிதம் கூறபட்டுள்ளது. உபமன்யுவின் நூலிலிருந்து அதில் சில செய்யுட்கள் (பெரிய புராணத்தின் மொழி பெயர்ப்புகள்) காணப்படுகின்றன. இவை பற்றி விரி வான ஆராய்ச்சி மேற்கொள்ளும்போது பல உண்மை களை வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இரண்டு செய்திகளை மட்டும் இங்கு குறித்தே ஆகவேண் டும். சேக்கிழாரின் பெரிய புராணம் 16ம் நூற்றாண்டில் அப்படியே சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'உ பமன்யு சிவபக்த விலாஸம்' என்ற பெயரில் இன்றும் உள்ளது என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரியபுராணத்தில் வெள்ளிப்பாட்டு

பெரிய புராணத்தில் இப்பொழுது காணப்படும் சில பாடல்களை சேக்கிழார் பாடவில்லை என்றும் இவை வெள்ளிப் பாடல்கள் என்றும் முன்னர் பதிப்பித்த சிலர் குறித்துள்ளனர். 'வெள்ளிப்பாடல்' என்றால் இருவகையாகப் பொருள் கூறுகின்றனர். கி.பி.17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வெள்ளியம்பலவாண சுவாமிகள் பாடிய பாடல்கள் இவை. மூலத்துடன் சேர்க்கப்பட்டன என்பர் சிலர்; இரண்டாவது கருத்து, வெள்ளிப்பாடல் என்றால் வெளிப்பாடல். மூலத்தில் இல்லாதது என்று பொருள் கூறுகின்றனர். எப்பொருள் கொள்ளிலும் வெள்ளிப் பாட்டு எனில் ''இடைச் செருகல்'' என்பது முடிவு.

கீழ்வரும் பாடலை வெள்ளிப்பாடல் என்று குறிப்பர். பெரிய புராணத்தில் திருமலைச் சிறப்பில் இப்பாடலுள்ளது.

காதில் வெண்குழையோன் கழல்தொழ நெடியோன்
  காலம் பார்த்திருந்தும் அறியான்
சோதி வெண்கயிலைத் தாழ்வரை முழையில்
  துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செஞ்சுடர் இன்று
  வெண்சுடர் ஆனதென்று அதன்கீழ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதி ஏனமதாய் இடக்கலுற்றான்
என்றதனை வந்தணைதரும் கலுழன்

சிவபெருமான் அமர்ந்திருக்கும் கயிலையை நான்முகன் அன்னமாக வந்து சேவித்தார் என்ற பாடல் உண்டு. அதற்கு அடுத்த பாட்டு இது, இப்பாடலில் திருமால் ஏனமாகி வந்து தொழுதார் என்பது குறிப்பு. பாடல்களின் கருத்துக்கோப்பையும், கட்டுக்கோப்பையும் கண்டே இது சேக்கிழார் இயற்றியது என்று கொள்வதில் தவறு இருக்காது. நான்முகன் அன்னமாக வருவதைக் கூறும்போது திருமால் ஏனமாக வந்து அடிமுடி தேடும் கதையை இப்பாடல் முழுமை செய்கிறது. நான்முகன் மட்டும் அன்னமாக வந்தான் என்று மட்டும் கூறில் கருத்து முடிவடையவில்லை. இது நிற்க.

''18-22 பாடல்கள் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை, 18 ஆம் பாடல் மட்டும் வெள்ளிப்பாடல் என்று காஞ்சி சபாபதி முதலியார் பதிப்பில் குறிக்கப்பட்டிருக்கிறது, என்று சமாஜம் பதிப்பில் குறிப்புள்ளது. இதில் 18 ஆம் பாடல் என்பதுதான் மேல் குறித்த பாடல், சிவக்கவிமணி C.K. சுப்ரமணிய முதலியாரவர்கள் தமது மிகச்சிறந்த ஆராய்ச்சிப் பதிப்பிலும் இதையே குறித்துள்ளார்.

''இது வெள்ளிப்பாடல் என்பார். அஃதாவது வெள்ளியம்பலவாணத் தம்பிரான் என்பவரால் இடைச்செருகலாய்ச் சேர்க்கப்பட்ட பாட்டு என்று கூறுவர். இதன் கருத்தும், பொருள் மேற்பாட்டையே அனுவதித்துக் கூறியதாக வெள்ளையதாகவே காணப்படுகின்றது, மேற்பாட்டிலே பரமனுக்குச் சொன்ன கருத்தும் பொருளுமே இப்பாட்டில் விட்டுணுவுக்கும் சொல்லப் பட்டது. மேற்பாட்டில் ஊர்தியை உடையவன் ஊர்தியைக் காணாது மயங்குகின்றான். இப்பாட்டில் ஊர்தி உடையவனைக் காணாது, மயங்குகிறது'' என்று கூறிய முதலியார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர்கள் இப்பாடலை இடைச் செருகலாகவே கருதியுள்ளார். தமது அடிக்குறிப்பில் ''இவ்வாறு வரும் வெள்ளிப் பாடல்கள் பலவற்றை மேலும் பல இடங்களில் காணலாம். அவற்றைப் பற்றிச் சேக்கிழார் என்ற நூலில் இடைச் செருகல்கள் என்ற தலைப்பில் விரித்து எழுதியுள்ளேன். ஆண்டுக் காண்க'', என்று C.K.S. குறிக்கிறார்.

சேக்கிழாரின் பெரியபுராணம் பற்றி நான் கொண்ட ஆராய்ச்சியில் ஒரு முக்கிய செய்தியை தினமணி 19.5.89 நாளிதழில் வெளிப்படுத்தியுள்ளேன் (முன் கட்டுரையைக் காண்க). ஒரு கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தை 1532-ல் ஸ்ரீநிவாஸக்கவி என்பவர் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூலே இப்பொழுது ''உபமன்யு பக்தவிலாஸம்' என்ற பெயரில் வழங்குகிறது. அதில் பெரிய புராணச் செய்யுட்கள் நேர் மொழி பெயர்ப்பாகக் காணப்படுகின்றன என்று புலப்படுத்தியுள்ளேன். அந்த அடிப்படையில், இடைச் செருகல், என்னும் பாடலை ஆராயலாம். இரண்டு பாடல்களை எடுத்துக் கொள்வோம். ஒரு பாட்டு மேலே குறிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக நான்முகன் அன்னமாக வந்ததைச் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்:

நாயகன் கழல் சேவிக்க நான்முகன்,
மேயகால மிலாமையின் மீண்டவன்
தூயமால் வரை சோதியில் மூழ்கியொன்
றாயஅன் னமும் காணா தயர்க்குமால்

என்பது பாட்டு. உபமன்யு பக்த விலாஸத்தில் அதே இடத்தில், அதே கருத்து சம்ஸ்கிருதத்தில் காணப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்தஸ்ஸம்ஸேவ்ய கௌரீசம்
த்வாரி நிர்கச்சதோ விதே:
ஸர்வதோ பாஸமுல்லாஸை:
ஹம்ஸ ப்ராந்திம் விதந்வதி!!

கௌரீபதியை வணங்க வந்த நான்முகன், வாயிலில் வெளிப்போகும்போது எங்கும் ஒளிமயமாகத் திகழ்ந்த தைக் கண்டு அன்னம் மயங்கி நின்றது என்பது பொருள்.

இதிலிருந்து சேக்கிழார் பாடலின் நேர்மொழி பெயர்ப்பு இது என்பது தெள்ளென விளங்கும். இதற்கு அடுத்த சம்ஸ்கிருதப் பாடலை பார்ப்போம்.

ஸேவார்த்தினி ஹரௌ அந்த:
சிராயதி பணித்ருஹ:
பஹிர் நிர்யத் கணேசாகு
க்ருதாநாதி கிடி ப்ரமே!!

(பொருள் : ஹரௌ - திருமால், ஸேவார்த்தினி - வணங்குதலின் பொருட்டாய், அந்த : உள்ளே, சிராயதி - நீடிக்கையில், பஹிர்நிர்யத் - வெளியில் வரும், கணேசாகு - கணபதியின், எலியை, பணித்ருஹ : - கருடன், கிருத அநாதி - கிடி - ப்ரமே - ஆதிஏனம் என்று மயங்கியது)

இந்த சம்ஸ்கிருதப் பாடலும் சேக்கிழார் பாடலுக்குச் சொல்லுக்குச் சொல் நேர் மொழி பெயர்ப்பு என்பது வெளிப்படை. இவ்விரு பாடல்களும் உபமன்யு பக்தவி லாஸத்தில் அடுத்தடுத்து 'திருமலைச்சிறப்பு' பகுதியி லேயே காணப்படுகின்றன.

இந்த சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு 1532ல் இயற்றப் பட்டது என்று கண்டோம். அதற்கு முன்னதாகவே சேக்கிழார் இயற்றிய நூலில், ''காதில் வெண்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குழையோன்'' என்ற பாடல் இருந்திருக்கிறது என்று திட்டவட்டமாகச் சொல்லலாம். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ஒரு பரம சிவஞானி. தவக்கொழுந்து. சமஸ்கிருத உபமன்யு விலாஸம் தோன்றி நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் திகழ்ந்தவர். இவற்றை அவர் இயற்றியிருக்க முடியாது. வெள்ளிப்பாட்டு என்று கூறிய இவற்றை அவர்மீது குற்றம் கூறியது பொருத்தமல்ல. இப்பாடல்களைச் சேக்கிழாரேதான் இயற்றியுள்ளார் என்று கூறுவதேபொருந்தும். இது போன்றே பிற பாடல்களும் எனலாம். ஆதலின் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்துக்குத் திருத்திய பதிப்பு கொண்டுவர உபமன்யு பக்த விலாஸம் என்னும் சமஸ்கிருத நூல் மிகமிக இன்றியமையாதது என்பது எமது கருத்து.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எமை ஆளுடையான்

உமையன்னை பாலூட்ட திருஞானம் பெற்ற குழந்தையாம் ஞானசம்பந்தர் ''தோடுடைய செவியன்'' என்னும் பதிகம் பாடினார் அல்லவா? அப்பொழுது அவரது தந்தை சிவபாத இதயரும், அங்கு குழுமியிருந் தோரும், அவ்வதிசயம் கண்டு ஆனந்தபாஷ்பம் பொங் கிட உச்சிமேல் கரம் கூப்பி, அரன் அருளை வியந்து, குழந்தையுடன் தோணியப்பர் கோயிலுள் சென்றனர். உள்ளே சென்றதும், சம்பந்தர், சிவபரனை நோக்கி ''இங்கு எனை ஆளுடையான் உமையொடும் இருந்தான்'' என்று புகன்றார்'' என சேக்கிழார் கூறுகிறார்.

பொங்கொளி மால்விடை மீது புகுந்தணி பெற்றோணி
தங்கி இருந்த பெரும் திருவாழ்வு தலைப்பட்டே
இங்கெனை ஆளுடையான் உமையொடுமிருந்தான்
என்று
அங்கெதிர் நின்று புகன்றனர் ஞானத்தமுது உண்டார்

இங்கு, சேக்கிழாரின் பாடலில் ''இங்கு எனை ஆளுடையான் உமையொடும் இருந்தான்'' என்று எதிர் நின்று புகன்றனர் என்று மட்டும் குறித்துள்ளார். இவ் வாறு தொடங்கும் ஒரு பதிகம் சம்பந்தர் பாடினாரா என்ற ஐயம் தோன்றும். அடுத்த பாடலில் சம்பந்தர் கோயிலை வணங்கிப் புறப்பட்டார் என்று கூறுகிறார் சேக்கிழார் பெருமான். ஆதலின் சம்பந்தர் கோயிலின் உள்ளே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டாவது பதிகம் பாடினாரா என்ற ஐயம் தொடரும்.

இவ்விடத்தில் பெரிய புராணத்தின் மொழிபெயர்ப்பான உபமன்யு பக்த விலாஸம் ஒரு அரும் செய்தியைக் குறிக்கிறது.

சம்பந்தர் கோயிலுள் நுழைந்து, உமையோடு அமர்ந் திருக்கும் அண்ணலை, 'என் சுவாமி' என்று பத்து பாடல்களால் துதித்தார்' என்று அங்கு பதிகம் பாடினார் என்று கூறுகிறது.

ப்ரவிச்ய சாம்பவம் தாம மஹாநாயகயா ஸமம்
ஸ்ரீத்ரோணீ நாதம் அஸ்தௌஷீத் மத்ஸ்வாமி அத்ரேதி கீதித:
ஸ்ரீ கான தசகேன ஸ்ரீ த்ரோணீசம் ப்ரீணயத் சிசு:

சாம்பம் தாம - சம்புவின் கோயிலில், ப்ரவிச்ய - நுழைந்து, மஹாநாயிகயா சமம் - பெருந்தேவியுடன் கூட, ஸ்ரீத்ரோணீநாதம் - தோணிபுரத் தலைவரை, அத்ர - இங்கு, மத்ஸ்வாமீ இதி - எனை ஆளுடையார் என்று, கிதித: - பாடலினால், அஸ்தௌஷீத் - துதித்தார். ஸ்ரீ கான தசகேன - பத்து திருப்பாடல்களால், ஸ்ரீத்ரோணீசம் - திருத்தோணிபுரத்துப் பெருமானை, சிசு: - குழந்தை, ப்ரீணயத் - மகிழ்வித்தார்.

சேக்கிழார் வாக்கையே மொழிபெயர்த்துச் செல்லும் உபமன்யு பக்த விலாசம், ஸ்ரீ கான தசகை:- பத்து திருப்பாடல்களால் திருத்தோணிபுரப் பெருமானைப் பாடினார் என்று குறிப்பிட்டுச் சொல்வதால் சம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்று பதிகம் பாடி கோயிலுட் சென்றவுடன் மீண்டும் ஒரு பதிகம் பாடியுள்ளார் என்பது ஐயத்துக்கிடமின்றி உறுதியாகிறது.

இங்கு உபமன்யு பக்த விலாசத்தை பதிப்பித்துள்ள

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆசிரியர் அடிக்குறிப்பில் ''இங்கு எனையாளுடையான் உமையோடும் இருந்தான்'' என்ற பதிகம் சேக்கிழாருக் குப் பிறகு இறந்து போனதாக தெரிகிறது'' என்று குறித்துள்ளார்.

பெரிய புராணத்துக்கு ஒப்பரும் உரை எழுதியுள்ள சிவக்கவிமணி சுப்ரமண்ய முதலியார் ''இங்கு எனை ஆளுடையான்'' என்று ''அச்சொற் பொருளுடைய பதி கம் பாடினார்'' என்று குறித்து

நறவ நிறை வண்டறைந்தார் கொன்றை நயந்து நயனத்தால்
சுறவம் செறி வண் கொடியோன் உடலம் பொடியா விழி செய்தான்
புறவம் உறை வண்பதியா மதியார் புரம் மூன்று எரி செய்த
இறைவன் அறவள இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே.

என்ற பதிகத்தை எடுத்துக்காட்டி, ''பதிகம் முழுவதும் 'உமையோடு இருந்தானே' என்று முடியும் மகுடம், காண்க'' எனத் தெளிவாக்கி ''இது பிள்ளையார் திருவாக் கினின்றும் போந்தவற்றுள் இரண்டாவது பதிகம்'' என சிறப்புற குறித்துள்ளார். ஆதலின் சம்பந்தர் கோயிலினுள் சென்றபோது 'எமையாளுடையான்' என்னும் பதிகம் பாடினார் என்பது பெரிய புராணத்தில் குறிப்பாகவும் உபமன்யு பக்த விலாஸத்தில் ஐயமின்றி வெளிப்படையா கவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பதிகமே 'நறவநிறை வண்டறைந்தார்' என்ற பதிகம் என்பதை கவிமணி தெளிவாக்கியுள்ளார் என்பதும் பெறுகிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொய்யிலி மாலை

மலர்கள் தூய்மையையும் புனிதத் தன்மையையும், மணத்தையும் குறிப்பவை செடி, கொடிகளில் விளையும் இவை மனதுக்கு இன்பத்தையும் அளிக்கின்றன. ஆதலின் மலர்களைப் பரமனுக்கு சார்த்தி வணங்குகின்றோம். புதுமலரிட்டுப் பூசிக்கின்றோம். மாலையாகப் புனைந்து சூட்டுகின்றோம்.

நாநாவித பரிமள பத்ரபுஷ்பாணி சமர்ப்பயாமி
புஷ்பமாலிகாம் சமர்ப்பயாமி

என்று கூறி இவற்றை அப்பணிக்கின்றோம். எனினும் இவை காலத்தால் வாடுபவை. மாலைகள் வாடி உதிர்ந்து விடுகின்றன நேற்று இட்ட மாலை இன்று வாடிவிடும்.

ஆனால் சொல்லினால் தொடுக்கப்பட்ட சொல்மாலைகள், இசைமாலைகள், என்றென்றும் வாடாதவை. நிலைத்து மணம் தருபவை. ஆதலின் அவற்றை "பொய்யிலிமாலை" என்றனர் பெரியோர். வாடாதமாலை என்பது பொருள்.

திருஞானசம்பந்தர்

தமிழ்ஞான சம்பந்தன் பொய்யிலி
மாலை புனைந்த பத்தும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று பரிதிநியமப் பதிகத்தில் பாடுகிறார். நம்மாழ்வாரும்

சடகோபன் பொய்யில் பாடல் ஆயிரத்துள் (2446)

என்று கூறுகிறார்.

வாடாத மாலைகளாக இவற்றைப் புனைந்து பரம னுக்கு அலங்கரிப்பதால் ''பொய்யிலி மாலை'' என்றனர்.

நமது பூஜை முறையில் மலர்களை அர்ப்பணித்த பின் மந்திரங்களையே புஷ்பங்களாக அர்ச்சிக்கும் மரபு உள்ளது.

மந்திர புஷ்பம் சமர்ப்பயாமி

என்று பூஜிப்போம். தேவார திவ்யப் பிரபந்த பாடல்கள் எல்லாம் ''மந்திர புஷ்பங்கள்.'' அதைத்தான் மாலையாக சார்த்துகின்றோம். பூஜையின் அங்கமாகப் பூமாலையைச் சார்த்துவது போல் பதிகங்களை சார்த்துவதும் இன்றிய மையாத அங்கம். பூஜை காலங்களில் தேவார - திவ்ய பிரபந்தங்களைப் பொய்யிலி மாலையாக சார்த்துவது இதையே குறிக்கிறது. வாடும் மலர்களைக் காட்டிலும் வாடாத பதிகங்களுக்குச் சிறப்பு அதிகம். ஆதலின் கோயில்களில் தேவாரம்-பிரபந்தம் பாடவில்லை என் றால் பூஜை நிறைவு பெறவில்லை என்பது பொருள்.

இதைச் சற்று சூக்ஷ்மமாகவும் காணலாம். மலர்க ளைப் பரமனுக்கு இடும் போது உடன் மந்திரங்களைக் கூறிக் கொண்டே பூஜிக்கிறோம். மலர் குறைந்தகாலம் இருப்பது. மந்திரங்கள் என்றும் இருப்பவை ஆதலின் இரண்டையும் இணைத்து பூஜிக்கிறோம்.

அதேபோல பரமனை இருவடிவங்களால் உருவ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கித்து வணங்குகிறோம். சிலை வடிவில் வணங்குதல் (சுதை, மண், உலோகம், கல், ஓவியம்) சிலாபிம்பம் என்றும் புறத்தோற்றம் என்றும் ஸ்தூல பிம்பம் என்றும் இதை அழைப்போம். சிலாபிம்பமும் காலத்தால் தேய்ந்து மறையக் கூடியது தான். கோயில்களில் சிலைவடிவில் தெய்வத்தை பூஜிக்கினும், அத்துடன் அதற்கு என்றும் அழியாத மந்திரத்தாலும் வடிவம் உருவகித்துத்தான் பூஜிக்கிறோம். இதை மந்திரமூர்த்தி என்பர். ஒவ்வொரு பூஜையின் போதும் சிலைக்கு மந்திரத்தால் தெய்வத்தை ஆவஹித்து பூஜிப்பது தான் முறை. சிலை உடல் என்றால் மந்திரம் ஆன்மா. உடலுக்கு அழிவு ஏற்படலாம். ஆன்மா வுக்கு அழிவு இல்லை. இதுபோல், என்றும் நிற்கும் மந்திர வடிவுக்குச் சிறப்பு உண்டு.

நமது பதிகங்கள் எல்லாம் மந்திரமூர்த்தங்கள். என் றும் இருப்பவை. படிமம் எனினும் வடிவம் எனினும் ஒன்றே. ஆதலின் 'வடிவம்' என்ற சொல்லுக்கே 'பாடல்' என்ற பொருளும் உண்டு. நம்மாழ்வார் பாடலில்

சடகோபன் சொல் வடிவமை ஆயிரம் (3029)

என்று கூறுகிறார். இது மந்திரமூர்த்தி என்னும் கருத்தைக் கூறுகிறது. இவற்றால் பொய்யிலி எனினும் வடிவம் எனினும் தெய்வப் பாடல் என்ற பொருள் பெறுகிறோம்.

இது போன்ற வேறு சில சொற்களும் உண்டு. எடுத்துக்காட்டாக "தோற்றம்" என்ற சொல்லும் "பாடல்" என்று பொருளில் வருவதைக் காண்கிறோம். ஆழ்வார்

குருகூர் சடகோபன் சொன்ன தோற்றங்கள் ஆயிரம் (2721)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று குறிப்பிட்டுள்ளார், தோற்றம் என்றால் ''சொல்மாலை'' என்ற பொருளில் வரும் எனப் பிங்கலத்தை (தமிழ் லெக்சிகன்) கூறுகிறது. 'வடிவம்' என்பதுபோல் 'தோற்றம்' என்னும் சொல்லும் தெய்வ வடிவத்தை, மந்திரமூர்த்தியைக் குறிக்கிறது. இதிலிருந்து பாடல் என்ற பொருள் வெளிப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெறி

பரம்பொருளைப் பல பெயர்களால் அழைத்து வணங்குகிறார்கள். ஆயிரம் ஆயிரம் பெயருடைய பரமனை *108, 300, 1008,* லக்ஷம் என்றெல்லாம் பெயர்கள் கூறி அர்ச்சிக்கிறோம். ''அஷ்டோத்தரம்'', ''த்ரிசதி'', ''சஹஸ்ரநாமம்'', ''லக்ஷார்ச்சனை'' என்றெல்லாம் கூறி கோயில்களில் தெய்வத்தை அர்ச்சிக்கிறோம். ஒவ்வொரு பெயராகக் கூறி, மலரிட்டு அர்ச்சிக்கிறோம். இதை நாமாவளி என்று கூறுகிறோம்.

இதேபோல நமது தேவாரப் பதிகங்களாகட்டும், திவ்யப்பிரபந்தகளாகட்டும், ஒவ்வொரு பாடலாகப் பாடி மலரிட்டு அர்ச்சிக்கும் மரபும் உண்டு எனத் தெரிகிறது.

ஓம் சுமுகாய நம; ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம; ஓம் கஜகர்ணகாய நம:

என்று ஒவ்வொரு பெயராகச் சொல்லி புஷ்பம் சார்த்துவது போலவே, ஒவ்வொரு பாடலாகப் பாடி புஷ்பம் இட்டு அர்ச்சித்து இருக்கின்றனர். ஆதலின் 'நாமம்' என்றாலே 'பாடல்' என்ற பொருளும் உண்டு. நம்மாழ்வார் தமது பிரபந்தத்தில்

சடகோபன் தெரிந்துரைத்த நாமங்கள்
ஆயிரத்துள் இவைபத்தும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று பாடுகிறார். அவர் பாடிய ஆயிரம் பாடல்களையும் ஆயிரம் நாமங்கள் என்று கூறுகிறார். ஆம். சடகோபரின் பாடல்கள் ''சஹஸ்ர நாமங்கள்'' என அவரே கருதியிருக் கிறார். இவற்றை ஒவ்வொன்றாகப் பாடி மனதால் மலராக அர்ச்சிப்பதே பண்டைய மரபு என அறியலாம்.

கோயில்களில் பதிகங்கள் பாடப்படுகின்றன என் றால் அர்ச்சிக்கப்படுகின்றன என்று பொருள். ஆதலின் பாடல்கள் இல்லை என்றால் அர்ச்சனை முற்றுப் பெற வில்லை என்று பொருள். இதிலிருந்து ''நாமம்'' என்ற சொல்லுக்கு பாடல் என்ற பொருள் பெறுகிறோம்.

இதேபோல் 'ஆணை' என்று ஒரு சொல் உண்டு. ஆணை எனில் கட்டளை, சபதம், அதிகாரம், இலாஞ் சனை என்றெல்லாம் பொருள்கள் உண்டு. (தமிழ் லெக்சி கன்) நம்மாழ்வாரின் கீழ்வரும் வாக்கைக் காணுங்கள்.

சடகோபன் சொன்ன ஆணை ஆயிரத்து
திருவிண்ணகர் பத்தும் வல்லார்
கோணை இன்றி விண்ணோர்க்கு என்றும்
ஆவர் குரவர்களே

ஆழ்வார் கூறிய ஆயிரம் பாடல்களில், திருவிண்ண கர் பெருமான்மீது பாடிய பத்துப் பாடல்களையும் பாடியவர்கள் விண்ணோர்க்கும் குரவர்கள் ஆவார்கள் என்கிறார். இங்கு ''ஆணை ஆயிரம்'' என்பதால் ஆணை என்ற சொல்லுக்கும் பாடல் என்ற பொருள் பெறமுடிகி றது. ஆணை என்ற சொல் ''ஆக்ஞை'' என்ற சொல்லின் திரிபு என்று லெக்சிகன் கூறுகிறது. இச்சொல்லுக்கு வேதகாலத்தில், கருத்து, துணிபு, காணும் முடிவு என்ற பொருள்கள் இருந்தன. பிற்காலத்தில் கட்டளை, சபதம் என்ற பொருள்கள் அதிகமாக வழக்கில் வந்தன. (Monier Williams Sanskri, Dictionary. Ajna = perception, understanding, notion

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

etc.) துணிபு, கருத்து என்ற பொருளில் ஆழ்வார் இவ்வாறு பாடியுள்ளார் என்று தெரிகிறது. ''ஆணை ஆயிரம்'' என்பதால் ஒவ்வொரு பாடலும் ஒரு கருத்து என்பது தெரிகிறது. ஆதலின் ஆணை எனினும் பாடல் என்ற பொருளில் வரும் எனக் காண்கிறோம்.

பரமனின் அடியார்கள் அவரைப் பாடி ஆடும்போது மெய்மறந்து, தன்னிலைமறந்து அவரே தியானமாக இருப்பர். அந்த அடியார்கள் எவ்வாறு இருப்பர் என அப்பர் பெருமான் திருவாதிரைத் திருப்பதிகத்தில் கூறு வர்.

குணங்கள் பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித் தம்மில் பித்தரைப் போல் பிதற்றுவர்

என்கிறார். பித்தர் போன்ற நிலையை அவர்கள் அடைந்தி ருப்பர். அதுமட்டுமா?

விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண் பிலராய் தரியார் தலையால் முட்டுவர்
எம்மான் ஈசன் எந்தை என்னப்பன் என்பார்கட்கு
அம்மான் ஆரூர்ஆதிரை நாளால் அதுவண்ணம்

அந்த அளவுக்குத் தம்மை மறந்து வெறி பிடித்தவர் போல் திகழ்வர் என்கிறார் அப்பர் பெருமான். அவர்களது நிலை ''வெறிநிலை'' என்றே கூறலாம். ''வெறி'' என் றாலே தெய்வம் என்று பொருள். (வெறியறி சிறப்பின் - தொல்காப்பியம் பொருளதிகாரம், உரை, தமிழ் லெக்சி கன்) அந்த தெய்வத்தைப் பாடுகின்ற பாடலுக்கும் ''வெறி'' என்றே சொல்லுவர். எடுத்துக்காட்டாக பரிபாட லில் ''வேலன் ஏத்தும் வெறியும் உளவே''. (5-15) இங்கு, வெறி என்ற சொல் உள்ளது. இதற்குப் பரிமேலழகர் ''வெறிப் பாட்டு'' என்று பொருள் கூறுவார். ஒருவர்மீது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெய்வம் ஏறி ஆடுவதை வெறியாட்டு என அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் கூறுகிறார். இதையே பெரியாழ்வார்

> சடகோபன் சொல்வழுவாத ஆயிரத்துள்
> இவைபத்து வெறிகளும் தொழுதாடி பாடவல்லார்

என்று, பாடல் என்ற பொருளிலேயே குறிப்பிட்டுள்ளார். ''பத்து வெறிகளும்'' என்பது இதையே குறிக்கிறது. அதாவது, தெய்வ நிலையிலே லயித்துப் பாடுவது வெறி. ஆதலின் தீக்ஷை மேற்கொண்டு லயித்துப் பாடல் வேண்டும் என்பதும் பெறுறதாகிறது. ஆதலால் நாமம், ஆணை, வெறி என்ற சொற்களுக்குப் 'பாடல்' என்ற பொருள் பெறுகிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜினர் சிவன் ஆனார்

ஞானசம்பந்தப் பெருமான், தில்லையம்பலவாணனைத் தரிசித்து பல தளிகளையும் தரிசித்து திருவதிகை, திருவாமாத்துார் ஆகிய பதிகளை வணங்கி, திருக்கோவலூர் வந்தடைகிறார். அங்கு ''குன்றவார்சிலை'' என்னும் பதிகம் பாடி கோவலூர் வீரட்டானரை வணங்குகிறார். பின்னர் அரகண்டநல்லூர் என்று இப்பொழுது வணங்கப் படும் அறையணிநல்லூரரை சென்று அடைந்து ஆவின் ஐந்து உகந்தாடும் பரமனை வணங்கி, அம்மலையை வலங்கொண்டு வர, அருகில் வரும் அன்பர்கள் அண்ணா மலையைக் காட்டுகின்றனர். அங்கிருந்தே திருவண்ணா மலை தரிசித்த அவருக்கு திருவண்ணாமலை சிவபிரானின் வடிவு போலக் காட்சியளிக்கிறது. அதை வணங்கி திருவண்ணாமலையை வந்தடைந்து ''உண்ணாமுலை உடையாள்'' என்னும் பதிகம் பாடுகிறார். இது சேக்கிழார் கூறும் வரலாறு. இதை சேக்கிழார்

கோவல் நீடிய வீரட்டம் அமர்ந்தவர்
குரைகழல் பணிந்தேத்தி
ஆவின் ஐந்து கந்தாடுவார் அறையணிநல்லூரரை
அணைந்தேத்தி-
பாவலர்ந்த செந்தமிழ் கொடு பரவுவார் பரவுசீர்
அடியார்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேவும் அன்புறு மேன்மையால் தன்மையை விளங்கிட
அருள் செய்தார்
சீரின் மன்னிய பதிகம் முன் பாடி - அத்திரு அறை
அணி நல்லூர்
வாரின் மல்கிய கொங்கையாள் பங்கர்தம் மலைமிசை
வலங்கொள்வார்
பாரின் மல்கிய தொண்டர்கள் இமையவர் நாள்தோறும்
பணிந்தேத்தும்
காரின் மல்கிய சோலை அண்ணாமலை அன்பர்
காட்டிக் கொண்டார்.

என இரண்டு பாடல்களில் திருக்கோவலூர் வந்திறைஞ்சி அறையணி நல்லூர் வணங்கி அண்ணாமலை சென்றதை இரண்டு பாடல்களில் சேக்கிழார் பாடியுள்ளதைக் காண்கிறோம்.

இங்கு சேக்கிழார் கூறாத சில செய்திகளை உபமன்யு பக்த விலாசம் குறிக்கிறது. இது வியப்பாக இருக்கிறது. என்றாலும் சில அரிய வரலாற்றுச் செய்தியையும் குறிக்கிறது. உபமன்யு பக்த விலாசத்தின்படி - ஞானசம்பந்தர் திருக்கோயிலூர் வந்து அந்தகாசுரவைரியான பரமனை வணங்குகிறார். பின்னர் பெண்ணை ஆற்றங்கரையில் ஒரு ஆலயத்தைக் கண்டார். அதை சிவாலயம் என வணங்குகிறார். ஆனால் உடன் வந்த அடியார், அவர் தெரியாது வணங்கிய அவ்வாலயம் சமணராலயம் என்று எடுத்துக் கூறுகின்றனர். ஞானசம்பந்தரின் பக்தி மகிமையால், அக்கோயிலில் இருந்த ஜைநப்பிரதிமை லிங்க வடிவில் மாறியது. உடன் வந்தோர் சம்பந்தரின் பெருமையைக் கண்டு அதிசயித்து நின்றனர் என

ஸ்ரீ மத்குஹரீம் பிராப்ய வவந்தே அந்தக வைரிணம்
தத்ர பெண்ணாதடே ஜைநம் தாம் த்ருஷ்ட்வா பிரமாத்
நமத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போதித: கிங்கரை: ஞாநி ஜிநம் சிவதயா ஜகௌ
தத்ஞான வைபவோத்ஸோபி ஜிநஸ்ய பிரதிமா க்ஷணாத்
லிங்காகாரதயா ஜிதா தேகாஸீத் விஸ்மிதம் ஜகத்

சம்பந்தர் ஆற்றங்கரையிலிருந்த கோயில் யாரது கோயில் என்று தெரியாமல், கோயில் என்பதால் வணங்கினார். அது ஜைநர் கோயிலாக இருந்தது. சம்பந்தப் பெருமானின் சிவபக்தியால் அக்கோயில் அக்கணமே சிவாலயமாக மாறிவிட்டது. அதிலிருந்த ஜிநர் பிரதிமை சிவலிங்கமாக மாறியது என்ற ஒரு புதிய செய்தி கிடைக்கிறது. இது பெரிய புராணத்தில் முன்னர் இருந்து பின்னர் மறைந்து விட்டதா எனத் தெரியவில்லை. பெரும்பாலும் பெரிய புராணத்தையே உ.ப.வி. மொழி பெயர்த்துள்ளதால் இச்செய்தியும் முன்னர் பெரியபுராணத்து இருந்ததோ என எண்ணத் தோன்றுகிறது.

இதுதவிர உ.ப.வி. மற்றொரு செய்தியையும் கூறுகிறது. அங்கு சம்பந்தர் பாண்டவர் தங்கிய ஐங்குகையை அடைந்து அங்கு அறையணிநல்லூர் பரமனைத் தரிசித்தார்.

குஹா பஞ்சகம் அப்யேத்ய யத்ர பாண்டு ஸுதா: ஸ்திதா:
தத்ர த்ருஷ்டே குஹே காந்தபுரேசம் அஸ்துவன் ஸ்தித:

அறையணிநல்லூரில் குடைவரைக் கோயில் உள்ளது. அது ஐந்து அங்கணமாக உள்ளது. அதை மக்கள் பஞ்ச பாண்டவர் குகை என்று சொல்லுவது வழக்கம். அதைத்தான் இங்கு உபமன்யு பக்த விலாசம் சுட்டுகிறது. மேலும் தமிழ்நாட்டில் பல இடங்களில் சமணர் தங்கிய இடங்கள் உள்ளன. குறிப்பாக மலைகளிலும், குன்றுகளிலும் இயற்கையான குகைத் தலங்களில் சமணர்கள் தங்குவது வழக்கம். அங்கு பாறைகளை செதுக்கி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

படுக்கை போல் அமைக்கப்பட்டிருக்கும். அதைப் பெரும்பாலும் பஞ்சபாண்டவர் படுக்கை என்று சொல்லு வார்கள். இந்தப் பாறைப் பகுதிகளில் சமணர்கள் தங்கியி ருந்திருக்கிறார்கள் என்பதும் இதனால் உறுதியாகிறது. மேலும் நமது மக்கள் ஏதாவது ஐந்து சின்னங்கள் இருந்தால் அதை பஞ்சபாண்டவர் பெயரால் கூறுவது வழக்கம். மாமல்லபுரத்தில் 'பஞ்சபாண்டவர் ரதம்' என்று கூறுகிறார்கள். அதுபோல!

(1) சம்பந்தர் அறியாமல் வணங்கிய போதும் ஜினர் சிலை சிவனாயிற்று. *(2)* இங்கு ஜைனர் கோயில் இருந்தது. *(3)* குடைவரைக் கோயில் இருந்தது. அதற்கு பஞ்சபாண்டவர் குகை என்று பெயர். *(4)* அங்கிருந்து திருவண்ணாமலையைத் தரிசிக்கலாம் முதலிய அரிய செய்திகளை உபமன்யு பக்த விலாசம் அளிக்கிறது என்பது குறிக்கத் தகுந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அண்ணாமலை மறைந்ததோ!

மாதவமுனிவர்கள் எல்லாம் உபமன்யு முனிவரை அணுகி, கயிலையிலிருந்து சுந்தரர் பூ உலகில் பிறக்க தென்திசையில் உதித்த காரணம் என்ன என்று வினவுகிறார்கள். தென்திசைக்கு ஈடான திசை ஏதுமில்லை என்று உபமன்யு முனிவர் கூறி அதன் பெருமையை எடுத்துச் சொல்கிறார் என சேக்கிழார் கூறுகிறார்.

அந்தணாளரும் ஆங்கது கேட்டவர்
பந்த மானுடப் பாற்படு தென்திசை
இந்த புண்ணியம் யாதென மாதவன்

என்று தொடங்குகிறார். (*பெரிய பு.திருமலைச்சிறப்பு செய்யுள் 30*) இதை சமஸ்கிருதத்தில் உபமன்யு பக்த விலாசம்

திக்ஷு உத்தராதிஷு க்ஷோண்யாம்
ஸதீஷு அபி கபர்தினா
தக்ஷிணா திக் கிமுத்திஷ்டா
கஸ்மாத் ஸுந்தர ஜந்மனி

என் மொழிபெயர்த்துள்ளதைக் காண்கிறோம்.

தென்திசையின் பெருமை கூறத் தொடங்கிய சேக்கிழார். இத்திசையில் தான், நடராஜப் பெருமான் ஆடும் தில்லையம் பதி உள்ளது. திருவாரூர், காஞ்சி, திருவை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யாறு, திருத்தோணிபுரம் முதலிய தலங்கள் உள்ளன என ஐந்து தலங்களை ஒன்றன்பின் ஒன்றாகக்கூறி 'இத்திசை ஒவ்வா பிறதிசை' என்று கூறுகிறார்.

இதை உபமன்யு பக்த விலாஸமும் பின்பற்றுவதைக் காண்கிறோம். தில்லையின் சிறப்பை சேக்கிழார் கூறுகி றார் அல்லவா.

பொருவருந்தவத்தான் புலிக்காலனாம்
அருமுனி எந்தை அர்ச்சித்தும் உள்ளது
பெருமை சேர் பெரும்பற்றபுலியூர் என்று
ஒருமை யாளர் வைப்பாம் பதிஒங்குமால்

அத்திருப்பதியில் நமையாளுடையான்
செய்த்தவக் கொடி காண விருப்புடன்
நித்தம் நீடிய அம்பலத்தாடும் மற்று
இத்திறம் பெறலாம் திசை எத்திசை

என்பது சேக்கிழார் பாடல். இதை சமஸ்கிருதத்தில்

திக்பயோ தசப்யோ ஹேவிப்ரா:
  தக்ஷிணா திக் விசிஷ்ய தே
வ்யாக்ரபாத முனிர் யத்ர
  ஸம்நியத்த மஹேஸ்வர:
புண்டரீகபுரம் நாம
  தாம யத்ர கபர்தின:
தேவ்யா: யத்ர ருத்ய தபோவல்யா:
  த்ருஷ்டம் ஆனந்த தாண்டவம்

தில்லையில் புலிக்கால் முனிவர் பூசித்ததும், தேவி ஆடல் கண்டதும் அப்படியே இடம் பெறுவதைக் காண்கிறோம். சேக்கிழார் மெய்த்தவக் கொடி காண' என்றதை அப்ப டியே சம்ஸ்கிருதத்தில் ஸத்ய தபோவல்லியா திருஷ்டம் (ஸத்யம் - மெய், தபோவல்லி - தவக்கொடி, திருஷ்டம்'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

- காண) என்று சொல்லுக்கு சொல் மொழி பெயர்ப்பை யும் காண்கிறோம். இதற்கடுத்து உப.விலாஸத்தில் திரு வண்ணாமலை, கமலாலயம் உள்ள ஆரூர், காஞ்சிபுரம், திருவையாறு, தோணிபுரம் ஆகியவை வரிசையாகக் குறிக்கப்படுகின்றன. இவ்வூர்களைக்குறிக்கும் போதும், சேக்கிழார் குறித்துள்ள கருத்துக்களே சம்ஸ்கிருதத்திலும் இடம் பெறுகின்றன. உதாரணமாக மேலும் ஒன்றுமட் டும் காண்போம்.

எம்பிராட்டி இவ் ஏழுலகீன்றவள்
தம்பிரானைத் தனித் தவத்தாலெய்திக்
கம்பையாற்றில் வழிபடு காஞ்சியென்று
உம்பர் போற்றும் பதியும் உடையது

என காஞ்சியைப் பற்றி பாடியுள்ளதைக் காண்கிறோம்.

காஞ்சீபுரீதி விக்யாதா
யஸ்யாம் திசி மனோரமா
காமக்ஷீ தபஸா கம்பா
தடே தேவம் அதோஷயத்

என்பது சமஸ்க்ருதப் படி. இவ்வாறு ஒவ்வொன்றும் முறைப்படி சீராக மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைக் காண் கிறோம். ஆதலின் மீண்டும் சேக்கிழாரும் உபமன்யு பக்தவிலாஸமும் தென்திசையில் சிறப்பாகக் கூறியுள்ள தலங்களை அவர்கள் கூறிய வரிசைப்படியே பார்ப்போம்.

சேக்கிழார் : தில்லை, ஆரூர், காஞ்சி, ஐயாறு, தோணிபுரம்

உ.ப.விலாஸம் : தில்லை, அண்ணாமலை, ஆரூர், காங்சி, ஐயாறு, தோணிபுரம்

இங்கு இரண்டும் ஒரே வரிசையை பின்பற்றிய போதிலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸம்ஸ்கிருதத்தில் மட்டும் தில்லைக்கு அடுத்து திருவண் ணாமலைக் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இவ் வூர் இப்பொழுது அச்சாகியுள்ள சேக்கிழார் பெரியபுராண பதிப்புகளில் இல்லை. திருவண்ணாமலை தமிழகத்தில் உள்ள மிகச் சிறந்த க்ஷேத்ரங்களில் ஒன்று என்பதில் ஐயமில்லை. ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு சேக்கிழாரின் செய்யுள்களின் சுவட்டிலேயே செல்வதைக் காணும்போது ஒரு ஐயம் தோன்றுகிறது; கி.பி.16ம் நூற்றாண்டில் உபமன்யு பக்த விலாஸம் இயற்றப்பட்ட போது சேக்கி ழாரின் பெரிய புராணத்தில் தில்லையைக் குறிக்கும் செய்யுளுக்கு பின்னர், திருவண்ணாமலையைப் பற்றிய ஒரு செய்யுள் இருந்திருக்கக் கூடும். அது பின்னர் மறைந்த போயிற்றோ என எண்ணத் தோன்றுகிறது. மற்ற தலங்க ளின் வரிசையும், செய்திகளும் பிறழாது காணப்படுவ தால் திருவண்ணாமலைச் செய்யுள் மறைந்ததோ என்னும் ஐயம் தோன்றுகிறது. ஒருக்கால் சேக்கிழாரின் பெரியபுரா ணத்துக்கு (ஒப்பீட்டு ஆராய்ச்சி) திருத்திய பதிப்பு (Critical edition) மேற்கொள்ளும் போது ஏதாவது ஓலைச் சுவடிக ளில் தமிழில் இச் செய்யுள் உள்ளதா எனக் காண்பது பயனுடைத்தாயிருக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறைந்த 'நண்ணற்கரிய கழல்'

ஞானசம்பந்தர் திருவண்ணாமலை தொழுது திருவோத்துார் வருகிறார். அங்கு மக்கள் அவரை எதிர் கொண்டழைத்தனர். கோயிலின் உள்ளே சென்று பர மனை பணிந்து எழுந்தார். அதை சேக்கிழார் பின்வரு மாறு குறிக்கிறார்.

வாரணத்தின் உரிபோர்த்தி மைந்தா உமையாள்
    மணமாளா
ஆரணத்தின் உட்பொருளாய் நின்றார் தம்முன்
    அணைந்திறைஞ்சி
நாரணற்கும் பிரமற்கும் நண்ணற்கு அரிய கழல்
    போற்றும்
காரணத்தின் வரும் இன்பக் கண்ணீர் பொழியகை
    தொழுதார்.

இதைத் தொடர்ந்து

தொழுது விழுந்து பணிந்தெழுந்து சொல்
    மாலைகளால் துதி செய்து அமர்வார்

என்று சேக்கிழார் கூறுகிறார். இங்கு சேக்கிழார் ஒரு குறிப்பை உரைத்துள்ளார். திருவோத்துார் சென்று கோயி லில் பரமனை வணங்கி சொல் மாலைகளால் துதி செய்கிறார் சம்பந்தர். இதன் பின்னர் ஒரு தொண்டர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவரை வந்து அணுகி தாம் சிவபெருமானுக்காக வளர்க்கும் பனைமரங்கள் எல்லாம் ஆண்பனைகளாகவே வளர்வதையும் அமணர்கள் அதை பரிகசிப்பதையும் கூறினார். சம்பந்தர் பரமனை வேண்டி ஒரு திருப்பதிகம் பாடுகிறார். அதன் கடைக்காப்பில், ''குரும்பை ஆண் பனை ஈனும்'' என்னும் அடியுடன் பாடுகிறார். ஈசனருளால் ஆண்பனை எல்லாம் காய்த்துப் பழுத்தன.

இங்கு சேக்கிழாரின் நூலில், சம்பந்தர் திருவோத்தூரில் முதலில் சொல் மாலை பாடி பின்னர் திருத்தொண்டர் வேண்டிக் கொள்ள மீண்டும் இரண்டாம் முறை ஒரு பதிகம் பாடுகிறார். அதில் 'குரும்பை ஆண்பனை ஈனும்' என்னும் அடி உள்ளது என அறிகிறோம். இப்பொழுது நமக்கு கிடைத்துள்ள பதிகங்களில் திருவோத்தூர் பதிகம் ஒன்று மட்டுமே கிடைத்துள்ளது. அது இரண்டாவதாக பாடிய பதிகம். இதன் கடைக் காப்பில் 'குரும்பை ஆண்பனை' என்னும் சொற்றொடர் உள்ளது. மற்ற பதிகம் கிடைத்திலது. இங்கு ஒரு ஐயம் தோன்றலாம். சொல் மாலைகளால் துதி செய்தார் என்று இங்கு முதலில் சேக்கிழார் கூறியதை பொதுப்படையாக வணங்கியதைக் குறிக்கிறார் என்றும், பதிகம் பாடியதாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்றும் கூறலாம் அல்லவா? அவ்வாறெனில் திருவோத்தூர் பதிகம் ஒன்று மறைந்தது என்றும் கொள்ள முடியாது.

ஆனால் திருவோத்தூரில் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். அதில் ஒன்று மறைந்து போயிற்று என்பதற்கு தெளிவான சான்று உள்ளது. பெரிய புராணத்தை சம்ஸ்கிருதத்தில் உபமன்யு பக்த விலாசம் என மொழிபெயர்த்துள்ளனர் என்று முன்னரே கண்டோம். உபமன்யு பக்த விலாசம் பெரிய புராணத்தில் தேவாரம் எங்கெல்லாம் மேற்கோள்களாக கொடுக்கப்பட்டுள்ளதோ அங்கெல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லாம் மேற்கொள் காட்டுவதைக் காண்கிறோம். உதாரண மாக பெரிய புராணத்தில் 'தோடுடைய செவியன்' என்னும் பதிகம் பாடி சேக்கிழார் பின்வருமாறு பாடுகி றார்.

செம்மை பெற எடுத்த திருத் தோடுடைய செவியன்
எனும்
மெய்ம்மை மொழி திருப்பதிகம் பிரமபுரம் மேவினார்
தம்மை அடையாளங்களுடன் சாற்றித் தாதையார்க்கு
எம்மை இது செய்த பிரான் இதுவன்றே- என இசைந்தார்

சேக்கிழார். ''தோடுடைய செவியன்'' என்னும் பதிகம்'' என்று குறித்துள்ளதை சம்ஸ்கிருதத்தில் உபமன்யு பக்த விலாசம் பின்வருமாறு கூறுகிறது.

தத்ர தாடங்கவத்கர்ண: இதி ஆரப்த வச: க்ரமை.
தர்சயந் தசபி: காநை: ஸாம்பம் த்ரோணீபுரம்

தத்ர - அங்கு, தாடங்கவத்கர்ண:- தோடுடைய செவியன், இதி - என்று, ஆரப்த - தொடங்கிய, வச: க்ரமை:- சொற்றொடர்களுடன், த்ரோணிபுரம் - தோணிபுரத்து, சாம்பம் - சிவனை, தர்சயன் - காண்பித்துக் கொண்டு தசபி: கானை:- பத்து பாடல்களால் - (பாடினார்). ''தாடங்கவத் கர்ண: இதி ஆரப்த'' என்று 'தோடுடைய செவியன்' என்று தொடங்கி பதிகம் பாடி என மேற்கோ ளாகக் குறித்துள்ளது. இவ்வாறு எங்கெல்லாம் சேக்கிழார் மேற்கோளாக பதிகங்களைக் காட்டுகிறாரோ அங்கெல் லாம் உ.ப.விலாசமும் மேற்கோளாகக் காட்டுகிறது என் பது குறித்துக் கொள்ளத் தகுந்தது.

இதன் அடிப்படையில் திருவோத்தூர் நிகழ்ச்சியை உ.ப.விலாசத்தில் காண்போம். திருவோத்தூருக்கு சம்பந் தர் வந்ததும் முதலில் பரமனைப் பாடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விஷ்ணுநா விதிநா ம்ருக்யம் பதம் ஆப்தோஹம் "இத்யஸௌ
கீதிமாலாபி: ஆநர்ச்ச கிரீசம் தேசிகோத்தம:

விஷ்ணு நா - நாரணனாலும், விதிநா - பிரமனாலும், ம்ருக்யம் பதம் - நண்ணும் கழல், ஆப்த:- ஆனவர். இதி - என்று, கீதி மாலாபி:- இசை மாலையினால், கிரீசன் - கயிலையங்கிரிப் பெருமானை - தேசிகோத்தம -சம்பந்தர் ஆநர்ச்ச - பரவினார்.

நாரணனாலும் நான்முகனாலும் தேடிய பாதம்

என்று அவர் இசைமாலை பாடினார் என்கிறது உபமன்யு பக்த விலாசம், "என்று பாடினார் எனத் தெளிவாகக் கூறுவதால், நாரணன் எனத் தொடங்கும் ஒரு பதிகம் முதலில் பாடினார் என்பதும், அது இப்போது நமக்கு கிடைக்கவில்லை என்பதும் தெளிவாகிறது.

இரண்டாவது பதிகத்தில் "குரும்பை ஆண்பனை ஈன்குலை" என்று சம்பந்தர் பாடினார். அதையும் உ.ப.வி.

தாளா: புமாம்ஸ: ச்ருத்வை தே பவந்து பரிதா: பலை:

புமாம்ஸ: தாளா:- ஆண்பனைகள், ஏதே - இவற்றை ச்ருத்வா - கேட்டு, பலை: பரிதா: குலைகளை ஈன்பவைகளாக, பவந்து - ஆகட்டும் இதி - என்று, காநமாலயா இசைமாலையால், ஈசானம் விததே - பாடினார் என்று உ.ப.வி. கூறுவதிலிருந்து இரண்டாம் பதிகமும் மேற்கோளாக சம்ஸ்கிருதத்தில் உள்ளது. இதிலிருந்து இரண்டு பதிகங்கள் திருவோத்தூரில் பாடப்பெற்றுள்ளது என்பதும் உ.ப.வி. சான்று பகர்கிறது.

உ.ப.வி. பதிப்பித்த வரகூர் சுந்தரேச சாஸ்திரிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு பெரும் தொண்டாற்றியுள்ளார். உ.ப.வி. எங்கெங்கெல்லாம் தேவாரத்தை மேற்கோளாக குறிக்கிறதோ -அங்கெல்லாம், அடிக்குறிப்பாக அந்த தேவாரத்தை தமிழில் குடுத்து உதவியுள்ளார். அவற்றுடன் தமது ஆய்வுக் குறிப்பையும், அளித்துள்ளார். இந்தப் பாடலின் அடியில்

நாரணற்கும் பிரமற்கும் நண்ணற்கரிய கழல் போற்றி

என்ற பதிகம் சேக்கிழாருக்கு பிறகு இறந்து போனதாகத் தெரிய வருகிறது எனக் குறித்துள்ளார். இப்பதிப்பாசிரியரின் ஆற்றலைப் போற்றுகிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேயறு தோளிபங்கன்

பாண்டிமாதேவி மங்கையர்கரசியும் அமைச்சர் குலச் சிறையாரும் விடுத்த வேண்டுகோளை ஏற்று திருஞானசம் பந்தப் பெருமான் பாண்டிநாடு செல்லத் துணிகிறார். அப்பொழுது உடன் இருந்து வாகீசப் பெருந்தகை பாண்டி நாட்டில் சமணர்களின் செல்வாக்கையும், அவர்கள் இழைக்கக் கூடிய கொடுமைகளையும் ஞானக் குழந்தை எடுத்துக் கூற 'வேயுறு தோளிபங்கன்' என்னும் கோளறு பதிகம் பாடினார் என்பது யாவரும் அறிந்ததே.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து
என்னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்
வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல
நல்ல அடியாரவர்க்கு மிகவே

என்று பாடினாரல்லவா? இப்பாட்டில் ''வேயுறு தோளி பங்கன்' என்றால் என்ன பொருள்? முத்து. மாணிக்கவாச கனார் அவர்கள் தமது தருமையாதீனப் பதிப்புரையில் ''வேய் உறு தோளிப்பங்கன்'' மூங்கிலின் இரு கணுக்க ளுக்கும் இடைப்பட்ட பகுதியைப் போலும் தோள்களை யுடைய உமாதேவியரை இடப்பால் உடையவர்'' என்று குறித்துள்ளார். (திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டாவது திருமுறை, *1954 - பக்கம் 402)*. பாடலில் ''வேய் உறு தோளி'' என்று கொண்டுள்ளதால் வேய் = மூங்கில், உறு = இரு கணுக்களுக்கு இடைப்பட்ட பகுதி போல, தோளி = தோள் உடையவர் எனப் பொருள் கொண்டுள்ளார்.

சிவக்கவிமணி C.K.சுப்ரமணிய முதலியார் அவர்கள் தமது பெரிய புராண ஆராய்ச்சித் தொகுதியில் இப்பாடலை ''வேயுறு தோளி பங்கன்'' என்றே பதிப்பித்துள்ளார். (தொகுதி 4 பக்கம் 760) ஆயினும் இச்சொற்றொடருக்கு சிவக்கவியவர்கள் பொருள் எழுதவில்லை. இப்பதிகம் எல்லோரும் அறிந்ததொன்று ஆதலாலும், எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்று கருதி பொருள் எழுதாது விட்டிருக்க வேண்டும். அனைத்து பதிப்புகளும், அண்மையில் வெளிவந்துள்ள கோபாலையர் பதிப்பும் 'வேயுறு' என்றே குறிக்கின்றன.

சோழ நாட்டில் ஸ்ரீவாஞ்சியம் கோயிலில் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியின் பின்புறச் சுவரில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. கி.பி. 13-14 ம் நூற்றாண்டில் பராக்ரம பாண்டியன் காலத்துக் கல்வெட்டு அது. வாஞ்சிநாதர் கோயிலில் துந்துபீச்வரம் என்று ஒரு சிற்றாலயம் இருந்தது. அதுவும் சிவாலயம். அதன் அம்பாளுக்கு நிலம் கொடுத்ததை அக் கல்வெட்டுக் கூறுகிறது. அம்பாளின் பெயர் ''வேயன தோளியார்'' என்று கல்வெட்டுக் கூறுகிறது. ''வேய் அன்ன தோளி'' - 'மூங்கிலை ஒத்த தோளையுடையவள்' என்பது பொருள்.

இக் கல்வெட்டைப் படிக்கும்போது எனக்கு ஒரு கருத்து தோன்றியது. ஞானசம்பந்தர் பாடலே ''வேயுறு தோளிபங்கன்'' என்பதற்கு பதிலாக ''வேயறு தோளிபங்கன்'' என்று இருக்கலாமோ என ஐயம் தோன்றியது. 'வேய் உறு தோளி' என்று கொண்டு 'இரு கணுக்களுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இடைப்பட்ட பகுதி போன்ற தோள்' என்பது சற்று வலிந்து பொருள் கொள்வதாக தோன்றுகிறது. ''உறு'' என்ற சொல்லைப் போல ''அறு'' என்ற சொல் கொள்ள லாம் எனத் தோன்றியது.

'அறு' என்ற சொல்லுக்கு பல பொருள்கள் உண்டு. அரிதல், ஊடறுத்தல், இல்லாமல் செய்தல், சீரணித்தல், முடிவு செய்தல் போன்ற பல பொருள்களை தமிழ் லெக்சிகன் கொடுப்பதை காணலாம். இவற்றில் ''வெல் லுதல்'' (To out do - Excel) என்ற பொருளும் ஒன்று. அதற்கு எடுத்துக்காட்டாக. 'ஆடு சிறை அறுத்த நரம்பு சேர் இன்குரல்' என்ற பதிற்றுப்பத்தின் (45.4) வரி கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலின் 'வேய் அறு தோளி' என்பதும் பொருந்தும். பெண்களின் தோள்களை மூங்கி லுக்கு உவமையாக கூறுவது பண்டைய இலக்கிய மரபு. வேய் அறு தோள் எனில் மூங்கிலையும் அழகில் வென்ற (Exceing bamboo) என்பது பொருளாம். இதன் அடிப்டையில் பார்த்தால் இப் பதிகத்தின் நான்கு அடிகளிலும் முதல் சொற்கள் வேயறு, மாசறு, ஞாயிறு ஆசறு என வரும்.

இப்பொழுதுள்ள பதிப்புகள் அனைத்தும் ''ஞாயிறு'' என்றே கொண்டுள்ளன. ''ஞாயிறு'' என்று இச்சொல் இருத்தல் வேண்டுமா அல்லது ''ஞாயறு'' என்று இருத் தல் வேண்டுமா என்பது கேள்வி? இச்சொல்லும் ''ஞா + இறு'' என இரண்டு பகுதிகளையுடையது. ஞா என்பது வடசொல். ஞானம் ''அறிவு'', ''சூரியன்'', என்பவை பொருள்கள். ''ஞாயிற்றுக் கிழமை'' என்றால் சூரியனின் கிழமை (ஆதித்ய வாரம்) என்பதால் அப்பெயர் பெற்றது. சூரியன் என்பது அறிவின் கடவுள், (சவிதா), அறிவு, சூரியனுக்கு ஒப்பாக கூறப்படும். ஆதலின் இந்நாள் ஞாயறு (ஞா+அறு) என்று பெயர் பெற்றிருக்க வேண் டும். அறிவுச்சுடரை ஒத்த சூரியனின் நாள் என்பது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருள் எனலாம். மாறாக, ''ஞா இறு'' என்று கொண்டால் 'இறு' என்ற சொல்லுக்கும் பல பொருள்கள் உண்டு. ஆயினும், எப்பொருளும் ''ஞா இறு'' என்ற சொல்லுக்கு ஏற்ற பொருளாக இல்லை. ஆதலின் வாரத்தில் முதல்நாளைக் குறிக்கும் சொல் ''ஞாயறு'' என்றே இருத்தல் வேண்டும் என்பது எமது துணிபு. ஞாயிறு என்பது வழக்கு திரிபு. ஞாயறு என்பது செவ்வையான சொல் என்று கொண்டாலும் அது கொச்சையாக 'ஞாயறு' என வழக்குச் சொல்லாக பயன்படுவதைக் காண்கிறோம். நாயற்றுக்கிழமை என்பது காண்க. வழக்குச் சொற்களும் பல தேவாரப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. ஆதலின் இப்பாடலில் 'நாயிறு' என இருத்தல் கூடும். ஆதலின் ஞானசம்பந்தப் பெருமானின் இப்பதிக நான்கு அடிகளும் வேயறு, மாசறு, ஞாயறு, ஆசறு என்று தொடங்குவது பொருந்தும் எனத் தோன்றுகிறது.

வேயறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
 மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் புணைந்தென்
 உளமே புகுந்த அதனால்
ஞாயறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
 வெள்ளி சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
 அடியாரவர்க்கு மிகவே.

எனக் கொள்ளலாம்.

இனி ''உறு'' என்ற சொல்லுக்கே ''ஒப்பான, ஒத்த'' என்ற பொருள் உண்டு என தமிழ் லெக்ஸிகன் குறிக்கிறது. சீவக சிந்தாமணி செ.1780 இதற்கு மேற்கோள். ''உண்டு பொழில் இமையவர்கள் உலகம் கூறுவதுவே''. ஆதலின் ''வேய் உறு தோளி'' என்பதற்கு மூங்கிலை ஒத்த தோளி என நேரிடையாகவே பொருள் கொள்ள

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லாம். அவ்வாறெனின் இப்பதிகத்தில் முதல் அடிமட்டும் ''வேயுறு'' என்றும், பிற அடிகள் ''மாசறு'', ''ஞாயறு'', ''ஆசறு'' என எதுகை அமைந்துள்ளது எனவும் கொள்ள வேண்டும். இப்படியிருந்தாலும் இது தவறெனச் சொல்ல முடியாது. இருப்பினும் ''வேயறு தோளி பங்கன்'' என்றிருந்தாலும் தவறு அல்ல என்பது குறிக்கத் தகுந்தது. கல்வெட்டில் ''வேயனதோளி'' என்று அம்பாளின் பெயர் வந்துள்ளதால் இந்த சிந்தனை. சிந்திக்கலாம் தானே!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எட்டொரு கட்டளை

திருஞான சம்பந்தர் திருக்கோலக்கா என்னும் பதிக்கு வந்து தனது பிஞ்சுக் கரத்தால் தாளம் இட்டுக் கொண்டு ''மடையில் வாளை பாய'', என்ற பதிகம் பாட பரமன் 'நமச்சிவாய' என்ற பெயர் பொறித்த தாளம் கொடுக்கிறார். அதைக் கொண்டு கடைக்காப்பு பாடி பதிகம் முடித்து பின்னர் சீர்காழிக்கு திரும்புகிறார். அவ்வாறு திரும்பிய சம்பந்தர், பெருமானைப் பாடுகி றார். அதைச் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில்

திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங்கொண்டருளித்
திருமுன்நின்றே
அருட் பெருகு திருப்பதிகம் எட்டொரு கட்டளையாக்கி
அவற்றுள் ஒன்று
விருப்புறு பொற்றிருத்தோணி வீற்றிருந்தார்
தமைப்பாட மேவு காதல்
பொருத்தம் உற அருள் பெற்று போற்றி
எழுந்தருளினார் ''பூவார் கொன்றை''

இந்த பாடலுக்கு பொருள் கூறுவது சற்றுக் கடினம். சிவக்கவிமணி C.K. சுப்ரமண்ய முதலியார் அவர்கள், இப்பாடலுக்கு பொருளை சற்று விரிவாகவே வரைந்துள் ளார். அது:-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருட்பெருகு திருப்பதிகம் எட்டு ஒரு கட்டளை யாக்கி அவற்றில் ஒன்று - பிள்ளையாரது திருப்பதிகங்களுள் எட்டுத் திருப்பதிகங்கள் கொண்டது ஒரு கட்டளை தக்கராகப் பண்பதிகங்களுள் உண்டு. அந்தக் கட்டளையில் அவ்வெட்டுப் பதிகங்களுள் இத்திருப்பதிகம் ஒன்றாக என்பது கருத்து. தக்கராகப் பண்ணில் இப்போது கிடைத்துள்ள பதிகங்கள் ஏழு கட்டளைகளில் அமைந்தன. அவற்றுள் எட்டுப் பதிகங்கள் கொண்டது முதலாவதாம். அது இப்பதிகத்தின் கட்டளை அமைவு என்றபடி. இப்பண் பதிகங்கள் எட்டு வகையாப்பில் அமைந்தன என்பாருமுண்டு.

'எட்டு ஒரு கட்டளையாக்கி அவற்றுள்' என்பது பின்னர் எல்லாப் பதிகங்களையும் பண்முறை வகுத்து பாகுபடுத்தியதாக திருமுறைகண்ட புராணத்தினுள் கேட்கப்படும் வரலாற்றின் வழி குறித்து ஆசிரியர் சேக்கிழார் பெருமான் தாம் கண்ட வகையாகக் கூறியது. ஆளுடைய பிள்ளையார் இத் திருப்பதிகம் அருளிய போது இந்தக் கட்டளையில் எட்டுத் திருப்பதிகம் அருள திருவுள்ளங் கொண்டு அமைத்தனர் என்று கருத்தன்று. ஆகியவற்றுள் - எட்டுப் பதிகங்களை ஒரு கட்டளையாக பின்னர் வகுத்தவற்றுள் இத்திருப்பதிகம் ஒன்று என்க. இதற்கு இவ்வாறன்றி வெவ்வேறு பொருள்படக் கொண்டனர் முன் உரைகாரர்கள். கட்டளை - ஒரு பண்ணினுள் அமைதியும், யாப்பமைதியும், தாளபேதமும், பாட்டுப் பதங்களின் நீட்டல் குறுக்கல்களும் கொண்டதொரு பாகுபாடு'',

இப்பகுதிக்கு முன் உரைகாரர்கள் வெவ்வேறு பொருள் கொண்டுள்ளார்கள் என்று சுப்ரமண்ய கூறுவதிலிருந்து, இது பொருள் கூற சற்றுக் கடினமான பகுதி என்பது தெளிவு. சிவக்கவிமணி சு. முதலியார் அவர்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ளது பொருட் குறிப்பும் இங்கு தெளிவாக உள்ளது எனக்கூற இயலாது.

இப்பாடலுக்கு ஒரு தெளிவு நமக்கு பெரிய புராணத் தின் மொழிபெயர்ப்பாம் உபமன்யு பக்த விலாசத்தில் இருந்து கிடைக்கிறது. இதே பாடலை உபமன்யு பக்த விலாசம் சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்துள்ளது.

கராப்யாம் கட்டயன் தாளம் ஸ்ரீ கானானி மஹேசிது:
ரசயன் கீத வித்யாயா: பாரத்ருச்வா புரோ நடன்
நடதோ காயதர் தஸ்ய சம்பந்தஸ்ய சிவாஞயா
தாளத்வயம் ததா அநர்க்கம் தஸ்தெள ஹஸ்த தவத்வயே
தாளத்வயம் தத் ஆத்ஸ பாலோ காத்ரு சேகர:
சச்சத்புடாதிகான் வ்யக்தான் ப்ராயுங்க்த ஸமயோஜிதான்

கரங்களினால் தாளங்களைப் போட்டுக் கொண்டு, மஹேசனின் பாடல்களை இயற்றிக் கொண்டு, கீத வித்தையின் கரை கண்ட அவர் முன்னே ஆடிக் கொண்டு (பாடினார்) ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் இருக் கும் அந்த சம்பந்தருடைய கரத்தில் சிவனின் ஆணையால் குற்றமற்ற இருதாளங்கள் தோன்றின.

அந்த இரு தாளங்களையும் ஏற்று இசை வல்ல அச்சிறுவர் சச்சத்புடம் முதலானவற்றை இடத்துக்கேற்ப வெளிப்படுத்தினார்.

இந்த மூன்றாவது செய்யுளில்

சச்சத்புடாதிகான் வ்யக்தான் ப்ராயுங்க்த

என்று குறிக்கப்பட்டுள்ளது.

'சச்சத்புடம்' என்பது ஒருவகைத் தாளத்தின் பெயர். அத்தாளத்திற்கு ஏற்ப பாடலை அமைத்தார் என்பது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளாகிறது. சச்சத்புடம் என்னும் இத்தாளம் மிகவும் தொன்மையான தாளம். தாளங்களை மாத்திரைகளால் கணக்கிடுவர். ஒரு மாத்திரைக்கு லகு என்று பெயர். இரண்டு மாத்திரைக்கு குரு என்றும் மூன்று மாத்திரைக்கு புலுதம் என்றும் பெயர். இவைகளின் எண்ணிக்கை அடிப்படையில் தாளங்கள் வகை செய்யப்படுகின்றன. சச்சத்புடம் என்னும் தாள வகை 108 தாள வகைகளில் முதலாவது. எட்டு மாத்திரைகளைக் கொண்டது. 'இ ரண்டு குரு, இரண்டு குரு, ஒரு லகு, ஒரு புலுதம்' என்ற அமைப்பில் 8 மாத்திரைகளின் கட்டுக்கேற்ப போடப்படுவது.

பூ மாதர் சச்சபுடத்திற்கு இரண்டு தனு
நாமாதியல் நேர் நறும் புலுதம் - மேவ
அட்டதிக்கோர் போற்றும் அறிவுக்கு அறிவோர் - தாளம்
இதற்கு எட்டென மாத்திரையாமே.

என்கிறது பஞ்ச மரபு என்னும் நூல்.

இந்த சச்சத்புடம் என்ற தாளத்தை பரதர் தமது நாட்டிய சாஸ்திரத்திலேயே விவரித்துள்ளார். இது ஒரு சதுஸ்ரதாளம்.

சதுரச்ர:து விஞேய: தாள: சச்சத்புடோ புதை:

(சச்சத்புடம் என்னும் தாளத்தை அறிஞர்கள் ஒரு சதுஸ்ர தாளம் என அறிதல் வேண்டும்.)

அது எவ்வளவு மாத்திரைகளைக் கொண்டது என்றும் பரதர் கூறுகிறார்.

ஆதௌ த்வே குருணீயத்ர லகு ச ப்லுதம் ஏவச
ஸ விஞேய: ப்ரயோகஞை: தாள: சச்சத் புடாச்ரய:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதௌ - முதலில், த்வே - இரண்டு, குருணீ -குரு, யத்ர - எங்கு, லகு ச - ஒரு லகு, ப்லுதம் ஏவச - ஒரு புலுதமும் கூட ஸ:- அந்த, தாள:- தாளமானது, பிரயோகஜ்ஞை:- ப்ரயோகம் அறிந்தவர்களால் சச்சத்புடாச்ரய - சச்சத்புடம் என்று, விஜ்ஞேய:- அறியப்படுகிறது.

தாளம் அறிந்தவர்கள், இரண்டு குரு, ஒரு லகு, ஒரு புலுதம் உள்ள தாளத்தை சச்சத்புடம் என்று தெளிகிறார்கள்.

இதை பரதர் மேலும் பலவிதமாக விரித்துள்ளார். சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் ''ஆடலும் பாடலும் பாணியும் தூக்கும்'' என்ற இடத்து பொருள் கூறும் அரும்பத உரை ஆசிரியர் கீழ்வருமாறு கூறுகிறார். ''பாணியும் என்றது தாளங்களும் என்றவாறு'' அவை சச்சபுடம் முதலான பஞ்சதாளமும் என்று குறிக்கிறார். இவற்றிலிருந்து இது மிகவும் பழமையான எட்டு மாத்திரைகளைக் கொண்ட தாளம் என்பது தெளிவாகிறது.

விருத்தப்பாக்களை இயற்றும்போது எட்டு மாத்திரைகளை உடையவையாக பலவகை தாளங்களில் அமைக்கலாம். இவ்வாறு ஒவ்வொன்றும் பலவகை தாளங்களில் அமைக்கலாம். இவ்வாறு ஒவ்வொன்றும் எட்டு மாத்திரை உடையவையாக 13 வகைத் தாளங்களை பண்டைய நூல்கள் கூறுகின்றன. அவற்றில் சச்சத்புடம் முதலானது. இவ்வாறு பிரதிமட்டம், பிரத்யாஸ்கம், சதுரம், சங்கநாதம், திரிதாளம் முதலிய 13 தாளங்கள் ஒவ்வொன்றும் எட்டு மாத்திரைகளால் அமைந்தவை என பஞ்ச மரபு கூறுகிறது.

பெரிய புராணப் பாடலை மொழிபெயர்த்த உபமன்யு பக்த விலாசம்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பதிகம் எட்டொரு கட்டளையாக்கி
அவற்றுள் ஒன்று

என்ற இடத்தை ''சச்சத்புடாதிகான் வ்யக்தான்'' என்று கூறுவதிலிருந்து சேக்கிழார், எட்டொரு கட்டளை, என்று கூறுவது, 'சச்சத்புடம்' முதலான எட்டு மாத்திரை உடைய தாள வகைகளில் ஒன்றில் ''பூவார் கொன்றை'' என்ற பதிகத்தை பாடினார் என அறிந்து கொள்ள உதவுகிறது. இங்கு எட்டு என்பது மாத்திரை என்றும் கட்டளை என்பது ஒரு வட்டம் அல்லது ஆவர்த்தனம் என்றும் தெளியலாம். ஆதலின் சம்பந்தர் பாடல்கள் எல்லாம் தாளத்துக்கும், இசை மரபுக்கும் ஏற்ப அமைக்கப்பட்டவை. ஆதலின் இசை நூல்களின் வாயிலாக பல பொருள்களை தெளிவாக்கி கொள்வோம். இங்கு சேக்கிழார் இசை மரபைத்தான் குறிக்கிறார். அதை தெளிய உபமன்யு பக்த விலாசம் பெரிதும் உதவுகிறது.

சுப்ரமண்ய முதலியார் குறிப்பிட்ட ''எட்டு பதங்கள் கொண்டது ஒரு கட்டளை'' என்ற பொருள் அவ்வளவு சிறப்பாகப்படவில்லை. அவ்வாறு கொள்ளத்தக்க சான்றுகளும் இல்லை. எனினும் முதலியாரவர்கள், கட்டளை என்ற சொல்லுக்கு ''ஒரு பண்ணின் அமைதி, யாப்பமைதி, தாளபேதம், பாட்டுப் பதங்களின் நீட்டல், குறுக்கல்'' என்று குறித்துள்ள பொருளே மிகவும் பொருத்தமாகிறது. ஆதலின் 'பூவார் கொன்றை' என்ற பதிகத்தை சச்சத்புடம் என்னும் சதுச்ர தாளத்தில் தக்க ராகத்தில் பாடல் வேண்டும் எனவும் அறிகிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருத்தாளச்சதி

1330 ஆண்டுகளுக்கு முன்னர் திகழ்ந்த திருஞான சம்பந்தருடைய பதிகங்களில் ஒன்றின் தலைப்பில் ''திருத்தாளச் சதி'' என்று குறிக்கப்பட்டுள்ளது. சீர்காழிப் பதியைப் பற்றிய இப்பதிகம் ''வியாழக் குறிஞ்சி' என்ற பண்ணில் பாடப்பெற்றது. தாளமும் ஜதியும் இணைந்து அமைக்கப்பட்ட கட்டுக்கோப்பு என்ற பொருளில் ''தாளச்சதி'' என்று அமைந்திருக்க வேண்டும். நாட்டியம் ஆடுபவர்களுக்கு ''ஜதிஸ்வரம்'' என்பதும் ''ஸ்வரஜதி'' என்பதும் தெரிந்த ஒன்றாம். ஆனால் ''தாளச்சதி'' என ஒன்று உண்டு என்பது அறிந்திலார். ஜதி (சதி) என்பதை சொல்லுக்கட்டு என்றும் கூறுவர். சம்பந்தர் தமது ஒரு பாடலில் ''நடம் சதிவழி வருவது ஓர் சதிரே'' என்று பாடுகிறார். அக்காலத்திலேயே ''சதி'' என்பது நாட்டியத்துக்கு பயன்பட்ட சொல்லுக்கட்டு என்பதுதெளிவு. சம்பந்தர் பல்வேறு அமைப்புகளில் தமது பதிகங்களைப் பாடியுள்ளார். அவரது பாடல்கள் அனைத்தும் இசைப்பாடல்கள். அனைத்துப் பதிகங்களுக்கும் பண்குறிக்கப்பட்டிருப்பதோடு சில பதிகங்களின் இயலமைப்பும் குறிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக 'ஏகபாதம்', 'ஈரடி', 'முக்கால்', 'இயமகம்', 'எழுக்கூற்றிருக்கை', முதலிய அப்பதிகங்கள் அமைந்துள்ள இலக்கணத்தைக் கூறுகின்றன. அதுபோல 'தாளச்சதி' என்பதும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடலின் கட்டமைப்பைக் கூறுகிறது என்பதில் ஐயமில்லை.

அக்காலத்தில் இசையும் நாட்டியமும் கோயில் வழி பாட்டின் அங்கமாகத் திகழந்தன. ஒவ்வொரு கோயிலி லும் நாட்டியமும் இசையும் ஒவ்வொரு சந்தி பூஜையிலும் இடம் பெற்றிருந்தன. எவ்வாறு இலக்கண விதிகள் பாடல்களை இயற்ற உறுதுணையாக நின்றனவோ, அது போல நாட்டியக் கூறுகளும் பாடல்கள் தோன்றக் காரண மாயிருந்தன. சம்பந்தர் பாடியுள்ள மேற்கூறிய சீர்காழிப் பதிகம் தாளக்கூறும் சதிக்கூறும் கொண்டது என்பது தெளிவு. அப்பதிகத்தின் 11 பாடல்களும் அதே போன்று அமைப்புடையவை. ஒரு பாடலின் முதலடி

திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு
மண்டலச் சீரார் வீறார் போரார்
தாருகனுடல் அவன் எதிரே

என வந்துள்ளமை இதை வலியுறுத்தும். நான்கு அடிக ளும் இது போலவே உள்ளன. இந்தப் பதிகமே இதுவ ரைக் கிடைந்துள்ள 'தாளச்சதி' என்ற பாடலில் மிகவும் தொன்மையானது. ஒன்றே ஒன்றும் கூட. இப்பாடலில் மூன்றாவது அடியில் ''சொக்கத்தே நிருத்தத்தே'' என்று வந்துள்ளது. இது நிருத்தத்தோடு தொடர்புடையது எனச் சுட்டுகிறார்.

இப்பதிகத்தை சம்பந்தர் காலத்திலேயே பாடி ஆடியி ருக்கவேண்டும் எனக் கருத இடமுண்டு. சம்பந்தர் பல பாடல்களில் தமது பாடல்கள் ஆடப்பட்டன என்னும் வகையில் குறிக்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞானசம்பந்தன் செந்தமிழ்பாடி
ஆடிட கெடும் பாவமே

என்னும் அவர் அடிகள் இதையே குறிக்கும். இப்பாடலை இப்படித்தான் ஆடியிருக்க வேண்டும் என்று யாரும் நிச்சயமாகச் சொல்ல இயலாது. இருப்பினும் இப்படி ஆடலாம் என ஒருவடிவு கொடுத்து காட்டலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிள்ளையார் நாட்டிய ஜயக்கொடி

திருஞானம் பெற்ற பிள்ளையாகிய திருஞானசம் பந்தரின் புகழ்ச்சயத்தம்பத்தைத் தான் இக்கட்டுரை ஆய்கிறது. சயத்தம்பம் என்றால் வெற்றித்தூண் என்பது பொருள். வெற்றிக்கொடியை ஏந்தி நிற்கும் இத்தூண், ஈடிலா வெற்றியின் சின்னமாகத் திகழ்வது. அவ்வாறு ஞானசம்பந்தப்பிள்ளையின் புகழ்ச் சயத்தம்பமாக திகழ்ந்த தூணை சேக்கிழார் குறித்துள்ளார்.

சம்பந்தர் மங்கையர்க்கரசியின் அழைப்பை ஏற்று மதுரை வருகிறார். அங்கு சமண் மேலோங்கி நிற்கிறது. சம்பந்தர் திருநீறு பூசி பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்கிறார். சமணர்கள் அவரை விடுவதாயில்லை. அனல் வாதத்திற்கும், புனல் வாதத்திற்கும் இழுக்கின்றனர். இறுதியாக நடைபெற்றது புனல் வாதம். இதில் தோற்றால் என் செய்வது என்று குலச்சிறையார் கேட்டார். பொறாமை தம் கண்களை மறைப்ப சமணர்

தோற்றோமாகில் இவ்வேந்தன் கழுவில் ஏற்றுவான்

என்று தம் வாயினாலேயே சொன்னார்கள்.

அங்கது கேட்டு நின்ற அமணரும் அவர் மேல் சென்று
பொங்கிய வெகுளி தூர பொறாமை காரணமேயாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தங்கள் வாய் சோர்ந்து தாமே தனி வாதில்
அழிந்தோமாகில்
வெங்கழு ஏற்றுவான் இவ்வேந்தனே

என்று சொன்னார்'' ஞானசம்பந்தர். ''எம்பிரான் சிவனே எல்லாம் பொருளும்'' என்று எழுதிய ஏடு புனலை எதிர்த்துச் சென்றது. சமணரது ஏடு அடித்துச் செல்லப்பட்டது. சமணர் தோற்றனர். அப்பொழுது சமணர் தங்கள் வாயாலேயே முன்னர் கூறியபடி, அவர்கள் கழுவினில் ஏறிட செய்யச் சொன்னான் பாண்டியன். அதைக் கேட்டு சம்பந்தர் மன்னனை அவ்வாறு நடவாதிருக்க தடுத்து ஏதும் சொல்லவில்லை ஏன்? சேக்கிழாரே கூறுகிறார். சைவர் இருந்த மடத்துக்கு முன்னர் இவர்கள் தீ மூட்டினர். அதற்காக அரசன் இடும் தண்டனை இது என்று வாளாவிருந்து விட்டாராம்.

புகலியில் வந்த ஞானப் புங்கவர் அதனைக் கேட்டும்
இகலிலர் எனினும் சைவர் இருந்து வாழ்
மடத்தில் தீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையால் சாலும் என்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடாது இருந்த
வேலை

என்பது சேக்கிழார் வாக்கு.

நான் முன்னர் குறிப்பிட்டுள்ள கட்டுரைகளின் வாயிலாக, சேக்கிழாரின் பெரிய புராணம், சம்ஸ்கிருத மொழியில் முன்னூறு ஆண்டுகளுக்கும் முன்னதாகவே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்றும் அதற்கு உபமன்யு பக்த விலாசம் என்று பெயர் என்றும், அம் மொழிபெயர்ப்பு, சேக்கிழாரின் பாடலுக்கு பாடல் மொழிபெயர்ப்பு என்பதையும், அதன்வாயிலாக பெரிய புராணத்தின் நுணுக்கமான பல செய்திகளுக்கு விளக்கம் கிடைக்கிறது என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்பிட்டிருக்கிறேன். அவ்வகையில் சம்பந்தர் சமணர்களை வாதில் வென்றதும் சமணர் கழுவேறியதுமான இடத்தில் உள்ள பல நுணுக்கங்களுக்கு தெளிவான விடைகள் கிடைக்கின்றன. முதலில் சமணர் நாங்கள் தோற்றால் எங்களை இவ்வேந்தன் கழுவில் ஏற்றுவான்'' என்றார்களல்லவா. அதை உபமன்யு பக்த விலாசம் பின்வருமாறு கூறுகிறது.

நிச்சித்ய வாத: க்ரியதாம்
இதி அமாத்ய: அவதத் ச தான்
அத உக்ரா: ஆக்ரஹவ்யக்ரா: ஆகதா: ப்ராஹு:
ஆர்ஹதா:
அஸ்மான் பராஜிதான் அத்ர சூலம் ஆரோபயது இதி

(நிச்சித்ய - நிச்சயம் செய்து விட்டு, வாத: க்ரியதாம் - வாதம் செய்யப்படட்டும், இதி - என்று, அமாத்ய: - அமைச்சன் தான் - அவர்களை - அவதத் ச - கூறினார். அத - பிறகு, உக்ரா:- ஆவேசம் கொண்டவர்களாக, ஆக்ரஹவ்யக்ராஹ - பொறாமையால் பீடிக்கப்பட்டவர்களாக, ஆர்ஹதா:-சமணர்கள் ஆகதா:- வந்தவர்கள், ப்ராஹு: கூறினார்கள். அத்ர - இங்கு, பராஜிதான் - தோற்கடிக்கப்பட்ட (தோற்றோமாகில்) அஸ்மான் - எங்களை சூலம் ஆரோபயது - கழுவில் ஏற்றட்டும், இதி - என்று (கூறினார்கள்).

சமணர்கள் பொறாமையினால் 'நாங்கள் தோற்றால் கழுவில் ஏற்றட்டும்' என்று தாமே கூறினார்கள் என்பதை உ.ப.வி. உறுதி செய்கிறது. அவர்கள் தோற்றது அரசன் மந்திரியிடம் பின்வருமாறு கூறினான் என்று உ.ப.வி. கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சூலேஷு கீலய ஸ்தூலேக்ஷு இதி ராஜா ஆஹ
மந்திரினம்
மாஹேஸ்வர மடக்ஷிப்த ஜ்வலநாநாம் துராத்மநாம்''

ஸ்தூலேஷு சூலேஷு - நீண்ட கழுவில் கீலய - ஏற்றவும், இதி - என்று, ராஜா - அரசன் மந்திரிஸம் - மந்திரியிடம் ஆஹ - கூறினான். மாஹேஸ்வர - மடக்ஷிப்த - சைவர் மடத்தில், ஜ்வலநாநாம் - தீற வத்தவர்களாகிய, துராத்மநாம் - துஷ்டர்களை (ஏற்றவும்) என்று அரசன் கூறினான். அப்பொழுது சம்பந்தர் யாதும் சொல்லவில்லை என்பதை

சூலாரோஹண கர்மாபி சிக்ஷாம் ஸேஹே ஸ தேசிகம்
மஹாபராதினாம் பும்ஸாம் ராக்ஞா தந் நிஷ்கிரியா கிரியா
தேஷாம் ச்ரேயஸ்கரீ இதி ஏவ தயாளு: ஸ: அந்வமந்யத

(ஸ: தேசிக:- அந்த ஞானப்பிள்ளை, சூலாரோஹண கர்மாபி - கழுவேற்றும் செயலைக்கூட ஸேஹே - ஸஹித்துக் கொண்டார். மஹாபராதினாம் - பெருந்தீங்கி ழைக்கும், பும்ஸாம் - மனிதர்களை, ராக்ஞா - அரசனால், நிஷ்கிரியா - மரணதண்டனை அளிப்பது (இல்லாமல் செய்வது) க்ரியா உரிய செயலாகும் (ஆட்சியாகும்) (இது) தேஷாம் - அவ்வமணர்களுக்கு ச்ரேயங்கரீ ஏவ - (பாவத்தை போக்கி மறுமையில்) நன்மையே பயக்கும் என்று தயாளு: ஸ:- மிகவும் கருணையே வடிவான சம்பந்தர் அந்வமந்யத - எண்ணினார்.

பெருங்குற்றம் புரிவோர் பெரும்பாவம் செய்தவர்களாகிறார்கள். அரசனால் கொடுக்கப்படும் தண்டனையை ஏற்பதால் அவர்கள் பாவம் கழிகிறது. அது மரண தண்டனையே ஆனாலும் அறத்தின்பால்பட்டது. ஆதலின் அவர்களை அது தூய்மையாக்கி மறுமைக்கு நல்வழி காட்டுகிறது. அவர்கள் வீடு பேறு பெறும் வாய்ப்பும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெறுகிறார்கள் என்பது நமது நம்பிக்கை. அதைத்தான் உ.ப.வி. சுட்டுகிறது. சைவ மடத்துக்கு தீ வைத்ததால் அவர்கள் தண்டனைக்குரியவர்கள் என்று அரசன் ஆணை யிட்டான் (வாதத்தில் ஜெயிக்கலாம் தோற்கலாம். அதற் காக அளித்த தண்டனை அல்ல) உயிரோடு சைவர்களை மடத்தே கொளுத்த செய்த பெருங்குற்றத்துக்காகவே அமணர் தண்டனைக்கு உரியவர்களானார்கள். அவர்கள் கழுவில் ஏற அரசன் சொன்னதும் சம்பந்தர் ஏன் வாளாவிருந்தார் என்பதன் நுணுக்கமும் உ.ப.வி. கூறுகி றது. பெரும் குற்றத்துக்கு அரசன் தண்டனை அளிப்பது அறமே. அது அமணர்களையே தூய்மையாக்கி உய்விக் கும் என்ற கருணையுள்ளத்தினால்தான் சம்பந்தர் வாளாவி ருந்தார் என்கிறது உ.ப.விலாசம். அமணர் மீது அப்போது காய்ப்புணர்ச்சி சம்பந்தருக்கு தோன்றவில்லை. அவர்கள் உய்ய வேண்டும் என்னும் கருணை உள்ளமே மேலோங்கி யிருந்தது என்ற நுண்ணிய செய்தியை உ.ப.வி. வெளிப்ப டையாக கூறியுள்ளது.

இந்நிலையில் சமணர்கள் ஏறிய கழுமரம் தான் சம்பந்தர் ஜெயக்கொடி என்கிறார் சேக்கிழார்.

> தோற்றவர் கழுவில் ஏறி தோற்றிடத் தோற்றும் தம்பம்
> ஆற்றிடை அமணர் ஓலை அழிவினால் ஆர்ந்த தம்பம்
> வேற்றொரு தெய்வமின்மை விளக்கிய பதாகைத் தம்பம்
> போற்றுசீர் பிள்ளையார்தம் புகழ்ச்சயத் தம்பமாகும்.

இதை உ.ப.ம.ப.வி. கூறுமிடத்து குலச் சிறையார் அமணர் எண்ணாயிரவரும் கழுவில் ஏற முறைசெய்தார். அவை சம்பந்த ரின் ஜயத்தம்பம் போல் தோன்றின.

> குரோ: ஜயஸ்தம்ப நிபேஷு சக்ரே

என்று பெரிய புராணப்பாடலை அப்படியே குறிப்பதைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காண்கிறோம். இதற்கு பிறகு இது காறும் அச்சாகியுள்ள பெரிய புராணத்தில் இல்லாத ஒரு செய்யுள் உ.ப.ம.வி. காணப்படுகிறது. அவ்வாறு கழுவில் ஏற்றப்படும்போது அவர்களில் சிலர் திருநீறு தரித்து தப்பினர். மேலும் சிலர் சிவநாமத்தைப் படித்து பிழைத்தனர். மேலும் சிலர் சிவாலயங்களை அடைந்து உய்ந்தனர் என்று

ஆரோப்யமானே ஷுததா அர்ஹதேஷு
சூலேஷு கேசித் ததிரே விபூதிம்
கேசித் பரே சங்கர நாம பேரு:
ப்ரபேதிரே கேரபி சிவஸ்ய தாம

எண்ணாயிரவரும் கழுவில் ஏற்றப்பட்டார்கள் எனும் போது அவர்களில் பலர் சைவ சமயத்தைப் பின்பற்றி பிழைத்தனர் என்ற செய்தி குறிப்பிடத்தகுந்தது. உ.ப.வி. பெரிய புராணத்தையே மொழிபெயர்த்துள்ளதால் இந்தச் செய்தியும் பெரிய புராணத்தில் இருந்திருக்க வேண்டும். இல்லாத செய்தியை உ.ப.வி. குறிப்பதில்லை. ஆதலின் இந்த செய்தியைக் கூறும் செய்யுள் மறைந்து போயிற்றோ என ஐயுற வேண்டியுள்ளது.

சம்பந்தர் நாட்டிய ஜயக்கொடி சமணர்களைக் கழு வேற்றியதல்ல. அவர்களை சைவர்களாக மாற்றியதேயாம் என இதனால் தெளியலாம்.

சம்பந்தரின் கருணையுள்ளத்துக்கு மேற்கோளாக மேலும் இரண்டு நூல்களிலிருந்து எடுத்துக்காட்டலாம். திருவாலவுயுடையார் புராணத்தில், சமணர் தோற்றவுடன் சம்பந்தர் அவர்களை கழுவேற வேண்டாம் நீங்களும் திருநீறு பூசி, ஈசனை ஏற்றுமின் கர்ம மாசற கூடி வாழலாம் என்று கூறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமணர்கள் அதை ஏற்கவில்லை கழுவேறினர் என்பர். இது இவ்வாறு இருக்க பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்திலும் சம்பந்தர், சமணர்களை நீங்கள் இறக்க வேண்டாம். சிவபெருமானை அம்மையப்பனை வழுத்தி உய்யுமின்கள் என்று கூறுகிறார். ஆனால் சமணர் மறுத்து தாங்களே கழுவேறுகின்றனர்.

> இன்ன மறத்தாளிசைக்கின்றேன் நீர் ஏன் வாளா
> இறக்கின்றீர்
> அன்னை அனையான் எம் மிறைவன் அவனுக்காளாய்
> உய்மின்கள்
> என்ன, ஏட சிறியாய் நீ எவ்வாறு ஏங்கட்கு அஹித
> மொழி
> சொன்னதென்று மானமுளார் கழுவில் ஏறத்
> தொடங்கினார்

என்று உள்ளது சம்பந்தர் கருணை உள்ளத்துக்கு எடுத்துக் காட்டு. சமணர் தாமே கழுவேறினர். ஆனால் அவர்களது சீடர்களான சமணர்கள், திருநீறிட்டு சைவர்களாக மாறினார்.

ஆதலின் ஞான சம்பந்தர், சமணர்களை கழுவில் ஏற்றவில்லை என்பது எல்லா நூல்களிலும் ஒருதலையாக குறிக்கப்படும் செய்தி. பல நூல்களில் அவர் சமணர்களை கழுவேற வேண்டா என்று தடுத்தபோதும், அவர்கள் தாமே சென்று கழுவேறினர் என்பதும், அனைத்துச் சமணரும் கழுவேறவில்லை. பலர் திருநீறு பூசி சைவர்களாக மாறினர் என்பதையும் குறிக்கின்றன. சைவ மரபில் இக் கருத்துக்கள் தான் வழிவழியாக பல நூற்றாண்டுகளாக நிலவி வந்துள்ளன என்பது தெளிவு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குமார கானம்

சேக்கிழாரின் பெரியபுராணத்தை கி.பி.16ம் நூற்றாண்டில் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்த உபமன்யு பக்தவிலாசம். அந்நூலில் ஓரிடத்தில் குமாரகானம் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் தில்லைக்கு வருகிறார். அம்பலவாணரைக் கண்டு போற்றி பாடினார், ஆடினார், விழிமாரி பொழிந்தார். அதைக் கூறுமிடத்து சமஸ்கிருதத்தில் பின்வருமாறு

ஸ்தித்வா தில்லநகரே ஸச மாதங்க காயன:
குமாரகானை: தில்லேசம் அசேவத திவா நிசம்

தில்லை நகரில் இருந்து எழிலிசை பாடும், அவர் தில்லை ஈசனை குமாரகானங்களால் இரவும், பகலும், சேவித்தார் என்பது இப்பாடலின் பொருள். இங்கு குமாரகானங்களால் சேவித்தார் என்றால் என்ன பொருள்?

சிதம்பரத்தில் குலோத்துங்க சோழனுக்கும், விக்ரம சோழனுக்கும் தானைத் தலைவனாகத் திகழ்ந்த நரலோக வீரன் என்பவன் பல திருப்பணிகளை செய்தான். அவன் தான் செய்த திருப்பணிகளை எல்லாம் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் செய்யுள்களாக கல்லில் வெட்டி வைத்துள்ளான். 72 பாடல்கள் இவனது பணிகளை இவ்வாறு எடுத்துரைக்கின்றன. இதில் உள்ள ஒரு சம்ஸ்கிருத செய்யுள் பின்வருமாறு உள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அயம் இஹ விருஷகேதோ: பூஜகாநாம் த்விஜாநாம்
அக்ருத் சுசி முனீனாம் பக்தி ஹேதோ: விபூதிம்
இதரதபி குமார ஸ்தோத்ர பாராயணாய
திரிபுவன நுதம் உக்சை: காஞ்சநம் மண்டபம் ச

இவன் சிவபெருமானைப் பூஜை செய்கின்ற தூய்மையான மனம் கொண்ட அந்தணர்களுக்கு பக்தியினால் செல்வம் செழிக்கச் செய்தான். மூவுலகும் போற்றுகின்னற பொன் மயமான ஒரு மண்டபத்தை குமாரஸ்தோத்ரம் பாராய ணம் செய்ய கட்டினான் என்பது பொருள் இச் செய்யுளில் இரண்டாம் பகுதியில் குமாரஸ்தோத்ரம் பாராயணம் செய்ய மண்டபம் கட்டினான் என்ற செய்தி கவனிக்கத் தக்கது. நரலோகவீரன் 12ம் நூற்றாண்டில் அதாவது உபமன்யு பக்த விலாசம் எழுந்த நான்கு நூற்றாண்டுக ளுக்கு முன் வாழ்ந்தவன். அவனது கல்வெட்டில் குமாரஸ் தோத்ரம் என்ற சொல் காணப்படுகிறது. நான்கு நூற்றாண் டுகளுக்கு பிறகு, உ.ப.விலாஸத்தில் அதே சொல் குமார கானம் என்று குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

நரலோக வீரன் தன் பணிகளை தமிழிலும், சம்ஸ்கிரு தத்திலும் எழுதியிருக்கிறான். ஒன்றன் மொழி பெயர்ப் பாக மற்றது காணப்படுகிறது. குமாரஸ்தோத்திரத்தில் நரலோக வீரன் கூறும் சம்ஸ்கிருத செய்யுள் தமிழில் பின் வருமாறு உள்ளது.

நட்ட பெருமானால் ஞானம் குழைத்தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம் - முட்டாமை
கேட்போர்க்கு மண்டபத்தை செய்தான் தெவ்வேந்தர்
கெட வாட்போக்குத் தொண்டையார் மான்

என்று மண்டபம் கட்டியதைக் கூறுமிடத்து ஞானக் குழந்தையின் திருப்பதியம் கேட்க மண்டம் கட்டினான் என்று வந்துள்ளது. இதிலிருந்து குமாரஸ்துதி என்பது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குமாரனால் செய்யப்பட்ட துதி என்ற பொருள் கொண்டது என்றும் அது ஞான சம்பந்தரின் தேவாரத்தைக் குறிக்கிறது என்பதும் வெளிப்படை. உ.ப.விலாஸத்தில் குமாரகானம் என வந்துள்ளதும் அதையே குறிக்கிறது என்பது தெளிவு. சம்பந்தரின் தேவாரத்தை சேக்கிழார் காலத்திலிருந்தே சமஸ்கிருதத்தில் குமாரஸ்துதி, குமாரஸ்தவம், குமாரகானம் என்று அழைத்து வந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவதன்மம்

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் தாலுக்காவில் திருவாலீச்சரம் என்று ஒரு கோயில் இருக்கிறது. அங்கு அழகான சிவன் கோயில் உண்டு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. பாண்டியநாட்டில் சிறந்த சோழர் கலைக்கு எடுத்துக்காட்டாக இக்கோயிலை வரலாற்று ஆசிரியர் கூறுவர். இக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் இரண்டு கல்வெட்டுகள் சுந்தர சோழ பாண்டியன் என்பவன் வழங்கிய ஆணையை இவ்விரண்டும் குறிக்கின்றன. தமிழ்நாட்டை சீரும் சிறப்புமாக ஆண்டு கங்கையும் கடாரமும் வெற்றி கண்டு கங்கை கொண்ட சோழன் என்று பெயர் கொண்டானே முதலாம் இராஜேந்திர சோழன் அவனது மைந்தன்தான் சுந்தர சோழ பாண்டியன் என்பவன். தன் தந்தையின் பிரதிநிதியாக பாண்டிய நாட்டை ஆண்டபோது இந்த ஆணை வழங்கியுள்ளான் கி.பி.1036 - 1047ல் வாலீச்வரத்துக்கு அருகில் காக்கலூர் என்று ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் ஐந்து வேலி நிலத்தை பிரித்து தனி ஊராக்கி 'சிவசரண சேகர நல்லூர்' என்று பெயர் கொடுத்தான். இவ்வைந்து வேலி நிலத்திலிருந்து வரும் வருவாயை திருவாலீச்சுரம் கோயிலுக்கு கொடுக்க ஆணையிட்டான்.

சுந்தர சோழ பாண்டியன் இவ்வாணை இட்டதே சுவையான செய்தி. மதுரை மாநகரின் வடபக்கத்தில் ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நந்தவனம் இருந்தது. அதற்கு புத்தன் நந்தவனம் என்று பெயர். மலர்கள் நிறைந்த அந்த பூங்காவின் மத்தியில் அரசன் பகலில் தங்குவதற்கு ஒரு இடம் கட்டப்பட்டிருந் தது. அதில் அழகான ஓவியங்களும் சித்திர வேலைப்பாடு களும் இருந்திருக்க வேண்டும். அதனால் அதற்கு சித்ரகூ டம் என்று பெயர். அங்கிருந்து சுந்தரசோழ பாண்டியன் உணவு உண்டான். பிறகு அங்கேயே மற்றொரு பகுதி - ''ராஜேந்திர சோழ அதிமூற்க செங்கீரை'' என்று பெயர் அங்கு இருந்தபோது, அரசனின் அம்மான் திருவாலீச்சுரம் கோயிலுக்கு நிலம் கொடுக்க கேட்டுக் கொண்டான். அதன் பேரில் சுந்தர சோழ பாண்டியன் இந்த ஆணையை வழங்கினான். இதைக் கல்வெட்டு அழகாக ''மதுரையின் வட பக்கத்து பகலிருக்கை நந்தவனம் புத்தனில் சித்திர கூடத்து திருவமுது செய்தருளி ராஜேந்திர சோழ அதி மூற்க செங்கீரையில் எழுந்தருளி இருந்து'' என்று கூறுகி றது. தன் அம்மானின் வேண்டுகோள்படி அரசன் தானே காசு கொடுத்து 5 வேலி நிலம் விலைக்கு வாங்கி அதற்கு ''சிவசரண சேகர நல்லூர்'' என்று பெயர் கொடுத்தான். இவ்வூர் வருவாயிலிருந்து கோயிலில் திருவிழா நடத்த வேண்டும். நாள்தோறும் 25 பிராம்மணர் உண்ண வேண் டும். நாள்தோறும் ஒருவன் சிவதன்மம் வாசிக்க வேண் டும். மற்ற கோயிற் செலவுகளுக்கும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று விதித்தான். சைவநெறியை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள 'சிவதன்மம்' வாசிக்கப்பட வேண்டும் என்று அரசன் விதித்திருக்கிறான். அரசன் சிறந்த சிவபக்தன் ஆகையால் இவ்வாறு விதித்துள்ளான். அதனால்தான் அவனுக்கு சிவசரணசேகரன் என்ற பட்டம் இருந்திருக்கிறது. சிவதன்மம் என்றால் என்ன? சைவ ஒழுக்கம் என்ற பொருள். சுமார் கி.பி.1560ல் சிதம்பரத் தில் குஹமடம் என்ற மடத்தில் வாழ்ந்த மறைஞானதேசி கர் என்பவர் ''சிவாகம பரிபாஷா மஞ்சரி'' என்று சம்ஸ்கிருதத்தில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். இவரது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குரு சிவதர்மோத்தரம் என்ற சம்ஸ்கிருத நூலை தமிழ்ப்ப டுத்தியிருக்கிறார். சிவாகம பரிபாஷா மஞ்சரி என்பது சைவ வழியில் பயன்படுத்தப்படும் சிறப்புச் சொற்கள் யாவை? அவைகளின் பொருள் என்ன என்று விளக்கும் நூல். அகராதி போன்ற ஒரு நூல். அதில் சிவதன்மம் என்றால் என்ன என்று எழுதியிருக்கிறார்.

சிவநெறி அல்லது சிவதன்மம் என்பது பத்துப் பிரிவுகளைக் கொண்டது. 1) அஹிம்சை, 2)தயை, 3) சத்யம், 4) ஹ்ரீ: அடக்கம், 5) வளம், 6) இந்திரியங்களை வெல்லுதல் 7) தானம் (எளியோர்க்கு வழங்குதல்), 8) தியாகம், 9) ஜபம் 10) தியானம் என்பவையே அந்த பத்துப் பிரிவுகள். இவற்றையே வேறு விதமாகவும் கூறுவதுண்டு. 1) அஹிம்சை 2) சத்யம் 3) பிறர் பொருளுக்கு இச்சிக்காமை 4) பிரும்மசர்யம் (சிற்றின் பத்தை துறத்தல்) 5) ஆசை இன்மை 6) க்ரோதமற்ற தன்மை 7) குருவை (பெரியோரை) போற்றுதல் 8) தூய்மை 9) எப்பொழுதும் மகிழ்வுடன் இருத்தல் 10) ஆர்ஜவம் இவற்றைப் பின்பற்றுவதுதான் சிவதன்மம் என்பது. சிவநெறியில் முதலிடம் வகிப்பது அஹிம்சை. மிக மிக இன்றியமையாத இந்நெறியில்தான் சைவர்கள் புலால் உணவை மறுத்தனர். சைவம் என்றாலே "சாதுவா ன" பண்பட்ட, மென்மையான நெறி என்று பொருள். இவற்றின் சிறப்பை தெளிவாக மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்றுதான் சுந்தர சோழ பாண்டியன் திருவா லீச்சுரம் கோயிலில் நாள்தோறும் சிவதன்மம் வாசிக்க நிலம் கொடுத்திருக்கிறான்.

சுந்தரசோழ பாண்டியன் காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் சிவதன்மம் வாசிக்கப்பட்டதல்லவா. இதற்கும் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 1026ம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் குடந்தை திருநாகேசுரத்தில், சிவ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தன்மம் வாசிக்கப்பட்டது. சுந்தரசோழனின் தந்தை இரா ஜேந்திர சோழன் காலத்திலேயே இதற்கு ஏற்பாடு செய் யப்பட்டது. திருநாகேச்சுரத்தில் ஒரு மண்டபம் எடுக்கப் பட்டது. அந்த மண்டலத்துக்கு திருச்சிற்றம்பலம் உடை யானான திருவோலக்கமண்டபம் என்றுபெயர். அங்கு தினம்தோறும் சிவதன்மம் வக்காணிப்பானுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மரக்கால் அரிசி கொடுக்க வகை செய்யப் பட்டது. அதைக் கல்வெட்டு ''இவன் எடுப்பிச்ச திருச்சி றம்பலம் உடையானான திருவோலக்கத்து மண்டபத்து மூன்று சிவதன்மம் வாசித்து வக்காணிப்பான் ஒருவ னுக்கு நாள் ஒன்றுக்கு பதக்கு நானாழியாக''.... என்று கூறுகிறது. இதிலிருந்து சோழர்காலத்து தமிழ்நாட்டில் பல கோயில்களில் சிவதன்மம் உரைக்க நிலங்கள் தானமாக கொடுக்கப்பட்டிருந்தன என அறியலாம்.

இந்த 'சிவதன்மம்' என்ற சொல்லை தமிழ்நாட்டில் எப்பொழுது பயன்படுத்தினார்கள். இந்த சிவதன்மத்தை முதலில் யார் வகுத்தார்கள் என்று அறிந்து கொள்ள ஆர்வம் மேலிடுகிறதல்லவா! சாக்ஷாத் பரமேச்வரனாகிய சிவபெருமானே சிவதன்மத்தை வகுத்தவர் என்று திருஞா னசம்பந்தர் கூறுகிறார். ஞானசம்பந்தர் காலத்திலேயே 'சிவதன்மம்' என்ற சொல் வழக்கிலிருந்திருக்கிறது என்று அவரது தேவாரப் பாடலிலிருந்து அறிகிறோம்.

திறம் கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாரமே
அறம் கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான்
.... புள்ளிருக்க வேளூரே

என்று புள்ளிருக்குவேளூர் பதிகத்தில் சம்பந்தர் குறித்துள் ளார். சிவதன்மம் என்பது தூய்மையான நெறி. தெய்வத் தால் வகுக்கப்பட்டது ஆன்றோர்களால் பின்பற்றப்பட் டது. ஆதலால் அரசர்களும் அன்று இத்தன்மம் தழைக்க வழிவகுத்துள்ளனர் என்று அறிந்து இன்புறலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருக்காப்பு நீக்கிய கடைக்காப்பு

நாவுக்கரசரும், ஞானப்பிள்ளையும் திருமறைக் காட்டில் இருந்தபோது நடந்த நிகழ்ச்சி. திருமறைக்காட்டுக் கோயிலுக்கு இருவரும் வருகிறார்கள். கோயிலில் வழிபாடு செய்பவர்கள், நேர்முகவாயில் வழியில் உள்ளே செல்லாமல் மற்றொரு வழியாக சென்று வழிபட்டு வருகின்றனர். நேர்முக வாயில் கதவு மூடி திருக்காப்பு இடப்பட்டு காணப்பட்டது. இக்கோயிலில் வேதங்கள் வழிபட்டன. அதன் பின்னர் கோயிற் கத்வுகள் திறக்கப்படவில்லை என்று இருவரும் அறிந்தனர். ஞானப்பிள்ளை நாவுக்கரசரிடம் நாம் இருவரும் நேர்முகமாக இறைஞ்ச திருமுன் கதவு திறக்க நீங்கள் பாடுங்கள் என்று கேட்டுக் கொள்ள நாவுக்கரசு ஒரு பதிகம் பாடினார். இந்நிகழ்ச்சியை சேக்கிழார்

> ஆங்குப் பரிசை அறிந்தருளி ஆழித் தோணிபுரத்தரசர்
> ஓங்குவேதம் அர்ச்சனை செய் உம்பர்பிரானை
> உள்புக்கு
> தேங்காதிருவோம் நேர்இறைஞ்ச திருமுன் கதவந்
> திருக்காப்பு
> நீங்கப்பாடும் அப்பர் என நீடுந் திருநாவுக்கரசர்

என்று கூறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவ்வமயம் நாவுக்கரசு ''பண்ணின் நேர் மொழி யாள்'' என்னும் பதிகம் பாடினார். அப்பொழுது கதவு திறக்க தாமதமாயிற்று. ஆதலால் ''எண்ணீர் இரக்கம் ஒன்றில்லீர்'' என்று அப்பதிகத்துக்கு திருக்கடைக்காப்பு பாடினார். அது பாடியதும் வேதவனப் பரமனின் அருளால் கதவும் திறந்தது. இருவரும் உள்ளே சென்று வணங்கினர். இதை சேக்கிழார் இருபாடல்களில் கூறுகிறார்.

உண்ணீர்மையினால் பிள்ளையார் உரை
செய்தருள அதனால்
பண்ணி நேர் மொழியாள் என்றெடுத்துப் பாடப்
பயன் துய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீங்கத்
தாழ்க்கத் திருக்கடைக்காப்பு
எண்ணீர் இரக்கம் ஒன்றில்லீர் என்று பாடி
இறைஞ்சுதலும்

வேதவனத்தின் மெய்ப்பொருளின் அருளால்
விளங்கும் மணிக்கதவம்
காதல் அன்பர் முன்பு திருக்காப்பு நீங்க கலை மொழிக்கு
நாதர் ஞான முனிவருடன் தொழுது விழுந்தார்

அப்பர் ''பண்ணினேர் மொழியாள்'' என்னும் பதிகம் பாடிய போதும் திருக்காப்பு நீங்க தாழ்ந்தது. ஆதலின் ''எண்ணீர் இரக்கம் ஒன்றிலீர்'' என்று அப்பதிகத்துக்கு கடைக்காப்புப் பாடியதும் கதவம் திறந்தது என்பது சேக்கிழார் பெரிய புராணத்தில் இப்பொழுது காணக் கிடைக்கிறது ''பண்ணின் நேர் மொழியாள்'' என்னும் பதிகத்தில் இப்பொழுது பதினோரு பாடல்கள் உள்ளன. அதன் இறுதிப் பாட்டில் அதாவது கடைக்காப்பில் ''இரக்கம் ஒன்று இலீர் - எம் பெருமான்'' என்று வருவதையும் காண்கிறோம். நாவுக்கரசு இங்கு ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதிகம் பதினொரு பாடல்கள் பாடி முடிந்ததும் கதவம் திறந்தது. முதல் பாடல் பாடி முடித்தவுடன் கதவம் திறக்காமல், பதிகத்தின் பதினொரு பாடல்களும் பாடி முடித்த பின்னர் தான் கதவு திறந்தது. அதனால் தான் ''திருக்காப்பு நீங்க தாழ்ந்தது'' என்று சேக்கிழார் கூறுகிறார். ஞானப்பிள்ளை ஒரே ஒரு பாடல் பாடியதும் கதவு மூடிக் கொள்கிறது. இதனால் அப்பர் தமது பக்தியில் பரமன் ஏன் தாமதித்தார் என பின்னர் வருந்தினார் என அறிவோம்.

நாவுக்கரசர் வரலாற்றில் இவ்வாறு குறித்துள்ள சேக்கிழார், ஞானசம்பந்தர் வரலாற்றிலும் இதே செய்தியைக் குறிக்கிறார்.

பாடிய அப்பதிகப் பாட்டான பத்தும் பாடல்
நிரம்பிய பின்னும் பைம்பொன்வாயில்
சேடுயர் பொற்கதவு திருக்காப்பு நீங்காச்
செய்கையினால் வாகீசர் மனம் நொந்து
நீடு திருக்கடைக்காப்பில் அரிது வேண்டி
நின்றெடுக்க திருக்காப்பு நீங்கக் காட்ட
ஆடிய சேவடியார்தம் அடியார் விண்ணோர்
ஆர்ப்பெழுந்த தகிலாண்டம் அனைத்தும் மூழ்க

என்று இரண்டு இடத்திலும் அப்பர் பத்துப் பாட்டுகள் உள்ள ஒரு பதிகம் பாடினார் என்பதும், அப்பொழுதும் கதவம் திறக்காததால் வருந்தி திருக்கடைக்காப்பு பாடியதும் கதவம் திறந்தது என்பது இப்பொழுதுள்ள பெரிய புராணச் செய்தி. பெரிய புராணம் சம்ஸ்கிருதத்தில் அப்படியே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது என்றும் 'உபமன்யு பக்த விலாசம்' என்று பெயர் பெற்றுள்ளது என்றும் அறிவோம். அந்நூலிலும் அப்பர் வரலாற்றிலும், சம்பந்தர் வரலாற்றிலும், திருமறைக்காடு கதவம் திறந்த நிகழ்ச்சி இடம் பெறுகிறது. இரண்டு இடங்களி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லும், அப்பர், கதவு திறக்க இரண்டு பதிகம் பாடினார் என்றும், அதாவது 20 பாடல்கள் பாடினார் என்றும் செய்தி காணப்படுகிறது. இது நம்மை சற்று வியப்பில் ஆழ்த்துகிறது.

நாவுக்கரசர் வரலாற்றில், தாம் பதிகம் பாடிய போது கதவு திறக்க சற்று தாமதமாகியது எண்ணி சற்று வருந்தினார் அல்லவா. அதைக் குறிக்குமிடத்து உ.ப.வி லாசத்தில் - ''நான் முன்னர் இருபது பாடல்கள் பாடிய பிறகு தான் கதவம் திறந்தது. ஆனால் இப்பொழுது இவர் (சம்பந்தர்) பாடிய ஒரே பாடலில் கதவு மூடிவிட்டதே என் பாட்டில் பரமனுக்கு அருள் குறைந்து விட்டதோ'' என்று அப்பர் வருந்துவதாக உள்ளது.

கோணே ஸ்தித்வா ஸ கேதஹ்ரீ மனஸி ஏவம்
அசிந்த யத்
மயா விம்ஸதி கானை: யத் புரா விஜகடே அரம்
தத் அனேன ஏக கானேன புர: ஸஞ்ஜகடே த்ருடம்
தத் அஸ்தி மயி தேவஸ்ய தயாரஸ பரிச்யுதி:

என்று மயா விம்ஸதிகானை: என்று இருபது பாடல்களால் பாடி திறக்கப்பட்டது குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். ஞானசம்பந்தர் வரலாற்றில், இவ்விடத்தை குறிக்கும் போது இவ்வளவு இருபது பாடல்கள் பாடப்பட்டதாகவே குறிப்பு உள்ளது. முதலில் அப்பர் பெருமான் ஒரு பதிகம் (பத்துப் பாடல்கள்) பாடினார். கதவு திறக்கவேயில்லை. மீண்டும் ஒரு பதிகம் (பத்துப் பாடல்கள்) பாடினார். கதவு திறந்தது என்று:-

இத்யஸ்மாத் தேசிகா தேசாத் வாகீச : ச ததேதி ஸ:
ஸ்ரீ கானதசகம் பக்த்யா தேவஸ்ய அத்ர ஸ்திதோ ஜகௌ
ததாபி ந பபூவ ஏத்த த்வாரம் உத்காடிகாரரம்
பராகாயத் ஸ ப்ரவாக்ப்ரஹ்வ: ஸ்ரீ காந தசகம் புந:
விவ்ருத ஆராம் ஆஸீத் தத் விஸ்மிதா: ச ஜநா: ஸதா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதன் பொருள் இவ்வாறு: சம்பந்தரின் வேண்டு கோள்படி (தேசிகாதேசாத்), வாகீசர் அவ்வாறே செய்கி றேன் என்று கூறி (வாகீச : ச ததேதி ஸ:) பக்தியினால் பத்துப் பாடல்களை (ஸ்ரீ கான தசகம் பக்த்யா) பெருமா னின் திருமுன் நின்று பாடினார். (தேவஸ்ய அக்ரே ஸ்திதோ ஜகௌ) அப்பொழுதும் அந்தக் கதவு காப்புத் திறக்கவில்லை. (ததாபி ந பபூவ ஏதத், த்வாரம் உத்காடி தாரரம்) வாக்கின் செல்வர் மீண்டும் பத்துப் பாடல்களை பாடினார். (ப்ராகாயத் ஸப்ரவாக் ப்ரஹ்வ: ஸ்ரீ காந தசகம் புந:) அக்கதவம் அப்பொழுது திறந்தது. ஜநங்கள் வியப்பில் மூழ்கினர். (வ்ருத ஆரரம் ஆஸீத் தத் விஸ்மிதா: ச ஜநா: ஸதா) என்று பத்து பத்து பாடல்கள் பாடியதாக இங்கும் குறிக்கப்பட்டுள்ளது. உபமன்யு பக்த விலாசம் சேக்கிழாரின் நேர் மொழிபெயர்ப்பு என்பது மிகவும் தெளிவு. சேக்கிழார் பாடல்களை தம்முன் வைத்துக் கொண்டு, அதில் உள்ள பாடல், பாடலாக உபமன்யு பக்த விலாசம் சம்ஸ்கிருதத்தில் உள்ளதைக் காண்கிறோம். அவ்வாறு இருக்க தமிழில் அப்பர் ஒரு பதிகம் பாடி அதன் கடைக்காப்பு பாடியதும் கதவு திறந்தது என்று கூறியிருக்க, சம்ஸ்க்ருதத்தில் இரண்டு பதிகம் பாடியதாக எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது? இவ் வாறு இரண்டு பதிகம் பாடினார் என்று பெரிய புராணத்தி லேயே மற்றும் ஒரு மரபு - பாட பேதம் - உ.ப.வி. எழுதியபோது இருந்ததா? என்று தெரியவில்லை. பத்துப் பாடல்கள் அப்பர் பாடினார். கதவம் திறக்கவில்லை. தாழ்ந்தது. கடைக்காப்பு பாடவும் கதவு திறந்தது. என் பதை தாழ்ந்து கதவு திறந்ததால் வருந்தினார் என்பதை உ.ப.வி. தவறாக இருபது பாடல் பாடினார் எனக் கொண்டதா எனத் தெரியவில்லை. பெரும் மொழிபெ யர்ப்பான உ.ப.வி. இங்கு பொருள் தெரியாது குழம்பியி ருக்க வேண்டும் என்று கருத முடியவில்லை. இருப்பி னும் தமிழில் ஒரு பதிகம் என்று இருக்க சம்ஸ்கிருதத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டு பதிகம் இருபது பாடல்கள் பாடினார் என்று கூறும் மரபு ஒன்று இருந்துள்ளது என்பதை நாம் இதனால் அறிகிறோம்.

உ.ப.வி. பதிப்பித்த ஆசிரியர் அந்தந்தப் பகுதிக்கு உரிய தமிழ் பதிகங்களை கீழே கொடுத்துள்ளார். அதில் மறைக்காட்டு பதிகங்கள் - ''ஓதமால் கடல் பரவியுலகெ லாம்'' என்ற பதிகமும், பண்ணின் நேர் மொழியாள்'' என்ற பதிகமும் மறைக்காட்டில் கதவம் திறக்கப் பாடிய தாகக் குறித்துள்ளார். முதலில் குறித்துள்ள 'ஓதமால் கடல்' என்னும் பதிகத்தில் இப்பொழுது 9 பாடல்கள் தான் உள்ளன. பத்தாவது பாடல் இருந்து மறைந்ததா அல்லது அப்பர் பாடியதே ஒன்பது பாடல் தானா என்பது தெரியவில்லை. மற்றைய பண்ணின் நேர் மொழியாள் என்னும் பதிகத்தில் இப்பொழுது பதினொரு பாடல்கள் உள்ளன. பதினோராவது பாடலான கடைக்காப்பில் தான் இரக்கம் ஒன்றிலீர் என்ற சொற்றொடர் வருகிறது. ஆதலின் இப்பதிகத்தில் அப்பர் பதினொரு பாடல்கள் பாடியுள்ளார் என்று தெரிகிறது. இரண்டு பதிகங்களிலும் சேர்ந்து இருபது பாடல்கள் உள்ளன. உ.ப.வி. அப்பர் இருபது பாடல்கள் பாடியதாகக் குறிக்கிறதைப் பார்த்தால் உ.ப.வி. எழுதிய 16ம் நூற்றாண்டில் இரண்டு பதிகங்களி லுமாகச் சேர்ந்து இருபது பாடல்கள் தான் இருந்தன தெளிவு. அக்காலத்திலேயே 'ஓதமால் கடல்' என்று பதிகத்தில் ஒன்பது பாடல்கள் தான் இருந்தன என்றும் தெரிகிறோம். மேலும் இரண்டு பதிகங்களும் ஒன்றுபோ லவே அமைந்துள்ளன. இரண்டும் திருக்குறுந்தொகையா கவே உள்ளன. ஆனால் ''பண்ணின் நேர்'' என்றும் பதிகத்தில் மட்டும் ஒவ்வொரு பாடலிலும் "கதவம் திறமினோ' என்று உள்ளது. மற்றதில் அவ்வாறில்லை. இங்கு மேலும் ஒரு குறிப்பை ஆராய்தல் வேண்டும். உ.ப.வி. அப்பர் சரிதத்தில் அப்பர் இங்கு பாடிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதிகத்தின் தொடக்கமும், இறுதியும் கொடுக்கப் பட்டுள்ளது.

ததே இதி உக்தவா வாக் பதி: கர்த்தும்
ததா சக்ரே மதிம் கவி:
வீணா ஸாத்ருக்ஷ்ய வாக் அம்பா பாக இதி ஆரப்ய ஸம்ஸ்துவத்
கவாட உத்காடன அத்ருஷ்ட்யா
நிஷ்க்ருபா இதி அந்தத: ஜகௌ
உத்காடித கவாடே தௌ வேதாரண்ய ஈஸ்வராஞயா

(ததா இதி - அவ்வாறே ஆகட்டும் என்று உக்த்வா - கூறிவிட்டு, வாக்பதி: கவி - கவியான வாகீசர், ததா - அவ்வாறு பாட, மதிம் சக்ரே - மனம் வைத்தார். வீணா ஸாத்ருக்ஷ்யவாக் - பண்ணின் நேர் மொழி, அம்பா பாக - அம்பாளின் பங்கரோ, இதி ஆரப்ய - என்று தொடங்கி ஸம்ஸ்துவத் - போற்றினார். கவாட - கதவம், உத்காடன அதிருஷ்ட்யா - திறவாதது கண்டு, அந்தத: இறுதியில், நிஷ்கிருபா - இரக்கம் இல்லீர், இதி - என்று - ஜகௌ - பாடினார்).

இது முன்னர் குறிப்பிட்ட ''உண்ணீர் மையினால் என்னும் பெரிய புராணப் பாடலின் நேர் மொழி பெயர்ப்பு. பண்ணின் நேர் மொழியாள் என்று தொடங்கி னார். கதவம் திறக்கவில்லை. இறுதியில் - நிஷ்க்ருபா - இரக்கமில்லீர் என்று பாட கதவம் திறந்தது என்று உ.ப.வி. கூறுகிறது. இவ்விரண்டு பகுதிகளும் ஒரே பதிகத்தில் தான் உள்ளன. உ.ப.வி. இவ்விடத்தில் உள்ள குறிப்பு அப்பர் ஒரு பதிகம் பாடியதாகத்தான் உள்ளது. அவ்வாறு இருக்க மற்ற இரு இடங்களில் இரண்டு பதிகங்கள் - இருபது பாடல்கள் பாடியதாக எவ்வாறு உள்ளது என்று தெரியவில்லை. உபமன்யு விலாசத்தில் ஒரு குறைபாடு உள்ளது எனத் தெரிகிறது. கடைக்காப்பு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பதை பதிகம் என்று கொண்டதால் வந்த குழப்பம் எனலாம். எப்படி இருப்பினும் - கதவம் திறக்க காலம் தாழ்ந்ததால் இரண்டு பதிகங்கள் பாடினார் என்ற ஒரு கருத்தும், இரண்டு பதிகங்களும் சேர்ந்து, இருபது பாடல்கள் கொண்டிருந்தன என்று உ.ப.வி. அறிகிறோம். திருக்காப்பு நீக்கிய திருக்கடைக்காப்பு, மேலும் ஆய்வுக் குரியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கடை தூங்கு மணி

அரசனுடைய கொற்றவாயிற் புரத்தே ஒரு மணி இருக்கும். அதை ஆராய்ச்சி மணி என்பர். நாட்டு மக்களுக்கு ஏதாகிலும் குறை உண்டானால், அரசனின் கவனத்தை ஈர்க்க இம்மணியை அடிப்பர். இம்மணியின் ஓசை கேட்டால் அரசனே ஓடிவந்து மணி அடித்தவரின் குறை கேட்டு அதைக் களைய முற்படுவான். இது பண்டைய அரசியல் முறை. மனுநீதி சோழனின் மகன் தேர்க்காலில் ஒரு பசுவின் கன்றை கொன்றுவிட அப்பசு மனுநீதி சோழனின் கடைமணியை அடிக்கவும் அவன் நீதி வழங்கியதை நாம் அறிவோம்.

அதுபோல் தேவர்கள் எல்லாம் கூடி தங்கள் குறையைக் கேட்டு உதவ ஒரு கடைவாய் மணியை அடித்தார்கள். இம்மணி எப்பொழுதும் அடிக்கப்படாமலேயே இருக்கும். யாருக்காவது மற்ற எல்லா வழிகளிலும் தீர்க்க முடியாத குறையிருந்தால் சிவபெருமானிடம் நேராக முறையிட இது உதவும். ஆதலின் இம்மணி இசைக்கப்படாமல் இருப்பதால் கடைதூங்குமணி எனப் பெயர் பெற்றது. தூங்கு எனில் தொங்கு என்னும் பொருளும் கொள்வர். வாயிற்கடையில் இம்மணி தூங்கி வழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. திடீரென அந்த மணியை வந்து தேவர்கள் அனைவரும் அடித்தனர். ''முப்புரத்தின் அசுரர்களால் எங்களுக்கு இழைக்கப்படும் துன்பம் தாங்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொணாதது. நீயே எங்களைக் காக்க வேண்டும்'' என சிவபெருமானை தேவர்கள் வேண்டிக் கொண்டனர். அதற்காகத் தான் அவரது வாயிற்கடை தூங்குமணியை அடித்தனர். அந்த மணியோசை அடங்குவதற்கும் முன்னதாகவே திரிபுரமும் தீயாலெரிந்து, பொடியாய் வீழ்ந்தனவாம். அதை அப்பர் பெருமான் தனித்திருவிருத்தம் என்னும் பதிகத்தில் கூறுவதைப் பாருங்கள்.

மூவா உருவத்து முக்கண் முதல்வ மிக்கூர் இடும்பை
காவாய் எனக் கடைதூங்கு மணியைக் கையால் அமரர்
நாவாய் அசைத்த ஒலி ஒலிமாறியதில்லை அப்பால்
தீயாய் எரிந்து பொடியாய் கழிந்த திரிப்புரமே

இதன் பொருள் சிவபெருமான் அருளே வடிவானவர். அடியார்கள் அவரிடம் தமது குறையை முறையிட, முறையீடு முடிவதன் முன்னமே, அருள் பாலிக்கும் வள்ளல் என எழிலுற இப்பதிகம் உணர்த்துகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாலனாய் கழிந்த நாளும்

அப்பர் பெருமான் பாடிய தேவாரப் பதிகங்களில் இரண்டு பாடல்களை இங்கு காண்போம்.

ஒரு மனிதனின் வாழ்வு மூன்று பகுதிகளாக சிறுவனாகவும், யௌவனத்தானாகவும், மூப்பாகவும் அமைகிறது. சிறுவனாக இருந்தபோது விளையாட்டுக்களில் ஈடுபட்டு அறிவு முதிராத பருவமாக கழிக்கிறான். யௌவனத்தை அடைந்தபோது காமம் மிகுந்து பெண் சுகத்திலீடுபட்டு, காலம் கழிக்கிறான். மூப்பு வரவும் மெலிந்து கையிலே கோலேந்தி செயலற்ற நிலையில் கழிக்கிறான். ஆகத் தன் வாழ்நாள் முழுவதும் இம்மூன்று பருவத்தின்பால் பட்டு தனக்கென ஒரு குறிக்கோளோடு வாழாது வீணாகக் கழிக்கிறான். சிவனை நினையாது இவ்வாறு நானும் கெட்டேன் என பொதுச் செய்தியை தன்மேல் ஏற்றி அப்பர் பாடுகிறார்.

பாலனாய்க் கழிந்த நாளும்
    பனிமலர்க் கோதைமார் தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
    மெலிவோடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
    குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலி
    திருக்கொண்டீச் சரத்துளானே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதிசங்கரர் பல தோத்திரப் பாக்கள் இயற்றியுள்ளார். அவற்றில் ''பஜகோவிந்தம்'' என்ற துதிப்பாடல் மிகவும் புகழ் வாய்ந்தது. அதில் ஒரு பாடல், மேலே குறித்த அப்பரின் பாடல் கருத்தை அப்படியே பிரதிபலிக்கிறது. ஒன்று மற்றதின் மொழிபெயர்ப்போ என்னும் அளவுக்கு இரண்டுக்கும் உள்ள ஒற்றுமையைக் காண்கிறோம்.

பாலஸ் தாவத் கிரீடா ஸக்த:
தருணஸ் தாவத் தருணீஸக்த:
விருத்தஸ் தாவத் சிந்தாமக்ன:
பரே பிரும்மணி கோபி ந ஸக்த:

என்பது அப்பாடல். அப்பர் தமது பாடலில் சிவபெருமான் மீது பக்தி செலுத்தாது காலங் கழிக்கப்படுகிறது என்கிறார். சங்கரர் பரப்பிரும்மத்தை சிந்தியாது காலங் கழிக்கப்படுகிறது என்கிறார். இதுதான் இரண்டு பாடல்கட்கும் உள்ள வேற்றுமை.

இதுபோல அப்பர் பெருமானின் மற்றொரு பாடலைக் காண்போம்.

தந்தை யார் தாயாருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்கனே போமாறேதோ
மாயமாய் இதற்கேதும் மகிழவேண்டா
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாம நமச்சிவாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே

சங்கரரின் ''பஜகோவிந்தம்'' பாடலில் இதே கருத்தைப் பிரதிபலிக்கும் ஒரு பாடல் உண்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காதே காந்தா கஸ்தே புத்ர:
ஸம்ஸாரோயம் அதீவ விசித்ர:
கஸ்ய துவம் வா குத ஆயாத:
தத்வம் சிந்தய யதிதம் ப்ராத:

ஒன்றுபோல் எண்ணுவர் பெரியோர் என்பதற்கு இதனைக் காட்டிலும் வேறு யாது சான்று வேண்டும்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏரி வளாவிக் கிடந்தது

உலகப்புகழ் வாய்ந்த மாமல்லபுரத்து கற்கோயில்களையும், சிற்பங்களையும் தோற்றுவித்த பல்லவ மன்னன் ஒரு சிறந்த சிவபக்தன். அவனுக்கு ''சிவ சூடாமணி'' என்ற ஒரு பட்டமும் உண்டு. அம்மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற இராஜசிம்மன் என்பவனாகும். அவன் ஏறக்குறைய 590லிருந்து 728 வரை ஆண்டான். அதாவது அப்பர், சம்பந்தர் ஆகிய இரண்டு சைவப் பெரியார்களுக்கும் ஒரு 40-50 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆண்டவன். இவனையே சிலர் ''காடவர்கோன் கழற் சிங்க நாயனார்'' எனக் கருதுகின்றனர். சுந்தரமூர்த்தி நாயனார் இவனது சமகாலத்தவர் என்பார் உண்டு.

இவன் மாமல்லபுரத்தில் தோற்றுவித்த இரண்டு மூன்று கற்கோயில்களில் தனது கல்வெட்டைப் பொறித்து வைத்திருக்கிறான். அவற்றில் தனது சிவபக்தியையும் சிவாலயங்களைத் தோற்றுவித்ததையும் குறிக்கிறான். அக் கல்வெட்டுகள் சமஸ்கிருத மொழியில் உள்ளன. அவற்றில் ஒரு செய்யுள் கீழ்வருமாறு உள்ளது.

அவனது முடி அழகிய ரத்னங்களால் ஆன தாமரை வடிவில் உள்ளது. அதன் மீது அபிஷேகம் செய்யும்போது (தினமும் குளிக்கும்போது - அரசனை அமர்த்தி நீராட்டுதல் மரபு) நீர் நிறைந்து விளங்குகிறது. அது ஒரு விசாலமான சரஸ் போல (ஏரி) காட்சியளிக்கிறது. ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகன்ற நீர்நிறைந்த ஏரியில் தாமரை மலர்போல் காட்சியளிக்கிறது அவனது முடி. அப்படிக் கொத்த அவனது தலையில், அருள்பாலிக்கும் அண்ணலான சிவபெருமான் விளங்குகிறார் என்று அச்செய்யுள் கூறுகிறது.

அபிஷேக ஜலாபூர்ணே சித்ர ரத்னாம்புஜாகரே
ஆஸ்தே விசாலே சுமுக: சிரஸ் ஸரஸி சங்க:

இதன் பொருள் முடியுடைய மன்னனாகிய இவன் தன் தலையால் சிவனைத் தாங்குகிறான். சிவனை வணங்கும் அடியான் இவன் என்பது பொருள். இங்கு 'திருமுடி மேல் புனல் ஏரி போல் காட்சியளித்தது என்ற கருத்தைக் காண்கிறோம். இது ஒரு தனித்தன்மை வாய்ந்த அரிய கருத்து. இக்கருத்தை இம்மன்னனுக்கும் முன் வாழ்ந்த அப்பர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். கீழ்வாரும் தேவாரம் காணுங்கள்.

வேரி வளாய விரைமலர்க் கொன்றை புணைந்தனகன்
சேரி வளாய வெண்சிந்தை புகுந்தான் திருமுடிமேல்
வாரி வளாய வருபுனற் கங்கை சடைமறிவாய்
ஏரி வளாவி கிடந்தது போலும் இளம்பிறையே
4 திருமுறை - பொது.

இத்தேவாரத்தில் ''திருமுடிமேல் புனல்... ஏரி வளாவிக் கிடந்தது போலும்'' என்னும் கருத்துக் காண்க. இராஜ சிம்ம பல்லவனுக்கு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் தான் அப்பர் வாழ்ந்தார். அவரது பாடலில் உள்ள கருத்துக்கள் நாட்டில் நிறைந்து விளங்கின. அதை ஒட்டி இப்பல்லவ மன்னனும் தனது சிவபக்தியை எடுத்துக் காட்ட இக்கருத்தை பயன்படுத்தியுள்ளான் என்பது கண்டு இன்புறத் தக்கது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீக்கூர்ந்த திருமேனி

அப்பர் பெருமான் தமது வலம்புரம் பதிகத்தில்

தீக்கூர்ந்த திருமேனி ஒருபால் மன்னி
ஒருபாலும் அரிஉருவம் திகழ்ந்த செல்வர்

என்று பாடுகிறார். இந்த சொற்றொடர் இந்திய சமயத்துக்கே ஒரு அற்புதக் கருத்தை, ஆழ்ந்த கருத்தை அள்ளி வழங்குகிறது. சிவபெருமான் பல தோற்றங்களில் சிக்கலான ஒரு உருவம் எவ்வாறு தோன்றியது? அதன் தத்துவம் என்ன என்றறிய ஒப்பரும் செற்றொடர் இது. அதை ஆய்வதே இக்கட்டுரையின் கருத்து.

சிவபெருமான் ஜோதிமயமானவர். அளப்பரும் ஜோதி. ஜோதிப்பிழம்பாய் இலிங்க உருவத்தில் தோன்றியவர். ஞானச்சுடர். "திருவையாறகலாத செம்பொற்சோதீ" என்னும் நாவுக்கரசர் பரமனை "சோதியுட் சோதி" என்றும், "தெள்ளருச் சிவச்சோதித்திரள்" என்றும் பாடுகிறார் அல்லவா? சிவபெருமானே ருத்ரன் என்பது நமது மரபு.

உம்பரானை ருத்திரமூர்த்தியை
அம்பரானை அமலனை ஆதியை

என்கிறார் அப்பர். ருத்ரன் என்பதும், சிவன் என்பதும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எவ்வாறு ஒரே பரம்பொருளைக் கூறுகின்றதோ அதே போல் ருத்ரன் என்றாலும் அக்னி என்றாலும் ஒன்றுதான். அதைத்தான் அப்பர் பெருமான் தீக்கூர்த்த திருமேனி ஒருபால் என்கிறார். இங்கு பரமனின் ஒரு பகுதி அக்னியாக ருத்ரனாக காட்சியளிக்கிறது என்பது பொருள்:

இவருடைய மறுபகுதி 'அரி' உருவமாக விஷ்ணு வாக விளங்குகிறது. ஆதலின் அப்பர் பெருமான், இப்பா டலில் ஹரிஹரனாக, சங்கரநாராயணராகத் திகழும் உரு வைக் கூறுகிறார். பல பதிகங்களில் சிவபெருமான் 'ஹரிஹரர்' உருவில் தோன்றுவதை அப்பர் பாடுகிறார். எடுத்துக்காட்டாக,

மண்ணினை உண்ட மாயன்
தன்னை ஓர் பாகங்கொண்டார்

என்று கூறுவதைக் காணலாம் (திருக்கச்சி மேற்றளி - பதிகம்).

இங்கு மற்றொன்றையும் நினைவில் கொள்ள வேண் டும். சிவபெருமான் அர்த்தநாரியாகத் திகழ்கிறார் என்பது நாம் அறிந்த உண்மை. 'ஹரிஹரர்' 'அர்த்தநாரி' ஆகிய இரண்டு மூர்த்திகளும் தனித்தன்மை வாய்ந்தவை. இரு வெவ்வேறு உருவங்கள் ஒருடலாய் இணைந்து நிற்பதைச் சித்தரிக்கும் உருவங்களாகும். ஹரிஹரன் உருவைப் போலவே அர்த்தநாரீச்சுரர் உருவமும் தேவாரப் பதிகங்க ளில் பாடப்பெறுகிறது.

அரிதரு கண்ணியாளை ஒருபாகமா
அருள் காரணத்தில் வருவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றும், தேவி அருள்பாலிப்பவள். அவளைப் பாகமாகக் கொண்டுள்ளார் என்று பாடும் அப்பர் "சிவனெனும் ஓசையல்ல"

என்னும் 4-ம் திருமுறைப் பதிகம் முழுவதும் அர்த்தநாரி உருவைத்தான் போற்றுகிறார்.

'ஹரிஹரன்' உருவத்தில் வலப்புறம் சிவனாகவும், இடப்புறம் திருமாலாகவும் தோன்றுகிறார். அதேபோல் 'அர்த்த நாரீ' உருவில் வலப்புறம் சிவனாகவும், இடப்புறம் தேவியாகவும் காட்சி தருகிறார். இருவுருவங்களிலும் வலதுபுறம் சிவன்தான். அதில் மாற்றமில்லை. இடதுபுறம் மட்டும் ஒரு தோற்றத்தில் திருமாலாகவும், மற்றொன்றில் தேவியாகவும் காட்சியளிக்கிறார். இதிலிருந்து தேவியும், திருமாலும் ஒன்றே என்ற கருத்தும் எழுகிறதல்லவா? அதைத்தான் அப்பர் பெருமான்

அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே

என்று பாடுகிறார். திருமால்பாகம் தேவியாகவும் திகழ்கிறது என்பது பொருள்.

ஆனால் முதலில் குறித்த அப்பர் பாடல் வலதுபுறம் அக்னியாகவும், இடப்புறம் திருமாலாகவும் திகழ்கிறார் என்றல்லவா"

தீக்கூர்ந்த திருமேனி ஒருபால் மன்னி
ஒருபாலும் அரிஉருவம் திகழ்ந்த செல்வர்

கூறுகிறது.

இவ்வமயம் யஜுர் வேதத்தில் உள்ள ஒரு பகுதியை உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாபிஷேகம் முதலிய பல வழிபாடுகளில் அக்னியில் ஹோமம் செய்யும்போது "வஸோர்தாரா" என்று ஒரு ஹோமம் செய்வார்கள் ''இந்த வஸோர்தாரா என்றால் என்ன? எந்த தெய்வத்தை நோக்கி இந்த ஹோமம் செய்யப்படுகிறது என்று ஆய்வாளர் கேட்கின்றனர்'' (என்று வேதமே கூறுகிறது). அதற்கு வேதமே பதில் சொல்வதாக ஒருபகுதி உள்ளது. வேதம் கீழ்க்கண்டவாறு பதில் கூறுகிறது. ''இந்த வஸோர்தாரை என்பது ''அக்னா விஷ்ணு'' என்ற இரட்டை தெய்வத்தைக் குறித்து கொடுக் கப்படுகிறது. இங்கு அக்னியும், விஷ்ணுவும் ஒருருவமா கத் திகழ்வதால் ''அக்னாவிஷ்ணு'' என்று அழைக்கப்படு கின்றனர். அக்னி என்பவரும் விஷ்ணு என்பவரும் வஸுதான். இருவருக்கும்தான் இந்த தாரை. அக்னா விஷ்ணுவைக் குறித்துதான் இந்த வழிபாடு'' என்று கூறும் வேதம் மேலும் தொடர்கிறது. ''ருத்ரன்தான் இந்த அக்னி என்பவர். அவருக்கு இவ்விரண்டு உருவங்கள் உள்ளன. கடுமையான தோற்றம் ஒன்று; அருள்மயமான தோற்றம் மற்றது. எது கடுமையான உருவமோ (கோரமான) அதைக் குறித்து சதருத்ரீயம் (ஸ்ரீருத்ரம்) என்ற மந்திரத் தால் போற்றினால் அது சாந்தமடைகிறது. எந்த உருவம் அருள்வடிவானதோ அதைக் குறித்து வஸோர்தாரை என்ற மந்திரத்தால் போற்றுகிறோம். அதனால் அது மகிழ்வுறுகி றது. இதுதான் வஸோர்தாரையின் நிலையான தத்துவம்'' என்று வேதம் கூறுகிறது.

இங்கு வேதத்தின் பொருள் மட்டுமல்ல. அந்த சொற்களைக்கூறும் ஒலியும் முக்கியமானவை. அதைக் கீழே காண்போம். ஏதோ வேதம்தானே? நமக்கு புரி யுமோ புரியாதே என்று விட்டு விடாதீர்கள். மிகவும் எளிமையான பகுதி. எல்லோருக்கும் புரியக்கூடிய வகை யில்தான் உள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ருத்ரோ வா ஏஷ யத் அக்னி:

இந்த அக்னி என்பது ருத்ரன்தான்.

தஸ்ய ஏதே தனுவௌ

அவனுக்கு இவ்விரு உருவங்கள்

கோரா அன்யா சிவா அன்யா

ஒன்று கோரமானது. கடுமையானது, பயங்கரமானது (அக்னி அல்லவா). மற்றது அருள்மயமானது. சிவமயமானது.

யத் சதருத்ரீயம் ஜுஹோதி யெவ அஸ்ய
கோரா தனூர் தாம் தேன ஸமயதி

எந்த கோரமான உருவை நோக்கி ருத்ரத்தினால் போற்றுகிறோமே அதனால் அவ்வுருவம் சாந்தமடைகிறது.

யத் வஸோர்தாராம் ஜுஹோதி யைவ அஸ்ய
சிவாதனூ: தாம் தேன பிரீணாதி

எந்த உருவம் அருள்மயமானதோ அதைக்குறித்து வஸோர்தாரையால் போற்றுகிறோம். அதனால் அவ்வுரு மகிழ்வடைகிறது என்று வேதம் கூறுகிறது.

இதிலிருந்து பல அரும்செய்திகள் நமக்கு கிடைக்கின்றன. வேதகாலத்தில் அக்னியும் விஷ்ணுவும் இரண்டு உருவங்களாய் ஒன்றாய் இணைந்த தெய்வமாக வணங்கப்பட்டன. அந்த உருவத்துக்கு அக்னாவிஷ்ணு என்று பெயர். இதில் அக்னி என்பது ருத்திரன்தான். அவனைக் குறித்து ருத்ரம் என்ற வேத மந்திரத்தால் போற்றப்பட்டது. அக்னியின் உருவம் சம்ஹாரம் செய்யும் கோரமான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உருவம். அது வலப்பகுதி. அதை கோராதனு (தனு என்றால் உடல் என்று பொருள்) என்றனர். மற்றது விஷ்ணுவின் உருவம். அப்பகுதியை சிவாதனூ (சிவமான உடல் - அருள்மயமான உடல்) என்றனர். அதைக் குறித்து 'வஸோர்தாரா' என்ற மந்திரத்தால் வணங்கப்பட்டது அறிகிறோம்.

ஸ்ரீருத்ரம் என்னும் வேத மந்திரத்தை அறியாத சைவர் இருக்க முடியாது. அதில்தான் சிவன் என்ற சொல் வருகிறது. ''நமச்சிவாய ச சிவதராய ச'' என்று வருகிறது. ருத்ரம் சொல்லித்தான் சிவபெருமானுக்கு இன்றும் அபிஷேகம் செய்கிறோம். ருத்திரபசுபதி நாயனார் என்று சிவமுக்தியடைந்த நாயனார் ருத்ரம் சொல்லித்தான் முக்தியடைந்தார் என்பதும் நாம் அறிவோம். சிவபெருமானுக்கு மிகவும் பிடித்தமானது ருத்ரம். இதைத்தான் சதருத்ரீயம் என்று கூறுகிறோம். வேதம் இதைத்தான் கூறுகிறது. வேதத்தில் கூறப்படும் 'அக்னாவிஷ்ணு' என்ற உருவம்தான் ஹரிஹரன் என்று அழைக்கப்படுவது என்று புலனாகிறது. இப்பொழுது மீண்டும் அப்பர் பெருமானின் முதலில் குறித்த பாடலைப் பாருங்கள். சிவபெருமானை பரமனே நீ ஒரு பாதி அக்னியாகவும், மறுபாதி விஷ்ணுவின் உருவாகவும் விளங்குகிறாய் என்கிறார்.

> தீக்கூரும் திருமேனி ஒருபால் மன்னி
> மறுபால் அரியுருவம் திகழ்ந்த செல்வர்

என்பதன் பொருள் இப்பொழுது தெளிவாகிறது. வேதத்தில் எந்த உருவை அக்னாவிஷ்ணு என்று போற்றினார்களோ அந்த அரியரன் உருவைத்தான் அப்பரின் பாடல் குறிக்கிறது என்பதில் ஐயமிருக்க முடியாது. அப்பர் பெருமான் அநேகமாக எல்லாப் பதிகங்களிலும் சிவபெ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ருமானை வேதத்தின் உருவானவர் என்று பாடுவது நாம் அறிந்ததே. விஷ்ணு என்ற பகுதியை வேதம் சிவா என்று கூறுவதைக் காணுங்கள். சிவா என்றால் சிவபெருமானின் தேவீ - உமை என்றும் பொருள். இங்கு சிவா என்ற சொல்லால் இரண்டு பொருள்கள் விளங்குகின்றன. ஒன்று அருள்மயமானது என்பது; மற்றது உமை என்பது. ஆதலின் இவ்வடிவம் அர்த்தநாரி உருவையும் குறிக்கும். ஆதலின் ''அரியலால் தேவியில்லை'' என்ற சொல்லுக்கும் முழுத்தெளிவு பெறுகிறோம். ஆதலின் இன்று அர்த்தநாரி என்றும் அரியரன் என்றும் எதைப் போற்றுகிறோமோ, அதை வேதகாலத்தில் அக்னாவிஷ்ணு என்னும் இரட்டைத் தெய்வமாக வணங்கினர். அதுவே ''தீக்கூர்ந்த திருமேனி ஒருபால் மன்னி மறுபால் அரியுருவம் திகழ்ந்த செல்வர்'' என்னும் அப்பர் பிரானின் வாக்கு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிவரிய நிறத்தார்

அப்பர் பெருமான் தமது பதிகத்தில் சிவபெருமானை பல்வேறு நிறங்களையுடையவர் என்றும் அறிவரிய நிறத்தர் என்றும் கூறுகிறார்.

நீலவுரு வயிரநிரை பச்சை செம்பொன்
நெடும் பளிங்கு என்ற அறிவரிய நிறத்தர் போலும்
கோலமணி கொழித்தெழியும் பொன்னி நன்னீர்
குடந்தைக் கீழ்கோட்டத் தெம் கூத்தனாரே

என்று குடந்தைக் கீழ்கோட்டத்து பெருமானைப் பாடுகின்றார். இப்பாடலில் ஐந்து வண்ணங்கள் குறிக்கப்பட்டுள்ளன. நீலம், வயிரம், பச்சை, பொன், பளிங்கு என்ற நிறங்கள் அவை. இப்பாடலுக்கு தருமையாதீனப்பதிப்பில் உரை கீழ்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது. "நவமணிகளும் பொன்னும் பளிங்கு ஆகிய இவற்றுள் இன்ன தன் நிறம் போலும் நிறத்தினர் என உவமையாகும் உணர ஒண்ணாததொரு நிறமுடையவர் என்றபடி" தவள ஈசான வதனம், பீத தத்புருஷானனம் கிருஷ்ண அகோர முகோபேதம். ரக்தாப உத்தரவக்த்ரகம் சுஸ்வேத பஸ்சிமாஸ்யைக சத்யோ ஜாதம் சமூர்த்திகம் என அகோரசம்புபத்ததி கூறுகிறது.

சிவபெருமானை நாம் பூஜிக்கிறோம். அருவுருவாகிய லிங்கவடிவில் வணங்குகிறோம். இவ்வுருவம் சதா

. Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவ மூர்த்தியின் உருவமே என ஆகமங்கள் கூறுகின்றன. லிங்க உருவை வணங்குகிறோம் எனில் சதாசிவமூர்த்தியை வணங்குகிறோம் என்றுதான் பொருள் ''சதாசிவம்'' என்ற பரம்பொருளே சிவபெருமான் என்பதை அப்பர் பெருமான் தமது பல பாடல்களில் குறித்துள்ளார்.

தத்பரமாய் சதாசிவமாய் தானும் யானும்
ஆகிநின்ற தன்மையானை

தற்பரமாய் சதாசிவமாய் நிற்கின்றான் கான்
சதாசிவன் காண். தன்னொப்பரில்லான் காண்
சங்கரனே நின்பாதம் போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி

சதாசிவன்காண் சலந்தரனை பிளந்தான் கண்டாய்
சதாசிவன் கண்டாய் சங்கரன்தான் கண்டாய்''

எனப்பல பாடல்களில் சதாசிவமூர்த்தியை அப்பர் பாடியுள்ளார். சதாசிவ சுவரூபத்துக்கு உருவகம் கொடுக்கும் போது ஐந்து உருவங்கள் அல்லது ஐந்து முகங்கள் கூறுவர். தத்புருஷன், அகோரன், சத்யோஜாதன், வாமதேவன், ஈசானன் என ஐந்து பெயர்களும் கூறுவர். ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒருவண்ணம் உண்டு. அவ்வண்ணம் குறிக்குமிடத்து படிகம், பொன்மஞ்சள், கருப்பு (நீலம்), சிவப்பு, வெண்மை எனக் கூறுவர்

தத்புருஷன் - பொன்மஞ்சள்
அகோரன் - கருப்பு (நீலம்)
சத்யோஜாதன் - வெள்ளை
வாமதேவன் - சிவப்பு
ஈசானன் - ஸ்படிகம் (கண்ணாடி போன்றது) (பளிங்கு)
என நூல்கள் கூறுகின்றன. மேலே குறிப்பிட்ட அப்பர் பெருமானின் பாடலில் நீலம், வயிரம், பச்சை, செம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொன், பளிங்கு என ஐந்து நிறங்கள் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இங்கு நீலம் என்பது கருநீல நிறம் கொண்ட அகோரமூர்த்தியைக் குறிக்கிறது. வயிரம் என்பது வெள்ளை நிறமுடைய சத்யோஜாத மூர்த்தியையும், செம்பொன் என்று பொன்மஞ்சள் நிறமுடைய தத்புருஷ மூர்த்தியையும், பளிங்கு என்பது ஸ்படிக நிறமான ஈசானமூர்த்தியையும் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. பச்சை என்ற நிறம் எஞ்சிய வாமதேவ மூர்த்தியை குறித்தல் வேண்டும்! ஆனால் ஆகமங்கள் வாமதேவருக்கு சிவப்பு நிறம் என்று குறிக்கின்றன. இதை மேலும் சற்று சிந்திப்போம்.

சிவபெருமானின் இடபாகத்து விளங்கும் மூர்த்தி வாமதேவர். அதாவது வடதிசை நோக்கியமுகம். சிவபெருமானின் இடபாகத்தில் அமர்ந்தவை இரண்டு மூர்த்தங்கள். ஒன்று திருமால் ஹரிஹரமூர்த்தியாக சங்கர நாராயணமூர்த்தியாகத் திகழ்வது. மற்றது உமையன்னை மாதொருபாகர் வடிவு. அர்த்தநாரிச்சுவரர். திருமாலாயினும் உமையாயினும் அவர்களது நிறம் பச்சை என்பது யாவரும் அறிந்ததே. வாமதேவமுகம் திருமாலையும், உமையையும் குறிக்கும் என ஆகம நூல்கள் குறிக்கின்றன. ஆதலின் அப்பர் பாடலில் பச்சை என குறிக்கப்பட்டுள்ளது. வாமதேவரை குறிக்கிறது எனக் கொண்டால் தவறாகாது.

இதை அப்பர் பெருமான் பல இடங்களில் குறிப்பதையும் காணலாம்.

> வளரொளியை மரகதத்தின் உருவினானை"
> செம்பொன்னே மரகதமே மணியே போற்றி

இங்கு செம்பொன் - மரகதம் என்பவை அர்த்தநாரி உருவைக் குறிக்கும். செம்பொன் தீ உருவான ருத்ரனின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வண்ணம், மரகதம் என்பது பச்சை வண்ணமான உமை யின் உரு. இக்கருத்தையே மற்றொரு இடத்திலும் அப்பர் கூறுகிறார்.

பச்சை நிறமுடையர், பாலர், சாலப்
பழையர் பிழைஎலாம் நீக்கியாள்வர்,
இடைமருது மேவி இடங்கொண்டாரே

எனவே முதலில் குறித்த அப்பர் பாடலில் பச்சை என்ற வண்ணம் வாமதேவரைக் குறிக்கிறது எனலாம். வாமதே வர் என்ற சொல்வழக்கு அப்பர் காலத்திலேயே இருந்தி ருக்கிறது.

வாமதேவன் வளநகர் வைகலும்
காமம் ஒன்றிலராய் கைவிளக்கொடு
தாமம் தூபமும் தண்ணறுஞ் சாந்தமும்
ஏமமும் புனைவார் எதிர் சொல்லலே

என்பதால் இது தெளிவு.

சதாசிவமூர்த்தியை லிங்க உருவில் வடிக்கும் போது நான்கு திக்குகளிலும் நான்கு முகமுடையதாய் வடிப்பர். இதற்கு சதுர்முகலிங்கம் என்றும் பெயர். முகங்கள் நான்கே இருந்த போதிலும், தலைப்பகுதி லிங்கவடிவில் அருவுருவாய் திகழும். இப்பகுதிதான் தலையாய ஈசான மூர்த்தி. ஈசானன் என்றால் ஞானசுவரூபன் என்று பொருள். எல்லா வித்தைகளுக்கும் தலைவன் ஈசானன் என வேதம் "ஈசான: சர்வ வித்யாணாம்" எனக் கூறும். இந்த கருத்துகள் எல்லாம் அப்பர் காலத்தே நிலவி இருந்தன என்பதற்கு சான்று உண்டு.

நம்பனே நான்முகத்தாய்
நாதனே ஞானமூர்த்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று அப்பர் பாடுகிறார். இங்கு நான்முகத்தாய் என்பது சதுர்முகலிங்க உருவையும் ஞானமூர்த்தி என்பது ஈசான மூர்த்தியையும் குறிக்கும். ஆதலின் இவ்வரியில் சதாசிவ மூர்த்தியையே அப்பர் ''நான் முகத்தாய் நாதனே ஞான மூர்த்தி'' என்பதால் குறிக்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பலாசஞ் சுள்ளல்

அப்பர் பெருமான் திருவீரட்டானப் பதிகத்தில் சிவபெருமனை ''பலாசங் கொம்பின் சுள்ளலைச் சுடலை வெண்ணீறணிந்தவர்'' என்று பாடுகிறார் (4-ம் திருமறை). சிவபெருமான் பலாச மரத்தின் ஒரு சிறுகொம்பின் சுள்ளியிலிருந்து சுடலையை (எரிந்த பகுதியை) வெண்ணீறாக அணிந்தவர் என்று இங்கு கூறுகிறார். திருநீற்றின் பெருமையைத் தேவாரப் பதிகங்கள் பலவகையாகப் பாடும்.

அப்பர், சம்பந்தர் ஆகிய பெரியோர் வாழ்ந்த காலத்துக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே திருநீற்றை சைவப் பெருமக்கள் பேணி அணிந்து வந்தனர் என அறிகிறோம். திருநீற்றைப் பற்றிய பல கருத்துக்களைத் தேவாரப் பதிகங்களில் காண்கிறோம்.

விடிந்ததுமே சைவர்கள் விபூதியை நெற்றியில் பூசிக் கொண்டு சிவபெருமானை மனதார, வாயார வாழ்த்தி வணங்குவர் என்று அப்பர் பெருமான்,

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யில் பூசி
வெளுத்தமைந்த நீரோடு கோவணமும் சுற்றி
செடியுடை வல்வினை நோய் தீர்ப்பாய் என்றும்
செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே என்றும்

பாடுவார் எனக் கன்றாப்பூர் பதிகத்தில் குறிப்பிடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருநீறு அணிந்தவர்களைக் கண்டால் சிவனடியார் வணங்குவர் என அப்பர்,''

எவரேனும் தாமாக விலாடத்திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்குவர்

என்று பாடுகிறார். உயர்ந்த அறிவு அல்லது வித்தை என்பது திருநீறணிவதுதான்.

விச்சையாவதும் வேட்கையாவதும்
நிச்சல் நீறணிவார்களை நினைப்பதே

தெய்வநிலையை எவ்வாறு எளிமையாக அடையலாம் என்று அறியாதவர்தாம் பிறவழிகளைப் பின்பற்றுவர். திருநீறணிந்து 'சிவாய நம' எனச் சொன்னாலே போதும், புண்ணியம் பெறலாம். இதறியாது ஏதேதோ செய்வது விந்தை:-

வெந்த நீறு விளங்க அணிந்திலர்,

திலகமண்டலம் தீட்டித் திரிந்திலர்

என அப்பர்பிரான் பாடுகிறார். திருநீறு அணிவதால் நோய்கள் எல்லாம் அகலும் என்று மக்கள் திடமாக அன்று நம்பினர்.

அருநோய்கள் கெட வெண்ணீறு அணியாராகில்

என்று அப்பர் பாடுவதிலிருந்து இது தெளிவாகும். பாண்டியன் உடல் வெப்ப நோயுற்று எல்லா மருந்துகளும், சமண தந்திர உத்திகளும் பயனற்றுப்போக, ஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றுப் பதிகம் பாடி நீறு தடவ, அவனது வெப்ப நோயகன்றது என்பது அனைவரும் அறிந்ததே. அங்கும் நோய் நீங்க நீறு உதவியது என்பதைக் காண்கிறோம். அப் பதிகத்தில், மந்திரமாவ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தும் தந்திரமாவதும் திருநீறே; அதுவே வேதத்தில் உள்ளது. புன்மையைத் தவிர்ப்பது, பக்தியும் முக்தியும் தருவது; பூச இனியதும் புண்ணியமாவதும் அதுவே; திருநீறு என்பது சுத்தம் தருவது என்கிறார் ஞானசம்பந்தர்.

சைவப்பெருமக்கள் மூன்று வகையான ஸ்நானம் செய்வதைக் குறிப்பர். நீரில் குளிப்பது (ஜலஸ்நானம்) ஒன்று. மற்றது உடலில் நீறு பூசிக் கொள்வது. இதை 'பஸ்ம ஸ்நானம்' என்பர். மூன்றாவது மந்திரச் சொற்க ளாலே தம்மை தூய்மையாக்கிக் கொள்வது (மந்திர ஸ்நானம்) இம் மூன்று வகையாகக் குளிப்பதுமே தம்மை சுத்தம் செய்து கொள்ளவே. அதையே சம்பந்தப்பெரு மான், 'சுத்தமாவது நீறு' என்கிறார். விரதம் மேற்கண்ட பெரியோர்களுக்கு உயர்ந்த கலன் வெண்ணீறே என, ''வெந்த நீறு அணிகலம் விரதிகட்கு எல்லாம்'' என்பார் அப்பர். 'நமசிவாய' என்று சொல்லிக் கொண்டே திருநீறு அணிதல் வேண்டும் என்ற கருத்து கி.பி.600-க்கும் முன்னரே தமிழகத்தில் நிலவியது என்பதற்கு எடுத்துக் காட்டாக அப்பர்பிரான்.

மந்திரம் நமசிவாயவாக நீறணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல்
விறகிட்டன்றே

என்று பாடுகிறார். எவ்வளவு அசைக்க முடியாத நம் பிக்கை! வெந்தழலில் இட்ட விறகுபோல் வினையும் நோயும் வெந்து அறும் என்கிறார். அதனால்தான் அன்றி ருந்து இன்றுவரை விபூதி பிரசாதத்தை வாங்கி நெற்றியில் இட்டுக் கொள்கிறோம். சிவனருளை அடைந்தே தீரு வேன் என்று கடும் விரதம் மேற்கொள்வோர் உண்டு. அவர்கள் விபூதியைப் பூசிக் கொண்டு, விபூதியைத் தரையிலும் விசிறி அதன்மீது படுத்துப் புரண்டு 'பரமனே நின் தாள்களே சரண்' என்று பரவுவார்கள். அவர்களுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அரன் அருள் கிட்டுமென,

சாம்பலைப் பூசி தரையில் புரண்டு
நின்தாள் சரண் என்று
எம்பலிப்பார்கட்கு இரங்கு கண்டாய்

என்று அப்பர் பதிகத்தில் காண்கிறோம். இதை பாசுபத விரதம் என்று கூறுவார்கள்.

இவ்வளவு புண்ணிய வெண்ணீற்றை சிவபெருமானே தமது மேனியில் எப்பொழுதும் பூசிக் கொண்டு பசுபதியாகத் திகழ்கிறார் "பவளம் போல் மேனியல் பால் வெண்ணீறும்" என்கிறது தேவாரம் "மெய்யெல்லாம் வெண்ணீறு சன்னித்த மேனி" (4-ம் திருமுறை.) இதை தன் உடம்பிலே மிகவும் அழகாக எழுதிக் கொள்வாராம் சிவபெருமான்! "வெள்ளைநீறு உடம்பு அழகெழுது வார்" என்கிறார் அப்பர். உடலில் பூசுவதை சாந்து என்றும், சாந்தம் என்றும் கூறுவோம். வெண்ணீறு இருக்கிறதே அதுவே உயர்ந்த சாந்தம் என்ற கருத்து இருந்தது. 'சுண்ண வெண் சாந்து பூசி' என்பது காண்க. நாம் எந்தெந்த பொருள்களையோ விலையுயர்ந்த பொருள் என்கிறோம். சிவபெருமானோ திருநீற்றுக்குச் சமமான விலையுயர்ந்த பொருள் யாதுமில்லை என அதை பூசுகிறாராம்.

விலையிலி சாந்தம் என்று வெறிநீறு பூசி
விளையாடும் வேட விகிர்தர்

என்று அப்பர் பாடுகிறார். இந்த விபூதியை எப்பொழுதும் ஒரு பையில் சிவபெருமான் வைத்திருப்பார். 'பொடி நீறு மேனியர் பூதிப்பையர்' - 'பொக்கணத்த வெண்ணீற்றான் காண்' என்பது இதைச் சுட்டுகிறது. வெள்ளை வெளேரென்று திகழும் வெண்ணீற்றை சிவபெருமான் தமது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நெற்றியில் சிறப்பாகத் தரித்திருப்பாராம்.... "சாந்தாய தவள வெண்ணீறு" - 'சுடரைப் போல் ஒளிர் சுண்ண வெண்ணீற்றினை சுடரும் சென்னியில் வைத்த அமுது" என்பார் அப்பர். இவ்வாறு வெண்ணீற்றை நெற்றியில் பூசி அதன் மேல் இளம் சந்திரபிரபைபோல திலகம் தரித்திருப்பாராம்.

தேய்பொடி வெள்ளைபூசி அதன் மேலே
திங்கள் திலகம் பதித்த நுதலர்

என்று அப்பர் பாடுகிறார். அக்காலத்தில் தமிழ்நாட்டில் நெற்றியில் விபூதியை மூன்று கீற்றுகளாகப் பூசி, அதன் மேல் சந்திரன் போல் சந்தனத்தாலோ அல்லது குங்குமத் தாலோ திலகம் இட்டுக் கொள்ளும் பழக்கம் இருந்தது என்று இதனால் அறியலாம். இப் பழக்கம் இன்றும் இந்தியாவின் வடபால் இருந்து வருவது காணலாம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த வெண்ணீறு எதனால் செய்யப்பட்டது என்பது பற்றிய குறிப்புகளும் தேவாரத் துள் கிடைக்கின்றன... முதலில் குறிப்பிட்ட பலாசஞ்சுள் ளியை ஓமங்களில் போடும்போது கிடைக்கும் சாம்பலை விபூதியாக அணிந்தனர் என அறிகிறோம். சுடலை என்றால் மயானம் என்றும் நாமறிவோம். ஆதலின் சுடலைப் பொடி பூசி என்றால், மயானத்து சாம்பல் என்று கருதுவார். ('சுடலை ஆடி' என்றால் மயானத்து ஆடு வோன் என்று பொருள் உண்டல்லவா?) ஆனால் 'சுட லை' என்றால் மயானம் என்ற ஒரு பொருள் மட்டு மல்ல.... 'சுடல்' என்றால் தமிழ் லெக்ஸிகன், 'எரிந்துப் பட்ட குச்சியின் நுனி' என்று ஒரு பொருள் குறிக்கிறது. 'சுடர்' எனினும், 'சுடல்' எனினும் ஒன்றே எனக் கொள்ளலாம். சுடலை எனில், சுடரில் இருந்து தோன்றி யது எனப் பொருள்படுகிறது. அதைத்தான் அப்பர் பெருமானின் வாக்கில், 'பலாசங் கொம்பின் சுள்ளலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுடலை வெண்ணீறணிந்தவர்' என்று வந்துள்ளதைக் காண்கிறோம். இன்றும் யாகங்களுக்குப் பலாசங்குச்சியை மிகச் சிறந்ததாகக் கருதுகின்றனர்.

சுடலையென்பது மயானத்துச் சாம்பலையும் குறிக்கும். சிவபெருமான் மயானத்துச் சாம்பலையும் உடலில் பூசுவர் என்று திருப்பதிகங்களில் பல இடங்களில் காண்கிறோம்.....

மாண்டார் சுடலைப் பொடிபூசி மயானத்து
ஈண்டா நடமாடிய ஏந்தல்

என்று பாடுகிறார் சம்பந்தர்.

வெந்தார் வெண்பொடி பூசி

என்பார் அப்பர்.

சவந்தாங்கு மயானத்துச் சாம்பல் என்புதலையோடு மயிர்கயிறு தரித்தான் தன்னை பவந்தாங்கு பாசுபத வேடத்தானை

என்று மற்றொரு இடத்தில் அப்பர் பாடுகிறார். இதிலிருந்து இதற்குப் பாசுபத வேடம் என்று பெயர் அறிகிறோம்.

இங்கு ஒன்றை நினைவு கொள்ள வேண்டும். இறந்தார் சாம்பலை பூசுவது என்றால் ஏதோ அருவருக்கத் தக்கதாக எண்ணலாம். இந்து சமயத்தில் இறத்தல் அருவருக்கத் தக்க நிகழ்ச்சியல்ல... ஓர் உருவிட்டு மறுபிறவி எடுக்க, அன்றி உய்ய ஏற்படும் ஒரு நிலை. ஆதலின் உடலைத் தீக்கிடுகிறோம். தீக்கிடும் போது அதை ஒரு யக்ஞமாகவேதான் ஆகுதிகள் செய்து இடுகிறோம். அதுவும் ஒரு வேள்வியே. அவ் வேள்வியிலிருந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெறும் சாம்பலும் வேள்விச் சாம்பலே என்றும், அதை சிவபிரான் தரித்து திகழ்ந்தார் என்ற கருத்து நிலவியது என்றும் காண்கிறோம்.

மூன்றாவது வகை விபூதி பசுவின் சாணத்திலிருந்து தயாரிக்கப்படுவது. பசுவின் சாணத்தைத் தூய்மையாக மணல் தூசி இன்றி எடுத்து, 'நமசிவாய' என்ற மந்திரத்தை சொல்லி உருண்டைகளாகப் பிடித்து, சிவாக்னியினால் ஓமம் செய்து, அதில் கிடைத்த விபூதியைத் தரித்தல் என்பதாம். இவ்வாறு கிடைக்கும் விபூதியைத்தான் பெரும்பாலோர் இன்றும் அணிகின்றனர். இவ்வாறு அணிந்த பெரியோர்களைத்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்" என்று பாடுகிறார். சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் முழுநீறு பூசிய முனிவர் என்ற அத்தியாயத்தில் திருநீற்றை விரிவாகக் கூறுகிறார். பசும் சாணத்திலிருந்தும் வீபூதி செய்யும் முறை மூன்று வகைப்படும் கல்பம், அனுகல்பம், உபகல்பம் என்று மூவகை என்று கூறுகிறார். சிவபெருமானின் ஆலயங்களில் அபிஷேகத்துக்குப் 'பஞ்சகவ்யம்' அளிக்கும் பசுவின் சாணத்திலிருந்து தயார் செய்வது ஒன்று. காட்டுப்பகுதிகளில் இயற்கையாகப் பசுக்களிட்ட சாணங்கள் உலர்ந்த பின் எடுத்து வந்து, கோமயம் ஊற்றி உருண்டை பிடித்து தயாரிப்பது இரண்டாவது வகை எரிந்த காடுகள், கோயில் அல்லது பசுக்கள் இறையாகி எரித்த நெருப்பு போன்றவற்றை தவிர்த்து, பிற தீயிலிருந்து கிட்டும் சாம்பல்கள் என்பவை மூன்றாம் வகை என சேக்கிழார் கூறுகிறார்.

'அதர்வசிரோபநிஷத்' என்றும், 'பிருஹத் ஜாபால உபநிஷத்' என்றும் அழைக்கப்பெறும் புகழ் வாய்ந்த இரண்டு உபநிஷத்துக்களில் விபூதியின் பெருமை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.... உடலிலே விபூதி அணிந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொள்வது பிரும்மத்தை அறியும் வழி. பசுக்களின் பாசத்தை அது போக்கடிக்கும் என்றும்; அதற்குப் 'பாசு பத விரதம்' என்று பெயர் என்றும் அதர்வசிரோபநிஷத் கூறுகிறது:

யஸ்மாத் வ்ரதம் இதம் பாசுபதம்
யத் பஸ்மனா அங்காணி சம்ஸ்பிருஸேத்
தஸ்மாத் பிரும்ம ததேதத் பாசுபதம்
பசு பாச விமோசனாய.

பிருஹத்ஜாபால உபநிஷத்தில் சிவன் கோயில்களில் அடுக்களைச் சாம்பலை விபூதியாக அணியலாம் என்ற குறிப்பு உள்ளது. ஆலயத்துத் திருநீறு அனைத்தையும் அளிக்கவல்லது என்பது கருத்து. 'திருவாலவாயான் திருநீறே' என்ற சொல் இதனையே பிரதிபலிக்கும்! உடலில் 32 இடங்களில் அல்லது 16, 8, அல்லது 5 இடங்களில் நீறு தரித்துக் கொள்ள வேண்டும் என்று இந்த உபநிஷத்து கூறுகிறது. இந் நூலில் விபூதி தரித்துக் கொள்ளும்போது 'நமசிவாய' என்று சொல்லிக் கொண்டே தரித்துக் கொள்ள வேண்டும் ("ஸ்மரன் நமசிவாயேதி லலாடே தத் திரிபுண்டரகம்") எனக் கூறுகி றது. "மந்திரம் நமசிவாயவாக நீறணியப் பெற்றால்" என்னும் அப்பர் வாக்கும் காண்க.

இந்த உபநிஷத் மற்றொரு கருத்தையும் கூறுகிறது.... சாம்பலைப் படுக்கையாக்கி, திருநீறு பூசிக் கொண்டு, சிவபெருமானை நினைத்து பரவுவார் சிவசாயுச்யம் பெறு வர். அவருக்கு மீள்பிறப்பே கிடையாது என்று கூறுகிறது.

பஸ்மச்சன்ன: ஸம்ஸாராத் முச்யதே
பஸ்ம ஸய்யா ஸயன: தத் சப்த
கோசர: சிவசாயுஜ்யம் அவாப்னோதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நஸ புனராவர்த்ததே நஸ புனரா வர்த்ததே
ருத்ராத்யாயீ ஸன் அம்ருதத்வம் கச்சதே.

''சாம்பலைப் பூசி தரையில் புரண்டு நின்தாள் சரண் என்று ஏம்பலிப்பார்களுக்கு இரங்கு கண்டாய்'' என்பதையும் காண்க.

''பலாசங் கொம்பின் சுள்ளலைச் சுடலை
வெண்ணீறணிந்தவர்''

என்ற அப்பர் பிரானின் வாக்கொன்றை மட்டும் எடுத்தால் விரிவான ஒரு நூலே எழுதலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதிரை நாளால் அதுவண்ணம்

"அப்பர் பெருமானின் திருவாரூர் பதிகத்தில் கீழ்வரும் பாடல் காணப்படுகிறது.

அருமணித்தடம்பூண் முலை அரம்பையரோடு
அருளிப்பாடியர்
உரிமையில் தொழுவார் ருத்திரபல்கணத்தார்
விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர்
காபாலிகர்
தெருவினிற் பொலியும் திருவாரூரம்மனே

இப்பாடலில் திருவாரூர் தெருவில் வீதிவிடங்கப் பெருமான் உலாவரும்போது, அணிகலன்களை பூண்டுள்ள நாட்டியப் பெண்கள் வருகின்றனர். உரிமையில் தொழுவார்களாம் ஆதிசைவாசார்யர்கள் வருகின்றனர். கோயிலில் பணிபுரியும் பல்கணத்தார் வருகின்றனர். வேதம் ஓதிவரும் அந்தணர் வருகின்றனர். சைவர்களில் நான்கு பிரிவினர் சைவர், மகாவிரதிகள், பாசுபதர், காபாலிகர் - ஆகியோர் வருகின்றனர்; என்று அப்பர் கூறுகிறார். அப்பர் பெருமான் காலத்துக்கும் முன்பிருந்து சைவ சமயத்தில் இந்த நான்கு உட்பிரிவுகள் இருந்தன என்பது இதனால் தெளிவு. சைவ சமயத்தில் உள்ள உட்பிரிவுகளை அகச் சமயம் என்று கூறுவது மரபு. அகச்சமயம் ஆறு என பிற்காலத்தில் கூறும் மரபு உண்டு. இவை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாசுபதம், மகாவிரதம், வாமம், பைரவம், காபாலிகம், ஐக்யவாதம் என்னும் ஆறு சமயங்கள் எனக் குறிப்பர். ஆனால் அப்பர் பெருமான் நான்கு சைவப் பிரிவுகளை மட்டும் குறிக்கிறார். இது சிறப்புடையது.

தமிழ் நாட்டில் கோயில்களில் ஆகமுறைப்படி வழிபாடு நடத்தப்படுகிறது. 'அருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன்' என்றும் ''ஆகமச் செல்வனார்'' என்றும் தேவாரப்பதிகங்கள் பரமனைப்பாடும். மணிவாசகப் பெருந்தகை ''ஆகமமாகி நின்று அன்னிப்பான் தாள்வாழ்க'' என்று பாடுகிறார். இதன் அடிப்படையில் ஆகமங்களையும் பதிகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம் அல்லவா! அஜிதாகமம் என்ற நூலில் சிவாலயங்களில் ''மகோத்ஸவங்கள்'' நடத்தும் விதிகள் கூறுமிடத்து, பெருமானை உலாவாக தெருவினில் எடுத்து வரும்போது கீழ்கண்டவர்கள் வர வேண்டும் என்று கூறுகிறது.

> காயகான் நர்த்தகான் சைவ ததா வந்திஜனான் அபி
> மாலாபரண ஹ்ருத்யாங்க சிவாயதன யோஷித:
> சைவான் சதுர்விதான் சாபி தேசிகாதீன் ததைவச
> பிராம்மணான் ஸ்வகர்மஸ்தான் க்ஷத்ரியாதீன் ததைவச
> பக்தான் அன்யான் பஹூன் சைவ ஸேவார்த்தம் தத்ர
> கல்ப்யேத்

இதில் பாடுவோரும் ஆடுவோரும் வரவேண்டும். மாலைகளையும் அணிகளையும் பூண்டு, திகழும், எழிலார்க்த சிவாலய பெண்டுகள் (ஆடல்மகளிர்) வரவேண்டும். நான்கு பிரிவுகளாக உள்ள சைவர் வரவேண்டும் வழிபடுவோர் வரவேண்டும். வேதம் ஓதும் பிராமணர் வரவேண்டும். அரசர்களும் பிற சைவ அடியார்களும் வரவேண்டும் என உள்ளது. அப்பர் பெருமானின் பாடலில் குறிக்கப் பட்டுள்ள அனைவரும் இங்கு குறிக்கப்பட்டுள்ளதை காண்கிறோம். சிறப்பாக சைவசமயத்தின் உட் பிரிவுக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ளில் நான்கு உட் பிரிவினர், அப்பர் குறித்துள்ளது போலவே, இடம் பெறுவது காணலாம். 'அகச்சமயம் ஆறு', என்னும் கருத்து அக்காலத்தே வலுவடைய வில்லை போலும்!

மேலும் அப்பர் பெருமானின் திருவாதிரைப் பதி கத்தை எடுத்துக்கொள்வேம்.

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பக்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்தலைமாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்''

வீதிகள் தோறும் வெண்கொடியொடு விதானங்கள்
சோதிகள்விட்டு சுடர்மாமணிகள் ஒளிதோன்ற
சாதிகளாய பவள முத்து தாமங்கள்
ஆதிஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்

என்ற இரண்டு பாடல்களைக் காண்போம். மார்கழித் திருவாதிரை என்பது சிவபெருமானுக்குகந்த நாள். ஆத லின் திருவாதிரை மஹோத்ஸவம் நடைபெறுகிறது. மஹோத்ஸவங்களைப் பற்றிக் குறிப்பிடும் ஆகமங்கள், பலிகொடுத்தலை சிறப்பிக்கின்றன. ''பலிகொடுத்தல்'' என்றால் ஆடு, கோழி அறுத்தல் என்ற, பலர் எண்ணுகின் றனர். அது தவறு. தெய்வங்களுக்கு பூவும் அன்னமும் கொடுத்தலே பலிதான். ''பூப்பலி செய்து'' என்று சிலப்ப திகாரம் கூறுகிறது. எல்லாக் கோயில்களிலும் பரிவார தேவதைகளுக்கும் திக்பாலர்களுக்கும் பூவும் அன்னமும் தூவுவார்கள். இதைத்தான் பலி என்பர். தமிழ் நாட்டின் தென்பகுதியில் இதை ''ஸ்ரீபலி'' என இன்றும் அழைக் கின்றனர். உத்ஸவகாலத்தில் கிராமத்தில் உள்ள தெய்வங் களுக்கும் இவ்வாறு பலி கொடுப்பர். அவ்வாறு கொடுக் கப்பட்டால்தான் தெய்வ உருவங்கள் உலாவாக உத்ஸவங்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களில் எடுத்துவரப்படும். இதை அஜிதாகமம்

கிராமதௌ யத்ர தேவானம் தீயதே பலிகர்மயத்
தத்ரைவ உத்ஸவயானம் ஸ்யாத் ஸர்வாலங்கார
ஸம்யுதம்

என்று கூறுகிறது. அதனால் தான் திருவாதிரை விழாவைக் கூறும் போது அப்பர் பெருமான் முதல் பாடலில் பலிப்பின்னே என்று பாடியுள்ளார். உத்ஸவகாலங்களில் தெய்வ உலாவரும்போது வீதிகளை எவ்வாறு அலங்கரிக்க வேண்டும் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

சுத்த தோயேன சர்வாபி வீதீ: ஸர்வத்ர ஸேசயேத்

சுத்தமான நீரினால் வீதிகளிலெல்லாம் தெளித்தல் வேண்டும்)

க்ருஹ ச்ரேண்யாம் சர்வத்ர பத்னீயாத் விவிதான்
த்வஜான்

இருசிறகு வீடுகள் எங்கும் பலவிதமான கொடிகள் கட்டப்பட வேண்டும்.

சபாஸ்தானேபி விதினா பத்னீயாத்வா
விருஷத்வஜான்

சபைகளில் முறைப்படி இயக்கொடிகளை கட்ட வேண்டும்

பூர்ணகும்பம் பிரிதித்வாரம் மங்கலாங்குர ஸம்யுதம்

ஒவ்வொரு வாயிலிலும் மங்கலமான, பாலிகைகள் வைக்க வேண்டும். பூர்ணகும்பங்கள் வைக்கப்பட வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீபயுக்தம் ஸமாயோஜ்ய தர்ப்ப மாலாவலம்பனை:
ரதே வா சிபிகாயாம் பிரதிமாம் பத்த கௌதுகம்

தீபங்கள் ஏற்றப்பட வேண்டும். மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட வேண்டும்.

சத்ர சாமர ஸம்யுக்தம் பிச்சத்வஜ ஸமன்விதம்
தூபதீப ஸமாயுக்தம் ஸர்வ ஆதோத்ய ஸமன்விதம்
கீத நிருத்த ஸமாயுக்தம் கிராமாதௌ ஆனயேத்
ஸனன:

குடை, சாமரங்கள் புடை சூழவும் பீலிகளும் கொடிகளும் சூழவும் தூபதீபங்களுடனும், எல்லா வாத்யங்களின் முழக்கங்களுடனும், இசை நாட்டியங்களுடனும் கிராமங் களில் ரதங்களிலோ சிவிகைகளிலோ பிரதிமையை எடுத்து வரவேண்டும் என்று உள்ளது. இவ்வாறுதான் விதானம் கவரிகளுடனும், பக்தர்களும் பாவையரும் சூழ, வீதிகள் தோறும் வெண்கொடி, விதானங்கள் நிறைந்து சோதிகள் ஒளிவிட, அலங்கரித்திருப்ப உலா வந்தார் வீதி விடங்கப் பெருமாள். அதுவே ஆதிரை நாள் என்கிறார் அப்பர் பெருமான். நமது நாட்டில் 1300 ஆண்டுகளுக்கும் மேலாக உத்ஸவங்கள் நடைபெற்று வந்துள்ளதை அப்பர் பெருமானின் பாடல்களும் ஆகமங் களும் ஒன்று போலவே எடுத்துரைப்பது கண்டு இன்புறு கிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏது சொல்லுவீராகிலும் ஏழைகாள்

அப்பர் பெருமான் தமது ஆதிபுராணத் திருக்குறுந் தொகையில்

வாது செய்து மயங்கும் மனத்தராகி
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவர் எனப்படுவார்க் கெல்லாம்
மாதேவன் அல்லால் தேவர் மற்றில்லையே

என்று பாடுகிறார். இதற்கு தருமை ஆதின பதிப்பில் அருணைவடிவேல் முதலியார் குறிப்பு தந்துள்ளார்கள்.

''வாது- சொல்வாதம், மயங்கும் - பொய்யை மெய் என்று எண்ணும், ஏது சொல்லுவீராகிலும் பொருந்தாத மொழிகளை உண்மை போலச் சொல்லுதல் முதலான எவ்வார்த்தைகளைச் சொல்லுபவர்கள் ஆனாலும், ஏழை காள் - அறிவற்றவர்களே, யாதோர் தேவர் எனப்படுவார்க் கெல்லாம் மாதேவரல்லால் தேவர் மற்றில்லையே - யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்'' என்னும் சித்தியார் வாக்கொடு ஒப்பிட்டுணர்க'' என்பது குறிப்புரை.

பொதுவாக சாத்திர முறைப்படி தற்கம் புரிவதை வாதம் என்பர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மற்றவர் உரைத்த சொல்தரு பொருள்கொடு
வாத செல்ப விதண்டையும் ஏதுவும்
ஓது நால்வகை உவமையும் திகழ்தர
அருள்சேர் மாந்தர் வெருள் சேராமல்
தற்கமும் விடையமும் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற்றுவனே

என்கிறது சங்கற்ப நிராகரணம். தற்காலத்தில் மூன்று வகைப்பிரிவுகள் உண்டு. வாதம், செல்பம், விதண்டை என்பர். இம்மூவகை வாதமும் ஏதுக்களைக் கூறி பொருளை நிர்ணயிப்பது ஆகும். ஆதலின் "ஏது" (சமஸ்க்ருதம் ஹேது) என்பது தற்கசாத்திரத்துக்கு இன்றியமையாத ஒன்று. இதற்கு ''உவமை கூறி நிர்ணயித்தலும் அவசியம். அதைத்தான் சங்கற்ப நிராகரணம் இயற்றிய உமாபதி கூறுகிறார். வாதம் செய்பவர்கள் (தர்க்க முறைப் படி நிர்ணியக்கப்படுபவர்கள்) ஏது காட்டவேண்டும் உவமையும் காட்ட வேண்டும். சித்தாந்த சாஸ்திரங்கள் காண்டல், கருதல், உரை என்ற மூன்றுவகை அளவைகளால் நிரூபிக்கப்படுவது. இதை சிவஞான சித்தியார் அளவை காண்டல் கருதல் உரை என்று மூன்றில் அடங்கிடுமே என குறிக்கிறார். 'வாதம்' என்பது கருதல் என்றும், அனுமானம் என்றும் கூறப்படும். பொதுவாக 'அனுமானத்தை' பின்பற்றி சாத்திரம் நிலைநிறுத்த முயற்சிப்பவரை ''வாதிகள்'' என்பது. உதாரணமாக 'சங்கற்ப நிராகரணம்' என்ற நூலில் பலசமயத்தோர் குறிக்கப்படுகின்றனர். அவர்கள் 'மாயாவாதி', 'பேதவாதி', 'சங்கிராந்தவாதி', 'சைவவாதி' எனக் குறிக்கப்படுகின்றனர். இவர் அனைவரையும் வாதி என அழைத்துள்ளமை காண்கிறோம். மணிமேகலையும் இவ்வாறு பலவாதிகளை குறிக்கிறது.

பெரும்பாலும் வாதத்தில் இறங்குபவர்கள், மாற்றார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொல்லுக்குச் சொல் குற்றம் கண்டு, தம்நிலையை எடுத்துரைக்க முற்படும் போது, மனத்தில் குழப்பம் ஏற்படும் வகையில் அமையும். இதை ஒப்பற்ற சமயத் தலைவரான ஆதி சங்கராசார்யரே குறிக்கின்றார்.

வாதத்தில் இறங்குவோர் பெரும்பாலும் மனத்திலே மயங்குவார். இதைத்தான் அப்பர் பெருமான்

வாது செய்து மயங்கும் மனத்தராகி
ஏது சொல்லுவீராகிலும் ஏழைகாள்

என்று வாதம் செய்வோரை குறிக்கிறார். அவர்கள் மனம் மயங்குவர் என்றும் குறிக்கிறார். இங்கு ஏது சொல்லுவீர் ஆகிலும்'' என்ற இடத்து இரண்டு பொருள் கொள்ள வேண்டும். ''நீங்கள் ஹேதுவைக் கூறினாலும் சரி'' என்பது ஒரு பொருள். இரண்டாவது ''எதை (ஏது) வேண்டுமானால் நீங்கள் கூறுங்கள்'' என்பது மறுபொருள் ''ஏது'' என்று சொல் இரட்டுற மொழிதல் என்ற மரபில் இருபொருள் தரும்படி அப்பர் பெருமானால் பயன்படுத்தப்பட்டு 'ஹேது' என்ற பொருளிலும் 'எது வேண்டுமானாலும்' என்ற பொருளிலும் வந்துள்ளது. மற்ற சமயத்தவர் ஒருவர் 'தேவர்' என்றால் 'தெய்வம்' என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். எங்கள் கடவுளை தேவர் என்கிறோம். ஆதலின் அவரே தெய்வம்' என்று ஏதுவாகிய காரணம் கூறினால், நாம் கூறுவோம்.

தேவர் எனில் தெய்வம் தான் ஐயமில்லை. ஆனால் மகாதேவர் என்ற சொல் ஒன்று உண்டல்லவா? அதன் பொருள் தேவர்கள் அனைவரிலும் பெரிய தேவர் ஒருவர் உண்டு அவரைத்தான் மகாதேவர் என்கிறோம். அவர் சிவபெருமான் தான். மகாதேவர் என்னும் சொல் சிவபெருமான் ஒருவருக்குத்தான் குறிக்கப்படுகிறது. ஆதலின் ஹேதுக்களைக் கூறி தேவர் என்பதை நிறுவினால்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகாதேவர் என்பதின் பொருள் அறிந்து கொள். அது சிவபெருமானையே குறிக்கும். அது அன்றி நீர் எதைத் தேவர் என்று கூறினாலும் மாதேவர் என்று ஒருவர் உண்டு என்று அறியவும் என அப்பர் பெருமான்

வாது செய்து மயங்கும் மனத்தராகி
ஏது சொல்லு வீராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவர் எனப்படுவர் கெல்லாம்
மாதேவன் அல்லால் தேவர் மற்றில்லையே

என்று கூறுகிறார்.

இதற்கு பொருள் தருமை ஆதீன பதிப்பில் குறித்துள் ளதை விட்டு தர்க்கத்தின் அடிப்படையிலும், இருபொ ருள் வரும்படி 'ஏது' என்ற சொல் வந்துள்ளது என்பதின் அடிப்படையிலும் பொருள் கொள்ளலாம் எனத் தோன்று கிறது. ஏது - என்பதற்கு ''பொருந்தாத மொழிகளை உண்மைபோல் சொல்லுதல்'' என்று ஒரு வகையில் குறிக்கப்பட்டுள்ளது. அது அவ்வளவு சிறப்பாக தொணிக் கவில்லை. அதே உரையில் யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர் '' என்பதை இங்கு ஒப்பிடமுடியாது ''யாதொரு தெய் வம்... என்பதின் பொருள். யாதொன்றை தெய்வமாகிக் கொண்டாலும் அங்கும் சிவபெருமான் தெய்வமாக வரு வார் என்பது பொருள். ஆனால் இங்கு, அப்பர் பாடலில், யாரை தேவர் என்றாலும் அவரைக் காட்டிலும் வேறான ஒருவரைக் காட்டி அவரே உயர்ந்த தேவர் 'மகாதேவர்' ஒருவரை என்பது பொருள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே

அப்பர் பெருமான் தமது ஆதிபுராணக் குறுந்தொகையில் பாடும் ஒரு பாடல் பின்வருமாறு அமைகிறது.

தாயினும் நல்ல சங்கரனுக் கன்பர்
ஆயவுள்ளத் தமுதருந்தப் பெறார்
பேயர், பேய் முலை உண்டு உயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே.

ஆதிபுராணக் குறுந்தொகை என்னும் இப்பதிகம் பத்துப் பாடல்களைக் கொண்டது. அதில் இப்பாடல் ஒன்பதாவது பாடலாக அமைந்துள்ளது. இப்பாடலுக்கு திரு அருணை வடிவேல் முதலியார் அவர்கள் தருமை ஆதினப் பதிப்பில் உரை எழுதியுள்ளார்கள். அவ்வுரை கீழ்வருமாறு உள்ளது.

"பேய்ப்பெண்ணினது பேய்முலைப் பாலினை உண்டு அவள் உயிர் போகச் செய்த திருமாலுடைய மாயத்துப் பொருந்திய மனத்தை உடையவர்கள், தாயினும் நல்லவனாகிய சங்கரனுக்கு அன்பர்கள் உள்ளத்து அமுது அருந்தப் பெறா இயல்பினர் ஆவர்."

இவ்வுரை தவறானது எனக் கூறமுடியாது. மாயோனாகிய விஷ்ணுவின் அன்பர்கள் சைவமாகிய அமுது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருந்தார் என்றும் வைணவத்தைக் காட்டிலும் சைவம் சிறந்தது எனவும் இது தொனிக்கிறது என இவ்வுரையால் பெறப்பட்டதாகிறது.

இதற்குப் பொருள் வேறுவிதமாகவும் கூறலாம் எனத் தோன்றுகிறது. இங்கு குறிப்பது வைணவத்துக்கும் சைவத்துக்கும் உள்ள தாரதம்யம் அல்ல. சிவபெருமான் முப்புரமெரித்த கதையில் முற்பகுதி. முப்புர அசுரர்கள் முதலில் சிவபூஜை செய்பவர்களாகத் திகழ்ந்தனர். ஆயினும் உலகை அச்சுறுத்தி அலங்கழித்தனர். அவர்களை சம்ஹாரம் செய்ய தேவர்கள் அனைவரும் யோசித்தனர். பாவம் செய்பவரே ஆயினும் சிவபூஜை செய்பவரை தண்டித்தல் இயலாது எனக் கண்டனர். ஆதலின் அவர்களை சிவவழிபாடு செய்யாமல் மனம் மாற்றிவிட திருமால் முடிவு செய்தார். அதன்படி தனது மாயத்தால் தன்போன்ற ஒரு புருடனை தோற்றுவித்தார். அம்மாயன் மூன்று அசுரர்களையும், வைதிகமதத்துக்கு அப்பாற்பட்ட சமயத்தை போதித்து அவர்களது மனத்தை மாற்றிவிட்டார். அம்மாயனது ஏவல் ஏற்று நாரத முனிவர் அசுரப் பெண்களின் மனத்தை மாற்றினார். அவர்களும் கற்புநெறி தவறி வாடித் தலைப்பட்டனர். ஆதலின் முப்புரத்து அசுரர்களும் அசுரப் பெண்களும் சிவலிங்க வழிபாட்டை விட்டு விலகிச் சென்றுவிட்டனர். அவ்வமையம் தேவர்களின் வேண்டுதலை ஏற்று சிவபெருமான் அவர்களை தண்டித்து முப்புரத்தையும் எரித்தார் என்பது வரலாறு. திருமால் தனது மாயையால் திரிபுராசுரர்களை மயக்கி லிங்க வழிபாட்டில் இருந்து அகற்றியது இலிங்க புராணம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.

இதைக்கூறுமிடத்து வடமொழி லிங்கபுராணம்

> விசார்ய ஏவம் தத: தேஷாம் பகவான் புருஷோத்தம;
> கர்த்தும் வியவிஸித: ச அபூத் தர்மவிக்னம் சுராரிணாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அசிருஜஜ்ச மஹாதேஜா : புருஷம் ச ஆத்ம சம்பவம்
மாயீ மாயாமயம் தேஷாம் தர்மவிக்னார்த்தம் அச்யுத:

சாஸ்த்ரம் ச சாஸ்தா சர்வேஷாம் அகரோத் காமரூபத்ருக்
சர்வ சம்மோஹகம் மாயீ த்ருஷ்டி ப்ரத்யய சம்யுதம்

ஏதத் ஸ்வாங்க பவாயை வ புருஷாய உபதிஸ்யது
மாயீ மாயாமயம் சாஸ்த்ரம் க்ரந்த ஷோடச லக்ஷகம்

ச்ரௌத ஸ்மார்த்த விருத்தம் ச வர்ணாச்ரம விவர்ஜிதம்
இஹைவ ஸ்வர்க்க நரகம் ப்ரத்யம் நான்யதா புனர்

என்று உபதேசித்து திரிபுரவாசிகளை மயக்க திருமால் மாயையை அனுப்பினார் என லிங்கபுராணம் கூறுகிறது. இங்கு திருமால் மாயம் புரிந்தார் என்று

மாயீ மாயா மயம் சாஸ்திரம்

என வந்துள்ளது காணலாம். அவ்வாறு திருமாலால் மாயையாக தோற்றுவிக்கப்பட்ட புருடர் ''சாத்தன்'' என அழைக்கப்பட்டார். 'சாத்தன்' என்பது புத்தரைக் குறிக்கும் என்றும் அம்மாயாபுருடர் திரிபுராசுரர்களுக்கு உபதேசித்தது பௌத்த சமயம் என்றும் கூறுவர். அதனாலேயே புத்தரை திருமாலின் அவதாரமாக கொள்ளும் மரபும் உண்டு.

இக்கதைப் பகுதியை தமிழ் லிங்கபுராணமும் கீழ் கண்டவாறு கூறுகிறது.

ஆங்கவரும் லிங்கத்தில் அருச்சனை செய்து
உரைக்கின்றார் அவரை யாரே
தீங்கிழைக்கும் வலியுடையார்? தீவண்ணன் அடி
சிந்தை செய்யா வண்ணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீங்கியுறை மாயை பலவியற்றியே
வெள்ளிமலை தன்னின் மேவும்
பூங்குழலாள் பங்கனே அவர் கொல்லுமாறு
இனி யாம் புரியல் வேண்டும்''

என்று மறையகன்ற நூலினை நன்கியம்பி
ஒரு புருடன் தன்னை
அன்று இனிதிற் படைத்து அவனுக்கு
அறிவித்து முப்புரத்தின் அமர்ந்தோர் தம்மால்
சென்றுரைத்துக் கறைமிடற்றீசன் அடி
பரவா வண்ணம் நீ செய்தி யென்ன
நன்று என ஆங்கவனும் போய்
மற்றவர்கள் உறைபதியில் மன்னினானே

என உரைத்துள்ளது காணலாம். தமிழ் பாடலில் திருமால் இங்கு புரிந்தது மாயை எனக் குறித்துள்ளதைக் காணலாம்.

ஆதலின் தலைப்பில் குறிப்பிட்ட அப்பர் பெருமானின் பாடலில் ''மாயன் மாயத்துப் பட்ட மனத்தார் - பேயர்'' என்பது திரிபுராசுரர்கள் சிவனுக்கு அன்பராகாமல், மாயன் மாயத்துப்பட்டு பிறசமயத்தை பின்பற்றியதைக் குறிக்கிறது எனத் தெளியலாம்.

சமண்வாய்ப்பட்டவர்களையும், சாக்கியராம் பௌளத்தர்களையும், தேவாரம் சாடுவதை அறிவோம். அப்பர் பெருமான் இலிங்கபுராணத்தை அறிந்திருந்தார். இலிங்கபுராணம், வடமொழியிலும் தமிழிலும், திரிபுரர்களை சைவவழிபாட்டிவிருந்த மாற்றியது மாயன் செய்த மாயம் எனக் குறிக்கப்பட்டதைக் காண்கிறோம். இதையே அப்பர் பெருமான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே''

என்று குறிக்கிறார் எனக் கொள்ளலாம். பேய்முலை உண்டு அவள் உயிர் போக்கினான் மாயன். அதேபோல் திரிபுரர் ஆகிய பேயரின் மனத்தை மாயத்தால் மாற்றி உயிர் போக்கினான் என்பது பாடற்குறிப்பு

இதை அப்பர் பெருமான் தமது ஆரூர் பதிகத்தில் (ஆறாம் திருமுறை) கீழ்வருமாறு குறிக்கிறார்.

காணத்தால் நாரணனைக் கற்பித்தன்று
வலம் சுரக்கி வல்லசுரர் மாண்டுவீழ
வாசுகியை வாய் மடுத்து

என்று தெளிவாகக் குறித்துள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருக்கன் பாதம் வணங்குவர்

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை என்ற பதிகத்தில் அப்பர் பெருமான்,

அருக்கண் பாதம் வணங்குவார் அந்தியில்
அருக்கண் ஆவான் அரன் உருவல்லனோ?
இருக்கு நான்மறை ஈசனையே தொழும்
கருத்தினை நினையார் கன் மனவரே

என்று பாடுகிறார். இதற்கு அருணை வடிவேல் முதலியார் தருமைப்பதிப்பில் கீழ்வரும் பொழிப்புரைகள் கொடுத்துள்ளார்கள். ''அந்தியில் சூரியன் பாதங்களை வணங்குவார் சூரியனாவான் சிவபெருமானின் உருவம் அல்லனோ? இருக்கு முதலிய நான்கு வேதங்கள் இறைவனையே தொழும் கருத்தினை கல்மனம் படைத்தவர்களாய் சிலர் நினைக்க மாட்டார்கள்'' என்பது முதலியாரவர்கள் உரை.

யஜுர்வேதத்தில் ருத்ரம் என்ற பகுதி உண்டு. இதில்தான் நமசிவாய என்ற சொல் வருகிறது. இப்பகுதியை சதருத்ரீயம் என்று அழைப்பர். இதை நீரில் நின்று எப்பொழுதும் தியானித்ததால்தானே ருத்ரபசுபதி நாயனார் என்பவர் சிவமுக்தி பெற்றார். சைவ வழிபாட்டில் ருத்ரம் மிகச் சிறந்த நிலை வகிக்கும் மந்திரம். அது கூறித்தான் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்கிறோம். இது பதினொரு பகுதிகளைக் (அனுவாகங்கள்) கொண்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

டது. இதில் எட்டாவது பகுதி முக்யமானது. அதில்தான் நமசிவாய என்ற சொல் வருகிறது. இப்பகுதி ''நம: ஸோமாயச ருத்ராயச நமஸ் தாம்ராயச அருணாயச'' என்ற தொடங்குகிறது. உமாதேவியோடு கூடிய பரனுக்கு வணக்கம். ருத்ரனுக்கு வணக்கம் என சிவபெருமானின் பல உருவங்களை கூறி அவற்றிற்கு வணக்கம் கூறுவதாக அமைகிறது ருத்ரத்தின் இப்பகுதி. இதில் ''நமஸ்தாம்ரா யச அருணாயச'' என்பதைக் காண்போம். இதற்கு பட்டபாஸ்கரர் என்பவர் எழுதிய பண்டைய உரை உண்டு. அதில் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது.

அத ஆதித்யரூபேன சர்வேஷாம் அபி அநாயா
ஸேந ப்ரத்யக்ஷீபூய ஸகல ச்ரேய:பர தத்வாத்
அபி பரமேஸ்வர ஏவ உபாஸ்ய இதி

இதன் தமிழ்க் கருத்து - ஆதித்யனாகிய சூரியன் உருவத்தில் எல்லோருக்கும் மிகவும் சுலபமாக நேராகத் தோன்றி எல்லா நன்மைகளையும் அளிக்கும் பரமேஸ்வரனே. அவரே வழிபடத் தகுந்தவர் என்பதாம்.

நமஸ் தாம்ராயச இதி உதயகாலே அத்யந்த ரக்தவர்ண: தாம்ர:
ததநந்தரம் ஈஷத் ரக்த: அருண:
ச காராத் ஊர்த்வம் பப்ரு வர்ண:
ஏவம் பூதாய அஷ்ட மூர்த்தே: பகவத: சூர்யாத்மகோ
மூர்த்தி விசேஷ: தஸ்மை நம இத்யாத்த:

விடியற்காலையில் மிகவும் சிவந்த வண்ணமாக தோன்று வதை தாம்ரம் என்கிறோம்.

இதன் பிறகு மஞ்சள் குளித்த சிவப்பு வர்ணம் ரக்தம் எனப்படுகிறது. இவ்வுருவில் தோன்றுபவர், பகவானு டைய எட்டு மூர்த்திகளில் ஒன்றானது சூரியன் என்னும் உருவமாகும். அதற்கு வணக்கம் என்பது பொருள் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவ்வுரை கூறுகிறது. மேலும் அவ்வுரையின் தமிழாக்கம் உலகில் பலகாலம் பல நியமங்களைப் பின்பற்றி பக்தர்கள் வழிபாடு செய்கிறார்கள். அதன்பிறகு தான் தெய்வம் தோன்றுகிறது. ஆனால் ஆதித்தனோ நாம் எவ்வித முயற்சியும் செய்யாவிடினும் தாமாகவே எல்லா உயிர்களின் முன்பும், நல்ல சிவந்த வர்ணத்திலும், மஞ்சள் சிவப்பு வர்ணத்திலும் தோன்றுகிறான், அருள் கொடுக்கிறான். இவ்வாறு தாமாகவே தோன்றி அருள் பாலிக்கும் ஆதித்தன் பரமேச்வரன்தான் என்ற அறிவு மக்களுக்கு ஏற்படும்போது பெரும் மேன்மையை அடைகின்ற இந்த ஆதித்தனே பிரும்மன் ஆகிறான்.''

இத்தம் ஸ்வயம் ஏவ ஆவிர்ப்பூய
வரதானாபிமுகே அவஸ்திதே பரமேஸ்வரேய
மிதி புத்திமாத்ரம் விதந்வன் அகிலம்
அபி ச்ரேயோ ஸபதே! ததா ச
ச்ருதி: உத்யந்தம் அஸ்தம் யாந்தம்
ஆதித்யம் அபித்யாயன் குர்வன் பிராம்மனோ
வித்வான் ஸகலம் பத்ரம் அஸ்நுதே
அஸௌ ஆதித்யோ பிரும்மேதி
அத: அநாயாஸேந ஏவ அகில புருஷார்த்த பிரத:
பரமேஸ்வர ஏவ உபாஸ்ய இதி''

இதனால் பரமேச்வரனே வழிபடப்படுகிறான் என்று இந்தக் கருத்தையே வேதம் கூறுகிறது. 'பிரும்மன்' எனில் பரம்பொருள் என்று அர்த்தம். அஸௌ - இந்த ஆதித்யன் - சூரியன், பிரும்ம - பரமனே என்பது வேதம். ஆதலின் 'தாம்ராய ச் அருணாயச' என்றதற்கு அந்தியில் தோன்றும் சூரியன் என்பது பொருள். அவனை வணங்குகிறேன். அவன் யார்? உமாதேவியுடன் கூடிய ருத்ரனே என்பது இந்த ருத்ரத்தின் கருத்து. ஆதலின் யஜுர் வேதத்தில் உள்ள சூரியன், சிவபெருமானே எனக் கூறுகிறது. இதைத்தான் அப்பர் அந்தியில் வணங்கப்படும் அருக்கன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகிய சூரியன் அரனே என அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில் அருக்கன் ஆவான் அரன் உருவல்லனோ எனப் பாடுகிறார். மேலும் இருக்கு முதலிய நான்கு வேதங்களே ஈசனைத்தான் தொழுகின்றன. நான்கு வேதங்களின் சாரம் ருத்ரம். அது ஆதித்தன் வடிவில் உள்ள ஈசனைப் போற்றுகிறது. இருக்கு நான்மறை ஈசனையே தொழும் கருத்தினை நினையார் கன்மனவரே எனப்பாடுகிறார். சூரியன் என்பது சிவபெருமானே என அப்பர் பாடுவது வேதத்தின் கருத்து எனத் தெளிவு. அதைத்தான் அப்பர் குறித்துள்ளார். அதுதான்,

அருக்கன் பாதம் வணங்குவர்

என்னும் பாடலின் சிறப்பு.

சிவபெருமானுக்கு அஷ்டமூர்த்தி எனப்பெயர். ஐந்து பூதங்களும், சந்திரன், சூரியன், இயமானன் என்ற மூன்றும் சேர்ந்து எட்டுருவில் உள்ளதையே அஷ்ட மூர்த்தி என்பர். இதை தேவாரங்களில் பல இடங்களில் காண்கிறோம். சம்பந்தர்,

பாரும் நீரொடு பல்கதிர் இரவியும்
பணிமதி ஆகாசம்
ஓரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியில்
தலைவனுமாய் நின்றார்

என்று பாடுகிறார். சிவபெருமானே இரவி என்பது பொருள்.

சைவர்கள் சூரியனை சிவசூரியன் என்று வணங்கு வர். நித்ய பூசையில் சிவசூரியனுக்கு பீடபூசை உண்டு. ஆதலின் அப்பர் கூறும் ''அருக்கண் ஆவான் அரன் உரு அல்லனோ'' என்பது பெரும் கருத்துக்களை உள்ளடக்கி யுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முளை ஞாயிறு

குடந்தைக் கீழ்க் கோட்டத்து கூத்தபிரானை அப்பர் பெருமான் பாடியுள்ள பின்வரும் பாடல் எழில் வாய்ந்த பாடல். பாடிப்பாடி இன்புறத் தகும் பாடல்.

முடிகொண்ட வளர்மதியும் மூன்றாய்த் தோன்றும்
முளை ஞாயிறன்ன மலர்க்கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளாற்சோதி
அணிமுருவல் செவ்வாயும் அழகாய்த் தோன்றத்
துடிகொண்ட விடைமடவாள் பாகங் கொண்டு
சுடர்ச்சோதி கடிசெம்பொன் மலைபோலிந்நாள்
குடிகொண் டென்மனத்தகத்தே புகுந்தார் போலும்
குடந்தைக் கீழ் கோட்டத்தென் கூத்தனாரே

என்பது அவ்வெழில் பாடல்: இப்பாடலில் கடல்மலை போல் தோன்றியது என்னும் அழகான சொல் வழக்கைக் காண்கிறோம். சுடர்ச்சோதிக் கடல், செம்பொன் மலை போல் காட்சியளிக்கிறது என்கிறார் அப்பர் பெருமான். இவ்வெழிற் பாடலிலே ''மூன்றாய்த் தோன்றும் முளை ஞாயிறன்ன - மலர்க்கண் மூன்றும்'' என்று வந்துள்ளது. இதற்கு அருணை வடிவேல் முதலியார் அவர்கள் பின்வருமாறு பொருள் கொண்டுள்ளார்.

''மூன்றாய்த் தோன்றும் கண்கள் என இயையும், 'முளை ஞாயறு அன்ன' என்றது தொழில் பற்றி வந்த உவமை. மூன்று கண்கள் யாதொன்று திறப்பினும் சிறிது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திறத்தலே அன்றி முழுதும் திறப்பின் உலகம் ஆற்றுவதில் லை' என அவற்றின் ஆற்றல் மிகுதியை உணர்த்தியவாறு அன்ன ஆற்றலை உடையவராயினும் மென்மையில் பிறழா' என்பர் என்று பொருள் வரைந்துள்ளார்.

மலர்க்கண்கள் என்பது மலர்ந்த கண்கள் - என்றே பொருள் கொள்ளுதல் சிறப்பெனத் தோன்றுகிறது. மலர்ந்த புட்பங்கள் கண்ணுக்கு இன்பம் அளிப்பது போல, சிவபெருமானின் மலர்க்கண்கள் மூன்றும் மக்க ளுக்கு பேரின்பம் அளிப்பவை என்பது பொருள். சிவபெ ருமானின் கண்கள் சிறிதே திறந்திருப்பின் 'மலர்க்கண் கள்' என்னும் சொல் வழக்கும் தவறே. வழுவுடையதாகக் கொள்ள வேண்டிவரும். அதனால், இயல்பான பொரு ளான 'மலர்ந்த கண்கள்' என்னும் பொருளே சிறப்பு டைத்து. அவ்வாறாயின் மூன்றாய் தோன்றும் முளைஞாயி றன்ன' என்பதின் பொருள்தான் யாது? எனில் ''மூன்றாய் தோன்றும் என்பதை முளைஞாயிறு என்பதுடன் உள்ளப டியே இயைத்துப் படித்தல் வேண்டும். 'முளை ஞாயிறு' என்பது உதிக்கின்ற சூரியனைக் கூறுகிறது. அது மூன்றாய் தோன்றுகிறது என்பது பொருள்.

சைவ சமயத்தில் ''நமசிவாய'' என்ற பஞ்சாக்ஷர மந்திரத்தை உள்ளடக்கியுள்ள ஸ்ரீ ருத்ரம் என்னும் யஜுர் வேதப்பகுதி மிகமிகத் தலையாயது என்பது யாவரும் அறிந்த ஒன்று. தொன்று தொட்டே இது சிவாலயங்களில் சிறப்பாக ஜபிக்கப்பட்டு வந்தது. ருத்ர பசுபதி நாயனார் என்று 63 நாயன்மார்களில் ஒருவர் ருத்ரம் ஜபித்து வீடுபேறு பெற்றார் என்று நாம் அறிவோம். ருத்ரம் சிவபெருமானின் பெரும் புகழையும், சிறப்பையும் கூறுகிறது. இதை வேதத்தின் சாரம் என்று கூறுவர். ருத்ரத்தில் ஒரு மந்திரம் வருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அஸெள ய: தாம்ர: அருண: உத பப்ரு: சுமங்கள:

என்று அது கூறுகிறது. இதன் பொருள் சிவபெருமான் தாம்ர வண்ணத்திலும், அருண வண்ணத்திலும் பப்ரு என்ற வண்ணத்திலும் தோன்றுகிறான் என்பது பொருள். இதற்கு பொருள் எழுதிய சாயணர் சூரியன் உதிக்கின்ற போது மிகவும் (கரும்) சிவந்த வண்ணமாக தோன்று வதை 'தாம்ர வண்ணம்' என்றும், அதன் பின்னர் அருண வண்ணத்தில் இளஞ்சிவப்பாகத் தோன்றுவது பிறகு வெளுத்த சிவப்பு பப்ரு வண்ணம் என்றும் பொருள் குறித்துள்ளார்.

எனவே உதிக்கின்ற சூரியனின் மூன்று வண்ணங் களை வேதம் கூறுகிறது. இவ்வாறு உதிக்கின்ற சூரியன், சிவபெருமானே என்பது இவ்வேதத்தின் பொருள். ஆத லின் முளைக்கின்ற ஞாயிறு மூன்று வடிவில் தாம்ரனாக வும், அருணனாகவும், பப்ருவாகவும் தோன்றுகிறான் என்கிறது ருத்ரம்.

இதிலிருந்து ''மூன்றாய் தோன்றும் முளைஞாயிறு'' என்பதின் பொருளை மிகவும் தெளிவாகப் பெறலாம். மாறாக மூன்றாய்த் தோன்றும் என்பதைப் பிரித்து கண்க ளோடு இயைப்பது சற்று வலிந்து பொருள் கொள்வது மட்டுமல்ல. வழுக்குடை சொல்வழக்கென ஆகிவிடும் ஆதலின் தேவாரப் பாடலில் உள்ளபடியே ''மூன்றாய்த் தோன்றும் முளை ஞாயிறு'' என்று கொள்வதே சிறந்த பொருள் பயப்பது. சிவபெருமானின் கண்கள் சிறிதுதான் திறந்திருக்கும் என்ற பொருந்தாத பொருளும் தேவை யில்லை. இதே கீழ் கோட்டத்து மற்றொரு பாடலில் அப்பர் பெருமான்,

செக்கர் ஒளி பவள ஒளி மின்னின் சோதி
செழுஞ்சுடர்த்தீ ஞாயிறெனச் செய்யர் போலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று பாடுகிறார். இங்கும் மூன்று வண்ணங்கள் குறிக்கப் படுகின்றன. செக்கர் ஒளி, பவள ஒளி, மின்னின் சோதி என்ற மூவகை சிவப்பு வண்ணங்கள் இவ்வாறு தோன்றும் செழும் சுடர் தீயாகிய ஞாயிறு போல் சிவந்தவர் சிவபெருமான் என்பது பொருள் எனத் தெளியலாம். மற்றொரு இடத்தில் அப்பர் சுவாமிகள் "காலை முளைத்த கதிரே" என்பதும் "இதையே உணர்த்தும் மூன்றாய் தோன்றும் முளை ஞாயிறு" என்பதின் பொருளை ஸ்ரீ ருத்ரத்திலிருந்து தெளிவு பெறுகிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கால பாசம்

அப்பர் பெருமான் பாடிய பாடல்களுக்கு எல்லாப் பதிப்புகளிலும் தலைப்புகள் உள்ளன. திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. சில பதிகங்களுக்கு சிறப்பு குறிப்புகளும் காணப்படுகின்றன. பாவநாசத் திருப்பதிகம், தசபுராணம், திருவங்கமாலை, குறைந்த நேரிசை, பசுபதி திருவிருத்தம், அடைவுத்திருத்தாண்டகம் என்ற தலைப்புகள் காணப்படுகின்றன. இத்தலைப்புகளில் பல சேக்கிழார் காலத்துக்கும் முன்பிருந்தே வழக்கில் இருந்தன என்று திட்டவட்டமாகக் கூறலாம். காரணம் சேக்கிழாரே தமது நூலில் பல பதிகங்களின் தலைப்புகளைக் குறிக்கிறார். எடுத்துக்காட்டாக திருநாவுக்கரசு சரிதத்தில் உள்ள கீழ்வரும் செய்யுளை காண்போம்.

பல்வகைத் தாண்டகத்தோடும் பரவும் தனித்
தாண்டகமும்
அல்லல் அறுப்பவர் தானத்தடைவு திருத்தாண்டகமும்
செல்கதி காட்டிடப் போற்றுந் திருஅங்கமாலையும்
உள்ளிட
எல்லையில் பன்மைத்தொகையும் இயம்பினர்
ஏத்தி இருந்தார்

(திரு நா.சரி.பாடல் 390)

இதில் பல்வகைத் திருத்தாண்டகம், தனித்தாண்டகம்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடைவுத்திருத்தாண்டகம், திரு அங்கமாலை என்னும் தலைப்புகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை இன்றும் நம் நூல்களில் அப்படியே குறிக்கப்பட்டுள்ளன. சில தலைப் புகளில் சிறிது மாற்றங்களும் காணப்படுகின்றன.

இப்பபொழுது 'தசபுராணம்' என்று உள்ளது. சேக்கி ழார் காலத்து ''தசபுராணத்தடைவு'' என்று பெயர் பெற்றிருந்தது. இன்று ''சரக்கரை திருவிருத்தம்'' எனப்ப டுவது அன்று ''அறைகூவும் திருப்பதிகம்'' என அழைக் கப்பட்டது. இதுபோல், சிவபெருமான் உறையும் தலங் களை தொகுத்துக் கூறும் இரண்டு பதிகங்கள் உள்ளன. ஒன்று இப்பொழுது க்ஷேத்திரக் கோவை என்றும், மற்றது 'அடைவுத் திருத்தாண்டகம்' என்றும் அழைக்கப்பெறு கின்றன. ஆனால் 'க்ஷேத்திரக்கோவை' என்பதை சேக்கி ழார் "பதிகள் வழுத்து திருத்தாண்டகம்" என்று குறிக்கி றார். அடைவுத் திருத்தாண்டகம் என்பது "தானத்தடைவு திருத்தாண்டகம்" என்று சேக்கிழாரால் குறிக்கப்பெற்றுள் ளது.

'தானத் தடைவுத் திருத்தாண்டகம்' (தானம்-தெய்வத்தானம்) என்பதே பொருள் முழுமையாக கொடுக் கிறது. 'அடைவுத் திருத்தாண்டகம்' எனில் பொருள் முழுமை பெறவில்லை. சேக்கிழார் குறித்துள்ளதே சிறப்பு.

இதுபோல, அன்றைய தலைப்பையும் இன்றைய தலைப்பையும் பட்டியல் போட்டு ஆய்வு மேற்கொள் ளின் பயன் உள்ளதாயமையும். அதேபோன்று சேக்கிழார் மேற்கோளாக எடுத்து பயன்படுத்தும் பதிகச் சொற்றொ டர்களையும் இன்றுள்ள பதிகச் சொற்றொடர்களையும் ஆராய்ந்தால் ஆய்வுப் பகுதிக்கு மிகவும் பயனளிக்கும்.

அவ்வகையில் இங்கு 'காலபாசம்' என்னும் பதி கத்தை ஆய்வோம். யமனுடைய தூதர், வந்து உயிரைப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பற்றும் முன்னர் சிவபெருமானைப் போற்றுமின்: அவ்வடியார்களை யமதூதர் வந்தணுகார் என்னும் கருத்துக்களை பத்துப்பாடல்களிலும் விளங்குமாறு இரண்டு பதிகங்களை அப்பர் பெருமான் பாடியுள்ளார். ஒன்று "திருவாட்போக்கி-திருக்குறுந்தொகை" எனப் பெயர் பெறுகிறது. மற்றது "பொது-காலபாசத் திருக்குறுந்தொகை" என்று தலைப்புப் பெற்றுள்ளது.

இப்பொழுது "காலபாசத் திருக்குறுந்தொகை" என்னும் பதிகத்தில் பதினொரு பாடல்கள் உள்ளன. இப்பதினோரு பாடல்களில் எதிலும் "காலபாசம்" என்னும் சொல் காணப்படவில்லை. ஒரு பாடலில்

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நம தீசன் அடியாரை
விடை கொளூர்தியினான் அடியார் குழாம்
புடை புகாது நீர் போற்றியே போமினே

இங்கு யமதூதர்களும் பாசமும் குறிக்கப்படுகின்றன. ஆனால் "காலபாசம்" என்னும் சொல் எதிலும் இல்லை. மாறாக திருவாட்போக்கி பதிகத்தில் முதல் பாடலே "காலபாசம்" என்று தொடங்குகிறது.

காலபாசம் பிடித்தெழு தூதுவர்
பாலகர் விருத்தர் பழையாரெனார்
ஆலநிழலமர்ந்த வாட்போக்கியார்
சீலமார்ந்தவர் செம்மையுள் நிற்பரே

ஆதலின் திருவாட்போக்கி பதிகம், "காலபாசம்" என்னும் சொற்றொடரில் தொடங்குவதால் அதுவே "காலபாசத் திருக்குறுந்தொகை" என்னும் தலைப்புப்பெற தகுந்தது. இதற்கு அப்பர் பெருமானின் பதிகங்களிலிருந்தே எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். "பாவ நாசத் திருக்குறுந்தொகை" "பாவமும் பழி பற்றற வேண்டுவீர்" எனத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொடங்குகிறது. இங்கு ''பாவம்'' என்ற சொல் தொடக் கத்திலிருந்து ''பாவநாசக் குறுந்தொகை'' என்று பெயர் பெற்றுள்ளது தெளிவு. இதுபோல் பதிகப் பாடல்களில் வரும் சொற்களைக் கொண்டே தலைப்புகள் அமைந் துள்ள பல குறுந்தொகைகள் உள்ளன. ''மறக்கிற்பனே என்னும் திருக்குறுந்தொகை'', உள்ளத்திருக் குறுந்தொ கை'' ஆகிய பதிகங்கள் இவ்வாறு பெயர் பெற்றவை தாம். ஒரு குறிப்பிட்ட ஊரின் மீது பாடி பதிகங்களும், அவற்றில் வரும் சொற்களால் பெயர் பெறுவது உண்டு. கோயில் பதிகம் ''புக்கத் திருத்தாண்டகம்'' என்றும், திருவதிகைவிரட்டானப் பதிகம் ''ஏழைத் திருத்தாண்ட கம்'' என்றும் இவ்வாறு பெயர் பெற்றுள்ளதைக் காண லாம்.

இவற்றைத் தொகுத்து நோக்கும் போது வாட்போக் கிப் பதிகமே ''காலபாச திருக்குறுந்தொகை'' எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும் என கருதவேண்டியுள்ளது. ஏடுகளில் ஏதோ பிழை புகுந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. சிவக்கவிமணி C.Kசுப்ரமண்ய முதலியாரா வர்கள் தமது பெரிய புராண உரையில் ஒரு முக்கியக் குறிப்பை தந்துள்ளார். இன்று நாம் காலபாசக்குறுந் தொகை என்று கூறும் பதிகத்தைப் பற்றி அவர் கூறுவது. ''இப்பதிகப் பாராயணம் எவ்வித சங்கடங்களையும் நீக்கவல்லது. சிலபிரதிகளில் இது ''காலபாராயணத் திருக்குறுந்தொகை'' என்றே காணப்படுகிறது என்று கூறுகிறார். பிரதிகளில் வேறுபாடு இருப்பதும் இதனால் உறுதி பெறுகிறது. வாட்போக்கி குறுந்தொகை ''காலபா சம்'' என்று தொடங்குவதிலிருந்து, அப்பதிகமே ''காலப் பாச குறுந்தொகை'' என்றும் மற்ற ''கண்டு கொள்ளரியா னை'' என்று தொடங்கும் பதிகம் வெறும் திருக்குறுந்தொ கையே என்றும் கொள்வது சிறந்தது எனத் தோன்றுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

க்ஷேத்திரக்கோவையும் அடைவுத்திருத்தாண்டகமும்

அப்பர் பெருமானின் தேவாரப் பாடல்களில், 'க்ஷேத்திரக் கோவை' என்றும் ''அடைவுத் திருத்தாண்டகம்'' என்றும் இரண்டு பதிகங்கள் உள்ளன. இவ்விரண்டு பதிகங்களும், புகழ் வாய்ந்த சிவத்தலங்களை தொகுத்துக் கூறுகின்றன. இவற்றில் ''க்ஷேத்திரக் கோவை'' என்ற பதிகம், அகத்தியர் தேவாரத்திரட்டிலும் ''க்ஷேத்திரக் கோவை'' என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இப்பதிகத்தின் முக்கிய நோக்கம் முக்கியமான சிவத்தலங்களை நினைத்தல் எனக் கொள்ளலாம். ஞானசம்பந்தப் பெருமானும் இதுபோல் ஒரு க்ஷேத்திரக்கோவை பாடியுள்ளார். அதில்

அமரர் பெருமான் பதியானவுன்னி
சிவஞானசம்பந்தன் சொன்ன
இம்மாலை ஈரைந்தும் இருநிலத்தில்
இரவும் பகலும் நினைந்தேத்தி நின்று
விம்மா வெருவர விரும்பும் அடியார்
விதியார் பாரியார் சிவன்சேவடிக்கே

என்று பாடியுள்ளது இதை உறுதி செய்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இவ்வாறு ஒரு பதிகம் ('ஊர்தொகை' என்ற பெயர் பெற்றுள்ளது) பாடியுள்ளது குறிக்கத் தகுந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பர் பெருமான் பாடிய இவ்விரண்டு பதிகங்களுக்கும், இப்பொழுது அச்சாகியுள்ள நூல்களில் தில்லைச் சிற்றம்பலம் எனத் தொடங்கும் பதிகம் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகமே என்றும், ''பொருமப்பள்ளி எனத் தொடங்கும்'' ''அடைவுத் திருத்தாண்டகம்'' என்றும் தலைப்பு காணப்படுகிறது. இத்தலைப்புகள் எவ்வாறு எப்போது பெறப்பட்டன என்ற ஐயம் எழலாம்.

நாவுக்கரசர் வடநாட்டில் உள்ள பல சிவத்தலங்களையும் தரிசித்து கயிலை சென்று திருவையாற்றில் குளித்தெழுந்த பின்னர் அவ்விரு பதிகங்களையும் இயற்றியுள்ளார் என்று சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் அறிகிறோம். அதன்பின் வரும் இரு பெரிய புராணப் பாடல்கள் கூறுகின்றன.

பல்வகைத் தாண்டகத்தொடும் பரவும் தனிதாண்டகமும்
அல்லல் அறுப்பவர் தானத்தடைவுத் திருத் தாண்டகமும்
செல்கதிகாட்டிடப் போற்று திரு அங்க
மாலையும் உள்ளிட்டு
எல்லையில் பன்மைத் தொகையும் இயம்பினர்
எத்தி இருந்தார்

நின்ற திருத்தாண்டகமும் நீடுதனித்தாண்டகம்
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்துத்திருத் தாண்டகமும்
கொன்றைமலர் சடையர்பால் குறைந்த திருநேரிசையும்
துன்று தன் நேரிசையும் முதலான தொடுத்தமைந்தார்.

இவ்விரு பாடல்களின் வாயிலாக மேலும் ஒரு கருத்து பெறுகிறோம். அப்பர் பெருமாணியற்றிய பல பாடல்களின் தலைப்புகளை - திரு அங்கமாலை, தனித் தாண்டகம், நின்ற திருத்தாண்டகம், குறைந்த திருநேரிசை' முதலான தலைப்புகளை சேக்கிழார் குறித்துள்ளார். மேலும் இப்பாடல்களில் நாவுக்கரசரின் இருபாடல்களின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தலைப்புகள் கிடைக்கின்றன. ஒன்று ''தானத் தடைவுத் திருத்தாண்டகம்'' என்று பெயர் பெற்றுள்ளதைக் காண்கி றோம். இவையிரண்டுமே சிவத்தலங்களைத் தொகுத்து ரைக்கும் பதிகங்கள்தான் என்பதில் ஐயமில்லை. இவை இரண்டும் சேக்கிழார் காலத்துக்கும், அதற்கும் முன்பிருந் தும் வழக்கிலிருக்கும் தலைப்புகள் என இதனால் தெளிவாகிறது. ஆனால் இப்பொழுது அச்சாகியுள்ள நூல்களில் எதிலும் இவ்விரு தலைப்புகளும் இல்லை. மாறாக க்ஷேத்திரக் கோவை என்றும் அடைவுத் திருத் தாண்டகம் என்றும் பெயர் பெற்றவைதான். இவ்விரண் டும் அத்தாண்டகப் பதிகங்கள் எனக் கொள்ளலாம். இதில் எது ''தானத்தடைவுத் திருத்தாண்டகம்'', எது 'பதிகள் வழுத்து திருத்தாண்டகம்' என ஐயம் வரலாம். இதை ஒருவாறு ஊகித்துத்தான் சொல்ல இயலும்.

க்ஷேத்திரக்கோவை என்னும் பதிகத்தின் கடைக்காப் பில் (இறுதிப் பாடலில்)

> நிலம் மலிவு நெய்தானத்தேடு எத்தானத்தும்
> நிலவு பெருங் கோயில் பலகண்டால் தொண்டீர்
> கல வலிமிக்க கோவைக் கால்விரலால் செற்ற
> கயிலாய நாதனையே காணலாமே

இப்பதிகத்தில் ''தானத்து பெருங்கோயில் பல கண்டால்'' என்று கூறுவதை காண்கிறோம். ''அடைவுத் திருத்தாண்ட கத்தில் பல பாடலிலும்

> பாப்பள்ளி என்றென்று பகர்வோர் இவை கூறி
> நாவில் நவின்று உரைப்பாரக்கு சுரம்பலவும்
> இயம்புவோம்
>
> இடர் கெட நின்ற ஏத்துவோமே
> ஆறும் குளம், களம், கா அனைத்தும் கூறுவோமே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என இயம்புதல், ஏத்துதல், கூறுதல், வணங்குதல் எனக் கூறியள்ளதைக் காண்கிறோம். 'தானத்து பெருங்கோயில் கண்டால்' என வருவதால் இக்காலத்தே க்ஷேத்திரக் கோவை என்று பெயர் பெற்றுள்ள பதிகம்தான் சேக்கிழார் குறிக்கும் ''தானத்தடைவுத் திருத்தாண்டகமாகவும்'', இயம்புவோம், உரைப்போம், நவில்வோம், ஏத்துவோம், கூறுவோம் என்று முடியும் அடைவுத் திருத்தாண்டகம் ''பதிகள் வழுத்துத் திருத்தாண்டகமா''கவும் இருக்கலாம் எனத் தோன்றுகிறது. 12ம் நூற்றாண்டில் சேக்கிழார் காலத்தில் இவ்வாறு பெயர் பெற்றிருந்த தாண்டகம் பின்னர் இப்பொழுதுள்ள பெயரால் புகழ்பெற்றுள்ளன. அகத்தியர், தேவாரத்திரட்டில் நாவுக்கரசரின் ''தில்லைச் சிற்றம்பலமும்'' என்னும் பதிகம் திருக்ஷேத்திரக்கோவை என்று தலைப்புப் பெற்றுள்ளது. அகத்தியர் தேவாரத் திரட்டைத் தொகுத்த சிவாலய முனிவரின் காலம் தோரா யமாகக் கூடத் தெரியாது. ஆதலின், இப்பெயர் எக்கா லத்தே சிறப்பிடம் பெற்றது எனக் கூற இயலவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொன்னார்ந்த திருவடிக்கு ஓர் விண்ணப்பம்

திருநாவுக்கரசு சுவாமிகள் சமண் நீங்கி சூலை நோய் தீர்ந்து, பல சிவத்தலங்களையும் தரித்து பெண்ணா கடம் வந்து சேர்க்கிறார். அவ்வூர் தூங்கானைமாட சுடர்க் கொழுந்தை வேண்டிப்பரவுகிறார். அவருக்கு தாம் அம ணராயிருந்த நினைவு வருகிறது. பரமனே நீ உன் இலச்சினை இட்டு என்னை உய்வித்தருள் என்று வேண்டி பொன்னார்ந்த திருவடிக்கு என் விண்ணப்பம்'' என்னும் திருவிருத்தம் பாடுகிறார். சிவபெருமானின் ஏவற்படி பூதகணம் ஒன்று அப்பிரானின் தோளில் திரிசூலம் - விடபம் இலச்சினையைப் பொறிக்கிறது. இந்நிகழ்ச் சியை சேக்கிழார் மூன்று பாடல்களால் பாடுகிறார்.

புன்நெறியாம் சமண்சமயத் தொடக்குண்டு போந்தவுடன்
தன் உடனே உயிர் வாழத் தரியேன் நான் தரிப்பதனுக்கு
என்னுடைய நாயக; நின் இலச்சினை இட்டருள் என்று
பண்ணு செழுந்தமிழ் மாலை முன்னின்று பாடுவார்

பொன் ஆர்ந்த திருவடிக்கு என் விண்ணப்பம் என்று எடுத்து
முன் ஆகி எப்பொருட்கும் முடிவு ஆகி நின்றானை
தன் ஆகத்து உமைபாகங் கொண்டானைச் சங்கரனை
நன் நாமத் திருவிருத்தம் நலஞ்சிறக்கப் பாடுதலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீடு திரு தூங்கானை மாடத்து நிலவுகின்ற
ஆடகமேருச் சிலையான் அருளால் ஓர் சிவபூதம்
மாடு ஒருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில்
சேடுயர்மூ விலைச்சூலம் சினவிடையின் உடன் சாத்த''

என்று பாடியுள்ளார். இங்கு திருவிருத்தம் பாடினார் என்று கூறும் சேக்கிழார் அதை தமிழ்மாலை என்றே கூறுகிறார். இங்கு அப்பர் பெருமான் பாடியவை எவ்வ ளவு பாடல்கள் என்பது கேள்வி. இத்திருவிருத்தம் எத்தனை பாடல்களைக் கொண்டிருந்தது என்பது தெளி வாக சேக்கிழார் பாடலிலிருந்து கூற இயலாது. இப்பொ ழுது அச்சாகியுள்ள தேவாரப் பதிப்புகளில் இத்திருவிருத் தத்தில் மூன்றே பாடல்கள் தாம் கிடைத்துள்ளன. அப்பர் இங்கு மூன்று பாடல்கள் தாம் பாடினாரா? அன்றி அவர் பாடிய பிற பாடல்கள் மறைந்தனவா? அவ்வாறெனில் அதற்கு சான்று உண்டா என்ற கேள்விகள் இங்கு எழுதுவது சகஜம். இவற்றிற்கு விடையளிப்பதாக உள் ளது உபமன்யு பக்த விலாசம்,

தத: பெண்ணாகடம் ப்ராப்ய
  ஹர்ம்யே ச ஆம்நாய கோஷிதே
ஆர்ஹத அத்வகத: பாப:
  ந அஹம் ஜீவிதும் உத்ஸஹே
அத மந்நாத சிந்ஹம் தே
  நிக்ஷிப இதி ஆநதோ அபவத்
உமாங்க ஆலிங்கித ஸ்வாங்கம்
  சங்கரம் லோக சங்கரம்

லம்ப வாரண ஸௌதேஸம்
  ஸ கானை ந: தசபி: ஜகௌ
லம்ப வாரண ஸௌதேச
  புவா பூதேள கேநசித்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாகீசஸ்ய புஜா வாஸ்தாம்
சூல சாக்வர முத்ரிதௌ"

தத: - பிறகு, பெண்ணாகடம் ப்ராப்ய - பெண்ணாகடத்தை அடைந்து, ஆம்நாய கோஷிதே - வேதங்களால் கோஷிக்கப்பட்ட, ஹர்ம்யே கோயிலில், ஆர்ஹத: சமணர்களுடைய அத்வகத: வழியைப் பின்பற்றிய, அஹம் நான், ஜீவிதும், உயிர் தரிக்க ந உத்ஸஹே - ஸஹிக்கமாட்டேன்.

அத: - ஆதலினால், மந் நாத - என் நாயக, தே - உம்முடைய, சிந்நம் இலாஞ்சனையை, நிக்ஷிப - பொறி, இதி - என்று ஆநத: அபவத் - வணங்கி நின்றார் உமாங்காலிங்கித ஸ்வாங்கம் உமை அங்கத்தினால் தன் அங்கத்தை தழுவுகின்ற, லோக சங்கரம் - உலகம் முழுமைக்கும் நன்மை பயப்பவராம், சங்கரரை, லம்ப வாரண ஸௌதேசம் தூங்கானை மாடப் பெருமானை, ஸ: - அவர், கானை தசபி: - பத்து பாடல்களினால் ஜகௌ - பாடினார்.

லம்பமான ஸௌதேச புவா - தூங்கானை மாடப்பரமனின், கேனசித் - ஒரு, பூதேன - பூத கணத்தினால், வாகீசஸ்ய நாவுக்கரசருடைய, புஜௌ தோள்கள் சூல சக்வர - சூலத்தாலம் இடபத்தாலும் முத்திரிதௌ - பொறிக்கப்பட்டவையாக ஆஸ்தாம் - திகழ்ந்தன. அப்பர் பெருமான் இங்கு பத்து பாடல்கள் பாடினார் என்று,

லம்பவாரண ஸௌ, தேசம் ஸ: காநை:
தசபி: ஜகௌ"

என உபமன்யு பக்த விலாசம் தெளிவாகக் குறிக்கிறது. ஆதலின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொன்னார்ந்த திருவடிக்கு ஓர் விண்ணப்பம்

என்ற பதிகத்தில் பத்துப் பாடல்கள் இருந்திருக்கின்றன. ஆனால் இன்று எஞ்சியவை மூன்றே பாடல்கள்தாம். மற்றவை மறைந்து போயின என்று அறிகிறோம். தேவாரப் பாடல்களில் பல மறைந்து போயின என்பதற்கு இதுவும் ஓர எடுத்துக் காட்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ருத்ரத்தில் பசுபதி

ஸ்ரீ ருத்ரத்தில் "நமோ வ்ருக்ஷேப்யோ ஹரிகேசேப்ய: பசூனாம் பதயே நம:"

என்று பசுபதிக்கு வணக்கம் கூறும் ஒரு மந்திரம் வருகிறது. ஸ்ரீ ருத்ரத்துக்கு பட்டபாஸ்கரர் என்பவர் எழுதியுள்ள உரையில் அருஞ்செய்திகள் பல உள்ளன. அதைக் காண்போம். இந்த மந்திரத்தில் பசூனாம் பதயே நம: என்று 'பசுபதிக்கு வணக்கம்' என முதலில் பொருள் கொள்ள வேண்டும். இங்கு ''பசு'' என்ற சொல் ஆடு மாடுகளாகிய விலங்குகளை மட்டும் குறிப்பது அல்ல. மாறாக இருகால் உள்ள உயிரினங்களையும், நாற்கால் உள்ள உயிரினங்களையும் சேர்த்து பொதுப்படையாக 'பசு' என்று குறிக்கிறது. இதை வேதமே கூறுகிறது. "ஏஷாம் ஈசே பசுபதி: பசூனாம் சதுஷ்பதாம் உதச திவிபதாம்" என்ற வேதம் நான்கு கால்கள் உடையவற்றையும் இரு கால் உடையவற்றையும் ''பசு'' என்று கூறுவதைக் காண்கிறோம். இதேபோல் மற்றொரு இடத்திலும் "ஏதாவந்தோவை பசவ: த்விபாத் சதுஷ்பாத்: ச" என்றும் கூறுகிறது. வேதம் பசு என்றால் என்ன என்று கூறுகிறது. இதிலிருந்து பசுபதி என்றால் விலங்குகளுக்கு மட்டுமல்ல எல்லா உயிரினங்களுக்கும் பதி - தலைவர் - அதிபதி என்று பொருள் கிடைக்கிறது. இங்கு மேலும் ஒரு வினா எழுகிறது. உயிரினங்களுக்கு ஈஸ்வரனைச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுட்டி எவ்வாறு ''பசு'' என்ற சொல் பொருந்தும்? பகவானுக்கு எவ்வாறு அவற்றின் 'பதி' என்ற சொல் பொருந்தும் என்பது வினா: இதன் பொருளைத் தெளி வாக்கத்தான்,

விருக்ஷேப்யோ ஹரிகேசேப்ய:

(பசூனாம் பதயே நம:) என இந்த வேதமந்திரம் கூறுகிறது. ''விருக்ஷேப்யோ ஹரிகேசோப்யோ'' என்றால் பசுமையான கேசங்கள் உடைய விருக்ஷங்கள் - மரங்கள் என்பது பொருள். இங்கு 'வ்ருக்ஷம்' என்பது சாதாரண மரத்தைக் கூறுவது அல்ல. சம்சாரமாகிய மரம் என்றுதான் பொருள். விருக்ஷம் என்ற சொல் சம்சாரத்தைக் குறிக்கும் என்று வேதமே பல இடங்களில் குறிக்கிறது. ''ஊர்த்வ மூலம் அவாக் சாகம்'' என்ற வேதப்பகுதியும், ''அஹம் விருக்ஷஸ்ய ரேரிவ'' என்ற பகுதியும் ''விருக்ஷம் யோ வேத சம்பிரதி'' என்ற பகுதியும் இந்த பொருளைத்தான் காட்டுகின்றன. இதையே ஸ்மிருதிகளும் கூறுகின்றன. ஆதலின் விருக்ஷம் என்பது சம்சார விருக்ஷத்தைக் குறிக் கும்.

பசுமையான கேசங்கள் என்று கூறும் ''ஹரி கேசப்ய: '' என்ற சொல்லுக்கும் இவ்வாறுதான் பொருள் கொள்ள வேண்டும். ''ஹரி'' என்றால் பச்சை வர்ணம் என்று பொருள். மரம் உயிரோடு ப்ாதுகாப்பாக வளர அதில் உள்ள பசுமையான இலைகள்தான் உதவுகின்றன. அது போல் மனிதனைப் பாதுகாத்து மேநிலைக்கு எடுத்துச் செல்பவை வேதத்தில் உள்ள விதிகள். இவை மரத்துக்கு பசும் இலைகள் எப்படியோ அப்படிப்பட்டவை. இதை யும் வேதமே கூறுகிறது. வேதத்தில் உள்ள சந்தங்கள் (செய்யுட்கள்) இம்மரத்தின் இலைகளாம்'' என்று 'சந் தாம்ஸி யஸ்ய பர்ணானி' என்ற வேதமே கூறுகிறது. (பர்ணானி என்றால் இலைகள் என்று பொருள்; சந்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாம்ஸி - சந்தங்கள்). எவ்வாறு தலையில் கேசங்கள் திகழ்கின்றனவோ அதுபோல பசுமையான இலைகளாக இவ்வேத சந்தங்கள் சம்சாரமாகிய மரத்துக்குத் திகழ்கின் றன. அதைத்தான் ''விருக்ஷேப்ய: ஹரிகேசேப்ய:'' என்று இம்மந்திரம் கூறுகிறது.

சம்சாரமாகிய பாசத்தால் கட்டப்பட்டுள்ளதால் உயிரி னங்களுக்கு 'பசு' என்ற பெயர் பொருந்துகிறது. அவ்வுயி ரினங்களை செயல்படுத்துவதால் பரமேச்வரனுக்கு ''பதி '' என்று பொருந்துகிறது. இவ்வாறு 'பசுபதி' என்பதின் பொருள் லிங்க புராணத்தில் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள் ளது. நான்முகன் தொடங்கி அசையா மரங்கள் வரை உள்ள அனைத்து ''பசுக்களும்'' தேவதேவனும் சூலந்தரித் தவனும் ஆன சிவபெருமானின் பசுக்கள் என்று சம்சாரத் தில் இருப்பதாக கூறப்படுகின்றன. அவற்றை நடாத்திச் செல்வதால் தேவதேவனாகிய சிவபெருமான் பசுபதி என்று அழைக்கப்படுகிறார். பக்தியால் அவரை வணங் கும்போது அவரே, அவைகளை பந்தத்தில் இருந்து விடுவிக்கிறார். இவ்வாறு ஸ்கந்த புராணம், சிவபுராணம், கூர்ம புராணம் ஆகிய புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

அனைத்திற்கும் இவனே ஈசன் என்று ''யேஷாம் ஈச:'' என்று வேதம் கூறுகிறதே. அதற்கும் இதுதான் பொருள். நான்முகன் முதல் தாவரம் வரை, இருகால், நாற்கால் உயிரினங்கள் என்னும் சொல் 'சராசரங்கள்' அனைத்தையுமே குறிக்கும். பசு, குதிரை, எருமை முதலியவற்றை உடையவன் எவ்வாறு கயிற்றால் கட்டி தன்வயப்படுத்தி அவற்றைக் காப்பாற்றி அவற்றுக்கு உபயோகமாக்குகிறானோ அதுபோல் தான் நான்முகன் முதல் தாவரம் வரை உள்ள சராசரங்கள் அனைத்துக்கும் சிவனே, பதியாகிறான். அதனால்தான் 'பசுபதி' என்று அழைக்கிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இங்கு மற்றும் ஒரு பொருள் குறித்து ஆய்தல் வேண்டும். வேதத்தில் ஒரு இடம் வருகிறது. திரிபுராசுரர்கள் மூவுலகையும் பீடித்தபோது, துன்புறுத்தியபோது பிரும்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களால் அவர்களை அழிக்க முடியவில்லை. ஆதலின் ருத்ரனிடத்தில் வந்து முப்புரத்தை அழித்து தங்களைக் காக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அப்பொழுது ருத்ரன், ''உங்களைப் பசுக்களாகவும், என்னை அதிபதியாகவும் வரம் வேண்டுங்கள். அப்பொழுது என்னால் உங்களைக் காத்து முப்புரத்து அசுரர்களை அழிக்க முடியும்'' என்று கூறினார். அதன்படி தேவர்கள் ருத்ரனை, ''பசுபதி என்று வரித்தனர். ஆதலால் அவர் 'பசுபதி' என்று குறிப்பு உள்ளது. இதிலிருந்து 'பசுபதி' என்ற சொல் வரத்தினால் பெறப்பட்டது என்று ஆகிறது அல்லவா? இதை எவ்வாறு விளக்குவது என்பது ஐயம்! இதன் விடை பின்வருமாறு. உலகம் அறியாமையில் மூழ்கி இது பசு, இது பாசம், இது பதி என்று பிரித்து அறிய ஒண்ணாமல் தாமாகவே முக்தி பெற இயலாது. எனவே ருத்ரன் பரமகருணையினால் தேவர்கள் தன்னை 'பசுபதி' என்று ஏற்ற வரத்தின் மூலமாக தான் பசுபதி என்று உலகுக்கு வெளிப்படுத்துகிறார். இவை சிவபுராணத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஸ்வதஸ் ஸித்தம் பதித்வம் மே
யுஷ்மாகம் பசுதாபி ச
ததேதத் த்ருடயாம் யத்ய
வர பந்த விநோதனை:

இதன் பொருள் தேவர்கள் வந்து வரம் வேண்டிக் கொண்டதால் சிவபெருமானுக்கு 'பசுபதி' என்ற பெயர் புதிதாக ஏற்பட்டது அல்ல. அவர் என்றும் 'பதி'தான். தேவர்கள் காப்பாற்றப்பட வேண்டிய பசுக்கள்தாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அதனாற்தானே தங்களைக் காக்க வேண்டும் என்று ருத்ரனிடம் வேண்டினார்கள்). இதை உலகில் வெளிப்ப டையாக தெரிவிக்கத்தான் வரம் என்னும் விளையாட்டு மூலமாக ருத்ரன், தன்னை 'பசுபதி' என்று காண்பித்தார். மேலும் 'சம்சாரம்' என்ற பந்தமானது அநாதியானது என்று கூறுகிறோம். அந்த பந்தத்தை ஏற்படுத்திய அதன் பதியும் - பசுபதியும் அனாதிதான் என்பதில் ஐயமிருக்க முடியாதல்லவா.

ஆதலின் பசுபதி என்ற சொல் வழக்கு என்றென்றும் ருத்ரனுக்கு இருந்ததுதான். அப்பேர்பட்ட பசுபதிக்கு நமஸ்காரம் என்று

நமோ விருக்ஷேப்யோ ஹரிகேசேப்ய:
பசூனாம் பதயே நம:

என்று ருத்ரத்தில் உள்ள மந்திரம் கூறுகிறது.

இதைத்தான் அப்பர் பெருமான்,

''வானோர்க்கெல்லாம் அதிபதியே'' என்றும் பாடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வெட்டும் அப்பர் பெருமான் காலமும்

ஒரு நாட்டின் வரலாற்றை அறிய முற்படும்போது, அந்நாட்டு இலக்கியங்கள் அதற்குத் துணை புரிகின்றன. அந்நாட்டுக் கல்வெட்டுகளும் பெரிதும் உதவுகின்றன. அத்துடன் அக்காலத்தார் விட்டுச் சென்ற கலைப்பொருள் களும் கட்டிடங்களும் துணை புரிகின்றன. ஒரு குறிப் பிட்ட நிகழ்ச்சியை அறிய இவற்றில் ஏதாவது ஒன்று பயன்படலாம். ஆயினும் அதன் முடிவு கருத்து வேறுபா டுகளுக்கு இடம் கொடுக்கக் கூடும். உதாரணமாக இலக்கியத்திலிருந்து ஒரு வரலாற்று நிகழ்ச்சி பெறுகி றோம் என்று வைத்துக் கொள்வோம். இலக்கியங்கள் வரலாறு எழுதுவதற்காக தோன்றியவை அல்ல. ஆதலின் சொல்லும் பொருளை சற்று மிகைப்படுத்தி நயம்பட உரைப்பவையாகும். எனவே இலக்கியம் கூறும் வர லாற்று நிகழ்ச்சிகள் அப்படியே கூறப்பட்டுள்ளனவா அன்றி மிகைப்படுத்தப் பட்டுள்ளனவா என்பதில் கருத்து வேறுபாடு தோன்றும். இலக்கியத்தைக் காட்டிலும் கல் வெட்டுக்களும் அக்கால செப்பேடுகளும் வரலாற்று நிகழ்ச்சிகளை சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. அவற்றி லும் ஓரிரு இடர்பாடுகள் ஏற்படத்தான் செய்கின்றன. அதேபோன்று கிடைத்த கலைப்பொருள்களை மட்டும் வைத்துக் கொண்டு ஏதும் கூறிவிட முடியாது. அவற்றில் ஒரு சான்று கூறுவதை மற்ற சான்று உறுதிப்படுத்தினால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அது மிகவும் சிறப்புற்றதாகும். இம்மூன்று சான்றுகளும் இணைந்து ஒரு வரலாற்று நிகழ்ச்சியைக் கூறுமேயானால் அதைக்காட்டிலும் சிறந்த வரலாற்று குறிப்பு எந்நாட்டிலும், எக்காலத்திலும் கிடைப்பது அரிது. தமிழக வரலாற்றில் அதுபோன்று மூன்று சான்றுகள் ஒரே வரலாற்று நிகழ்ச்சியைக் கூறுகின்றன. அதை நாம் ஐயம் திரியற அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. காரணம், சிலர் அதை வேண்டும் என்றே மறைத்தும், திரித்தும் எழுதுகின்றனர். ஆதலின் அச்சான்றுகளை இங்கு ஆய்கிறோம்.

அப்பர் பெருமான் மகேந்திரவர்ம பல்லவனை சமணத்திலிருந்து சைவத்துக்கு மாற்றினார். மகேந்திரன் என்று பெயர் குறிக்காவிட்டாலும் அப்பரால் சைவத்திற்கு மாற்றப்பட்டவன் காடவன் என்று சேக்கிழார் கூறுவார். ஆதலின் அவன் பல்லவன் என்பதில் ஐயமில்லை. அப்பர் பெருமான் ஞானசம்பந்தரின் சம காலத்தவர். ஞானசம்பந்தர் நின்றசீர் நெடுமாறனின் சமகாலத்தவர். அதாவது கி.பி.7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஆதலின் அப்பரும் 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பதில் தவறில்லை. கி.பி. 7ம் நூற்றாண்டில் நான்கு பல்லவ அரசர்கள் சிறப்பாக ஆண்டிருக்கிறார்கள். அவர்களில் முதல் மகேந்திரன், முதல் நரசிம்மனாகிய மாமல்லன், இரண்டாம் மகேந்திரன், முதல் பரமேச்வரன் என்பவராகும். இவர்களில் நரசிம்மன், இரண்டாம் மகேந்திரன், முதல் பரமேசுவரன் ஆகிய மூவரும் சமணத்தைத் தழுவியதில்லை என்பது கல்வெட்டுகளாலும், செப்பேடுகளாலும் தெளிவு. ஆதலின் முதல் மகேந்திரவர்மன் ஒருவனே எஞ்சுகிறான். இவன் சமண சமயத்தைத் தழுவி பின்னர் சைவத்துக்கு மாறினானோ என்பதே கேள்வி? இக்கேள்விக்கு தெளிவான பதிலை திருச்சிராப்பள்ளியில் உள்ள ஒரு கல்வெட்டு கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அங்கு மலையில் ஒரு குடைவரைக்கோயில் உள்ளது. அதை குடைவித்தவன் மகேந்திரவர்மன் என்று அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. அங்கு இருவகையான கல்வெட்டுகள் உள்ளன. ஒருவகை மகேந்திரனின் பல பட்டப் பெயர்களை கூறுகின்றன. மற்றது செய்யுள் வடிவிலுள்ளது. இவற்றிலிருந்து இது சிவபெருமானுக் காக குடைவிக்கப் பட்டது என்று அறிகிறோம். இதன் பெயர் லலிதாங்குர பல்லவேச்சுரம் என்றும் அறிகிறோம்.

இக்குடைவரைக் கோயிலில் ஒரு கருவறை உண்டு. அதில் சிவலிங்கம் பிரதிட்டை செய்திருந்த சதுரமான குழி நடுவில் உள்ளது. அபிஷேக நீர் வீழ்கின்ற இடத்தில் அதைப்பிடிக்க தோண்டப்பட்ட சிறு குழியும் உள்ளது. ஆனால் அங்கு சிவலிங்கம் இப்போது இல்லை. இக்கரு வறையின் எதிரில் சிவபெருமானின் சிற்பம் கங்கைவார் சடைகரந்தாராக மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அதன் அருகில் வடமொழிச் செய்யுட்கள் உள்ளன. அதில் ஒன்று நம் வரலாற்றுக்கு மிகவும் இன்றியமையாதது. இவற்றை நோக்கும்போது மகேந்திரனே இச்செய்யுட் களை இயற்றினானோ என எண்ணத் தோன்றும். காப்பி யம், நாடகங்கள் இயற்றுவதில் வல்லவன் மஹேந்திரன் பல துறைகளில் சிறந்திருந்தவன் என்றும் பிற இடத்தி லுள்ள அவனது கல்வெட்டுகள் தெளிவாக்குகின்றன. அச்செய்யுளை முதலில் கீழே தருகிறேன். அதற்கு முன் னர் ஒன்று கூறல் வேண்டும். இச்செய்யுளுக்குப் பொருள் கூறுவது கடினம். இதை அறிய வடமொழி அணியிலக்க ணம் அறிந்திருக்க வேண்டும். தருக்க சாத்திரத்தையும் பயின்றிருக்க வேண்டும். தங்களது பதிகங்களால் தமிழ கத்தை தெய்வீகத்திருப்பதியாக அமைத்தார்களே நாயன் மார்களும் ஆழ்வார்களும், அவர்களது சிறப்பால் மலர்ந்த தமிழக சமய வரலாறு அறிந்திருக்க வேண்டும். இவை அறிந்தோருக்கு இச்செய்யுள் உள்ளங்கை நெல்லிக்கனி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போல் விளங்கும்.

அச்செய்யுள் வருமாறு:

குணபர நாமனி ராஜனி
அனேன லிங்கேன லிங்கினி ஞானம்

பிரததாம் சிராய லோகே
விபக்ஷவிருத்தே: பராவிருத்தம்

இச்செய்யுளிலிருந்து மூன்று பொருள்களை நாம் அறிகிறோம்.

1. குணபரன் என்னும் மன்னன் புறச் சமயத்திலிருந்து லிங்க வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட (சைவ)சமயத்தைத் தழுவினான்.
2. இவன் தர்க்க சாத்திரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான்.
3. சிலேடை அணியாக இச்செய்யுளை ஆக்கியுள்ளான் என்பதாகும்.

இப்பொருள்களை ஈண்டு கவனிப்போம். சிலேடை ஆதலின் இதற்கு இரண்டு முறை பொருள் கூறல் வேண்டும்.

1. குணபர நாமனி ராஜனி - குணபரன் என்னும் பெயருடைய அரசனிடத்தில் விபஷவிருத்தே: பராவிருத்தம்: புறச்சமயத்தில் இருந்து திரும்பியதும்; அனேன லிங்கேன: இங்குள்ள (இக்குடைவரைக் கோயிலில் உள்ள) லிங்க உருவினால்; லிங்கினி ஞானம்: லிங்கவிஷயமானதுமான ஞானம் (இருக்கிறது என்பது) லோகே; உலகில் சிராய பிரததாம்: நெடுங்காலம் பரவட்டும், என்பதாகும். இங்கு புறச்சமயத்திலிருந்து சைவனாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாறினான் என்பதை கல்வெட்டு அழுத்தம் திருத்தமாக கூறுகிறது.

2. இச்செய்யுளில் லிங்கம், லிங்கின், விபக்ஷவிருத்தம், பராவிருத்தம், ஞானம் எனப்பல சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவை தருக்க சம்பந்தமான சொற்கள். பக்கம் என்பது எவ்விடத்தில் ஒன்றை அனுமானிக்கிறோமோ அவ்விடம். விபக்கம் என்பது மாற்று பக்கம். அங்கு நாம் அனுமானிப்பது இருக்கக் கூடாது. லிங்கம் என்பது காரணம். எந்த காரணத்தைக் கொண்டு அனுமானிக்கிறோமோ அது. லிங்கின் என்பது அனுமானத்தில் நிரூபிக்கப்படுவது.

குணபரன் என்னும் ராஜனிடத்தில் (இடம்)

விபக்ஷவிருத்தே: பராவிருத்தம் - பிறரிடத்தில் இல்லாதது

அனேன இலிங்கேன - இந்தச் செய்யுளின் காரனத்தினால்

இலிங்கினி ஞானம் - அனுமானன் எனும் அறிவு சிராய பிரததாம் - நெடுங்காலம் பரவட்டும்

இங்கு ஒன்று கூற வேண்டும். மகேந்திரனுக்கு பல பட்டப் பெயர்கள் உண்டு அவற்றில் அனுமானன் என்றும் உபமானன் என்றும் இரண்டு பெயர்களையும் கொண்டிருந்தான். இவ்விரண்டுப் பட்டங்களும் திருச்சி மலைக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன. செய்யுளுக்கு இரண்டாவதாக கூறப்பட்ட பொருள் ''இவன் அனுமானன்'' எனக் குறிக்கிறது. அனுமானன் என்னும் பெயர் பிறரிடமில்லை. இவனுக்கு இருக்கிறது என்பதாம். இதிலிருந்து இம்மன்னனுக்கு தர்க்க சாத்திரத்தில் உள்ள ஈடுபாடும் புலமையும் தெளிவாகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இங்கு மேலும் ஒன்றைக் கூற வேண்டும். சுப்பிரபேத ஆகமம் என்னும் சைவ ஆகமம் ஒன்று தமிழகத்தில் சிறப்புப் பெற்றது. அதில் அறிவைப் பெறுகின்ற கரணங் கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் தர்க்கமும் (அனுமான மும்) ஒரு கரணமாகும்.

லிங்கேன லிங்கினி விஞானம்
அனுமானம் இதி ஸ்மிருதம்

என்று அது அனுமானம் என்னும் கரணத்திற்கு இலக்க ணம் கூறுகிறது.

புகழ்பெற்ற தமிழக சைவ ஆகமம் அனுமானத்திற்கு எந்த சொற்களை உபயோகித்துள்ளதோ அதே சொற்கள் இங்கு மகேந்திரனின் கல்வெட்டில் உள்ளதையும் காண்கி றோம். ஆதலின் மகேந்திரன் சைவத்தை தழுவியது மட்டுமல்ல. சைவ மரபில் வந்துள்ள தர்க்க சாத்திரத்தி லும் ஈடுபட்டான் என்பது வெளிப்படை.

இதிலிருந்து நமக்குத் தெளிவாக மகேந்திரன் புறச்சம யத்திலிருந்து சைவத்துக்கு மாற்றப்பட்டான் என்பதும், லிங்கத்தை வழிபட்டான் என்பதும், சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஈடுபாடு கொண்டான் என்பதும் தெளிவா கத் தெரிகிறது.

ஆதலின் இலக்கியம், கல்வெட்டு, கலை ஆகிய மூன்று சான்றுகள், மகேந்திரனே ஒரு புறச் சமயத்திலி ருந்து சைவ சமயத்தை தழுவினான் என்பதை ஒருங்கே சுட்டுகின்றன. அப்புறச்சமயம் சமணம் என்பதும், அப்பர் பெருமானால் அவன் சைவத்துக்கு மாற்றப்பட்டான் என்பதும் திருத்தொண்டர் புராணம் கூறும் செய்திகளா கும். ஆதலின் அப்பர் பெருமான் மகேந்திரவர்மன் காலத்தவர். 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதில் இனி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐயத்துக்கு இடமே இல்லை.

சிலர் இக்கல்வெட்டில் இலிங்க வழிபாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று கூறி, வேறு விதமாகப் பொருள் கூறுகின்றனர். அவர்களது கூற்று தமிழகத்தில் 8ம் நூற்றாண்டுக்கு முன்னர் லிங்கவழிபாடு இல்லை என்பதாகும். செய்யுளியல் தெரிந்தவர்கள் ஒன்று தெளிவாக அறிவர். சிலேடை பயன்படுத்தப்பட்ட இடங்களில் இரண்டு பொருள்கள் பெறப்படவேண்டும். ஒன்றை மட்டும் கொண்டு மற்ற ஒரு பொருளை விட்டுவிடுவது அறிவுடைமை ஆகாது.ஆதலின் இரண்டு பொருள்கள் உண்டு என்பதை இங்கு காட்டியள்ளோம். அடிப்படையிலே வந்தவை என்றும் நிரூபித்துள்ளோம். ஆதலின் கி.பி. 7ம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழகத்தில் லிங்க வழிபாடு இருந்தது என்பது எமது அசைக்க முடியாத கருத்து. இச்செய்யுள் வடமொழியில் உள்ளதாலும், எழுதுவோர் ஆங்கிலத்தில் எழுதுவதாலும், தமிழறிஞர் கவனத்தை இது கவர்வதில்லை என்ற காரணத்தால் தமிழறிஞன் கவனத்துக்கு இதைக் கொண்டு வருகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருத்தொண்டத் தொகை தோன்றிய சூழல்

“தென்னாடு தழைக்க, சைவம் தழைக்க சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'திருத்தொண்டத் தொகை' பாடினார்கள். இந்தப் பதிகத்தைப் பின்பற்றியே பின்னர் நம்பியாண்டார் நம்பி அந்தாதியும், சேக்கிழார் பெரிய புராணமும் தோன்றின. இதை ஒட்டி தெலுங்கு, கன்னடம், சம்ஸ்க்ருதம் ஆகிய மொழிகளில் எல்லாம் ஆந்திரம், கர்னாடகம், தமிழ்நாடு ஆகிய தென்னாடு முழுவதும் சைவ நாயன்மார்களின் வரலாறு பல நூல்களில் எழுதப் பட்டன. அது தென்னாட்டு மக்களுடைய வாழ்வில் எந்த அளவுக்கு ஒன்றியுள்ளது? பண்படுத்தியுள்ளது? என்று காணும்போது வியப்பு மேலிடுகிறது.

இவ்வளவு சிறந்த திருத்தொண்டத் தொகையை சுந்தரர் எந்த சூழ்நிலையில் இயற்றினார் என்பதே சுவையான வரலாறு. இதை 'விறன்மிண்டர்' வரலாற்றில் கோடிகாட்டிச் செல்கிறார் சேக்கிழார் பெருமான். அந்த சூழ்நிலை பல கற்பனைகளுக்கு இடம் கொடுத்துள்ளது. பல ஆய்வுகளுக்கும் இடமளித்துள்ளது. அந்த சூழ்நிலையைப் பற்றி, பெரிய புராண ஆராய்ச்சியை மிகச் சிறப்பாக மேற்கொண்ட காலஞ்சென்ற டாக்டர் இராசமாணிக்கம் அவர்கள் தமது நூலில் ஒரு விரிவான குறிப்பு கொடுத்துள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிருங்காரம் நிறைந்த வேடத்தில் கோயிலுக்குள் வந்தார். அங்கிருந்த அடியார் களை கண்டுகொள்ளாது, வணங்காது கோயிலுக்குள் செல்ல விறன்மிண்டர் வெகுண்டார். சுந்தரரையும், தியா கேசரையும் தமக்கு 'புறகு' என்றார். அந்த சூழ்நிலையில் தான் பெருமானின் அருளால் சுந்தரர் திருத்தொண்டர்க ளின் பெருமையைப் புகழ்ந்து தொகை பாடினார் என்ற செய்தி பெரிய புராணம் ஏட்டுப் பிரதி ஒன்றில் இருந்தி ருக்கிறது. அது இடைச்செருகலாக இருக்க வேண்டும். இது எவ்வாறு வந்தது'' என்று தெரியவில்லை என்று குறிக்கிறார்.

சுந்தரரின் தூர்த்த வேடம் தெலுங்கு பசவ புராணத் தில் காணப்படுகிறது. இந்நூல் கி.பி.13ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். அவ்வரலாறு சேக்கிழார் காலத்திலும் தெரிந்திருக்க வேண்டும். அதை சேக்கிழார் ஒதுக்கியிருக்க வேண்டும் என்பதும் இராசமாணிக்கனாரின் குறிப்பு.

உபமன்யு பக்த விலாஸம்

சம்ஸ்க்ருத மொழியில் கி.பி.16ம் நூற்றாண்டில் பெரிய புராணம் மொழிபெயர்க்கப்பட்டது. அது உப மன்யு பக்தவிலாஸம் என்ற பெயரில் இன்றும் உள்ளது எனக் கண்டுள்ளோம். அந்த நூலில் விறன் மிண்டர் சரிதம் விரிவாக குறிக்கப்பட்டுள்ளது. அதில் 'விறன்மிண்டர்', 'வீரோத்படர்' என்று அழைக்கப்படுகிறார். உபமன்யு பக்த விலாஸத்தில் விறன்மிண்டர் கதையில் சுந்தரர் தியாகேசர் கோயில் வரும் வரை பெரிய புராணத்தின் மொழிபெயர்ப்பாகவே உள்ளது. பின்னர் வேறுபடும் அப்பகுதியைப் பார்ப்போம்.

''சுந்தரர் கணிகையின் வீட்டிலிருந்து நேரே கோயி லுக்கு வருகிறார். அவர் உடலில் இன்பம் துய்த்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறியீடுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. அவரது மார்பில் அப்பெண் அணிந்திருந்த குங்குமச் சாந்து காணப்படுகிறது. அவர் அணிந்திருந்த கஸ்தூரி திலகத் தின் வாசனை திக்கெங்கும் பரவி நிறைந்தது. காதில் திகழ்ந்த குண்டலங்களும், கழுத்திலிருந்த ருத்ராக்ஷ மாலையும், ஒளிவிட்டு பிரகாசித்தன. அவரது நீண்ட புஜங்களும், கம்பீர தோற்றமும் சிறப்பாக வெளிப்பட் டன. தன்னுருவால் அவர் மன்மதனையும் வென்றவர் போல் காட்சியளித்தார். அந்நிலையில் அவர் சிவனடியார் களை மதிக்காமல் சென்றார். (''அவமத்ய மஹாபக்தான்'' என்று இங்கு உபமன்யு பக்த விலாஸம் கூறுகிறது). மெல்ல மெல்ல கோயிலுக்குள் வரும் சுந்தரரின் தோற்றத் தைக் கண்டு அவரைக் கொன்றுவிட விறன்மிண்டர் மனம் கொண்டார். ஆதலின் சுந்தரர் பயந்து கருவறையினுள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டார். சிவனடியா ருக்கு புறம்பானவன் இவன் என விறன்மிண்டர் கூறி னார். மேலும் சிவனடியார் பால் வினயமற்ற இவனிடம் உனக்கு பிரியமிருக்குமானால் சிவனே நீயும் புறம்பான வன்தான் என்று விறன்மிண்டர் பரம்பொருளையும் கூறி னார். பரமனார் தன்னைச் சரணடைந்த சுந்தரனை, ''விறன் மிண்டர் முதலான தொண்டர்களைப் பாடு; பயத்தை ஒழி'' என்றருளிச் செய்தார். அதன்படி சுந்தரர் தொண்டர்களைப் பாடினார். அடியார்கள் எல்லாம் அப் பாடல் கேட்டு ஆனந்தித்தனர். அங்கிருந்து தேவாச்ரய மண்டபம் அடைந்தனர். இவ்வாறு சுந்தரர் திருத்தொண் டத் தொகை பாடக் காரணமாயிருந்த விறன்மிண்டர் தொண்டர்களில் முதல்வராகத் திகழ்ந்து பரமனின் திரு வடி நிழலடைந்தார் என்று உபமன்யு பக்த விலாஸம் கூறுகிறது. விறன்மிண்டர்தான் திருத்தொண்டத் தொகை பாட காரணமாயிருந்தார் என ''ஸ்ரீஸௌளம்யநாத (சுந்தரநா தர்) கதித சம்புபக்த பிரபந்த ஹேது:'' என்று கூறுவது காணத் தக்கது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்நூலில் உள்ள சில செய்திகள் சிந்திக்கத் தக்கவை. சுந்தரர் மன்மதனை விஞ்சும் கோலத்தில் வந்தது; பரவையிடமிருந்து வந்தது; அடியார்களை மதியாது சென்றது; விறன்மிண்டர் அவரைக் கொல்ல நினைந்தது; பரமன் அருளால் திருவாரூர் கர்ப்பக்கருஹத்திலிருந்து திருத்தொண்டத் தொகை பாடியது ஆகிய செய்திகள் உள்ளன. இந்நூலில் தூர்த்தவேடம் என்ற சொல் கூறப்படவில்லை.

அகஸ்திய பக்த விலாஸம்

அறுபத்து மூவர் புராணத்தை வடமொழியில் கூறும் மற்றொரு நூல் அகஸ்திய பக்த விலாஸம் என்பது. இந்நூலிலும் விறன்மிண்டர் வரலாறு இடம் பெற்றுள்ளது. இந்நூலில் விறன்மிண்டரைப் பற்றிய வரலாறு சுவையாக உள்ளது. இவருக்கு சிறுவயது முதல் சிவனடியாரிடமும் சிவனிடத்தும் பரமபக்தியாம். ஆதலின் யாராகிலும் சிவனடியார்களுக்கு விரோதமாக நடந்தால் அவர்களை துண்டிப்பதற்காக கூர்மையான ஒரு பரசுவை (மழு) தரித்திருந்தாராம். கேரளத்தில் பிறந்த இவர் பல சிவ க்ஷேத்ரங்களை தரிசித்து திருவாரூர் வந்தார். அங்கு வழிபாடு செயயும் 12,000 வர்களை வணங்கி அவர்களது அடியானாக வணங்கினார். அவ்வமயம் ஒரு நாள் சுந்தரர் தாம்பூலம் தரித்துக் கொண்டு கணிகையிடம் சென்று அவளது வண்ணம் ஒட்டியுள்ள துணியுடன் தூர்த்தக் குறிகளுடனும், கோபுரத்தைக் கடந்து மண்டபத்தில் குழுமி மஹேசனை வணங்கும் அடியார்களை மதியாது, அவர்களின் நடுவிருக்கும் விறன்மிண்டரையும் பாராது அந்தர்க்ருஹம் நுழைந்து கர்ப்பக்ருஹ வாயிலை அடைய விறன்மிண்டர் சீற்றம் கொண்டு சுந்தரரை நோக்கி, 'வித்தையால் மமதை கொண்டுள்ளவனே அதுதான் மஹா துரோகங்களுக்கு சாதனமாக அமைகிறது. நீ இன்று சிவனடியாருக்கு செய்துள்ளது சிவத்ரோஹம். வெளியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வா. உன்னை இன்று தீர்த்துக்கட்டப் போகிறேன். சிவபெருமான் உன்னிடத்தில் பிரியம் காட்டுவாரானால் அவரையும் புறக்கணிப்பேன்'' என்று ஆக்ரோதித்தார். சுந்தரர் பயந்து பரமனை வேண்ட அடியார்கள் விறன்மிண்டரை வேண்ட அடியார்களை திருத்தொண்டத் தொகையால் பாடினார். அதைக் கேட்டு மகிழ்ந்து அடியார்கள் விறன் மிண்டரை வேண்ட அடியார்களின் வேண்டுகோள்படி மிண்டர் சீற்றம் தணிந்து சுந்தரரின் நண்பரானார் என்றுள்ளது. இங்கு சுந்தரரைப்பற்றி கீழ்க்கண்டவாறு உள்ளது

அபரித்யக்த தாம்பூல கபோலோ தூர்த்த லக்ஷண;
வேச்யாங்கராக ஸம்ஸக்த சூக்ஷ்ம வஸ்திராவ குண்டித:!!

இந் நூல் 'தூர்த்த வேடத்தில்' சுந்தரர் வந்தார் என்ற செய்தியும், அவரை தமது மழுவால் விறன் மிண்டர் வெட்ட விரைந்தார் என்ற செய்தியும் காண்கிறோம். இது காலத்தால் பிற்பட்டது. ஆதலின் இதை இத்தோடு விட்டுவிடுகிறோம்.

பசவபுராணம்

கி.பி.13ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பசவபுராணத்தில் சுந்தரர் தூர்த்த வேடத்தில் வந்தார் என குறிப்பிடுகிறார். இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர் அவர்கள் தமது முன்னோர் வைத்திருந்த பெரிய புராணச் சுவடிகளிலேயே இச்செய்தி உள்ளது என்றும் தடுத்தாட்கொண்ட புராணத்தில் 17 பாடல்களில் இது குறிக்கப்பட்டுள்ளது என்றும் எழுதியுள்ளார்.

பெரிய புராணம்

தடுத்தாட்கொண்ட கதையில் பெரிய புராணத்தில் சுந்தரர், கோயிலுக்குள் செல்வதற்கு முன் தேவாசிரியன் மண்டபத்தில் உள்ள அடியார்களைப் பார்க்கிறார். இந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடியார்களின் அடியானாக யான் மாறு நாள் என்றோ என்று இறைவனை இறைஞ்சுகிறார்.

''இவர்க்கு யான் அடியானாகப் பண்ணுநாள் எந்நாள்''

என்று பரமர் தாள் பரவச் சென்றார் என்று சேக்கிழார் கூறியதைக் காட்டி சிவக்கவிமணி அவர்கள் சுந்தரர் அடியார்களை மதியாது சென்றார் என்று கூறுவது பொருந் தாது. இதைக் கூறும் பாடல்களை சேக்கிழார் எழுதியி ருக்க முடியாது. பிற்சேர்க்கையாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். சேக்கிழார் சான்றுகளோடும், பெருங்கவனத்துடனும் தமது நூலை இயற்றியுள்ளதை உலகமறியும். கவனக் குறைவாக முன்னுக்குப் பின் முரணாக எழுதுபவர் அல்ல சேக்கிழார். இது சேக்கிழா ரின் சிறப்பையும் ஆற்றலையும் அவர்நூல்வழி ஆய்ந்தோ ருக்கு தெள்ளென விளங்கும். இதை உபமன்யு பக்த விலாஸமும் உறுதி செய்கிறது. அதன்படி தடுத்தாட் கொண்ட தருணத்தில் சுந்தரர் கோயிலை நெருங்கும் போது தேவாச்ரய மண்டபத்தில் அடியார்களைக் காண்கி றார். வணங்கத்தக்க இவ்வடியார்களின் அடியானாக என்று விளங்குவேன் என்று எண்ணிக் கொண்டே கோயி லினுள் நுழைகிறார் என்றே உள்ளது.

பரித: ஸேவிதோ விப்ரை: சம்போ: ஶ்ரீகோபுரம் யயௌ
தந்நத்வா பிரவிசந் நந்த: ப்ராப்ய தேவாச்ரய ஸ்திதான்
நத்வா நம்ய ஸமாந் பக்தான்
கதாஹம் கிங்கரோஸ்மியஹம்
தத்பிருத்ய பிருத்ய இத்யேத்ய
துவாரம் கர்ப்பக்ருஹஸ்ய ஸ:

பெரிய புராணத்தில் உள்ளதை அப்படியே உபமன்யு பக்த விலாஸம் குறிப்பதைக் காண்கிறோம். ஆதலின் அடியார்களை பக்திப் பெருக்கோடு எண்ணிக் கொண்டே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளே சென்றார் என்பதே அங்கு பொருந்தும்.

இப்பொழுது அச்சிட்டுள்ள பெரிய புராணப் பதிப்பு கள் அனைத்திலும் உள்ள ஒரு பாடலைக் காண்போம். விறன்மிண்டர் காதையில் சுந்தரர் கோயிலினுள் நுழைந் ததை சேக்கிழார் குறிக்கிறார். தேவாசிரியனிடத்தில் இருந்த அடியார் குழாத்தை தொழுது வந்தனையாது ஒருவாறு ஒதுங்கிச் சென்றார் என்றே சேக்கிழார் குறிப்பிடு கிறார்.

> "திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரியனிடப் பொலிந்து
> மருவா நின்ற சிவனடியார் தம்மை தொழுது வந்தணையாது
> ஒருவாறு ஒதுங்குவன் தொண்டன் புறகென்று"!!

என்றுள்ளதைக் காண்கிறோம். முன்னர் அடியார்களை நினைந்து சென்ற சுந்தரர் ஏன் அவர்களை வந்தணையாது ஒருவாறு ஒதுங்கிச் சென்றார் என்பதற்கு சேக்கிழார் பாடல்களில் விளக்கம் இல்லை.

சேக்கிழாரின் பெரிய புராணத்தின் நேர் மொழிபெ யர்ப்பான உபமன்யு பக்த விலாஸத்தில் இது முன்குறித்த படி விளக்கமாக காணப்படுகிறது. தேசிகரின் பெரிய புராண பதிப்பில் முன்னர் இருந்த 17 பாடல்களின் செய்தியே உபமன்யு பக்த விலாஸத்தில் காணப்படுகிறது.

உபமன்யு பக்த விலாஸம் 16ம் நூற்றாண்டில் இயற் றப்பட்டது என்று கண்டோம். ஆதலின் 16ம் நூற்றாண்டுக் கும் முன்னரே, "சுந்தரர் மன்மதன் போன்ற வேடத்தில் வந்தார். விறன்மிண்டர் வெகுள திருத்தொண்டத்தொகை இயற்றப்பட்டது என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிகிறோம். தேசிகர் பதிப்பின் 17 பாடல்கள் கி.பி.16ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை என்றும் அவற்றையே உபமன்யு பக்த விலாஸம் மொழிபெயர்த்துள்ளதா என மேலும் ஆய்தல் வேண்டும். அது ஆம் எனில் கி.பி.16ம் நூற்றாண்டுக்கும் முன்னரே அப்பாடல்கள் பெரிய புரா ணத்தில் இடம் பெற்றிருந்தன.

இங்கு மேலும் சில கருத்துக்கள் சிந்திக்கத் தக்கவை. சிவபெருமானின் அணுக்கராகத் திகழ்ந்த ஆலால சுந்தர ரின் மனதில் மலர் எடுக்க வந்த கமலினி, அநிந்திதை இருவரையும் கண்டதில் சஞ்சலம் ஏற்பட்டது. ஆதலின் தான் பரமர் அவரை பூவுலகில் அவதரித்து காம இன்பம் துய்த்து பின்னர் தன்னிடை வர அருள் செய்தார். சுந்தரர் பூவுலகு வந்ததே இன்பம் துய்ப்பதற்குத்தான். இரு பெண்களையும் காதலித்து, மோஹித்து, பரமனையே தூதுவிடுமளவுக்கு இன்ப நினைவில் திளைத்தவர் என்ப தால் கோயிலுக்கு பரவை வீட்டிலிருந்து இன்பம் துய்த்த மேனியோடு வந்தார் என்பது அவரது பாத்திரத்துக்கு முரண்பட்டதல்ல. ஏற்புடையதே. இரண்டாவது, விறன் மிண்டர் அடியார்களின் அடியார். அவருக்கு ஒரு சிறப்புக் கிட்டவே, அடியார்களைக் காணாது சுந்தரர் ஒதுங்கிச் சென்றார் என்று கூறி, விறன்மிண்டர் வெகுள, உலகுக்கு 'திருத்தொண்டத் தொகை' கிட்டியது என்று ஏற்றம் பெற காட்சி அமைக்கப்பட்டுள்ளது எனக் கொள்ளலாம். மூன் றாவதாக சேக்கிழார் காலத்திலேயே இதுபோன்ற கருத் துக்கள் இருக்க, சேக்கிழார் அதை மிகவும் பக்குவமாக குறிப்பிட்டுள்ளார் என்றும் கொள்ளலாம். எது எப்படியி ருப்பினும் உலகம் உய்ய ''திருத்தொண்டத் தொகை'' கிட்டியது என்பதே முக்கிய செய்தி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொய்யடிமை இல்லாத புலவர்

திருத் தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்'' எனப் பாடுகிறார். இந்தப் புலவர் ஒருவரா? பலரா? இவர் சிவனடியார் ஆன வரலாறு என்ன என ஐயம் தோன்றும்.

சுந்தரமூர்த்திக்குப் பின், நம்பியாண்டார் நம்பி இத் தொகையை விரிவாக திருத்தொண்டர் திருவந்தாதி எனப் பாடியுள்ளார். அதில் பொய்யடிமையில்லாத புலவரைப் பாடும் போது இவர்கள் கபிலர், பரணர், நக்கீரர் முதலிய பலர் என்றும், சங்கப் புலவர் என்றும் கூறுகிறார்.

தரணியில் பொய்மை இலாத் தமிழ்ச்
  சங்கமதிற் கபிலர்
பரணர் நக்கீரர் முதல் நாற்பத்
  தொண்பது பல் புலவோர்
அருள் நமக்கீயும் திருவால
  வாய் அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல
  பாடும் புலவர்களே

என்று இவர்கள் சங்கப் புலவர்கள் என்று தெளிவாக்கியுள் ளார். அடியார் புராணத்தை விரித்துரைத்த சேக்கிழார் பாடலில் புலவர் பலரா ஒருவரா என்று தெளிவாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இல்லை.

செய்யுள் நிகழ் சொற் றெளிவும் செவ்விய நூல் பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே எனத் துணிந்து விளங்கி ஒளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே ஆளானர்
பொய்யடிமை இல்லாத புலவர் எனப் புகழ் மிக்கார்

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய் திறவாத் தொண்டு நெறி தலை நின்ற
பெற்றியினில் மெய்யடிமை உடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்

ஆங்கவர்க்கும் அடியிணைகள் தலைமேல் கொண்டு

எனப் பாடியுள்ளார். இதில் 'மலரடிக்கே ஆளானார்'' என்றும் புலவர் என புகழ் மிக்கார் என்றும் குறிப்பிட்டுள் ளார். இதிலிருந்து பல புலவர்களைக் குறிக்கிறாரா? அன்றி ஒருவரையா எனக் கூற இயலாது. நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத்தொகை அந்தாதியைப் பின்பற் றித் தான் சேக்கிழார் தனது பெரியபுராணத்தை எழுதியுள் ளார். இருப்பினும் நம்பி குறிப்பிடும் கபிலர், பரணர், நக்கீரர் ஆகிய புலவர் பெயரையோ, சங்கப் புலவர் என்றோ குறிக்கவில்லை. இது ஏன் எனக் கூற இயல வில்லை.

உபமன்யு பக்த விலாசம், பொய்யடிமையில்லாத புலவரைக் குறிக்கிறது. இப்பெயரை இரண்டு விதமாக கூறுகிறது. இதை மொழிபெயர்க்கும் போது ''அஸத்ய தாஸ்ய ரஹித கவி'' எனப் பெயர் கூறுகிறது. அசத்யம் - பொய், தாஸ்யம் - அடிமை, ரஹித - இல்லாத, கவி-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புலவர். ஆதலின் பொய்யடிமை இல்லாத புலவர் என்பதின் நேர் சமஸ்கிருத மொழி பெயர்ப்பு, அஸத்ய தாஸ்ய ரஹித கவி என்பது. இதையே வேறு விதமாக ''ஸத்யமான அடிமையான கவி' என்பதும் பொருள். ஆதலின் உபமன்யு பக்த விலாசம், ஸத்ய தாஸ்ய கவி என்றும் குறிக்கிறது. இந்த அத்யாயத்துக்கப் பெயர். "அஸத்ய தாஸ்ய ரஹித கவி சரிதம்" என்று உள்ளது. இவ்வத்யாயத்தை கூர்ந்து படித்தால் புலவர் என்னும் சொல் ஒருவரையே குறிக்கிறது எனத் தெளிவாகிறது.

அஸத்ய தாஸ்ய ரஹித கவி
இத்யபவத் சுதீ:

இங்கு ஒரே கவிஞர் தான் சுதீ : என்று குறிக்கப்படுகிறார். சிவபெருமானைத் தவிர வேறு எந்த மானுடரையும் என் நாவழுத்தாது என அப்புலவர் வாழ்ந்தார். அவரது பக்தியை மெச்சி பரமன் அவருக்கு கவிபாடும் வரமளித் தார். அன்றிலிருந்து பரமனை எழிலான பாடல்களால் பாடி, அக்விஞர் சிவபதம் அடைந்தார் என

சந்தோஷ்ய ஸததம் தேவம்
தத்கவி: தத்பதம் யயௌ

அந்தக் கவிஞர், தேவனை எப்பொழுதும் த்ன் கவிதை யால் மகிழ்வித்து சிவபதம் அடைந்தார் எனக் குறிக்கிறது. இதிலிருந்து இங்கு குறிக்கப்பட்டுள்ள கவி ஒருவர் தான் என ஐயத்துக்கிடமின்றி தெரிகிறது. ஆயினும் அவ்வளவு சிறக்கப்பாடிய இந்த கவிஞனின் ஒரு பாடலோ, அடியோ மேற்கோளாக காட்டப்படவில்லை.

அகஸ்திய பக்தவிலாசம் என்ற சம்ஸ்கிருத நூலும் 63 வர் வரலாற்றை கூறுகிறது என்று குறிப்பிட்டேன். அதிலும் பொய்யடிமை இல்லாத புலவர் என்பவர் ஒரே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு கவியாக ஸத்யதாஸன் என்ற பெயரில் குறிக்கப்பட்டுள்ளார். அவரது வரலாற்றில் சில புதிய செய்திகளை இந்நூல் சேர்க்கிறது. அவர் வேதபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவர் என்றும் அந்தணர் குலத்தவர் என்றும் கூறுகிறது. அவ்வூரில் லக்ஷ்மியும், சரஸ்வதியும் குடிகொண்டனர். அவர் சிவனிடத்தில் சிறந்த பக்தி பூண்டு, அவரது உடன் பிறந்தாளான சரஸ்வதியையும் பன்னிரண்டு ஆண்டுகள் போற்றிப்பரவினார். ஒரு நாள் அவருக்கு கனவில் புலமை அமுததாரை என பெருக்கிட்டு வருவதைக் கண்டார். அக் கனவிலிருந்து நீங்கி தமது ஆசார்யனிடத்தில் சென்று கவிதையால் இவ்வாழ்வுக்கு என்ன பயன் என்று கேட்டார். அப்பொழுது அவரது குரு, நான்கு வேதங்களும், ஆகமங்கள் அனைத்தும் சிவனையே பரம் பொருளாகக் கூறுவதாக பிரும்மத்தை அறிந்த முனிவர்கள் கூறியுள்ளனர். நீயும் சிவனைத் துதி என்று கூற, அவர் தன் ஆயுள் முழுதும் சிவனையே துதித்து முக்தியடைந்தார் எனக் கூறுகிறது. ஆக அகஸ்திய பக்த விலாஸமும், பொய்யடிமையில்லாத புலவர் என ஒரு புலவரையே குறிக்கிறது. பல புலவர்களை அல்ல எனக் காட்டுகிறது. எல்லா நூல்களும் ஒரு புலவரைக் கூற, சேக்கிழாரும், அதையே கூறுவதாக அமைய, நம்பி மட்டும் எவ்வாறு பொய்யடிமை இல்லாத புலவர் என்பது கபிலர், பரணர், நக்கீரர் ஆகிய சங்கப் புலவரைக் குறிக்கும் எனக் கூறினார் என்பது மேலும் ஆராய்ச்சிக்கு உரித்ததாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நட்டப்பாடை - பண்திருத்தம்

சேரமான் பெருமாள் நாயனாருடன் பாண்டி நாட்டுப் பதிகளைத் தரிசிக்க சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருச்சுழியலில் துணைமாலை நாயகியுடன் திருமேனிநாதராக அமர்ந்திருக்கும் பரமன் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். இதை சேக்கிழார் பெருமானும் குறித்துள்ளார்.

ஊனாய் உயிர்புகலாய் அகலிடமாய்

என்று தொடங்கும் அப்பதிகத்தின் பத்துப் பாடல்களும் நட்ட ராகத்தில் உள்ளதாக அச்சாகியுள்ள பெரும்பாலான பதிப்புகளில் காணப்படுகிறது. ஓரிரண்டு பதிப்புகளில் மட்டும் "நட்டப்பாடை" என்று குறிக்கப்பட்டுள்ளது. இரண்டும் வெவ்வேறு பண்கள் என்பதில் ஐயமில்லை. எனில் இப்பதிகத்தின் சரியான பண் யாதாய் இருக்க முடியும் என்பது கேள்வி? சைவ சித்தாந்த சமாஜம் பதிப்பிலும் (பக்.266) அண்மையில் வெளிவந்துள்ள பிரஞ்சிந்திய கழகம் பதிப்பிலும் இது நட்டராகம் என்றே குறிக்கப்பட்டுள்ளது.

சை.சி.சமாஜ பதிப்பில் ஒரு மாற்றமும் காணப்படுகிறது. பதிகத்தின் தலைப்பில் பக்.266-ல், பண் நட்ட ராகம் என்று காணப்படுகிறது. ஆனால் பண்முறை அட்டவணையில் பக்க.6-ல், திருச்சுழியல் பதிகள் நட்டப்பாடை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யின் கீழ் குறிக்கப்பட்டுள்ளது. இதில் எதைக் கொள்வது? பெரும்பாலான பதிப்புகள் நட்ட ராகம் என்றே குறிக்கின் றனவே?

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்கள் பண்முறைப் படி திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. ஆதலின் ஒரு பண்ணில் உள்ள அனைத்துப் பாடல்களும் வரிசையாக கொடுத்த பின்னர் தான் அடுத்த பண்ணில் உள்ள பாடல்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இம்மரபில் தான் சுந்தரரின் பதிகங்கள், இந்த பண்ணில் தொடங்கி 12 பதிகங்கள் உள்ளன. பின்னர் தக்க ராகத்தில் 3 பதிகங்கள் உள்ளன. இதையடுத்து நட்ட ராகம் காணப்படு கிறது. நட்டராகத்தில் 14 பண்கள் உள்ளன. நட்டராகத் தின் பின் கொல்லி, கொல்லிக் கௌவாணம், பழம், பஞ்சுரம் என தொடர்ந்து பண்கள் அமைகின்றன. இவ்வகையில் காந்தாரபஞ்சமம் என்ற பண்ணிற்கு பின் னர் நட்டப்பாடை இடம் பெற்றுள்ளது. நட்டப்பாடை யில் 4 பதிகங்கள் முடிவுற்றவுடன் 'திருச்சுழியல்' பதிகம் உள்ளது. இதன் தலைப்பில் மட்டும் 'நட்டராகம்' என்றுள் ளது. ஏற்கனவே சுந்தரர் பதிகங்கள் 17 முதல் 30 வரையில் உள்ளவை நட்டராகம் எனக்குறிக்கப்பட்டு முடிந்து விட் டன. இதன் பின்னர் 7 பண்கள் முடிந்து நட்டப்பாடை 8வது தொடங்குகிறது. அதன் இறுதியில் திருச்சுழியல் பதிகம் நட்டராகம் என இரண்டாம் முறையும் இடம் பெறுவது பண்முறை தொகுப்புக்கு ஏற்புடையது அல்ல. ஆதலின் இங்கு பண் நட்டப்பாடை என்றே இருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஒலியின் ஒற்றுமை யால் ஏடுபடுத்துவோர் செய்த கைப்பிழை, தொடர்ந்து பல பதிப்புகளிலும் இடம் பெற்று வருகிறது. ஆதலின் இனியாகிலும் திருச்சுழியல் பதிகம் நட்டப்பாடையில் தான் இருத்தல் வேண்டும் என்று தெளிவு பெறுவதே நலம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறுபத்து மூன்று அடியாரில் திலகவதி

சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டத் தொகையில் 63 சிவன் அடியார்களின் பெயரைத் தொகுத்து உரைத்துள்ளார். இவர்களின் வரலாற்றை நம்பி யாண்டார் நம்பியும், சேக்கிழார் பெருமானும் விரித்து ரைத்துள்ளனர். இக்காலத்திலிருந்து 63வர் அடியார்களாக நமது ஆலயங்களில் வழிபடப்படுகின்றனர். நம்பியாண் டார் நம்பி தொகையடியார்களையும் குறிபிட்டுள்ளார். 63வரின் பக்தி, மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. தமிழ் நாடு மட்டுமின்றி ஆந்திரம், கேரளம், ஆகிய பகுதிகளி லும் இவர்கள் வழிபாடு பரவியது. கன்னடத்திலும், தெலுங்கிலும் 63 வர் வரலாறு எழுதப்பட்டு, சிறப்பாக பரவின. அதே போல் சமஸ்கிருதத்திலும் 63வர் வரலாறு எழுதப்பட்டது. மூன்று சமஸ்கிருத நூல்களில் இவர்கள் வரலாறு இடம் பெறுகின்றன. ஒன்று அகஸ்தியர் சிவ பக்த விலாஸம் என்றும், மற்றது உபமன்யு சிவபக்த விலாசம் என்று மூன்றாவது - சிவரகசியம் என்றும் பெயர் பெற்றுள்ளது. உபமன்யு பக்தவிலாசம் என்பது சேக்கிழார் பெரிய புராணத்தை அப்படியே சமஸ்கிருதத் தில் மொழி பெயர்த்ததாகும். இம்மொழிபெயர்ப்பு கி.பி.16ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது எனக் கண் டோம். அதே நூற்றாண்டில் தான் அகஸ்திய சிவபக்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விலாசமும் இயற்றப்பட்டது. ஆனால் இது மொழிபெயர்ப்பாக இல்லாமல், அடியார்களின் வரலாற்றை சுருக்கமாகக் கூறுகிறது. கதை அமைப்புக்களெல்லாம் சேக்கிழாரின் அடியைப் பின்பற்றியே செல்கிறது.

அப்பர் பெருமான் சமண சமயத்தைச் சேர்ந்து பின்னர் சைவத்துக்கு மீண்டும் வருகிறார் அல்லவா. அவ்வாறு அவரை சைவத்துக்கு கொண்டு வந்து நம்நாடு உய்ய வழிவகுத்தவர். அவரது தமக்கையார் திலகவதியார் அப்பரை சிவநெறிப்படுத்திய செல்வி திலகவதி ஆதலின் அவ்வம்மையாரை அப்பர் தமது பாடலில்,

ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்
உடன் தோன்றினராய்

என்று கூர்ந்து பாடியுள்ளார். தன்னை சைவப் பெருநெறிக்கே அர்ப்பணித்துக் கொண்டு, தவம் மேற்கொண்டு, தன் தம்பியாகிய (மருள்நீக்கியாரை) நாவுக்கரசனை வழிபடுத்திய அவ்வம்மையின் பெயர், சைவ உலகில் மந்திர தாரகமெனப் போற்றப்பட்டது. அவரது வாழ்க்கை மக்கள் உள்ளத்தை தொடும் வகை விளங்குகிறது. இது காலப்போக்கில் மேலும் சிறந்து சிவனடியார்களை எண்ணும்போது திலகவதியாரை இணைத்தே எண்ணும் அளவுக்கு விரிந்தது.

சிவனடியார்களின் வரலாற்றை சுருக்கிக் கூறுவது அகஸ்திய பக்த விலாசம் என்று கண்டோம். இந்நூலின் இறுதியில் 63 பக்தர்களின் பெயர்களைத் தொகுத்துக் கூறல் என்று ''திரிஷஷ்டி பக்தானாம் நாமதேய கதனம்'' என்று ஒரு அத்யாயம் உள்ளது. அது திருத்தொண்டத் தொகையைப் போலவே 63 அடியார்களின் பெயர்களைத் தொகுத்துக் கூறும் அத்தியாயமாகும். இது முதலில் சுந்தர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூர்த்தி பெயரைச் சொல்லி பிறகு நீலகண்டக் குயவனார், இயற்பகையார் எனக் கூறிச் செல்கிறது.

சுந்தரோ நீலகண்டஸ்ச வைப்யோ ஸுமதி: மா:

இந்த தொகையில், 63 வர் பெயரும் சுந்தரரின் திருத் தொண்டத் தொகையைப் பின்பற்றியே இருந்தபோதும், ஒரு சில இடங்களில் வரிசை, செய்யுளுக்கு ஏற்ப மாறியும் உள்ளது. இந்த வரிசையில் சண்டச்வர நாயனாரைக் குறித்து, அவருக்குப் பின்னர் நாவுக்கரசர் பெயர் வருகிறது.

(சமஸ்க்ருத நூல் ஆதலின் அடியார் பெயர்கள் ஸம்ஸ்கிருதப் படுத்தப்பட்டுள்ளன). நாவுக்கரசரின் பெயர் ரஸநா ராஜ: என்று வருகிறது.

சண்டேஸோ ரஸநாராஜ:
தத்ஸ்வஸா திலகாவதீ

''சண்டேச்சுவரர், நாவுக்கரசு, அவர் தமக்கை திலகவதி'' என திலகவதியாரும், 63 வர் வரிசையில் இணைத்துக் கூறப்பட்டுள்ளார்.

இவர்கள் 63 பக்தர்களாவர் என இத்தொகை முடிகிறது.

பக்தா: ஷஷ்டி த்ரய: ஸ்ம்ருதா:

என வந்துள்ளதிலிருந்து 63வரில் ஒருவராக திலகவதியாரையும் இந்நூல் குறிப்பது வியப்பாக உள்ளதல்லவா? இந்த 63வர் பட்டியலில் சில அடியார்கள் பெயர்கள் விடப்பட்டுள்ளன. தொண்டத் தொகையில் இல்லாத சில பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இயற்பக நாயனார் தமது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மனைவியை அந்தணனாக வந்த சிவபெருமானுக்கு அளித்தாரல்லவா. அப்பெண்ணின் பெயர் வசுமதி என்று இந்நூல் கூறுகிறது. அந்த வசுமதியின் பெயரும் 63வர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது குறிக்கத் தக்கது. இவ்விருவர் பெயரும் அறுபத்து மூவர் பட்டியலில் இடம் பெற்றிருப்பது, இப்பெண்கள் பிற்காலத்தில் எவ்வளவு சிறப்பு பெற்றார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏழாம் திருமுறையில் வெள்ளிப்பாட்டு

சுந்தரமூர்த்தி நாயனார் திருநாகைக்காரோணத்தின் மீது இரண்டு பதிகங்கள் பாடியுள்ளதாக அண்மையில் பிரெஞ்சிந்தியக் கழகம் வெளியிட்டுள்ள திருமுறை ஆராய்ச்சிப் பதிப்பில் காண்கிறோம். ஒன்று ''பத்தூர்' என்று தொடங்கும் பதிகம். மற்றது ''பொன் ஆம் இதழ்'' என்பதாம். இந்த இரண்டாம் பதிகம் 'பிற்சேர்க்கையில்' கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆராய்ச்சிக் குறிப்பு எழுதிய திரு.கோபாலய்யர் இந்த பதிகம் பல சுவடிகளில் காணப்படுகிறது என்றும், வேறு எந்தப் பதிப்பிலும் வெளிவரவில்லை என்று கூறுகிறார். சுந்தரர் நாகைக்கா ரோணத்துக்கு இருமுறை சென்றதையும், இருமுறையும் அங்கு பதிகம் பாடியுள்ளதையும் சேக்கிழார் பெருமான் குறிக்கிறார். இரண்டும் கழறிற்றறிவார் புராணத்தில் இடம் பெறுகின்றன.

நம்பி தாமும் அந்நாட்போய் நகைக்காரோணம் பாடி
அம்பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடை சாந்தம்
அடற்பரிமா
பைப்பொன் சுரிகை முதலான பெற்று மற்றும்
பலபதியில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தம்பிரானைப் பணிந்தேத்தி திருவாரூரில்
சார்ந்திருந்தார்''
(சமாஜம் பதி எண் 3815)

இரண்டாம் முறை பாடியதை

''திருக்காரோணச் சிவக்கொழுந்தைச் சென்று பணிந்து
சிந்தைவினை
உருக்கஆர்வா செந்தமிழ்மாலை சார்த்தி
சிலநாள் உறைந்து போய்''
(சமாஜம் எண் - 3837)

என்று குறித்துள்ளார். ஆதலின் சுந்தரர் நாகைக்காரோணத் தின் மீது இரண்டு பதிகம் பாடியுள்ளார் என்பதில் ஐயமிருக்க முடியாது. இதைக் கோபாலய்யர் தமது முன்னுரையில் காட்டி பதிகத்தை பிற்சேர்க்கையாக இணைத்துள்ளார்.

உபமன்யு பக்த விலாசம்

இந்த இரண்டாம் பதிகத்தை சுமார் நூறு ஆண்டுக ளுக்கும் முன்னர் ''வெள்ளிப்பாட்டு'' என்று கூறி ஒதுக்கி யவர் உண்டு என்று தெரியவருகிறது. ஆயினும் அப்பொ ழுது திருவாடுதுறை ஆதினத் தலைவராகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தம்பிரான் சுவாமிகள் மட்டும் இரண்டு பதிகங்களும் சுந்தரர் பாடியவைதாம். வெள்ளிப் பாட்டு என்று ஒதுக்குவது தவறு என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த ''பொன்னார் இதழி'' என்று தொடங்கும் இரண்டாம் பதிகம் ஏற்கனவே உள்ள திருமுறை புத்தகம் ஒன்றில் உள்ளது என்று தெரியவருகி றது. இந்த அருமையான செய்தியை 'உபமன்யு பக்த விலாசம்'' என்ற சம்ஸ்கிருத நூலை ஆராய்ச்சிக் குறிப்புக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ளோடு 1915ல் பதிப்பித்துள்ள ''வரகூர் சுந்தரேச சாஸ்திரிகள்'' குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமல்ல இந்த பதிகத்தைப் பற்றி அவர் தேடியலைந்து கண்ட அரிய செய்திகளையும் குறித்துள்ளார். உ.வெ.சா. அவர்கள் எப்படி திறமையுடன் ஆராய்ச்சிப் பதிப்புகளைக் கொண்டு வந்தார்களோ, அந்த அளவு திறமைமிக்கவராக சுந்தரேச சாஸ்திரிகள் உபமன்யு பக்த விலாசத்தை ஆய்வுப் பதிப்பாக 1915 லேயே வெளியிட்டிருக்கிறார் என்று பார்க்கும் போது வியப்பாக இருக்கிறது.

உபமன்யு பக்தவிலாசம் என்பது 63 நாயன்மார் சரிதத்தை சமஸ்கிருதத்தில் கூறும் நூல் என்றும், இது சேக்கிழாரின் பெரியபுராணத்தின் நேர் மொழிபெயர்ப்பு என்றும், கி.பி.16ம் நூற்றாண்டில் சீனிவாஸதீக்ஷிதர் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது என்றும் முன்னுள்ள கட்டுரையில் புலப்படுத்தியுள்ளேன். உபமன்யு பக்தவிலாசத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரைப்பற்றி கூறும்போது, அவர் நாகைக்காரோணத்துக்கு இருமுறை சென்றார் என்றும், இரண்டு முறையும் பதிகங்கள் பாடினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலில்

ததஸ்து காரோணம் உபேத்ய தேவா:
பிரணம்ய கீத்வா பிரதிபந்த மித்தம்:
ததமாலயம் ப்ராப்ய புரம் பிரஹ்ருஷ்ட:
ஸௌம்யோ அவாஸத் ஸாகரிகா ஸமேத:

என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடலை அச்சிட்ட சுந்தரேச சாஸ்திரிகள் அடிக்குறிப்பில் ''பத்தூர் புக்கிரந்து'' என்ற பதிகத்தைக் கொடுத்து அது முதலில் பாடப்பெற்றது என்று குறித்துள்ளார். இரண்டாவது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முறை சென்று பாடியதை

நாகாபிதாம் புரீம் ஸிந்தோ: தீரே தாம் உபஜக்மு:
'ஸ்ரீமத் காரோண தாமத்துவம்' இத்யாத்யாபி:
சஸூக்திபி:
அம்பிகா ஸகம் அப்யர்ச்ய தத்ரதௌ
ஆஸ்திதௌ சிரம்

என்று உபமன்யு பக்தவிலாஸம் கூறுகிறது.

முதற்கூறிய பதிகம் சுந்தரர் தனியே நாகை சென்ற போது பாடியது. இரண்டாவது ''பொன்னார் இதழி'' என்னும் பதிகம் சுந்தரரும், சேரமான் பெருமாளும் இருவரும் சேர்ந்து நாகை சென்றபோது பாடியது என்று சேக்கிழார் பாடுகிறார். அதை அப்படியே உபமன்யு பக்தவிலாஸமும் குறிக்கிறது. இந்த சமஸ்கிரு ஸ்லோகத் திற்கு அடிக்குறிப்பாக சுந்தரேச சாஸ்திரிகள் இரண்டா வது பதிகத்தைக் கொடுத்துள்ளார். அதுமட்டுமல்ல, தமது அடிக்குறிப்பில்தான் திரு.சாஸ்திரிகள் இந்தப் பதிகத்தை சிலர் 'வெள்ளிப்பாடல்' என்கிறார்கள் என்பதையும், பிற அரிய செய்திகளையும் குறிப்பிடுகிறார். குறிப்பிலிருந்து இரண்டாம் பதிகம் சுந்தரரின் பாடல்தான் என்று சாஸ்திரி கள் பலரிடம் வாதிட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது. அத்துடன் பல சுவடிகளையும் நூல்களையும் தேடியலைந் திருக்கிறார். அப்பொழுதாதன் திடுவாடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் இரண்டு பதிகமும் சுந்தரர் இயற்றியவைதாம் என்று கூறியிருக்கி றார்கள். ஆதலால் இரண்டும் சுந்தரர் பாடல்கள்தாம் என்று முதன் முதலில் கூறிய பெருமை ஸ்ரீலஸ்ரீ அம்பல வாண தேசிக சுவாமிகள் அவர்களையே சாரும். அதை சுந்தரேச சாஸ்திரிகள் 1915ல் தம் அடிக்குறிப்பில் கூறி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யதை அப்படியே கீழே காண்போம்

சுந்தரேச சாஸ்திரிகள் அடிக்குறிப்பு

''சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகம் 100 என்று திருமுறைகண்ட புராணத்திற் சொல்லியபடி அச்சிட்டு வெளியிட்டிருக்கும் பல திருமுறைகளிலும் முன் இப்பதி கத்தை (பத்தூர்) சிலர் வெள்ளிப்பாடல் என்றும், சுந்தரர் பதிகம் இல்லையென்றும் கூறுகிறார்கள். அப்படிக்கா னால் 99 பதிகந்தானாகிறதே என்றால் தடுமாறுகிறார்கள். திருவாடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டார சந்நிதியவர்கள் மாத்திரம் சுந்தரமூர்த்தி பதிகம் 101 என்றும், நாகைக்காரோணப் பதிகங்கள் 2 என்றும் மற்றொன்றை வெள்ளிப்பாட்டு என்று தள்ளிவிட்டு அச் சுப்போட்டு விட்டார்கள் என்றும் சொன்னார்கள். அதன் பேரில் ஏட்டுச்சுவடிகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பலவிடங்கள் போயுங்கிடைக்காமல் சீர்காழிக்கு வந்த சமயத்தில் அங்கு சைவசிகாமணியாகிய மகாஸ்ரீ சிதம்பரநாத முதலியாரவர்கள் லைப்ரரியில் பண்வரிசையில் எழுதப்பட்ட ஏழு திருமுறைகளடங்கிய புத்தகத்தில், ஏழாம் திருமுறையில் 285ம் பக்கம் கொல் லிக் கௌவாணத்தில் 'பத்தூர் புக்கிர' பதிகமேயில்லா மல், 301ம் பக்கத்தில் ''திருநாகைக்காரோணம் பண் காந்தாரபஞ்சமம் - திருச்சிற்றம்பலம் - ''பொன்னாரிதழி விரை மத்தம்'' என்று ஆரம்பித்து பதினோரு பாட்டு முடிந்ததும் திருச்சிற்றம்பலம் ஆக காந்தாரபஞ்சமம் பதிகம் இரண்டுக்கு பாடல் 22 ஆகப் பதிகம் 77க்கு பாட்டு 796'' என்று எழுதப்பட்டுள்ளது. இதுதான் உபமன்யு பக்தவிலாஸத்துக்கும் பொருந்தியதாக இருக்கி றது. வெள்ளிப்பாடல் என்று தள்ள வேண்டியது 'புத்தூர் புக்கிரண்டு' என்றுதான் நடையால் தோன்றுகிறது'' என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாஸ்திரிகள் குறித்துள்ளார் (உபமன்யு பக்தவிலாஸம் தொகுதி I ப.108). அதுமட்டுமல்ல, ''பொன்னேரிதழி விரைமத்தம்'' என்னும் பதிகம் முழுவதையும் (11 பாடல்களையும்) தம் நூலில் அச்சிட்டிருக்கிறார். (தள்ள வேண்டும் என்றால் ''பத்தூர் புக்கு'' என்ற பாடலைத் தான் தள்ள வேண்டும் என்கிறார்).

வெள்ளிப்பாட்டு

இங்கு மற்றும் ஒன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். தேவாரப் பாடல்களிலும், பெரியபுராணப் பாடல்களிலும் பலவற்றை வெள்ளிப்பாடல்கள் என்று தலைப்பிட்டு, அவற்றை ஒதுக்கிவிடும் மரபு நம்மி டையே இருந்தது. கி.பி.17ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் வெள்ளியம்பலவாண தம்பிரான் என்ற மகா தவ்முனிகள். இந்த முனிவர் பல பாடல்களை எழுதி சேர்த்து விட்டார் என்று அவர்மீது குறைகூறியவர் உண்டு. அதை அப்ப டியே பின்பற்றி எழுதியவர்களும் உண்டு. இது ஆராய மல் கூறும் குறை என்றும், பெரியபுராணத்தில் பல பாடல்கள் மூலத்திலேயே இருந்திருக்கின்றன என்றும், வெள்ளியம்பலவாண தேசிகர்மீது கூறியது முற்றிலும் தவறு என்று நான் முன்னரே சான்றுகளோடு காட்டியுள் ளேன். இப்பொழுது தேவாரத்திலும் வெள்ளிப்பாட்டு என்று கூறப்படும் இப்பாடல் மூலத்திலேயே இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆதலின் வெள்ளிப்பா டல்கள் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் அவர்கள் எழுதிச் சேர்த்தவை என்று கூறுவது தவறாகும். இந்த முடிவுக்கு வர உபமன்யு பக்தவிலாஸம் பெரிதும் உதவுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முடிவுகள்

இதிலிருந்து சில முடிவுகளை அறிகிறோம்.

1. பெரியபுராணம், உபமன்யுபக்தவிலாஸம் ஆகிய இரண்டு நூல்களுமே நாகைக்காரோணத்தில் சுந்தரர் இருமுறை பதிகம் பாடியதாகக் குறித்துள்ளன.
2. நாகைக்காரோணம் பற்றி இரண்டு பதிகங்கள் பல சுவடிகளில் உள்ளன.
3. அவையிரண்டுமே சுந்தரர் பாடியவைதாம் என்பதில் இனி ஐயமிருக்க முடியாது.
4. வெள்ளிப்பாடல் என்று ஒன்றை ஒதுக்குவது தவறு என்று ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டார ஸ்வாமிகள் குறித்ததே நமக்கு ஏற்புடையது.

பண் வரிசை

இனி, மேலும் சில கருத்துக்கள் ஆராயப்பட வேண்டியுள்ளன. நாகைக்காரோணம் ''பொன்னார் இதழி'' என்றும் இரண்டாம் பதிகம், சுந்தரர் பதிகத்தில் எத்தனையாவது பதிகமாக இடம்பெறல் வேண்டும் என்பது கேள்வி. சுந்தரரின் பதிகங்கள் பண்களில் வரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளன. கோபாலய்யர் குறிப்பிலிருந்தும், சுந்தர சாஸ்திரிகள் குறிப்பிலிருந்தும் இதை திட்டவட்டமாகக் கூறலாம். கோபாலய்யர் இப்பதிகம் காந்தாரப்பண் என்று கூறுகிறார். நாகைக்காரோணம் முதல்பதிகம் கொல்லிக்கௌவாணம் என்னும் பண்ணில் அமைந்தது. இதற்கடுத்து பழம்பஞ்சுரம் என்னும் பண்ணில் உள்ள பாடல்கள் இடம்பெறுகின்றன. ஆதலால் இரண்டாம் பதிகத்தை, முதற்பதிகத்தையடுத்து வைக்கமுடியாது என்று கூறுகிறார். இது ஏற்புடையதுதான். ஆனால் காந்தாரம் என்னும் பண்ணில் சுந்தரர் இயற்றிய ஐந்து பதிகங்கள் உள்ளன. அவற்றையடுத்து இப்பாடலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைத்திருக்கலாம். அவ்வாறு வைக்கவில்லை.

''சுவடிகளில் இப்பதிகம் 78ம் பதிகமாக காணப்படுகிறது. இது பண்வரிசைக்கு இடர்படுவதால் பிற்சேர்க்கையாகக் கொடுத்துள்ளேன்'' என்று கோபாலய்யர் கூறுகிறார். இதற்குக் காரணம் 77ம் பதிகம் காந்தார பஞ்சமம் என்னும் பண்ணில் உள்ளது. காரோணம் இரண்டாம் பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்துள்ளது. ஆதலால் பண்வரிசை இடர்படும். எனவே சுவடியில் உள்ளவாறு 78ம் பதிகமாகக் கொள்ள இயலாது'' என்பது கோபாலய்யர் கருத்து.

காந்தார பஞ்சமம்

இங்குதான் உபமன்யு பக்தவிலாஸத்தை திறனுடன் பதிப்பித்த சுந்தரேச சாஸ்திரிகள் குறிப்பு உதவுகிறது. அவரது குறிப்பின்படி சீர்காழிப் புத்தகத்தில் இப்பதிகம் காந்தாரப்பண்ணில் இல்லை. காந்தார பஞ்சமம் என்ற பண்ணில் உள்ளதாக தெரிகிறது. ஏற்கனவே 77ம் பதிகம் இந்த காந்தாரப் பஞ்சமத்தில்தான் உள்ளது. அதையடுத்து சுவடிகளில் கண்டுள்ளபடி 78ம் பதிகமாக காரோணம் 2ம் பதிகம் வருவதுதான் சரி. சுவடிகள் சரியாகவே உள்ளன. அதை பிற்சேர்க்கையாக கொண்டு செல்வது தேவையில்லை என்பது என் கருத்து.

இங்கு மேலும் ஒரு வினா ஆய்வு பெற வேண்டியுள்ளது. திருமுறைகண்ட புராணத்தார் சுந்தரர் பாடி பதிகங்கள் நூறு என்கிறார். நாகைக்காரோணம் இரண்டு பதிகங்களையும் சேர்த்தால் 101 பதிகங்கள் வருகின்றனவே? இவற்றில் 100 பெற எதைத்தள்ள வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இது தனியாக ஆராயப்படல் வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கம்பன் பாடிய கண்ணுதல் வானவன்

கோசலை நாட்டு இளம் பெணகளின் மொழி குயிலை ஒத்திருக்கின்றன. அவருடைய நடம் மயிலை ஒத்துள்ளன. ''அவர் பயில் நடமோ கேகயம் நவில்வன'' என்கிறான் கம்பன். இங்கு பெண்கள் ஆடுகின்ற ஆடல் மயிலின் ஆடலை ஒத்துள்ளது என்பது கருத்தில் கொள் ளத்தகும்.

அயோத்தி மாநகரில் ஆடல் அரங்குகள் இருந்திருந் தன. அவற்றில் மடந்தையர் ஆடுவர். அவரது வேல் போன்ற கண்களின் வீச்சு, காயம் மிகுந்த இளைஞரின் நெஞ்சத்தை உருக்குவன. அவர்களது உயிர்களோ அப் பெண்களின் இடைபோல் தேயும். ஆனால் அவர்களது ஆசைமட்டும் வளர்ந்து கொண்டே செல்லும்.

அரங்கிடை மடந்தையர் ஆடுவார் அவர்
கருங்கடைக் கண் அயில் காமர் நெஞ்சினை
உருங்குவ; மற்று அவர் உயிர்கள் அன்னவர்
மருங்குல் போல் தேய்வன; வளர்வது ஆசையே

ஆடல் மகளிரான மதங்கியர், நாட்டிய நூல்களில் குறித்த விதிப்படி ''ஜதி''யைத் தமது கால்களினால் மிதிப்பர். மத்தளம், தாளம், பண்ணுக்கு ஏற்ப அவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வாறு விதம் விதமாக நாட்டிய ஜதியை, பதங்களி னால் ஆடிக்காட்டுவர். அச் ''ஜதி'' இவ்வகைத்தது என எடுத்து இயம்புபவை, அவர்கள் கால்களில் அணித்துள்ள சதங்கைகளே. அச்சலங்கைகளின் ஒலியே அஜ்ஜதிகளின் வகையின்ன என ஒலிக்கின்றன. உயர்ந்த ஜதிக்கட்டுகளை ஆடும்போது நிருத்தம் மனதுக்கு இன்பம் அளிக்கும். ஜதி சிறக்க வேண்டுமானால் சொல்லுக்கட்டு நன்கு அமைய வேண்டும். மத்தள ஒலியும், தாளமும், பண்ணும் அதோடு இணைந்து இருந்தால்தான் மிகவும் சிறப்பாக இருக்கும். ஆடும் பெண்கள் ஜதியை கால்களால் மிதித்து தட்டி ஆடும்போது அவர்களது சலங்கை ஒலி இன்பம் பயக்கும். இத்துணையும் மனத்திற் கொண்டுதான் கவிச் சக்கரவர்த்தி,

பதங்களில் தண்ணுமை பாணி பண்உற
விதங்களின் விதிமுறை சதி மிதிப்பவர்
மதங்கியர். அச்சதி வருத்துக் காட்டுவ
சதங்கைகள். அல்லது புரவித்தாள்களே

அவ்வாறு சத்தம் செய்யாதது குதிரைகளுக்கும் கட்டி யுள்ள மணிகளே என்கிறார்.

இங்கு மற்றும் ஒரு பொருளும் கொள்ளலாம் மதங்கியர் என்றால் யானை. யானைகள் தங்கள் கால் களை மிதித்து வருவது மத்தளம், தாளம், பண் இணைந்த சொல்லுக்கட்டுக்கு ஏற்ப வருகின்றனவாம். அவற்றில் மணிகள் அச்சதியைக் கூட்டுகின்றன. அவ்வாறு ஒலிக்கா தவை மலைகளே என்றும் தொனிக்கிறது. இதை மனத் திலே கொண்டு பின்னர் வந்த பெரும்பற்ற புலியூர் நம்பி தமது திருவிளையாடற் புராணத்தில் மாணிக்கவாசகருக் காக சொக்கேசப் பெருமான் நரிகளைப் பரிகளாக்கி அழைத்து வந்தபோது அப்பரிகள் ஜதி ஆடுவது போல் தாள் வைத்து ஓடி வந்தன என்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருமப் பரதச் சௌவுதத் தடைமீவ
தெரியத் தனதத் தனதத் தெனவே
புரையற்றருகிப் புவி மெச்சிடவே
பருமப் பரிநற் பதம்வைத் ததுவே
மெத்துத்தகவும் விதமும் படவே
தித்தோம் தொத்தோம் தித்தீ என்றன்
றொத்துந் தாளத் தொக்கத் தத்தித்
தத்தும் பரிதன் தாள்வைத் ததுவே

என்கிறார். கம்பனின் சொல் வண்ணம் இங்கே அப்ப டியே பிரதிபலிப்பதைக் காண்கிறோம். கவிச் சக்கரவர்த் திக்கு நிருத்தத்தால் இருந்த புலமையையும் இது எடுத்துக் காட்டும் எனலாம். ஆடல் கலையில் கவிச்சக்கரவர்த்தி கொண்டிருந்த ஈடுபாட்டுக்கு மற்றொரு சிறந்த எடுத்துக் காட்டு நிலைக்காட்சியில் காண்கிறோம்.

நெய் திரன் நரம்பின் தந்த மழலையின் இயன்ற பாடல்
தைவரு மகரவீணை தண்ணுமை தழுவித் தூங்க
கைவழி நயனம் செல்ல கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் இடையார் ஆடும் ஆடக அரங்கு காண்பீர்

தேன் என இனிக்கும் இன்பமான பாடலும் மகரவீ ணையின் இசையும் தண்ணுமையும் இசையும் ஒன்றோ டொன்று நன்கு பொருந்தி இசைக்க, ஆடுகின்ற மங்கை யின் கை செல்லுகின்ற வழி கண்ணும் செல்ல, கண்செல் கின்ற வழி பாவம் விளங்க, அவளது மனமும் செல்ல, அழகிய இடையை உடை பெண்கள் ஆடும் அரங்குகள் இருந்தன. இவ்வுலகில் கலைவல்லோர் அனைவராலும் பாராட்டப் பெறுவது நடராஜ தத்துவம். அந்த ஆடவல்ல பெருமானின் உருவமும் அதற்குப் பின்னணியாகத் திக ழும் தத்துவமும் இந்திய நாட்டில் ஏன் இவ்வுலகிலேயே மிகச் சிறந்த தத்துவமாகப் போற்றப்படுகிறது. விண்ணா கிய அரங்கிலே ஆடுகின்றான் அண்ணல். தேவர், கந்தர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வர்கள் கின்னரர் முதலானோர் வாழ்த்த இசைபாட ஆடுகின்றான். அம்பரம் என்கிறோம். தேவாரம் இசைத்த பெரியோர்களும், திருமூலர் போன்ற ஆன்ற பெரியோர்களும் இவ்வாடலை பாடிப் பரவியுள்ளனர். இந்த அத்புதக் கூத்தை கவிச் சக்கரவர்த்தியும் பாடுகிறான். அந்த ஆடலை பாடாது அவனால் இருக்கவில்லை. அதை மிதிலை வந்தடைந்த இராமன் இரவைக் கழிக்க காலையில் கதிரவன் எழுகிறான். அவ்வாறு கதிர்கள் வருவதை கவிச் சக்கரவர்த்தி உவமிக்கிறான். கண்ணுதல் வானவனான சிவபெருமான், ஆகாயமாகிய அரங்கிலே கின்னரர்கள் இசைபாட உலகம் ஏத்த விண்ணவரும் முனிவரும் வேதியரும் கரம் குவிப்ப அலைகள் எல்லாம் முழவென அதிர நடம்புரிகிறான். அவன் தனது சடையை விரித்ததை கதிரவனின் கதர்கள் விரிந்தன என்கிறான் கவிச்சக்கரவர்த்தி,

எண்ண அரிய மறையினோடு கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரம் குவிப்ப வேலை என்னும்
மண்ணும் மணி முழவு அதிர வான் அரங்கில்
நடம் புரிவாள் இரவி ஆன
கண்ணுதல் வானவன் கனகச் சடை விரித்தா
லென விரிந்த கதிர்கள் எல்லாம்

இந்த அற்புத உவமையை எங்கே எடுத்துக் கொள்கிறான் என்றுபாருங்கள். அண்ணலின் நடனத்தை ஆனந்தக் கூத்து என்பர். இதைப் பரமானந்தக் கூத்து என்பர். அன்று கதிரவன் உதிக்கும்போதே, ஆனந்தம் மேலிடும் நிகழ்ச்சியை, இராமன் வில்லிறுத்து சீதையை மணக்க இருக்கும் பேரானந்த செய்தியை முன்னுரைப்பான் போல் கம்பன் கூறுகிறான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதிபரன் ஆட அங்கை கனலாட
ஓதுஞ்சடை யாட உன்மத்த முற்றாட
பாதிமதி யாட பாரண்ட மீதாட
நாதமோ டாடினான் நாதாந்த நட்டமே

திருமூலரின் அந்த ஆடல் தன்மையை பாடலே குறிக்கும்.

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிவகாமியாட

என்னும் பாடலை நாம் கேட்டிருக்கிறோம்.

கவிச்சக்கரவர்த்தியும் பாடுகிறான்.

பானல், அம்கண்கள் ஆட, பவளவாய் முறுவல் ஆட
பீன வெம்முலையின் இட்ட பெருவிலை ஆரம் ஆட
தேன் முரன்று அளகத்து ஆட, திருமனிக் குழைகளாட
வானவர் மகளிர் ஆடும் வாசம் நாறு ஊசல் கண்டார்.

இராமன் சீதையை மணக்கப் போகிறான் என்னும் செய்தி கேட்டு அயோத்தி மக்கள் மிதிலைக்கு எழும் வழியில் சந்திரசைல மலையைக் காண்கிறார்கள். அங்கு தான் இக்காட்சியைக் காண்கிறார்கள்.

ஆடலைப் பற்றி விவரிக்கும் கம்பன் நகைச்சுவை யையும் இணைத்துப் பாடுகிறான். சந்திர சைல மலையில் அரம்பையர் ஆடுகின்றனர். ஆடும்போது பாவம் சிறக்க ஆடுகிறார்கள். புருவங்களை வில்போல நெளித்து இனி மையாகப் பாடி ஆடுகிறார்கள். ஆடி முடிந்ததும் தங்களது அணிகளை எல்லாம் அவர்கள் கழற்றி வைக்கிறார்கள். அப்போது மரத்திலிருந்து தாவிவந்து கடுவன் குரங்கு எடுத்துச் சென்று தான் பூண்டு கொள்கிறது. அதைக் கண்டு பெண் குரங்கு மிகவும் மகிழ்கிறதாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சரம் பயில் சாபம் என்னப் புருவங்கள் தம்மில் ஆடா
நரம்பினோடு இனிதுபாடி நாடக மயிலோடு ஆடி
அரம்பையர் வெறுத்து நீத்த அவிர்மணிக்கோவை ஆரம்
மரம் பயில் கடுவன்பூண மந்தி கண்டுகக்கும் மாதோ

இதே போல் மற்றோர் இடத்திலும் கவிச்சக்கரவர்த்தி பாடுகின்றான். சூர்ப்பனகை மூக்கறுப்புற்று ஓடி கரன் தூஷணன் இருவரையும் அனுப்புகிறாள். இராமனோடு திரிசிரஸ் முதலில் போரிடுகிறான். இராமனது பாணத்தால் அரக்கர் சின்னபின்னமாகி விழுகின்றனர். அவர்களில் தலையிழந்த கவந்தங்களாகி உடல் மட்டும் ஆடுகிறது. கரங்களில் பூண்டுள்ளன அவர்களது உடல்கள் மலையை ஒத்துக் காணப்படுகின்றன. மார்பில் கவசம் பூண்டுள்ள இவ்வாறுள்ள உடல்கள் தலையரிபட்டு பல்விதமாக ஆடுகின்றன. அந்தக் கவந்தங்கள் ஆடுவது பல் வேறு விதமான நாடகம் ஆடும் அரம்பையரின் நடிப்பை ஒத்திருந்தனவாம்.

கேடகத் தடக்கைய, கிரியின் தோற்றத்த
ஆடகக் கலசத்த கவந்தம் ஆடுவ,
பாடகத்து அரம்பையர் முரள, பல்வித
நாடகத் தொழிலினை நடிப்ப ஒத்தவே

'இதை கவந்த நாடகம் என்கிறார்'

அயோத்தியில் ஆடலழகியரைக் கண்டோம். மிதிலையில் கண்டோம். இலங்கையிலும் காண்கிறோம். பாடுவார் அங்கு பலர் உள்ளனர் எனில் அவர்களைக் காட்டிலும் ஆடுவார் அதிகமாம் அதற்கு இசைக் கருவி இயக்குவார் அதனினும் அதிகம். தேவர்கள் எல்லாம் 'விழுநடம்' காண்பராம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடுவார் பலர் என்னின் மற்றுஅவரினும் பலரால்
ஆடுவார்கள்; மற்று அவரினும் பலர் உளர், அமைதி
கூடுவாரிடை இன்னியம் கொட்டுவர்; முட்டு இல்
வீடு காண்குறும் தேவரால் விழுநடம் காண்பார்
வானமாதரோடு இகலுவர் விஞ்சையர் மகளிர்;
ஆன மாதரோடு ஆடுவர் இயக்கியர்; அவரைச்
சோனை வார்குழல் அரக்கியர் தொடர்குவர்
தொடர்ந்தால்
ஏனை நாகியர் அருநடக் கிரியை ஆய்ந்திருப்பார்

அங்கே அரக்கர் பெண்கள் ஆட ஆரம்பித்து விடுகின்றனர். அதுவும் கள்ளைக் குடித்துவிட்டு அந்தக் களிப்பில் ஆடுகின்றனர். கைகோர்த்துக் கொண்டு குரவைக் கூத்து ஆடுகின்றனர். இதைப் பார்த்து அழகுள்ள இடையை உடைய பாவம் ராகம் தாளத்துக்கு ஏற்ப ஆடும் வான்மடந்தையர் வெட்கி தமக்குள்ளே இளநகைபுரிகின்றார்களாம்.

வள்ளி நுண் மருங்கு என்ன வானவ மகளிர் உள்ளம்
துள்ளுற பாணிதள்ளா நடம்புரி தடங்கண் மாதர்
வெள்ளிய முறுவல் தோன்றும் நகையர் தாம்
வெள்குகின்றார்
கள் இசை அரக்கர் மாதர் களிஇடும் குரலை காண்பார்

நாட்டியக் கலை என்பது எல்லோருடைய மனத்தையும் ஈர்க்கவல்லது. முற்றும் துறந்த முனிவர்களும் வீடுபேற்றையும் துறந்து கண்டு இன்புறும் வகையில் ஈர்க்கும் கலைநயம் கொண்டது என்பது கவிச்சக்கரவர்த்தியின் கருத்து. இந்திரசித்தன் எய்த பிரும்மாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு இராவணன் அவைக்கு அனுமன் வருகிறான். அங்கு, பாடலும் தாளமும், மத்தளமும் கூடி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இசைக்க ஆடுபவர் காலும், விழியும், மனமும் கையொடு செல்ல ஆடலைக் காணும்போது, அருந்தவ முனிவர்க ளும் விரும்பும் வீடு பேற்றையும் மறக்கச் செய்யுமாம்.

கடு பாணியின் இசையொடும் முழலொடும் கூட
தோடு சிறு அடி விழிமனம் கையொடு தொடரும்
ஆடல் நோக்குறின் அருந்தவ முனிவர்க்கும் அமைந்த
வீடு மிட்குறும் மேனகைமேல் நகை விளங்க
அருந்தவ முனிவர்க்கும் அமைந்த வீடு மீட்குறும்

என்கிறான் கம்ப நாடன். நாட்டியம் அவ்வளவு உயர்ந்த கலை. ஆதலின் தான்,

நாட்யம் பின்னருசேர் ஜனஸ்ய
பகுதாப்யேகம் ஸமாராதனம்

என்பான் மகாகவி காளிதாசன். இராவணனுக்கு பத்துத் தலைகள் அல்லவா? அனுமன் அவற்றைக் கண்ணுற்றான். அவற்றில் ஒருமுகம் பாடினாரின் இசையமுதைப் பருகுகி றதாம். மற்றொன்று ஆடினார் முகத்து பாவத்தை அதில் தோன்றும் சுவையை பருகிற்றாம்.

பாடினார் முகத்து ஆர்அமுது ஒருமுகம் பருக
ஆடினார் முகத்து அணி அமுது ஒருமுகம் அருந்த

விளங்கியதாம். இதில் ஒரு குறிப்பும் வைக்கிறான். நாட்டியம் என்பது ''பாவ, ராக, தாளம்'' என்று கூறுவார்கள். மிகச் சிறந்த நாட்டியக் கலையின் உயிர்த்து டிப்பாய் அமைவது முகத்தில் வெளிக்கொணரும் பாவமா கும். அதைக் குறிப்பால் ஆடினார் முகத்து அணி அமுது என உணர்த்துகிறான் கம்பன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நல்ல ஆடலைக் குறிக்குமிடத்து எல்லாம் கவிச்சக்கர வர்த்தி 'மயில்போன்ற ஆடல்' என்றே குறிப்பதைக் காண்கிறோம். இரண்டு எடுத்துக்காட்டுகளைக் காண் போம். இந்திரசித்தன் விட்ட பிரும்மாத்திரத்தால் இலக்கு வன் மயங்கி வீழ்கிறான். இராமன் துயர வெள்ளத்தில் ஆழ்கிறான். அதுகண்ட தூதுவர் இராவணனிடம் சென்று ஐய நின்பகை ஒழிந்தது என்கின்றனர். பெருமகிழ்வு கொண்டு இராவணன் நகரம் எல்லாம் 'ஆடற்களிகண்டு உய்மின் என்கிறான். அடுத்து வர இருப்பதை அறியாத மூடன் செயல் ஆவதால் அதைக் களியாட்டம் என்பான் கம்பன்.

கீதம்

கின்னரர் முதலோர் பாட முகத்திடைக்
கிடந்த கெண்டைக்
கன்னி நன்மயில் அன்னாரை நெடுங்களியாட்டம்
கண்டான்

மேனகை, திலோத்தமை, ரம்பை, ஊர்வசி ஆகிய வான் மகளிர் எல்லாம் இராவணன் ஆணை ஏற்று ஆடினராம். அவரை மயில் அன்னார் என்பான் கம்பன்.

இறுதியாக மங்கலச் செயல்கள் நடைபெறும்போது எல்லாம் நல்ல நாட்டியம் பெறல் வேண்டும் என்பது நமது பண்பு. ஆதலின்தான் கோயில்களில் நாள்தோறும் வழிபாட்டின்போது நாட்டியம் பெற்றது. அதை கம்பன் நாடன் உணர்த்தும் பங்கு இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது. சீதையுடன் அரியணையில் அமர்ந்திருக் கிறான் அண்ணல். அந்த மங்கல விழாவில் நாட்டியம் நடைபெற்றது என முடிப்பான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மங்கல கீதம் பாட மறையவர் ஆசி கூற
சங்கு இனம் குமுற பாண்டில் தண்ணுமை
துவைப்ப தா இல்
பொங்கு பல்லியங்கள் ஆர்ப்ப பொருகயல் கருங்கண்
செவ்வாய்,
பங்கய முகத்தினார்கள் மயில் நடம் பயில மாதோ''

முன்னர் அயோத்தியில் மடந்தையர் ஆடுவது மயிலை நினைவுறுத்தும் என ''அவர் மயில் நடமோ கேகயம் நவில்வன'' என்று கண்டோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராஜராஜன் வழிபட்ட பிள்ளையார்

இந்திய நாட்டை ஆண்ட மன்னர்களில் ஈடு இணையற்றவன் முதலாம் இராஜராஜ சோழன் சமணம், பௌத்தம், வைணவம், சைவம் என எல்லா சமயத்தையும் ஒருங்கே போற்றிய பெருமன்னன் அவன். இருப்பினும் சைவப் பெருந்தகையாக ''சிவபாத சேகரன்' என்று மக்களால் அழைக்கப்பட்ட அவனால் எடுக்கப்பட்டது தஞ்சைப் பெருங்கோயில். அக்கோயிலில் ஏராளமான அவனது கல்வெட்டுகள் உள்ளன. அவற்றிலிருந்து அவனுக்கு, பிள்ளையாரிடம் பெரும்பக்தி இருந்தது என்று தெரியவருகிறது. அவனது பக்தியினால், அவனுடைய அதிகாரிகளும், தஞ்சாவூரில் இருந்த வியாபாரிகளும், பிள்ளையாரை சிறப்பாக வழிபட்டனர். ''பிள்ளையார்'' என்று கூறுகின்ற மரபே இராஜராஜன் காலத்திலிருந்து தான். அதிகம் வழக்கில் வந்தது. கணபதி சிவபெருமானின் மூத்த பிள்ளை அல்லவா. அதனால் அவரை அன்புடனும் மரியாதையுடனும் ''பிள்ளையார் கணபதியார்'' என அவன் அழைத்து பூஜை செய்துள்ளான்.

தஞ்சைப் பெரிய கோயிலில் திருச்சுற்று மாளிகையில் தென்மேற்கில் ஒரு ஆலயம் உள்ளது. அதில்தான் இராஜராஜன் பிரதிஷ்டை செய்து பூசித்த பிள்ளையார் இருக்கிறது. இதைப் பரிவார ஆலயத்துப் பிள்ளையார் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராஜராஜன் அழைத்தான். (அதற்கு முன்புறத்தில் இப் பொழுது ஒரு தனிக்கோயில் பிள்ளையாருக்கு இருக்கி றது. இதை மராத்திய மன்னன் இரண்டாம் சரபோஜி 1803ல் கட்டி கும்பாபிஷேகம் செய்தான். இது வேறு. பிற்காலத்துக் கோயில்)

இந்த பரிவாராலயத்து பிள்ளையாரிடம் இராஜராஜ னுக்கு சிறந்த பக்தி. இந்தப் பிள்ளையாருக்கு தங்கத்தா லேயே அணிகள் செய்து அலங்கரித்து மகிழ்ந்தான். பிள்ளையாரின் இரண்டு கைக்கும் இரண்டு 'பாகுவளை யம்' செய்து கொடுத்தான். தினந்தோறும் பிள்ளையா ருக்கு நைவேத்யமாக நூற்று ஐம்பது வாழைப்பழம் காட்ட (ஒரு சந்திக்கு ஐம்பது பழமாக மூன்று சந்திக்கு 150 பழம்) காசுகள் கொடுத்தான். தஞ்சாவூரில் இருந்த நான்கு பெரும்கடைத் தெருக்களில் இருந்த வியாபாரி கள், தினந்தோறும் இந்த 150 வாழைப்பழம் கொண்டு வந்து கொடுத்து வழிபட ஒப்புக் கொண்டனர். இராஜரா ஜன் கொடுத்த காசுகளை தாங்கள் முதலாக ஏற்றுக் கொண்டு அதற்கு வட்டியாக நாள்தோறும் இவ்வாழைப்ப ழம் கொண்டு வந்து கொடுத்து வணங்க ஏற்றுக் கொண்ட னர்.

இது தவிர இக்கோயிலில் வழிபாட்டுக்கும், வீதி உலா வருவதற்குமாக ஏழு பிள்ளையார் சிலைகளை, செம்பினால் வடித்தெடுத்துக் கொடுத்திருக்கிறான். நின்ற நிலையிலம், நடனமாடுகின்ற நிலையிலும் அமர்ந்திருக் கின்ற நிலையிலுமாக இந்த விக்ரஹங்கள் இருந்தன. ஒவ்வொரு வடிவத்திலும், பெரிய சிலை ஒன்று சிறிய சிலை ஒன்று என்று இரண்டிரண்டாகச் செய்து கொடுத்தி ருக்கின்றான். ஒரு சிலை மிகவும் சிறியது ஒன்றரை அங்குலம் தான் உயரம். ஏழு பிள்ளையார் சிலைகள் செய்து கொடுத்தான் என்றால் இராஜராஜனுக்கு பிள்ளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யார் மீது எவ்வளவு பக்தி என்பது தெரியும். எந்த ஒரு தெய்வ வடிவத்துக்கும் இராஜராஜன் இவ்வளவு சிலைகள் செய்து கொடுக்கவில்லை.

தஞ்சாவூர் கோயிலை நிர்வாகம் செய்ய ஒரு அதிகாரியை இராஜராஜன் நியமித்திருந்தான். ஸ்ரீ காரியம் செய்யும் ஆதித்தன் சூர்யனான தென்னவன் மூவேந்த வேளான் என்பது அவன் பெயர். இப்பெருங் கோயிலில் பரிவார ஆலயத்து பிள்ளையாருக்கு அவனும் பல நகைகளை செய்து கொடுத்துள்ளான். பிள்ளையாரின் தந்தத்தை அலங்காரம் செய்ய தங்கத்தால் ஒரு கவசம் செய்து கொடுத்தான். அதில் மாணிக்கம், வைரம், பளிங்கு, முத்துக்கள் முதலியன பொதிக்கப்பட்டிருந்தன. அதே போல கும்பத்தை அலங்காரம் செய்யவும் கொடுத்தான். திருநயனம் ஒன்றும் பொன்னால் பூக்களும், துதிக்கைக்கு தங்க கவசமும் கொடுத்தான். அவர் கையில் வைத்துக் கொள்ள மாம்பழம் ஒன்றும் தங்கத்தால் செய்து வைத்தான். இவனே பிள்ளையார் பூஜைக்கு வெண்கலத் தட்டு ஒன்றும் கொடுத்தான்.

இராஜராஜனுக்கு பணிவிடை செய்யும் அதிகாரி பராந்தகன் என்று ஒருவன் இருந்தான். அவனும் இந்தப் பிள்ளையாருக்கு ஒரு தங்கப்பட்டம், பூணூல், சுட்டி முதலிய நகைகள் எல்லாம் செய்து தந்தான். இராஜராஜனுக்கு பணிவிடை செய்யும் கொண்டையன் என்னும் மற்றொருவனும் இப்பிள்ளையாருக்கு வெண்கலத்தால் தளிகை செய்து கொடுத்தான். அதை இவருக்கு அமுதுபடைக்க பயன்படுத்தினர்.

தஞ்சாவூரில் இருந்த மளிகை வியாபாரிகளில் நாராயணன் காமப்பைச் செட்டி இக்கணபதிக்கு தங்கத்தாலேயே கற்கண்டு ஒன்று செய்து கொடுத்தான். இதில் சங்கு, பளிங்கு இவைகள் எல்லாம் பொதித்து வைக்கப்பட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருந்தன.

இதுபோல இராஜராஜனும், அவனது, அதிகாரிகளும், பணிவிடை செய்பவர்களும், தஞ்சவூர் நகரத்து வியாபாரிகளும், சிறப்பாக பெரியகோயில் பிள்ளையாரை வழிபட்டிருக்கிறார்கள். இதில் மற்றும் ஒரு சிறப்பு உண்டு. இந்தப் பிள்ளையாருக்கு வழிபாட்டைப் பற்றிக் கூறும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவை அனைத்திலும் இவர் ''பிள்ளையார் கணபதியார்'' என்று குறிக்கப் பட்டுள்ளார். சிவபெருமானின் பிள்ளை கணபதி என்ற பொருளில் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார். அடிக்கடி பிள்ளையார் கணபதி என்றே அழைக்க, காலப்போக்கில் ''பிள்ளையார்'' என்றாலே கணபதி என்று நிலைத்து நின்று விட்டது.

தஞ்சாவூரில் உள்ள இராஜராஜன் கல்வெட்டுகளைப் பார்க்கும்போது இராஜராஜன் காலத்தில் தமிழ் நாட்டில் பிள்ளையார் வழிபாடு மிகச் சிறந்த நிலையை அடைந்து விட்டது என தெளிவாகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சண்டேஸ்வர பிரஸாதம்

தமிழ் நாட்டில் சைவக் கோயில்களில் சண்டேஸ்வரர் மிகவும் சிறந்த நிலை வகிக்கும் தெய்வம். தஞ்சாவூர் மாவட்டம் திருச்சேய்ஞலூரில் பிறந்து ஒப்பற்ற சிவனடியாராகத் திகழ்ந்து, சிவகணங்களின் தலைவராக உயர்ந்த சண்டேச நாயனாரின் வரலாறு அனைவரும் அறிந்ததே. சண்டேச்சுவரர் எப்பொழுதும் சிவபிரானின் அடியில் அமர்ந்து விளங்கும் வள்ளலாகத் திகழ்கிறார். கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழன் எடுத்துள்ள பெருங்கோயிலில் உள்ள சண்டேஸ்வர அனுக்ரஹ மூர்த்தியின் சிற்பம் உலகப் புகழ் வாய்ந்தது. சண்டேச்வர தத்துவத்தையே உலகுக்கு எடுத்துக் காட்டுவது போல் உள்ளது.

தஞ்சாவூரில் முதலாம் இராஜராஜசோழன் தான் எடுத்த பெரிய கோயிலில் பல உத்ஸவ விக்ரஹங்கள் செய்து கொடுத்தான். அவற்றில் ஒன்று சண்டேசவர பிரஸாத தேவரின் விக்ரஹம். இது செம்பினாலானது. (இக்காலத்தில் பஞ்சலோகசிலை என்கிறோம்). இது எவ்வாறு இருந்தது என்று ராஜராஜன் விரிவாகக் குறித்துள்ளார். இதைக் குறிக்கும் கல்வெட்டு இந்த உருவத்தை ''சண்டேச்வர பிரஸாத தேவர்'' (சண்டேச்வரருக்கு அருள்கின்றதேவர்) என்று கூறுவது குறிப்பிடத் தகுந்தது. இந்த உயர்நிலை அடைவதை சைவசித்தாந்த நூல்கள் ''சண்டேச பதம்'' என்று அழைக்கும். இது குறித்து ஒரு அருமை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யான செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகிறது. அதைக் கீழே காண்போம்.

தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி தாலுக்கா மேல் சேவூரில் விருஷபபுரீச்வரர் கோயிலில் அக்கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டு இராஜராஜசோழன் காலத்தது தான். இராஜராஜன் இக்கோயிலில் பலவகைப்பட்ட பூஜைகளுக்கும் விழாக்களுக்கும் பணிபுரிவாருக்கும் ஊர்கள் அளித்து அவ்வூர்களிலிருந்து வரும் வருவாயிலிருந்து நடத்த வகைசெய்தான். முதலில் 1003ம் ஆண்டு என்ன என்ன நடக்க வேண்டும் என்று விரிவான பட்டியல் போட்டு ஆணை வழங்கியிருக்கிறான். அதற்கு நிபந்தம் என்று பெயர். அர்த்தயாமம் உள்பட ஒவ்வொரு சந்திக்கும் திருஅமுதுக்கு அரிசி, மிளகுபொடி, பருப்பு, நெய், தயிர், வெற்றிலை (பாக்கு) அடைக்காய், திருமெய்பூச்சுச் சந்தனம், சிதாரி, அகில் முதலியவற்றுக்கு நெல் கொடுத்தான். பங்குனி உத்திரம் திருவிழா ஏழுநாள் நடத்த ஏற்பாடு செய்தான். தலைப்பறை, திமிலை, மத்தளம், கறடிகை, கைம்மணி, சங்கு ஆகிய கருவிகள் வாசிக்க பன்னிரண்டு உவச்சர்களை நியமித்தான். தேவகன்மிகளுக்கு ஆசார்ய போகமாக நெல் அளித்தான். திரு அலகிட்டு மெழுக்கும் இடுவார் இருவரை நியமித்தான். பிறபணிகளுக்கும் வகைசெய்தான். நான்கு ஆண்டுகளுக்கு பிறகு இந்தப்பணிகளுக்கு மேலும் சில வருவாய் அளித்தான். அதில் மெய்காவல் ஒருவனையும், பண்டாரம் பார்த்துக் கொள்ள ஒருவனையும் நியமித்தான். பண்டாரம் பார்ப்பவனுக்கு ''சிவபண்டாரி'' என்று பெயர். இத்துடன் கோயிலில் மூன்று ஸந்தியிலும் ''திருப்பதியம் பாடுவார்'' இருவருக்கும் வகை செய்தான். திருப்பதியம், பாடுபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு குறுணி நெல் (அதாவது 8 படி அரிசி). இத்துடன் துணிமணிகளுக்காக தினந்தோறும் 1 படி அரிசியும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொடுத்தான். இது இப்பொழுது Clothing allowance (துணிப் படி) என்கிறார்களே அதுதான். (இராஜராஜசோழனின் மற்றொரு கல்வெட்டிலிருந்து கோயில் ஸ்ரீகார்யத்துக்கும், திருப்பதியம் ஓதுவாருக்கும், ஒரே சம்பளம்தான் என்று அறிகிறோம். அதாவது இன்றுள்ள நிர்வாக அதிகாரிக்கு Executive Officer எவ்வளவு சம்பளமோ அதே சம்பளம் ஓதுவாருக்கும் இருந்தது. இதைக் குறிக்கும் கல்வெட்டில் தான் சண்டேச்வரர்பற்றிய அந்த அருஞ்செய்தி உள்ளது.

கல்வெட்டுக்கள் என்றால் இன்று பதிவு செய்கிறோமே பத்திரங்கள், அவைதான் கல்வெட்டுக்கள், இன்று காகிதத்தில் எழுதி பதிவு செய்து வைக்கிறோம். முன் காலங்களில் கல்லில் வெட்டி பதிவு செய்து வைத்தார்கள். இவைகளுக்கு ஆவணம் என்றும் பெயர். அதாவது சட்டப்படி செல்லுபடியாகும் பத்திரங்கள். இவற்றின் இறுதியில் எல்லாக் கல்வெட்டுகளிலும், ''பன்மாஹேச்வர இரக்ஷை'' அல்லது ''ஸ்ரீ வைஷ்ணவ இரக்ஷை'' என்று முடியும். பல கல்வெட்டுகளில்'' இதை அழித்தார், கங்கை முதல் குமரி வரை செய்தார் பாவம் பெறுவார்'' என்று இருக்கும். அக்காலத்தில் புண்ணியம், பாவம் என்பதில் மக்களுக்கு நம்பிக்கை மிகுந்திருந்தது. இன்றும் நம் கிராம மக்களிடம் இது காணப்படுகிறது. கோயில் சொத்தை எடுத்துக் கொண்டால் பாவம் வரும். தம் குடும்பத்துக்கும் குழந்தை குட்டிகளுக்கும் கெடுதல் வரும் என்ற நம்பிக்கை உண்டு. சொத்தை கொள்ளையடித்தவனை ஊர்மக்கள் ''பாவி'' என்று பகிரங்கமாக இழித்துக் கூறுவார்கள். அதைத் தான் கல்வெட்டுக்கள் முடிவில் கூறுகின்றன.

ஆனால் இராஜராஜனுடைய இந்தக் கல்வெட்டு மட்டும் ஒரு புதுமையான முடிவை கூறுகிறது. கல்வெட்டில் ''இத்தர்மம் ரக்ஷித்தார் சண்டேச்வர பிரஸாதம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெறுவார்'' என்று உள்ளது. அதாவது இத்தர்மத்தைக் காத்தவர்கள் சண்டேச்வரர் எந்த அருளைப் பெற்றாரோ அதைப் பெறுவர் என்பது கருத்து. அந்த அளவு புண்ணியம் பெறுவர் என்பது பொருள். சைவ சிந்தாந்தியாக சண்டீசபதம் பெறுவர் என்பது ராஜராஜனின் கருத்து.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சோழர் காலத்தில் தில்லையில் ஆனித் திருமஞ்சனம்

சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கு, மார்கழி மாதம் திருவாதிரை, மாசி, ஆனி முதலிய மாதங்களில் விசேஷ மாக அபிஷேகம், ஆராதனைகளெல்லாம் நடைபெறும். இக்காலத்தும் நடைபெறும் இவ்விழாக்களுக்குப் பலபெ ரியோர்கள் கட்டளைகளை ஏற்படுத்தி விழா நடக்க ஏற்பாடு செய்துள்ளனர். இவ்விழாக்கள் சோழர் காலத்தி லும் நடைபெற்றுள்ளன. முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் ஆனி, மார்கழி, மாசித் திருவிழாக்களுக்கு ஆகும் செலவு முழுவதையும் தானே ஏற்றுக் கொண்டு கட்டளையை ஏற்படுத்தியிருக்கிறாள் ஒரு பெண்மணி. இவ்விழாக்கள் என்றென்றும் நடைபெற ஏற்படும் செல வுகள் எல்லாம் தன் பொருளாலேயே செய்ய நிலையாக நிலம் வாங்கி வைத்திருக்கிறாள். அந்த நிலத்திலிருந்து வரும் வருவாய் கொண்டு சந்திரனும் சூரியனும் உள்ள வரை ஆனித்திருவிழா நடைபெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டு இந்தக் கொடையை வழங்கியிருக்கி றாள். இந்தப் பெண் தமிழ் வரலாற்றில் சிறந்த இடம் பெற்ற பெண். அவள் ஒரு பெரும் அரச மாதேவி கூட அல்ல. அரசனுக்கு உடனிருந்து பணிவிடை செய்யும் அணுக்கப் பெண். 'அணுக்கி நங்கை பரவை' என்பது அவள் பெயர். சுந்தரமூர்த்தி நாயனார் மணந்த நாட்டியப் பெண், ''பரவை''யின் பெயர் பூண்டவள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதலின் அணுக்கி பரவைக்குத் திருவாரூர் தியாகேசர் மீது சிறந்த பக்தி. இப்பொழுது திருவாரூர்த் தியாகராஜர் இருக்கும் கற்கோயிலை இவள் தான் கட்டுவித்தாள். இக்கோயில் கட்டியதும், இராஜேந்திர சோழன், அணுக்கி பரவையைத் தன் தேரில் ஏற்றி, தன்னருகில் அமர்த்திக் கொண்டு திருவாரூரை வலம் வந்து, தியாகராஜாவின் முன் நின்று வணங்கினான். அவர்கள் நின்று வணங்கிய இடத்தில் அந்நிகழ்ச்சியின் நினைவாக ஒரு விளக்கைச் செய்து வைத்தான் இதைத் திருவாரூர்க் கல்வெட்டு கூறுகிறது. இப்பெண்மணிதான் தில்லை நடராஜப் பெருமானுக்கு ஆனித்திருவிழாவுக்கு நிலம் கொடுத்தாள். இராஜேந்திர சோழன் ஆண்டு கொண்டிருந்த போது அவனது 24வது ஆட்சி ஆண்டில் (கி.பி.1042ல்) இந்தக் கொடையை அளித்தாள்.

இதற்காக இவள் 78 வேலி நிலம் கொடுத்தாள். அதை ஒரு தனி நகரமாகவே அமைத்து அதற்கு ''குணமேனகைப்புரம்'' என்று பெயர் சூட்டினாள். இந்நிலத்தில், கொல்லைகள், நத்தம், ஓடைகள், ஆறு இவை போக விளைநிலம் 44 வேலி. இதிலிருந்து ஆண்டுதோறும் வந்த வருவாய் 4500 கலம் நெல்லு. இதைக் கொண்டுதான் திருவிழாச் செலவுகளைச் செய்ய ஏற்பாடு செய்தாள்.

ஆனித்திருவிழாவின்போது நடராஜர் எழுந்தருளுவார். அப்பொழுது வேண்டும் செலவுகளுக்கும், நைவேத்தியத்துக்கும் கொடுத்தாள். அதுமட்டுமல்ல! நடராஜாவுக்கு நைவேத்தியம் செய்யும் போது ஆயிரம் மாகேச்வரர்களுக்கு உண்ணச் சோறு கொடுத்தாள். அதைச் 'சட்டிச் சோறு கொடுத்தல்' என்பர். ஒருவருக்கு ஒரு சட்டி நிரம்ப சோறு கொடுப்பது. இதுபோல் ஆயிரம் பேருக்குச் சட்டிச் சோறு கொடுத்தாள். அதோடு துணி, எண்ணெய் ஆகிய செலவுகளையும் இதில் செய்து கொள்ளச் சொன்னாள். இவ்விழாக்களில் அங்கு பணி செய்வார்களுக்கு நடரா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜாவே பணம் கொடுப்பதாக மரபு. அதற்கும் ஆகும் காசுகளுக்கும் வகைசெய்தாள்.

இதேபோல மார்கழித் திருவாதிரைத் திருவிழாவுக்கு ஆகும் செலவுகளுக்காக இவற்றிலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கிச் செலவு செய்யச் சொன்னாள். அதேபோல் மாசித் திருவிழாச் செலவுக்கும் ஏற்பாடு செய்தாள். மாசித் திருவிழாவில் ஒரு சிறப்பு உண்டு. நடராஜர் திருவிழா எழுந்தருளிய போது அவர் முன்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத்தொகை பாடுவது மரபு. அவ்வாறு பாடுவார்களுக்குச் சிறப்பாகப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்தாள். அதைக் கல்வெட்டு. ''திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பம் செய்வார்க்கு காசு ஐஞ்சு'' கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது. காசு என்றால் ஏதோ இந்தக் காலத்துச் செம்புக் காசு இருக்கிறதே அது என்று நினைத்து விடக் கூடாது. அன்றைய தங்கக்காசு. அன்றைய விழாவில் பாடுவதற்கு மட்டும் ஒருவருக்கு ஐஞ்சு தங்கக்காசு. ஒரு காசுக்கு அன்று 8 கலநெல்லு விலை மதிப்பு. கிட்டத் தட்ட அந்தத் திருவிழாவில் திருத்தொண்டத்தொகை பாடும் ஓதுவார் ஒருவருக்கு 3500 விருந்து 4000 ரூபாய் வரை பணம் கொடுக்கப்பட்டது. அந்த அளவுக்குத் திருத்தொண்டத்தொகை சிதம்பரம் நடராஜர் திருவிழாவில் பாட வேண்டும் என்ற சிறப்பு ஏற்பாடும், வெகுமானமும் ஏற்பாடு செய்திருந்தாள் அந்த பெண் பரவை.

அதுதவிர சிதம்பரத்தில் அப்பெண் ஒரு சாலை அமைத்து அதில் 25 பேர் உண்பதற்கும் ஏற்பாடு செய்தாள். ஆதலின் இராஜேந்திர சோழன் காலத்தில் சிதம்பரத்தில், மார்கழித் திருவாதிரை, ஆனித் திருமஞ்சனம், மாசிக்கடலாட்டு எல்லாம் அப்பெண் பரவையின் கட்டளையாக நடைபெற்று வந்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருஞானம் ஓதல்

திருக்கோயில்களில் திருப்பதியம் ஓதுதல், வேதம் ஓதுதல் முதலிய பணிகள் வழக்கில் இருந்தன. இது இன்றும் வழங்கிவருவதைக் காண்கிறோம். இதுபோன்று சைவசித்தாந்தத்தையே சிவபெருமான் முன்பு ஓதும் பழக்கம் இருந்திருக்கிறது. அதாவது தத்துவங்களையும் தெய்வத்தின் முன்னர் ஓதியுள்ளனர். இவ்வாறு சிவஞான சித்தியார் போல, சிவஞானபோதம் போல இருப்ப வற்றை ஓதியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதற்கு திருஞானம் ஓதல் என்று பெயர். இதை மாறவர்மன் சுந்தரபாண்டியனின் இரண்டு கல்வெட்டுகள் கூறுகின்றன.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் நெல்லை யப்பர் முன்பு தினமும் இவ்வாறு திருஞானம் ஓதுவதற்கு பதினொரு தவஸிகள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் துறவறம் மேற்கொண்டவர்கள் என்ற தெரிகி றது. கல்வெட்டு அவர்கள் பெயரையும், அவர்களது குருக்களின் பெயரையும் எந்த சந்தானத்தைச் சேர்ந்தவர் கள் என்பதையும் கூறுகிறது. இவர்களுக்கு அரசனே பதினொரு மனைகள் கொடுத்து அங்கு மடம் எடுத்துக் கொள்ள அனுமதி அளித்தான். அதோடு இவர்களுக்கு உணவுக்கும் பிற செலவுகளுக்குமாக நிலம் ஒரு வேலி, நாலு மாவும், வரியில்லாத நிலமாக கொடுத்தான். அந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலத்தை "திருஞானப் புறம்" என்று கல்வெட்டு கூறும் இவ்வாறு ஞானம் ஓத தமது மைத்துனர் விக்கிரம சோழன் ஏற்படுத்தினார் என்றும் அது குறித்துதான் இப்போது ஆணை இடுவதாகவும் அரசன் குறிக்கிறான். ஆதலின் இதை ஏற்படுத்தியவர் சோழரும் பாண்டியரும் எனத் தெரிகிறது.

இவ்வாறு திருஞானம் ஓத நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் பின்னே கொடுக்கப்பட்டுள்ளன. இதைக் கூறும் கல்வெட்டு வரிகளில் சில காண்போம்.

> இவ்வுடையார் (திருநெல்லையப்பர்) திருமுன்பு திரு ஞானம் ஓத மச்சுனனார் விக்ரமசோழ தேவர் கண்ட தவசிகளில்...
>
> இவர்கள் வர்க்கத்தில் திருஞானம் ஓதும் பேர் தம் போஜனம் உள்ளிட்டு வேண்டுவனவுக்கு தந்தோம். நம் ஓலை பிடிபாடாகக் கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளப் பண்ணுக" என்பது வாசகம்.

இனி திருஞானம் ஓதுவார் பட்டியலைக் காண்போம்.

1. விஷகண்ட தேவர் சந்தானத்து
   எல்லை இல்லாத்தேவர் சிஷ்யரில்
   தவப் பெருமாள்

2. பட்ட வீரர் சந்தானத்து
   மகாதேவர் சிஷ்யரில்
   அனபாயர்

3. திருவாரூர் வடக்கில் மடத்தில்
   சிவபாத ஹ்ருதயர் சிஷ்யரில்
   திருநட்டப் பெருமாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. பிக்ஷமட சந்தானத்து
இராவளர் பசுபதி தேவர் சிஷ்யரில்
நிறையங்கை ஆடுவான்

5. திருவாரூர் வடக்கில் மடத்து
அஸ்திரதேவர் சிஷ்யரில்
வந்தான் தேவர்கள் தேவன்

6. பிக்ஷாமட சந்தானத்து
திருநாகிஸ்வரத்து இராவளர் சிஷ்யரில்
திருஞானசம்பந்தர்

7. பிக்ஷாமட சந்தானத்து
இராவளர் பசுபதி தேவர் சிஷ்யரில்
கலிகடிந்தகைய்யர்

8. திருநெல்வேலி தெற்குமடத்து கீழை மட சந்தானத்து
உய்யக் கொண்ட தேவர் சிஷ்யரில்
திருநெல்வேலி உடையார்

9. திருநெல்வேலி தெற்குமடத்து கீழை மட சந்தானத்து
அனுக்க வன்தொண்டர் சிஷ்யர்
அறமுரைத்த பெருமாள்

10. மதுரை தெற்கின்மட சந்தானத்து
நீலகண்ட சிவர் சிஷ்யரில்
திருநெல்வேலி உடையார்.

11. பிக்ஷாமட சந்தானத்து
இராவளர் பசுபதி தேவர் சிஷ்யரில்
சிவமுக்தி காட்டினார்.

இவற்றிலிருந்து அக்காலத்திருந்த பல மடங்களின் பெயர்கள் தெரிய வருகின்றன. திருநெல்வேலி, திருவாரூர்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மதுரை ஆகிய இடங்களில் மடங்கள் இருந்தன. இம்மடத்து துறவிகளின் வழியை சந்தானம் என்னும் வழக்கம் இருந்தது. இவற்றில் பிக்ஷாமடம், விஷகண்ட தேவர் சந்தானம், பட்ட வீர சந்தானம் மூன்றும் எங்கிருந்தன என்று தெரியவில்லை. பிக்ஷாமடம் என்பது மிகவும் புகழ் வாய்ந்த சந்தானமாகத் திகழ்ந்திருக்கிறது. அதிலிருந்து நால்வர் இந்த ஞானம் ஓத அமர்த்தப்பட்டிருக்கின்றனர். பிக்ஷாமட சந்தானத்தில் தலைவர் இராவளர் என அழைக்கப்படுகிறார்.

இதில் குறிக்கப்பட்டுள்ள துறவிகளின் பெயரும் கவனிக்கத்தக்கன. எல்லையில்லா தேவர், திருநட்டப் பெருமாள், நிறயங்கை ஆடுவான், தேவர்கள் தேவன், அறமுரைத்த பெருமாள் என்பவை தேவாரச் சொற்றொடர்கள். சிவபாத ஹிருதயர், திருஞானசம்பந்தன் என்பவை ஞானசம்பந்தப் பெருமாளின் வாழ்வை பின்பற்றியவை.

நெல்லையப்பர் கோயிலில் திருஞானம் ஓதும் இவர்கள் பல மடங்களிலிருந்து வந்த போதிலும் இவர்கள் நமது தேவாரத்தின் அடிப்படையில் வளர்ந்த சைவ சிந்தாந்த ஞானத்தையே ஓதியிருக்க வேண்டும் என இவர்கள் பெயரிலிருந்து அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவமும் ஸுபியும்

தெய்வ அருள் பெற்ற ஆன்றோர்கள், தவமுனிவர்கள், சான்றோர்கள், ஆகியோரது அனுபவங்களும், தெய்வீக நிலையும், கருத்துக்களும் ஒன்றாகத்தான் விளங்குகின்றன. அவர்கள் எந்த நாட்டினர் ஆனாலும் எந்த சமயத்தைப் பின்பற்றினாலும் இறுதியாக அடையும் நிலையும் அனுபவங்களும் ஒன்றாகவேதான் இருக்கின்றன. அதை தெள்ளென எடுத்துக் காட்டும் கீழ்வரும் கட்டுரை.

இஸ்லாமிய சமயத்தில்,தவச்சான்றோர்களாக திகழ்ந்த ஒரு பிரிவினரை ஸுபிக்கள் என்று அழைப்பர். அவர்கள் உலகம் யாவையும் உய்யவேண்டும் என்பதற்காக அன்பையே வழியாகக் கொண்டு கடவுளிடம் ஈடிலா பக்தி பூண்டு தங்களது சமய நெறியிலே நின்று உன்னத மனிதர்களாக வாழ்ந்தவர்கள். அவர்களது நெறியை 'ஸுபியிஸம்' என்று ஆங்கிலத்தில் அழைப்பது வழக்கம். இஸ்லாம் இந்திய நாட்டுக்கு வந்த பின்னர், இந்தியாவில் பிறந்து வளர்ந்து இஸ்லாமிய ஸுபிகளாக திகழ்ந்த பல ஆன்றோர்கள் உண்டு.

சுமார் 600 ஆண்டுகளுக்கும் முன்னர் பீஹார் மாநிலத்தில் 'மனேர்' என்ற ஊரில் பிறந்தவர் 'ஹராப்புதீன் யஹ்யா மனேரி'' என்ற ஸுபி பெரியார். ஹராப்புதீன் அஹமத் பின் யஹ்யா மனேரி என்பது அவர் முழுப்பெ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யர். மக்தும் உல் முல்க் என்றும் பின்னர் அழைக்கப் பெற்றார். பீஹார் மாநிலத்தில் இன்றும் மக்தும் ஸாஹிபு என்று இவரை நினைவு கூர்கிறார்கள். சிறுவயதிலேயே இஸ்லாமிய கல்வியை சிறப்பாகக் கற்றவர். இவருக்கு திருமணமாகி ஒரு மகன் பிறந்த சில காலத்துக்குள் துறவறம் மேற்கொண்டு, டில்லி சென்றார் டில்லியில் பல ஸுபி பெரியார்களைக் கண்டும் அவர்களில் யாரை யும் தமது குருவாக ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியாக 'ரஜுப்புதீன் பிர்டௌஸி' என்பவரை குருவாக ஏற்றுக் கொண்டார். பின்னர் பீஹார் மாநிலம் திரும்பி ராஜகுரு நாத்தருகில் பலப்பகுதிகளில் கடும் துறவியாக வாழ்ந் தார். புத்தகயா முதலிய பகுதிகளுக்குச் சென்று வந்தார். இறுதியாக மக்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப பீஹார் ஷரீப் என்ற இடத்தில் 40 ஆண்டுகள் தங்கி மக்களுக்கு சமய போதனை செய்து வந்தார். அன்று டில்லியில் ஆண்ட முகம்மத் பின் துக்ளக் இந்தப் பெரியாரிடம் பல ஐயங்களுக்கு விடைகேட்டு, இவருக்கு நிலம் கொடை அளித்திருக்கிறான். அக்காலத்தில் ஸுபி பெரி யார்கள், கடிதங்கள் வாயிலாக பல அறிவுரைகள் புகட்டி யிருக்கிறார்கள். அவ்வகையில் இப்பெரியார் அன்று பீஹாரின் ஒரு பகுதிக்கு தலைவனாக இருந்த ஷம்ஸுத் தீன் என்பவனுக்கு நூறுகடிதங்கள் எழுதியுள்ளார். பார ஸீக மொழியில் எழுதப்பட்டுள்ள இவரது நூறு கடிதங்க ளும் ஸுபி தத்துவங்களையும் கருத்துக்களையும் தெளி வாக எடுத்து போதிக்கின்றன. முகலாயர் காலத்துக்கும் முன்னரே எழுதப்பட்ட இந்த கடிதங்களை பல இஸ்லா மிய சான்றோர்கள் மேற்கோளாக எடுத்து ஆண்டுள்ளனர். இவற்றை மொகலாயப் பேரரசர் அக்பர், ஔரங்கசீப் ஆகியோர் படித்திருக்கின்றனர். இவை பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டும் உள்ளன. இக்கடிதங்களில் காணப்படும் ஸுபி கருத்துக்களோடு இதற்கும் 600 ஆண்டுகளுக்கும் முன்னர் தமிழகத்தில் பக்திமார்க்கத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மக்களிடையே பரப்பிய சைவப் பெரியோர்களின் கருத்துக்களையும் ஒப்புநோக்குவது இக்கட்டுரையின் நோக்கம்.

தன்னை எவன் முற்றிலும் மறந்தானோ கடவுளிடத்திலேயே தலைப்பட்டவனோ தன்னுடைய கீழ்நிலையிலிருந்து விடுபட்டவனோ, உண்மையோடு ஒன்றியவனோ, அவனே ஸூபி ஆவான் என்று கருதும் இவர்கள் கடவுளின் அருள் கூடினால்தான் உய்யமுடியும். கடவுள் தான் வழிகாட்ட முடியும் என்று திடமாக நம்பினார்கள். தனிமனிதன் தானே தெய்வ நிலையை அடைந்துவிட முடியும் என்று எண்ணினால் அதுஆணவத்தின் செயலாகவே முடியும்.

நமது சைவசித்தாந்தத்தில் ஒரு சிறந்த தத்துவம் உண்டு. சிவபெருமானின் அருள் இருந்தால்தான் அவரை அடைய முடியும். அறிவைப் பெற முடியும். இதைத்தான் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்று நம் முன்னோர் கூறினார். "அறிவினில் அருளால் மன்னி" என்பர் சித்தியார். கடவுளின் அருள் என்ற கொள்கையில் சைவர்களுக்கும் ஸூபிகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு.

சிவபெருமான் தன் அடியார்களுக்கு, ஏன் இவ்வுலகுக்கே அன்னையாக விளங்குகிறார் என்பது நமது கோட்பாடு; அதைத்தான் 'அம்மையப்பன்' என்று சித்தாந்திகள் கூறுவர். இதே கருத்தை ஸூபிகளும் கூறுகின்றனர். "கடவுள் ஒருவன் பால் தமது அன்பை செலுத்துவாரானால், தன் சிறு குழவியிடம் தாய் எவ்வாறு அன்போடு நடப்பாளோ அதைப்போல் அவ்வன்பனிடம் கடவுள் பழகுவார். அன்னை மிகவும் கவனத்துடன் அக்குழந்தைக்கு வேண்டியதெல்லாம் செய்து, ஏதும் தீங்குவாராது காத்தும் வருவதை ஒக்கும் என்கிறார், இந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஷராப்பத்தீன்.

''ஒருவன் கடவுள் பால் பக்தியில் திளைக்கும்போது, தனது மனைவி, மக்கள், உறவினர், இவ்வுலகு, வருங்காலம் என்பதெல்லாம் அவனை அண்டா: அவனது உடல் இங்கிருப்பினும் இதயம் கடவுளிடமிருக்கும்'' என்கிறார் இவர்.

இதே கருத்து அப்பர் பெருமானின் கீழ்வரும் பாடலிலும் காணலாம்.

மக்களே மனந்தாரம் அவ்வயிற்று அவரை ஓம்பும்
சிக்குளே அழுந்த ஈசன் திறம்படேன்

என்பர். இவை பந்தம் என இரு திறத்தாரும் கருதினர் எனலாம்.

இதுபோல், தொண்டு, பக்தி, அன்பு ஆய பெரும்பாலான கருத்துக்களிலும் வியத்தகும் ஒருமைப்பாடு இருவரிடையேயும் பிரதிபலிப்பதைக் காணலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாசுபத மூர்த்தி

சென்னைமாநகருக்கு அருகில் உள்ளது திருமுல்லை வாயில். இது ஒரு பாடல்பெற்ற தலம். சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்தைப் பாடியுள்ளார். பாலியாற்றின் வடகரையில் இத்தலம் அமர்ந்துள்ளது என ''பாலி வடகரை முல்லை வாயிலாய்'' என்று பாடுகிறார். திருவொற்றியூரில் சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியைவிட்டுப் பிரியேன் என்று உரைத்த சொல்லை மீறி திருவாரூர் நோக்கி கிளம்பவும் கண்பார்வையை இழக்கிறார். இதை திருமுல்லை வாயில் பாடலில் சுந்தரர் ''சங்கிலிக்கா என் கண்கொண்ட பண்பா நின் அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே'' என்று பாடுகிறார். சுந்தரர் தமது முல்லைவாயில் பதிகத்தில் அனைத்துப் பாடல்களிலும் இங்குறை பரமனை ''பாசுபதா'' என்றே அழைப்பது குறிப்பிடத் தகுந்தது.

இக்கோயிலில் சோழர், பாண்டியர், தெலுங்குசோழர், விஜயநகர அரசர்கள் ஆகியோரின் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் முதலாம் இராஜேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. கி.பி.1015ல் அக்கல்வெட்டு நல்லதொரு செய்தியைக் குறிக்கிறது. நாள்தொறும் கோயிலில் ஸ்ரீபலி நடைபெற செய்யப்பட்ட ஏற்பாட்டை கூறுகிறது.

'பலி' என்றவுடனேயே பலருக்கு 'ஆடுகோழி' உயிர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பலியோ என்ற ஐயம் ஏற்படும். பலிகொடுத்தல் உயிர்ப் பலி கொடுத்தல் என்று பொருள் இல்லை. தெய்வங்களுக்கு பூ ஆகினும், அன்னமாகினும் கொடுத்தல் அதற்கு பலி என்றுதான் பெயர். சிலப்பதிகாரத்தில் தெய்வத்துக்கு கொடுத்த பூவை ''பூப்பலி செய்து'' என்று கூறுகிறது. கோயில்களில் திக்பாலகர்களுக்கும் பிற தெய்வங்களுக்கும், ''என்னால் அழைக்கப்பட்ட தெய்வங்களே! தெரிந்த தெய்வங்களே! எனக்குத் தெரியாத தெய்வங்களே உங்களுக்கு இந்த பூசனை அளிக்கிறேன்! ஏற்றுக் கொள்வீராக'' என்று கூறி புஷ்பம், நீர், அன்னம் இவைகளைக் கொடுத்தலுக்கு 'ஸ்ரீபலி' என்று பெயர். இது கோயில்களில் மூன்று சந்திகளிலும் நடைபெற வேண்டிய வழிபாடு. கேரளத்தில் இன்றும் ஸ்ரீபலி என்பது மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. ஸ்ரீபலியைக்காண ஏராளமான பக்தர்கள் குழுமியிருப்பதைக் காணலாம்.

இராஜேந்திர சோழன் காலத்தில் திருமுல்லை வாயிலில் ஸ்ரீபலிக்காக இரு தெய்வ உருவங்கள் செய்து கொடுக்கப்பட்டன. ஒன்று ஸ்ரீ பாசுபத தேவரின் உருவம். மற்றது அஸ்திர தேவர். இரண்டும் உத்ஸவ விக்ரஹங்கள். ஸ்ரீபலியின் போது எடுத்துக் கொள்ளப்படும் விக்ரஹங்கள் பாசுபததேவரின் உருவத்துக்கு ''முல்லை அழகர்'' என்று பெயர். இத்தெய்வத்துக்கு அபிஷேகத்துக்கு 44 மாணிக்கம், 8 மரகதம், 33 வயிரம், 21 முத்தும் கொடுக்கப்பட்டன. ஒரு ரத்னத்திலான மாலையும், பத்து பொன்னாலான பூக்களும் கொடுக்கப்பட்டன. அத்துடன் நாள்தோறும் திருவமுதுக்கு வேண்டிய வகைகளும் கொடுக்கப்பட்டன. அதை கல்வெட்டு அழகாக ''திருமுல்லை வாயிலில் ஸ்ரீபலி எழுந்தருள ஸ்ரீபாசுபத தேவரான முல்லை அழகரையும் அஸ்திரதேவரையும் எழுந்தருளுவித்து'' என்று கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோயில்களில் பூஜைசெய்யும் முறைகளை வகுத்துக் கூறும் நூல்களுக்கு ஆகமங்கள் என்று பெயர். அவற்றில் பல நூல்கள் உள்ளன. அஜிதாகமம் என்ற ஆகம நூலில் ''நித்யோத்ஸவ விதி'' என்ற பகுதியில், நாள்விழா எவ்வாறு நடத்தவேண்டும் என்று கூறும் இப்பகுதியில், வினாயகர், ஈஸ்வரர், தேவி, பாசுபாத தேவர், அஸ்திர தேவர் முதலிய ஒன்பது விக்ரஹங்களை மக்கள் தலையில் எடுத்துசென்று விழா நடத்தலாம் என்றும் ஒன்பது விக்ரஹங்களையும் எடுத்துச் செல்வது உத்தம மரபு என்றும், சாதாரணமாக அவற்றில் ஒன்றிரண்டு மட்டும் எடுத்துச் செல்லலாம் என்றும் கூறுகிறது. இவற்றில் பாசுபத தேவர் விக்ரஹமும், அஸ்திர தேவர் விக்ரஹமும் இடம் பெற்றிருப்பது குறிக்கத்தகுந்தது. இதுபோன்ற நாள்விழா - நித்யோத்ஸவம் சுமார் 2000 ஆண்டுகளாக தமிழகத்தில் நடைபெற்று வருகிறது என்று அறிகிறோம். சங்க இலக்கியங்களில் ஒன்றான மதுரைக்காஞ்சியில், ''அந்தி விழா'' என்று இது கூறப்படுகிறது. ஞானசம்பந்த பெருமான்

எடுக்கும் விழவும் நன்நாள்விழவும்
இரும்பலி இன்பமோடு எத்திசையும்
அடுக்கும் பெருமை சேர் மாடக்கூடல்

என்று இதை நன்நாள் விழா (நித்யோத்ஸவம்) என்கிறார். அவ்விழாவில் எழுந்தருளத்தான் இராஜேந்திர சோழன் பாசுபத தேவரையும் அஸ்திர தேவரையும் எழுந்தருளு வித்தான்.

தஞ்சாவூர் பெரிய கோயிலில் முதலாம் இராஜராஜ சோழனின் தேவி இலாடமாதேவி என்பவள் பாசுபத மூர்த்தியை எழுந்தருளுவித்தாள் என்று கல்வெட்டு கூறுகி றது. இன்றும் பல கோயில்களில் இம்மூர்த்தி வழிபாட் டில் உள்ளது. பாசுபத மூர்த்தி என்பது ஒரு பெரும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தத்துவம் சைவவழிபாட்டில் இன்றியமையாத நிலைவ குப்பது. அதன் உண்மை நிலை உணர்வது சைவம் அறிய உதவும். திருமுல்லை வாயிலில் தமது பத்துப் பாடலிலும் சுந்தரர் ''பாசுபதா'' என்று அழைப்பது கண்டும், இரா ஜேந்திரன் பாசுபததேவர் செய்தளித்து அறிந்தும் இன்புறத் தக்கது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறைந்த திருநேரிசை

நாயன்மார்களின் வரலாற்றை ஆதாரங்களுடன் தொகுத்தெழுதிய தெய்வப்புலவர் சேக்கிழார், அப்பர் பெருமான் பல பதிகளுக்குச் சென்றதையும் அங்கு பாடிய பதிகங்களின் சொற்றொடர்களையும், பதிகங்களின் பெயர்களையும் ஆங்காங்கே குறித்துச் செல்கிறார். எடுத்துக்காட்டாக வாகீசர் திருவாலவாய் பெருமானை தொழுது பதிகங்கள் பாடியதை சேக்கிழார் பின்வருமாறு குறிக்கிறார்.

திருவாலவாயமர்ந்த செஞ்சுடரை செழும்
பொருள்நூல்
திருவானை நேரிசையும் தாண்டகமும் முதலான
பெருமைவாய்ந்தத் தமிழ் பாடி பேணி
திருப்பணி செய்து
மருவர் தம் புரமெரித்தார் பூடணத்தை
வந்தடைந்தார்

என்று உள்ளது செய்யுள்.

இதையே முன்னர் குறிக்குமிடத்து

முளைத்தான்'' என்றெடுத்து செய்தவத்தோர்
தாண்டகச் செந்தமிழ்பாடி

எனக் குறிக்கிறார். இப்பொழுது நமக்கு கிடைத்துள்ள தேவாரப் பதிகங்களில் மதுரை திருவாலவாய் பதிகங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டு உள்ளன. ஒன்று திருத்தாண்டகம். சேக்கிழார் குறித்துள்ளது போலவே இத்தாண்டகம் ''முளைத்தானை '' என்றே தொடங்குகிறது மற்ற பதிகம் ''திருநேரிசை'' ஆக சேக்கிழார் தம் நூலில், அப்பர் திருநேரிசையும், திருத்தாண்டகமும் மதுரையில் பாடினார் என்று குறித்துள்ளது இன்றும் கிடைத்துள்ள சான்றுகளால் உறுதியாகிறது. ஆதலின் சேக்கிழார் தமது நூலில் குறிக்கும் செய்திகளையும், குறிப்பாக தேவாரப்பதிகங்களையும் மிகவும் கவனத்துடன் சான்றுகளாகக் கொள்ள வேண்டும்.

அவ்வகையில் காணும் போது சேக்கிழார் குறித்துள்ள ஒரு தேவாரத் திருப்பதிகம் நமக்கு கிடைக்கவில்லை என எண்ணத் தோன்றுகிறது. அப்பர் பெருமான் திருவொற்றியூரை தொழுது பாடிப் பின்னர் அருகில் உள்ள திருப்பாசூர் என்னும் தலத்தை அடைந்தார். அங்குறை பரமனை அப்பர் பாடியதை, சேக்கிழார் பின்வருமாறு குறிக்கிறார்.

> முந்தி மூவெயில் எய்த முதல்வனார்'' என எடுத்து
> சிந்தை கரைந்துருகு திருக்குறுந்தொகையும்
> தாண்டகமும்
> சந்தம் நிறை நேரிசையும் முதலான தமிழ்பாடி
> எந்தையார் திருவருள் பெற்றேகுவார் வாகீசர்

இப்பாடலிலிருந்து அப்பர் பெருமான் திருப்பாசூர் மீது மூன்று பதிகங்கள் பாடியுள்ளார் என்பது தெளிவாகிறது. இப்பொழுது நமக்கு கிடைத்துள்ள திருப்பாசூர் பதிகங்கள் இரண்டே அப்பர் பாடியவை உள்ளன. இவற்றில் ''முந்தி மூவெயிலெய்த முதல்வனார்'' என்னும் திருக்குறுந்தொகை உள்ளது. திருத்தாண்டகம் ஒன்றும் உள்ளது. ஆனால் சேக்கிழார் குறிக்கும் ''சந்தம் நிறை நேரிசை'', காணக் கிடைக்கவில்லை. மற்ற நேரிசைகளில் ஒன்றாக இதைக் கொள்ள முடியாது. திருப்பாசூர் மீது பாடியதாகவே சேக்கிழார் குறிக்கிறார். ஆதலின் அப்பர் பெருமான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பாசூர் மீது பாடி திருநேரிசைப் பதிகம் மறைந்து போயிற்றோ என ஐயுற வேண்டியுள்ளது.

பெரியபுராணத்துக்கு இணையிலாத உரை எழுதிய சிவக்கவிமணி C.K.சுப்ரமண்ய முதலியாரும், இச் செய்யுளைக் குறித்து எழுதும்போது ''நாயனார் இத்தலத்து பாடி அருளிய திருநேரிசைப் பதிகம் கிடைத்திலது'' என்று கூறியுள்ளார். ''முதலான தமிழ்'' என்று சேக்கிழார் குறிப்பதால் மேலும் சில பதிகங்களை அப்பர் பாடியிருக்க வேண்டும். அப்பதிகங்களும் கிடைத்தில என்பது சுப்ரமண்ய முதலியார் கருத்து. சேக்கிழார் காலத்து திருப்பாசூர் திருநேரிசைகள் சிலவாவது வழக்கிலிருக்க வேண்டும் என்று சிவக்கவிமணி குறித்துள்ளார். எப்படியிருப்பினும் திருப்பாசூர் திருநேரிசை மறைந்து போயிற்று என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளுமாய் புறமுமாகி

சைவ வழிபாட்டில் சிவதீக்ஷை செய்து கொண்டு தினமும் சிவபூஜை செய்தல் முக்கியமான நடைமுறை. சந்தனம், புஷ்பம், அன்னம், அல்லது ஏதாவது ஒரு தூய பொருளால் இலிங்கமாகச் செய்து அதையே சிவபெருமானாக பாவித்து வழிபாடு செய்வது மரபு. இந்த வழிபாடு செய்பவர்கள் நமக்கு ஒரு உண்மையைக் கூறுவார்கள். சிவபெருமான் என்றும் நம் உள்ளத்தில் இருக்கிறார். ஞானசொரூபமாக இருக்கிறார். நமது சிரஸ்ஸில் ஆயிரம் இதழ் விரித்த தாமரை மலராக, அதன் நடுவில் ஜோதி சொரூபமாக, ஞானமாகத் திகழ்கிறார். இப்பரம்பெருளைத்தான் சிவ பூஜையில் வணங்குகிறோம்.

சிரத்தில் சஹஸ்ரதளத்தில் உள்ள பரமனை மந்திரங்களால், தோத்திரங்களால் நம் நெற்றிக்கு இறக்குவதாக பாவிக்க வேண்டும். இரு கரங்களிலும் புஷ்பங்களை அஞ்சலியாக ஏந்திக் கொள்ள வேண்டும். பிறகு நெற்றியில் தியானித்துள்ள பரமனை மந்திரங்களால் கையில் உள்ள புஷ்பாஞ்சலிக்குக் கொண்டு வரவேண்டும். புஷ்பங்களில் அப்பரமன் திகழ அவரை எதிரில் வைத்துள்ள இலிங்கத்துக்கு (புஷ்பலிங்கம், சந்தனலிங்கம், அல்லது எவ்வுருவிலுள்ள இலிங்கமாயினும் சரி) எழுந்தருளச் செய்ய வேண்டும். இப்பொழுது நம் உள்ளத்தில் இருந்த பெருமான் புறத்தே இருக்கும் உருவில் எழுந்தருளி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருக்கிறார். இவருக்கு ஆசனம், ஆசமனம், அபிஷேகம், அமுது முதலிய படைத்து பூஜிக்கிறோம்.

பூஜை முடிந்தபிறகு, வெளி உருவில் உள்ள பெருமானை படிப்படியாக மீண்டும் நமது உள்ளத்தே திருப்பிக்கொண்டு வந்து சேர்த்து விடுவதாக பாவனை செய்ய வேண்டும். இதை 'ஒடுக்கம்' என்று கூறுவர். நம்முள்ளே மீண்டும் ஒடுக்கிக்கொள்ளுதல். இது சிவபூஜா முறை. இதை அகோர சம்புபத்ததி முதலிய நூல்கள் விரிவாகக் குறித்துள்ளன. இதற்கென விரிவான கிரியைகள் உள்ளன. மந்திரங்கள், முத்திரைகள், வழிபாட்டுமுறைகள் எல்லாம் உள்ளன. இதை சிவதீக்ஷை பெற்றோர் தினமும் செய்கிறார்கள். இதன் அடிப்படை தத்துவம் உள்ளத்துள் உள்ள சிவனை வெளியே கொணர்ந்து பூஜித்து மீண்டும் உள்ளத்தில் ஒடுக்குவது தான்.

நமக்கு ஒரு ஐயம் எழலாம். இத்தகைய பூஜைமுறை எப்பொழுது வந்தது. சம்பந்தர், அப்பர், போன்ற பெரியார்கள் காலத்தில் இருந்ததா? அவர்களும் இப்படி பூஜித்திருப்பார்களா என்பதுதான். அப்பர் பெருமானும், சம்பந்தப் பெருமானும் 1300 ஆண்டுகளுக்கும் முன்னர் வாழ்ந்தனர். அப்பர் பெருமானின் கீழ்வரும் தேவாரத்தைப் பாருங்கள்.

என்னில் ஆரும் எனக்கு இனியார் இல்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே

என்னைக் காட்டிலும் இனியவனாகிய பரமன் என்னுள்ளே இருக்கிறான். என்னுள்ளே உயிர்த்துடிப்பாக இருப்பது அவனே. அவனே புறம் போந்து மீண்டும் என்னுள்ளே புகுந்து நிற்கிறான் என்று அப்பர் கூறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபரன் நம் உள்ளத்தில்தான் நிற்கிறார். அவர்தான் புறம் போந்து மீண்டும் நம் உள்ளத்தில் திரும்பி வந்து திகழ்கிறார். இதுதான் சிவ பூஜையின் தத்துவம்.

அப்பர் பெருமான் பல இடங்களில் இந்த தத்துவத் தைப் பாடுகிறார். நம் சிந்தையில் உள்ள பரமன்தான் வெளியே அந்தியாகி, புனலாகி, அனலாகி, வானாகி, மீண்டும் நம் உள்ளத்தே புகுந்து விளங்குகிறார் என்று,

சிந்தையுள் சிவமாய் நின்ற செம்மையோடு
அந்தியாய் அனலாய்ப் புனல் வானமாய்ப்
புந்தியாய் புகுந்து உள்ளம் நிறைந்த எம்
எந்தை ஏகம்பம் ஏத்தித் தொழுமினே

இங்கு ஏகம்பர் என் உள்ளத்து சிவமாய் நின்று வெளிப்போந்து மீண்டும் உள் புகுந்து நிறைந்து நிற்கிறார் என்கிறார் அல்லவா! அவரவர்க்கு எத்தலத்தின் தெய்வம் இஷ்ட தெய்வமோ, குல தெய்வமோ, அவரை நாம் பூஜிக்கும் இலிங்கத்தில் பாவித்து வணங்கலாம் என்பதும் சுட்டப்படுகிறது.

இதிலிருந்து இன்று நாம் பூஜிக்கும் சிவபூஜைமுறை 1300 ஆண்டுகளுக்கும் முன்பே இருந்து தொடர்ந்து வந்துள்ள மரபு என்பது அப்பர் பெருமானின் தேவாரத்தி ருவாக்கால் தெரிய வருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எட்டொடு ஐந்தாறு நடம்

திருமூலர் தமது திருமந்திரம் ஒன்பதாம் தந்திரத்தில் சுந்தரக்கூத்து என்ற தலைப்பில் ''எட்டோடு ஐந்தாறு நடம்'' எனக் கூறுகிறார்.

கொடுகொட்டி பண்டரங்கம் கோடு சங்காரம்
நடம் எட்டோடு ஐந்தாறு நாடியுள் நாடும்
திடமுற்று எழும் தேவதாருவாம் தில்லை
வடமுற்ற மாவன மன்னவன்தானே

என்கிறார். இதன்பொருள் என்ன?

''கொடுகொட்டி, பண்டரங்கம், கோடு, சம்ஹாரம் முதலிய எட்டு நடங்களும் பிற ஐந்து நடங்களும் பரமன் ஆடினார். அவர் தேவதாருவனத்திலும், தில்லையிலும், ஆலங்காட்டிலும் ஆடினார்'' என ஆங்கிலத்தில் தாம் எழுதிய உரையில், காலஞ்சென்ற டாக்டர் நடராஜன் அவர்கள் குறித்துள்ளார்கள்.

சைவசித்தாந்த கழகம் வெளியிட்ட ப. இராமநாதம் பிள்ளை அவர்களும், துடிசைக்கிழார், அ. சிதம்பரனார் அவர்கள் எழுதிய விளக்கத்திலும் அடிக்குறிப்பிலும்

கொடுகொட்டி, பாண்டரங்கம், கோடு ஐவகை சங்காரத்துடன் காளிக்கூத்து மூளிக்கூத்து, இன்பக்கூத்துங் கூடிய எட்டு ஐந்தொழில் கூத்து, அறுசமயக் கூத்து என

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருபத்திரண்டென்ப எனவும்.

நடம் எட்டு - ஐந்தொழில் நடத்துடன் காளிக்கூத்து, மூளிக்கூத்து, ஆனந்தநடனம், ஆக எட்டு. ஐந்து குற்றாலம், கூடல், தில்லை, பேரூர், ஆலங்காடு இவைகளில் ஆடிய கூத்துக்கள் ஐந்து. ஆக ஆறு சமயங்களிலும் அவ்வர் சமயத்துகேற்ற கூத்துக்கள்'' (துடிசை கிழார்) எனவும் பொருள் தந்துள்ளனர் (பக்கம் 1108-1109). இருவரும் 2 நடங்களை பரமனின் நடமாக குறிப்பர்.

திருமூலர் தமது திருமந்திரத்தை ஒன்பது ஆகமங்களின் அடிப்படையில் எழுதியதாகக் கூறுவார். அவை காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், யாமளம், காலோத்தரம், சுப்ரபேதம், மகுடம் என ஒன்பதாம். இவற்றில் மகுடாகமும் ஒன்று.

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகும் காலோத்தரம்
துற்ற நற்சுப்ரஞ் சொல்லு மகுடமே

என்கிறார். மகுடாகமத்தின் ஒருபகுதி கிடைத்துள்ளது. அதில் பரமனின் நிருத்த ரூபம் சித்தரிக்கப்பட்டுள்ளது. நிருத்தரூபம் சதா த்யாத்வா தக்ஷிணாலயம் ஆதிகம் ஜ்யோதிரூபம் நடம்நித்யம் ஸ்ருஷ்டி ஸ்த்தி அந்த காரணம் என்று விவரித்துக் கொண்டே செல்கிறது. ஆனந்தக் கூத்தாடும் பரமனை இதயமத்தியில் இருத்தி கலைமயமாகவும், நாதரூபமாகவும், தியானிக்க வேண்டும். அவரை வட்டத்தின் நடுவில் ஒருமுகமும் இருகால்களும் நான்கு கரங்களும் உள்ள நடேசமூர்த்தியாக தியானிக்க வேண்டும். அவர் 38 கலையில் இருப்பாராகவும், 38 மந்திரங்களாக இருப்பவராகவும், 38 நிருத்தம் புரிபவராகவும் நினைத்து வணங்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஹ்ருத்பத்ம மத்யே ஸம்ஸ்தாப்ய
நாத தந்திரம் கலாமயம்
ஏக வக்த்ரம் சதுர்பாஹும்
த்வி பாதம் விருத்த மத்யகம்

அஷ்டத்ரிம்ஸத் கலாந்யாஸம்
அஷ்டத்ரிம்ஸாத்ம மந்திரகம்
அஷ்ட த்ரிம்ஸ பரம் நிருத்தம்

என மகுடாகமம் 38 நிருத்தத்தைக் குறிக்கிறது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது 'நடம் எட்டோடு ஐந்தாறு' என்பதற்கு ஐந்தாறு என்பதற்கு முப்பது என்றும், எட்டுடன் 38 என்றும் பொருள் தெளிவாகிறது. ஆதலின் 'நடம் எட்டோடு ஐந்தாறு' என்பதற்கு 38 நடம் என்று தெரிகிறது. இந்த 38 நடங்களில் கொடுகொட்டி, பாண்ட ரங்கம் கோடு, ஸம்ஹாரம் ஆகிய நடங்களும் அடங்கும்.

ஆதலின் திருமூலரின் திருமந்திரத்துக்கு பொருள்கூறும்போதும், ஆராய்ச்சி மேற்கொள்ளும் போதும் அவர் குறித்துள்ள ஆகமங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் உண்மை தெளிவாகும். அதற்கு இது ஒரு எடுத்துக் காட்டெனலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூலாசிரியர்

வித்யாவசஸ்பதி டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் கோவை மாவட்டம், ஊஞ்சலூரில் 1930ல் பிறந்தவர். சம்ஸ்கிருத மொழியில் எம்.ஏ. பட்டப்ப டிப்பும், தொல்லியலில் டாக்டர் பட்டமும் பெற்றவர். சங்க இலக்கியம் முதல் அண்மைக் கால இலக்கியம் வரை தமிழில் ஆழ்ந்த புலமை பெற்றவர். குறிப்பாக சைவ இலக்கியங்க ளில் சிறப்பாக ஈடுபட்டு பல நூல்களை இயற்றிவர். இவரது கட்டுரைகள் யுனெஸ்கோ நிறுவனத் தால் 20க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் வெளியிடப்பட்டுள் ளன. தமிழக தொல்லியல் துறையின் முதல் இயக்குநராக பொறுப்பேற்ற இவரது 22 ஆண்டுகாலப் பணியில் தமிழகம் முழுவதிலும் கல்வெட்டிலும், கலைகளிலும், பெரும் விழிப்பு ணர்ச்சி ஏற்படுத்தியவர். தொல்லியல், காசுகள், கலைகள், கோயில் வழிபாடு, சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம் ஆகிய பல துறைகளிலும் வல்லுநர். கர்நாடக இசைப் பாடல்கள் பல இயற்றியவர். இராஜராஜவிஜயம், ஞானக்குழந்தை, அப்பர் சரிதம், மணிமேகலை முதலிய பத்துக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங் களை இயற்றியவர். பண்முறையிலேயே பாடல்களைப் பாடி நாட்டியம் அமைத்தவர். இவரது நாட்டிய நாடகங்கள் ஸ்வீடன், ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, கானடா ஆகிய உலக நாடுகளில் மிகவும் சிறப்பாக நடிக்கப்பெற்று புகழ் பெற்றன. பத்தூரில் கிடைத்த நடராஜர் சிலை வழக்கில் இந்திய அரசின் சார்பில் லண்டன் உயர்நீதிமன்றத்தில் சிறப்பாக சாட்சியம் அளித்து நீதிபதிகளின் பாராட்டுகளை பெற்றதோடு வெளிநாடு சென்ற சிலையை இந்தியாவுக்கு மீட்டுத் தந்தவர். சிலை மீட்ட செல்வர் என பொள்ளாச்சி வள்ளல் நா. மகாலிங்கம் அவர்களால் பட்டம் அளித்து சிறப்பிக்கப் பட்டவர். இவரது தொல்லியல் கலை சேவையைப் பாராட்டி தமிழக அரசு ''கலைமாமணி'' பட்டம் அளித்து சிறப்பித்துள்ளது.